T. 3334

# MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

*General Editor*
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
*Curator, Govt. Oriental Manuscripts Library, Madras*

**No. IV**

# உபதேச காண்டம்

**Vol. III**

# UPADESAKĀṆḌAM

Vol. III

CRITICALLY EDITED

BY

**Thanigai-mani V. S. CHENGALVARAYA PILLAI, M.A.,**
*Personal Assistant to the Inspector*
*General of Registration (Retired) Madras.*

**GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.**

**1950**

**Price Rs. 5-8-0**

Printed
at the
Rathnam
Press,
Madras.

உ

# அத்தியாயம்—64

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

சூதமுநிவர் சொல்லுகின்றார் :—சிவபெருமானை வழிபட்டுச் சாபம் நீங்கிப் பேறு பெற்றோர் கதைகளிற் சில கூறுகின்றேன்.

### அரி அயன் அகந்தை தீர்ந்தது.

பிரமனுக்கும் மாலுக்கும் ஒருமுறை அகந்தை உண்டாகித் தாமே கடவுள் எனத் தருக்கி வாதிட்டனர். அவர்களுடைய அறியாமையைப் போக்கப் பெருமான் வயிரவ மூர்த்தியைப் படைத்து அனுப்பினர். வயிரவர் பிரமனுடைய உச்சித்தலையை நகநுதியால் வெள்ளரிப் பழத்தைக் கொய்வதுபோலக் கொய்தார். அதனால் அயனது அகந்தை தீர்ந்தது. பின்பு திருமாலின் செருக்கை அழிக்க அவரது நெற்றி நரம்பை அறுத்துவிட அதினின்றும் இரத்தம் பெருக அதை வயிரவர் பிரம கபாலத்தில் ஏற்றார். திருமால் மூர்ச்சிக்க அவரைத் தடவிக் கொடுத்து மூர்ச்சையைத் தெளிவித்தார். திருமால் வயிரவரைப் பணிந்து, 'ஐயனே! நாங்கள் அகந்தையாற் பிழை செய்தோம்; அதற்கேற்ற தண்டனையை அடைந்தோம். அப் பாவம் அகலச் சிவபூஜை செய்கின்றோம்'' என்றார். அவ்வணமே திருமால் திருவிடைமருதூரில் இறைவனை வழிபட்டுத் தீவினை நீங்கித் தூயராய் வைகுந்தம் அடைந்தார்.

### திருமால் அடி தேடியது.

பின்பு ஒருமுறை திருமால் அகந்தையால் பிரமனுடன் அமர்புரிந்து வாதிடும்போது இறைவன் ஆதியந்தம் இல்லாத இலிங்கமாய் எதிர்நின்றார். அந்த லிங்கத்தின் அடியைக் காணத் திருமால் வராக உரு எடுத்துத் தேடிக் காணாது மீண்டு வந்து, உண்மை உணர்வு பெற்றுப், பாவம் தீர்தற் பொருட்டுத் திருவண்ணாமலையிற் சிவனை வழிபட்டுக் குற்றம் நீங்கித் தமது லோகத்தை அடைந்தார்.

### பிருகு முநிவரிடம் திருமால் சாபம் பெற்றது

மற்றொரு காலத்தில் திருமால் தேவர்களைப் புரக்க அசுரருடன் போர் புரிந்தார். அசுரர் அஞ்சி ஓடிப் பிருகு முநிவரின் மனைவியைத் தஞ்சமாக அடைந்தனர். திருமால் முநிவர் ஆச்சிரமத்திற் சென்று வினவியபோது பிருகு பத்தினி 'நான் அசுரர்களுக்கு அபயம் அளித்துள்ளேன். நீங்கள் அவர்களைக் கொல்லுதல் கூடாது' என்றனள். பொல்லார்களுக்குத் தஞ்சம் அளித்தது தவறு என்று திருமால் கூறிப் பிருகு பத்தினியின் தலையையும் அசுரர்களையும் தமது சக்கரத்தால் தடிந்து சென்றார். பிருகுமுநிவர் திருமாலின் செயல் கண்டு வெகுண்டு 'அளப்பருங் கோடிப் பிறப்பு மனைவியை நீங்கிப் பூமியில் வருந்தக்

கடவன்', மேலும் 'இவனுடைய அடியவரெல்லாம் அறிவிலாத பாசண்டராகக் கடவர்' என்று திருமாலைச் சபித்தார். பிருகு மிருத்தியுஞ்சய மந்திரத்தால் தம் மனைவியை உயிர்ப்பித்து வாழ்ந்தார். திருமால் தமக்கு உற்ற சாபத்தைக் கேட்டு அஞ்சிக் காஞ்சியிற் சிவபிரானை வழிபட்டுத் தவஞ்செய்தார். சிவபெருமான் அவரது வழிபாட்டுக்கு உவந்து தோன்றி எமது அடியார்கள் இட்ட சாபத்தை அவர்களே நீக்குதல் வேண்டும் என வரம் தந்துள்ளோம் என்று கூறிப், பிருகு முனிவரை வரவழைத்து 'முனியே! திருமால் எமைப் பூசித்துப் பிழை நீங்கினன்; அளப்பில் கோடிப் பிறப்பெடுத்து மனைவியைப் பிரிந்து வாடுக என இட்ட சாபத்தை மாற்றிப் பத்துப்பிறப்பு எடுக்குமாறும், ஒரு பிறப்பில் மனைவியைப் பிரிந்து வருந்து மாறும் சாபத்தைக் குறைத்திடுக' எனக் கூறினர். பிருகு முனிவரும் அங்ஙனமே ஆகுக எனக்கூறிச் சிவபிரானை வணங்கிச் சென்றார். திருமால் சிவபிரானை வணங்கி 'ஐயனே! எளியேன் எடுக்கும் பிறப்புப் பத்தினும் ஐந்து கோறலாகவும் ஐந்து அருளுதலாகவும் தேவரீர் எழுந்தருளி வந்து அருள்புரிதல் வேண்டும்' என வேண்டிக்கொண்டனர். சிவபிரானும் அங்ஙனமே அருளி மறைந்தார். திருமாலும் தமது இருப்பிடத்தை அடைந்தார்.

## தசாவதாரம்

### 1. மச்சாவதாரம்—சாத்தனார் அடக்கியது

பின்னொரு காலத்தில் திருமால் மீனமாகிச் சென்று மறையைத் திருடிச் சென்ற சோமுகனை வதைத்து மறைகளைத் திரும்பக் கொண்டுவந்து நான்முகனுக்குக் கொடுத்தார். வெற்றியினாற் செருக்கு மிகுந்து அந்த மீன் கடலெங்கும் அலைத்து மோதிக் கடலுயிர்களையெல்லாம் விழுங்கித் திரிதலைக் கண்ட நான்முகனாதிய அமரர் கண்டு வெருண்டு பரம்பொருளிடம் முறையிட்டனர். சிவபிரான் இரங்கி யருளிச் சாத்தனாரை ஏவினர்.

செண்டாயுதம் ஏந்திய திருக்கையும், பச்சை நிறமும், பாசமும், செம்பொற் குண்டலமும், மலர்முகமும், சுருண்ட சடை ஆயிரமும் ஆக வந்தருளிய சாத்தனார் மச்சத்தை பிடித்திழுத்தார். தம் சிறு விரலின் நகத்தாற் புரட்டிக் கண்களைப் பறித்துக் கொணர்ந்து பரமன் திருமுன் வைத்தார். அப்போது வானவர்கள், 'பெருமானே! நாங்கள் மச்சத்தாற் பட்ட இடரைச் சாத்தனார் நீக்கியருளினார். தேவரீர் அம் மச்சத்தின் இருவிழி மணிகளையுஞ் சென்னிமீது தரித்தருளல் வேண்டும்' என்றனர். அவர்கள் வேண்டுகோளை யேற்றுப் பெருமானும் அணிந்தார்.

திருமால் மயக்கந் தவிர்ந்து தாம்செய்த குற்றந்தீரக் காஞ்சி நகரிற் பரமனை வழிபட்டார். சிவபெருமான் இரங்கி வெளிப்பட்டு 'வேண்டும் வரம் யாது ?' என்ன, 'அடியேன் செய்த அபராதம் அனைத்தையும் பொறுத்தருள்க; அடியேன் கொண்ட மச்சவுருவை வழிபடுவோர்க்கு வேண்டும் வரங்களை நல்கும் பேறும் அருள்க' என்று வேண்டினர். சிவபரம்பொருளும் அவ்வாறே நல்கி மறைந்தருளினர். திருமால் முன்போல உலகளித்து வந்தார்.

## 2. கூர்மாவதாரம்—விநாயகர் அடக்கியது.

ஒரு காலத்தில் வானவரும் அசுரரும் பாற்கடலில் அமுதங் கடைந்த போது அமிழும் மந்தரமாகிய மத்தைத் தாங்கத் திருமால் ஆமை வடிவெடுத்தார். மந்தரமலையைத் தம் முதுகிலே ஏற்றூர். அமுதங்கடைந்த பிறகு செருக்கினல் ஆமை வடிவாகவே கடலைக் கலக்கிக் கடலில் வாழும் உயிர்களை விழுங்கித் துன்புறுத்தினர். சுரரும் அசுரரும் ஓடி உமைபங்கனிடம் முறையிட்டனர். பெருமான் அவர்களுக்கு இரங்கி அந்த ஆமையை அடக்க விநாயகரை அனுப்பினர். விநாயகர் சென்று துதிக்கை நுனியால் ஆமையின் அடிவயிற்றைத் தாக்கி, அதை அடக்கி, அதன் ஓட்டை எடுத்து வந்து சிவபெருமான் திருமுன் வைத்தார். அப்போது சிவபிரான் அமரர் வேண்டியவாறு ஆமையின் ஓட்டைச் சிரமாலையின் நடுவே தரித்தருளினர். திருமாலும் ஆணவம் ஒடுங்கிப் பரமனைப் பணிந்து தம்பதம் அடைந்தார்.

## 3. வராகாவதாரம்—முருகவேள் அடக்கியது

ஒருகாலத்தில் இரணியாக்கன் என்பவனல் அலைப்புண்ட அமரர்கள் திருமாலிடம் முறையிட அவர் அவர்களுக்குத் தஞ்சம் அளித்துப் பிரமனுடைய நாசியிலிருந்து வராகமாக வெளிவந்தார். வராகம் இரணியாக்கனை எதிர்த்து அவனை மாய்த்தது. பிலத்திற்கிடந்த பூமியையும் முன்போலத் தனது கொம்பால் ஏந்தி வந்து நிறுத்தியது; பின்பு அகங்கரித்து கடலும் மலையுங் கலங்க உலகை அலைக்கத் தொடங்கியது. அதனைக் கண்ட பிரமன் முதலான தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். பெருமான் இரங்கி முருகவேளை அனுப்பினர். முருகவேள் விரைந்து சென்று வராகம் அலற அதன் மருப்பைப் பற்றி விண்ணில் எறிந்து அதை வீழ்த்தி அடக்கி அதன் ஒரு கொம்பைப் பறித்துச் சென்று சிவபிரான் திருமுன் வைத்தார். அக் கொம்பைச் சிறுபிறைபோலப் பெருமான் சடையில் அணிந்து கொண்டார். குமரப்பெருமானைத் தாமும் அம்மையுமாகத் தமது இடையே வைத்து மகிழ்ந்தார். தேவர்கள் போற்றினர். திருமாலும் மயக்கந் தெளிந்து இறைவனை வழிபட்டுத் தமது பழைய நிலையை அடைந்தார்.

## (4) நரசிம்மாவதாரம்—வீரபத்திரர் அடக்கியது

இரணியன் பெருவரம் பெற்றவன். இரவிலும் பகலிலும் புவியினும் வானினும் உலகில் உள்ள எவ்வுயிராலும் இறவா வரம் பெற்றவன். திருமால் நரமடங்கலாக வடிவம் எடுத்து இரணியனை எதிர்த்து வாயிற்படியில் தம்மடி மீது கிடத்தி நகத்தாற் பிளந்து கொன்றூர். அவன் குடரை அணிந்து உதிரத்தைப் பருகி ஊனைத்தின்று ஆரவாரித்தார்; இரணியனைக் கொன்ற மமதையால் நரமடங்கல் ஈசனை மறந்து உலகை நிலைகுலையச் செய்தது. பிரமன் முதலியோர் அஞ்சிச் சிவபிரானிடம் முறையிட்டனர். சிவபிரான் வீரபத்திரரை

வரும்படி நினைத்தனர். அவர் உடனே பூதகணங்கள் புடைசூழ வந்து பணிந்தார். இறைவர் அவரைநோக்கி நீ உலகை வருத்தும் நரசிம்மத்தை அடக்குதல் வேண்டும். முதலில் அதனுடைய ஆற்றலைப் பாராட்டி அடங்குமாறு கேள். அடங்கா விட்டால் அதை வதைத்துச் சிங்கமுகத்தையும் சிங்கத் தோலையும் கொண்டு வருக எனப் பணித்தனர்.

வீரபத்திரர் அங்ஙனமே புறப்பட்டுச் சென்று நரசிங்கரைப் பார்த்து 'மாயவனே! மச்சமாகவும் ஆமையாகவும் வராகமாகவும் வடிவெடுத்து உலகைக் காத்தாய்; இப்போது இரணியனையும் முக்கட் பெருமான் அருளால் வதைத்துப் புகழ் பெற்றாய்; உனக்கு இணை யார்? அசுரரை வென்ற அகந்தை தீர்ந்து அவனியைக் காத்திடுக ' என்று ஆமைதியாக விளம்பினர்.

அம்மொழி சுடுதழலென இருசெவியினும் தாக்கியதால், 'நன்று, நன்று! நன்மொழி புகல்வார்போல அடாதவை அறைந்தனை. நின்மொழி கொள்ளேன். நீ நின் இடத்திற்குச் செல்லுக; யான் ஒரு கணத்திலே உலகை யழிப்பேன்; படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலும் என்னுடையதே; பிரமனும் சங்கரனும் என் ஏவலையே புரிகின்றனர். 'நான் காலனுக்குங் காலன்; யாவரும் போற்றும் தேவன் நான்' என்றுரைத்தார். நரசிங்கமாகிய திருமால் இறைவனை இழித்துக்கூறிய மொழியைக்கேட்ட வீரபத்திரர் கனன்றெழுந்தார். ஓரிமைப்போதில் உன் ஆணவம் அழிகின்றது பார்' என்று கூறினர்; முக்கண்ணும், குலிசப்படை நகமும், பயிரவியுந் துர்க்கையுமாகிய சிறகும், வடுகனாகிய இதழும், வடவை வயிறும், பிணியாகிய கழலும், மறலியாகிய தொடையும், சண்டவாயுவாகிய வேகமும் உடைய சரபப் புள்ளாக வானிலே தோன்றினர்.

சரபத்தின் தோற்றத்தைக் கண்டு நரசிங்கம் நிலைகுலைந்தது; அதனைச் சரபம் மோதியபோது சிங்கத்தின் நாப்பிறழ்ந்து பற்கள் உதிர்ந்தன. கூரிய அலகாலே சரபம் நரசிங்கத்தைப் பற்றிக் கறங்கெனச் சுழற்றி யெறிந்தது. பிறகு அதனைப் பற்றிக்குத்தி செற்றுத் தோலையும் முகத்தையும் எடுத்துச் சென்று சிவபெருமான் திருமுன் வைத்தது. சிவபெருமான் நரசிங்கத்தின் தோலைப் போர்த்துத் தலையையும் வெண்டலை மாலையுடன் சேர்த்துக் கொண்டார்.

திருமால் அகந்தை நீங்கிச் சிவபிரானை பூசித்துத் தம்பதம் அடைந்தார்.

### (5) வாமனாவதாரம்—வயிரவர் அடக்கியது

பிறிதொரு காலத்தே மாவலி என்னும் அசுரனுடைய பேராசையை குறைக்க நினைத்த திருமால் காசிபன் மகவாக உபேந்திரன் எனும் வாமனாக அவதரித்து, மாவலியின் வேள்வியிற் சென்று மூவடிமண் தானம் பெற்று திரிவிக்ரமனாகி, உலகை ஓரடியாகவும், வானத்தை ஓரடியாகவும், அளந்து

மூன்றும் அடியால் மாவலியைப் பாதளத்தில் அழுத்தி இந்திரனுக்கு அரசு அளித்தார். திரிவிக்கிரமர் ஆங்காரம் அடைந்து உலகுக்குத் துன்பமுண்டாக்கினர். தேவர்கள் முறையிடச் சிவபெருமான் வயிரவரை அனுப்பினர். வயிரவர் தம் திருக்கையினல் திரிவிக்ரமருடைய மார்பில் அறைந்து, தோலை உரித்து நீலக் கஞ்சுகமாகத் தரித்தார்; என்பினைக் கங்காளமாகக் கையிலே தரித்தார். அமரர் அச்சந் தவிர்ந்து தம்பதம் அடைந்தனர். உபேந்திரனும் திருமாலும் செருக்குத் தவிர்ந்து சிவபிரானை வழிபட்டு வைகுந்தம் அடைந்தார்.

இவ்வாறு கோறலாகிய அவதாரம் ஐந்தும் முடிந்தது. இனி அருளும் அவதாரம் ஐந்தும் உரைப்போம்.

---

## அத்தியாயம் 64.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### அயன் திருமால் அகந்தை நீங்கியது

#### அறுசீர் விருத்தம்

1735. சூதன்முநி வரர்க்குரைப்பான் அறத்துறைபோ
கிக்களிக்குந் துறவீர்! முன்னாள்
மேதகுமுப் புரமெரித்த பரமனையா
ராதித்து விமல ரான
மாதவத்தோர் புங்கவர்மா முநிவரர்சா
பம்மனைத்தும் மாய்த்து மைந்தர்
காதலி செல் வம்படைத்தோர் காதைகளில்
ஓர்சிறிது கட்டுரைக்கேன். (1)

1736. முள்ளரைத்தாட் பொற்றகட்டு முறுக்கவிழ்வா
ரிசப்பொகுட்டு முதல்வ னுக்கும்
புள்ளரசுக் கொடியுயர்த்த பைந்துழாய்ப்
படலைவனப் புயல்வண் ணற்கும்
உள்ளமதித் தெழுந்தொருவர்க் கொருவர்நான்
கடவுள்நீ உரைக்கி லல்ல
வள்ளலா கியகடவுள் நானேநீ
யலவென்று மறுத்துச் சொல்வார். (2)

1737. அக்காலை தனிற்சகல தேவருக்கும்
ஈசுரனும் அண்ணல் அங்கண்
மிக்கோராம் இருவருக்கும் ஆங்காரத்
தெழுந்தவலி மீட்பான் எண்ணி
எக்காலும் நிறையிருட்சீத் தெழுமிரவி
மண்டலத்தில் இருக்குஞ் சீர்த்தித்
தக்கோரெண் வயிரவனை ஒல்லையிலுண்
டாக்கியவன் தடக்கை மீதில், (3)

1738. மருவுவிரல் உகிரினுனி யாற்றலையைந்
தினிலூர்த்த மாங்க மாய்மேல்
பெருமையுடன் இருக்குமுடி தனையதிபக்
குவமாக்கிப் பிளக்கும் வேலை
மருவுமென வெள்ளரிக்கோ மளக்கனிபோல்
விளையாட்டால் வரைந்து கிள்ளி
ஒருமையுடன் கபாலமாய் அவன்தரிக்கச்
செய்துவிதி ஊக்கந் தீர்த்தான். (4)

1739. விண்டுவின்மா வலிதொலைப்பான் இரத்தபலி
தனைக்கபடான் மிகுவி நோதங்
கொண்டுபலி பொருட்டந்த வயிரவனை
ஏவினனக் குறிப்பை நேர்ந்து
கண்டுநெடு மால்நெற்றி நுனிநரம்பை
யறுத்துவிடக் கரையில் செந்நீர்
மண்டுவிருப் பாற்கொடுத்து இரக்கத்தான்
மூர்ச்சித்தோன் வடிவை நீவி, (5)

1740. பிரமகபா லந்தரித்தோன் வயிரவனு
அறிந்துமால் பின்னர் போற்றிப்
புரநகையால் எரியூட்டும் புனிதவயி
ரவப்பெருமான்! புன்மை யோங்கள்
பரமறியா திழைத்தகுற்றந் தனக்கேற்ற
தண்டம்நீ பாலித் தாயுத்
தரமெனவெம் பாவமக லும்பொருட்டுச்
சிவபூசை தனைச்செய் கின்றோம். (6)

---

1738. ஊர்த்த மாங்கம்—ஊர்த்துவம்—மேல். ஊக்கம்—உயர்ச்சி, கர்வம்.

1740. உத்தரம்—பின்னர்.

1741. என்றுதிகி ரிப்படையேந் தியகடவுள்
இடைமருதில் எய்திப் போற்றித்
தன்றுணையாஞ் சகத்குருவைப் பீடலிங்கத்
தருச்சித்துச் சகலே சன்தாள்
ஒன்றுபடும் அருச்சனையால் ஆன்மாவைப்
பவித்திரமாய் உணர்ந்தான் முன்போல்
மன்றில்நடித் தவனருளாற் கருடன்மேல்
தன்னுலகின் வதிந்தான் மாதோ. (7)

**ஈசன் திருவடியை மால் தேடியது**

1742. பின்னுமொரு காலத்தில் அச்சுதன்ஆங்
காரமதம் பெருத்து வேதன்
தன்னுடனே அமர்புரிந்து வேதவச னத்
தையும்வே தாந்த வாய்மை
சொன்னமிகு தாரஇனி மைச்சொலுங்கே
ளாதுடன்று துளப மாயோன்
உன்னரிய ஈசுரன்நான் என்றுருத்து
மதவலியால் ஒன்று செய்வான். (8)

1743. ஆதியந்தம் ஒருவிவளர் மாவிலிங்க
வுருமூலம் அறிவான் பூமி
மோதியிரு பிறைக்கோட்டுக் கேழலுரு
வாயிடந்து முந்தி யூருப்
பாதியள வுந்தொடர்ந்து பதங்காணு
தேதிரும்பிப் படர்ந்து மீண்டோன்
சோதியையெண் ணுததனுல் மல்கியவப்
பாவமெலாந் தொலைப்பான் ஓர்ந்தே, (9)

1744. கதமெரிச்செஞ் சுடர்ப்பிழம்பாய் அண்டமுக
டணவியொளி கான்று வீசற்
புதவடிவா கியஅருணு சலஞ்சேர்ந்தங்
நன்சிவனைப் பூசித் தேயச்
சுதன்விபுவா கியஅண்ணல் அருளாலே
அபராதந் தொலைத்தே யீசன்
பதமதனிற் கீழாய்வே தன்பதத்தின்
மேலாந்தன் பதஞ்சேர்ந் தானல். (10)

---

1742. தாரம்— பிரணவம்.

### திருமால் பிருகுமுனிவரது சாபம் பெற்றது.

1745. **பி**ன்னுமொரு காலத்தில் அறுகுணஞ்சேர்
பகவானும் பிரமன் தாதை
பொன்னுருவாங் கருடனுகைத் தெறிதிகிரி
கொண்டுசுரர் புயல்வண் ணத்தோர்
தன்னிலுறு செருவில்விண்ணே ரபசெயப்பட்
டிடுமேல்வை சமரிற் போகி
அன்னியராம் அசுரர்கணந் தொலைப்பான்பே
ரிகல்புரிந்தான் அசுர ரோடி, (11)

1746. **பிருகுமுனி** யாச்சிரமந் தனிலடைந்து
தவக்கிழமை பெரிய சீர்த்திக்
குருகுமுத லியகலன்கள் மருவுமுனி
மனைவியயல் குறுகி அன்னாய்!
அருகுனது கருணையினற் சரணமென
அடைந்தனம்நீ அஞ்ச லென்றே
திருகுசினக் குறும்பொடெமைத் தொலைக்கவரு
மால்செருவைத் தீர்த்தி யென்றார். (12)

1747. **ஏ**றிதிகிரிப் படைசுமந்த அச்சுதன்தா
னேசிறிதும் எண்ணு தன்னோர்
நெறிதொடர்ந்து விறலசுரர் படைதொலைக்கு
மேல்வைபன்னி நெடியோ னைப்பார்த்(து)
அறிவொடெடுத் துரைக்கின்றாள் அச்சுத! எம்
ஆச்சிரமத் தணுகல் இங்ஙன்
பிறிவறமா விரதமுனி புங்கவன்தான்
இருக்கின்றான் பெயர்தி என்றாள். (13)

1748. **அ**ன்றியும்நான் அசுரரனை வருக்குமஞ்சல்
என்றபயம் அளித்தேன் உன்னாற்
கன்றியிவ ரடப்படார் அடப்படார்
தைத்தியர்சக் கரத்தோய்! நீதான்
வென்றிபெறத் தடிவதென்கொல்! வேண்டாவேண்
டாவெனவே வெகுண்டு பொல்லார்க்(கு)
ஒன்றியப யங்கொடுத்தல் உலகத்திற்
கிதமலவென் றுருத்தெ ழுந்தான். (14)

---

1745. புயல்வண்ணத்தோர்—கரியர்—அரக்கர்.

1747. அணுகல்—அணுகாதே.

1749. இடருறுதொல் லசுரர்தமக் கஞ்சலென்னும்
பிருகுபன்னி யிரங்கச் சென்னி
சுடர்விசிறு சக்கரத்தால் தடிந்தனன்பின்
ஆச்சிரமச் சூழல் நீங்கிப்
படர்பொழுது பிருகுமுனி தயித்தியரோ
டேதனது பன்னி மாய்ந்த
விடர்முடிகண் டுணர்ஞான விழியினால்
அரியென்று விரைந்த றிந்தான். (15)

1750. உருத்தபரு மிதகோப முளத்தினின்று
புழுங்கியெழ உளறு மாயோன்
பெருத்தவடி வினைநோக்கிச் சினந்துதயித்
தியராலும் பிரியாப் பன்னி
வருத்தமத னாலுமளப் பருங்கோடி
சனனமெலாம் மனைவி நீங்கித்
திருத்தகுபார் மிசைபுலம்பித் திரிகெனமா
யனைச்சபித்துத் தேர்ந்து பின்னும். (16)

1751. படவரவ முடிக்கிடந்த புவனமிசை
இவனுடைய பத்த ரெல்லாம்
மடமைபெறு பாசண்ட மதமாகக்
கடவரென்று மறித்துஞ் சாபம்
மிடல்கொடுரைத் தனன்,அமல னலடைந்த
மிருத்தஞ்சி விளியாற் பன்னி
உடல்பொருத்தி முனம்போன வுயிரழைத்தக்
கணமெழுப்பி உவந்தி ருந்தான், (17)

1752. அரவணையில் துயில்கடவுள் அருஞ்சாபச்
சூளுரைகேட் டயர்ந்து தேர்ந்து
விரவிவரு மச்சாபந் தணந்திடுவான்
அடியார்கள் விழைந்த தேயா
தரவினருள் காஞ்சிநகர் தனிலடைந்தீ
சனையாரா தனைகள் செய்து
பரவிடைமேல் விமலன்வெளிப் படக்கண்டு
அயல்வீழ்ந்து பணிந்து சொல்வான். (18)

---

1749. பன்னி—பத்தினி, மனைவி. விடர்—முநிவர் இருப்பிடம்.
1751. பாசண்ட மதம்—புறச்சமயம்; மிருத்தஞ்சி விளி—மிருத்தியுஞ்செய மந்திரம் (மரணத்தை விலக்க வல்ல மந்திரம்),

1753. அருந்தவஞ்செய் பிருகுமுநி வரன்சபித்த
சாபமொல்லே யகற்று கென்றே
யிரந்திரந்து வழுத்துபுவேண் டிடக்கருணை
யங்கடவுள் இசைப்பான் மாலே!
நிரந்தரமும் எமதடியார் நிகழ்த்திடுசா
பம்அவரே நீக்கல் வேண்டும்
வரந்தரும்நாம் அவைதவிர்ப்ப திலேயென்று
சபதமாய் மகிழ்ந்து சொன்னேம். (19)

1754. என்றுமலர்ப் பொகுட்டயற்கும் எறிதிகிரிப்
படையோற்கும் ஈச ஞக
நின்றருள்முக் கட்பெருமான் நெடுமாலே
நோக்கியிவை நிகழ்த்தி உள்ளத்(து)
ஒன்றுபடப் பிருகுமுநி வரனைவர
நினைத்தனனவ் வொல்லே வந்து
மன்றன்மலர் தூய்ப்பரவு மாமுநிமா
முகநோக்கி வள்ளல் சொல்வான். (20)

1755. அருமுநியே! அரியையளப் பருங்கோடி
சனனமெடுத் தலேவாய் என்றே
ஒருமையுடன் நீசபித்த சாபமகற்
றுதி, எமைமால் உவந்து போற்றி
இருமைபெறும் அருச்சனையால் அபராதம்
அற்றபத்தன் ஈரைந் தாக
வருசனனம் எடுத்தொன்றில் மனைபிரிந்து
வருந்தவென்று வசனிப் பாயால். (21)

1756. இக்கணம்நீ எமதுதண்டந் தலேமேற்கொண்
டேயுரைத்தி யெமது பத்தர்
தொக்ககுழு வினின்முதலேத் தப்படுவோய்
நீயன்றோ துறவோய்! என்னத்
தக்கமுநி வனும்வணங்கி அப்படியே
என்றுபுவி தாழ்ந்தி றைஞ்சி
மிக்கபர மேசனவை தணந்துதன
தாச்சிரமம் மேவி ஞனல். (22)

1756. எமது தண்டம்—யாம் சொல்லும் தண்டனை.

1757. **ப**ங்கயச்செந் திருமாது காந்தனுமை
காந்தன்மலர்ப் பதமுன் வீழ்ந்து
செங்கைகுவித் திறைஞ்சிநின்று தேவதே
வப்பெருமான்! சிறியேன் சாபம்
தங்குசன னங்களொரு பதிலைந்து
கோறலைந்து தயவிற் காத்தல்
இங்கெனதஞ் ஞானமற நீவந்து
புரிதியென்றே இறைஞ்சி நின்றான். (23)

1758. **போ**ற்றுபத்தர் தமைமைந்த ரென்றணைத்தாட்
கொண்டருளும் புனிதன் மாயோன்
சாற்றுமொழிக் கப்படிச்செய் கின்றேமென்
றேமறைந்தான் சலதி நாப்பண்
தோற்றுறுபஃ றலைச்சேடன் காலடைத்த
மெல்லணைமேல் துயில்வோன் முன்னும்
ஏற்றுவடி வந்தருநா ராயணன்தன்
ஆச்சிரமத் தெய்தி னானல். (24)

## தசாவதாரம்

### 1 மச்சாவதாரம்—சாத்தனார் செற்றது

1759. **பி**ன்னுமொரு காலத்தில் அச்சுதன்வே
தங்களெலாம் பெருநீர் வேலை
தன்னிலுநின் றெடுத்துவர எண்ணிவரி
யுடல்**மச்ச** சனன மாகி
உன்னரிய மறையனைத்தும் களவுகொண்ட
**சோமகனை** உடன்று மாய்த்துப்
பன்னருவே தங்கள்முன்போற் கொடுவந்து
நான்முகற்குப் பாலித் தானல், (25)

1760. **அ**ந்தவிறல் ஆங்காரம் மீதூரச்
சலதிமுற்றும் அலைத்து மோதிச்
சிந்துவின்மல் கியவுயிர்கள் அனைத்துமடுத்
தங்காந்து சேர்த்த யின்று

---

1758. கால்—காற்று. காலடைத்த மெல்லணை—பாம்பணை.

விந்தைகொடு வரும்பொழுது திசைமுகனு
திய அமரர் வெருண்டு போகி
அந்தமில்சங் கரக்கடவுள் கயிலைசரண்
என்றோடி அடைந்து போற்றி. (26)

1761. **அ**ன்றுகடல் எழுவிடமுண் டடியோங்கட்
கஞ்சலெனும் அண்ண லே!செங்
குன்றிவிழிப் பொறியுடற்சேல் சாகரத்தில்
உயிரனைத்தும் கோறல் செய்யும்
வென்றிவிரித் துரைக்கரிது காத்தருள்காத்
தருளென்னும் வேலை பெம்மான்
வன்றிறல்மாச் **சாத்தனை**யே வினன்அமலன்
திருவருளால் வணங்கிச் செல்வான். (27)

1762. **ம**ண்டலமும் எண்டிசையும் சுழன்றிடமைக்
கடல்குமுற மகர மேங்கச்
செண்டலஞ்சுற் றிடுகரமும் பச்சைநிற
மும்பாசத் திரளுஞ் செம்பொற்
குண்டலமும் மலர்முகமுஞ் சுருண்டசடை
யாயிரமுங் கொண்ட சாத்தன்
விண்டலமும் நடுங்கிடத்தீ வான்போற்சென்
றிடுமச்சம் விரைந்தி ழுத்தான். (28)

1763. **பொ**ருவருசெல் லுறழ்தடக்கைச் சிறுவிரலின்
உகிர்கொடுமீன் புரளப் பற்றித்
திருகியொளிர் குருவிந்த மணிவிழிகள்
தமைப்பிடுங்கித் திரும்பி வந்தே
நிருமலன்சந் நிதியிலிரு விழிகளையும்
வைத்திறைஞ்சி நின்ற னப்போ(து)
அருமறையோன் புத்தேளிர் அனைவரும்போற்
றிப்பெருமாற் கறைய லுற்றார். (29)

---

1761. குன்றி—குண்டுமணி.

1762. செண்டு—சாத்தனார் ஆயுதம்.

1763. 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை'—திருமுரு.

1764. **தி**ங்களணி செஞ்சடையோய்! இக்கொடிய
மச்சமிடர் செய்ய நாங்கள்
பொங்குளமெய் நடுநடுங்கிப் படரவந்தோம்
மாசாத்தன் பொருக்கென் றேதான்
செங்கணிரு மணிபறித்துக் கொடுவந்தே
நல்கினன் நீ சென்னி மீது
சங்கையறப் புவிபுரப்பான் ஆபரண
மாயென்றுந் தரித்தி யென்றார். (30)

1765. **கூ**றையிரந்து விரிஞ்சனு தியவமரர்
துதிக்கமுன்னுட் குரவன் மாயோன்
முறையிறந்த வெண்டலையாம் முண்டமா
லிகையின்மிசை முகம லர்ந்தே
மறைபுகழும் பிகைபாகன் இருவிழியாம்
மணிகளையும் வனைந்தான் மாயோன்
நிறையுமிகு மோகமொரு விதந்தெளிந்து
பிஞ்ஞகனை நினைந்து போற்றி, (31)

1766. **மு**ன்னர்சிவ பூசைபுரி மான்மியத்தாற்
சோமுகனை முருக்கி மாய்த்தேம்
பின்னருந்திண் ணியஇருள்மோ கத்தினுல்
எவ்வுலகும் பீடை செய்தே
மன்னுயிரெ லாம்வதைத்தேம் உலகினுக்குக்
காரணமாம் வள்ளல் சாத்தன்
தன்னைவிடுத் ததற்கேற்ற தண்டமிழைத்
திடநொந்தேம் சரணென் றுய்ந்தேம். (32)

1767. **இ**ந்தஅப ராதமெலாந் தொலைத்திடுவான்
சிவபூசை யிழைப்பே மென்று
புந்திமகிழ் **காஞ்சிபுரி** யடைந்துவிந்து
நாதலிங்கம் பூசை செய்தான்
அந்தஅம யத்தின்வட மேருவரை
குனித்தருளும் அண்ணல் தோற்றி
வந்துமச்ச வுருவாகும் மாலேநீ
வேண்டியநல் வரமே தென்றான். (33)

1768. பங்கயச்செங் திருமகிழ்நன் அண்ணல்பால்
இறைஞ்சியெங்கள் பகவான்! நீவங்(து)
இங்கெனையும் ஓர்பொருளாய் அழிப்பதுவுங்
காப்பதுவும் எளியே னுக்குச்
சங்கையற வேண்டுவர மச்சவுரு
வாமென்னைச் சகல லோகம்
கொங்கலராற் பூசித்துக் கேட்டதெலாம்
அவர்க்குநான் கொடுக்க வேண்டும். (34)

1769. மாயிருஞா லப்பரப்பா கியசகத்துக்
கீசனே! வானே! சோதி
மேயவடி வா! தேவ தேவேச
னே! படமை மேவி நாயேன்
தீயவப ராதங்கள் செய்தவெலாம்
பொறுத்தியென்றே செங்கை கூப்பத்
தூயவனும் உலகளித்தற் கப்படியென்
றுடன்மறைந்தான் தொன்மை போல. (35)

**2. கூர்மாவதாரம்—விநாயகர் அடக்கியது**

1770. விண்டுவயி ணவரூப மடைந்துலகம்
முன்போல விழைந்து காத்துக்
கொண்டிருந்தான் பின்னர்அமு தத்தினிறை
மதியகட்டுக் கூர்ம மாகிப்
பண்டுவளர் குடுமிவரை மந்தரத்தை
மத்தாக்கிப் பகுவாய்க் கூனல்
துண்டமதி எயிற்றுவா சுகிதாம்பா
அசுரரொடு சுரரைக் கூட்டி, (36)

1771. முரிதிரைப்பாற் கடல்கடைவித் தெழுமமுதம்
முறைமையான் முகந்தெ டுத்துப்
பருகிவிண்டு விறல்படைத்து மோகிதனுச்
சுருக்களுயிர் பௌவத் தோடு

---

1770. மதியகட்டுக் கூர்மம்—சந்திரன் போன்ற வெண்ணிறமுடைய வயிற்றையுடைய ஆமை—'காராமை அகடு வான் மதியம் ஏய்க்க'—சம். தேவா—III—119—1

பிரிவறத்தின் றிடமும்வல முஞ்சூழக்
கலக்கியதப் பெற்றி வானோர்
விரிதலையவ் வசுரரனை வருமோடிக்
கண்ணுதற்கே விளம்பி னூரால். (37)

1772. கறைமிடற்றோன் அனைவருக்கும் அஞ்சலென
வேயபய கரங்கொ டுத்தோர்
பிறைமருப்புக் கரடதடக் கலுழிமதஞ்
சொரிகவுட்சீர் பிறங்கு நால்வாய்
நிறைகருணை பெருகுமுக்கண் தழைசெவித்துத்
திலகளப நெடுமு கத்தோன்
மறைபரவ வினைகடிந்த ஐங்கரனை
நோக்கிவிண்ணோர் வருத்தந் தீர. (38)

1773. திரைசுருட்டும் மணிகொழிக்கும் பாற்கடலில்
இக்கணம்நீ சென்று தண்டாக்
கரைபுரட்டும் எறும்படைத்த கமடமடு
கென்றேவக் கடிது போகி
வரைபுரட்டுந் துதிக்கைநுனி கொண்டுகம
டத்தினடி வயிற்றைத் தாக்கித்
தரைபுரட்டிக் கொடுவந்தீ சன்திருமுன்
சுரர்களதி சயிக்க வைத்தான். (39)

1774. அங்கணுமை கேள்வன்மகிழ்ந் தரவிந்தன்
முதலான அமரர்ப் பார்த்துப்
பைங்கமட என்பினைநாம் என்செய்தும்
என்னஅவர் பணிந்து போற்றி
எங்கள்பெரு மான்! இதனை யச்சுதன்கண்
டறியப்பூண் எனத்த ரிக்கச்
சங்கையற எனமுண்ட மாலையினில்
நாயகமாய்த் தரித்தான் மாதோ. (40)

1775. மாயவற்கும் ஈதுகண்டாங் காரமத
னதுமீள வானோ ரெல்லாம்
நேயமுடன் தொழுதியம்ப இப்படிவிச்
சுவநாதன் நீங்கா தென்றுஞ்

---

1772. செவித்து—செவியையுடையது.

1774. அரவிந்தன்—பிரமன். அரவிந்தம்—தாமரை.

1775. மதன்—மதம்—ஆங்காரம். மீள—நீங்க.

சேயமுடி யிற்றரித்தான் விச்சுவே
சன்பூசை செயும்ப லத்தால்
ஏயஅரி மோகம்அப ராதமகன்
றிந்திரனுர் ஏத்த வாழ்ந்தான். (41)

### 3. வராகாவதாரம்—முருகவேள் அடக்கியது.

#### கலி விருத்தம்.

1776. செருவுற்றெருு பகல்முற்பொறி திகழ்பொற்கணன்
[இமையோர்
வருமிப்படை யனிகத்திடை வலியிற்சமர் புரியத்
திருகிச்சினம் எழுமச்சுரர் திரள்பற்படை கடவ
வெருவத்துயர் சிறிதுற்றனன் விருதொட்டிமு
[னலேவான், (42)

1777. பார்த்தான்முடி யசைத்தான்பிலம் பறித்தான்பரு
[வரைத்தாள்
பேர்த்தான்குடு மிப்பூதரம் பிதிர்த்தான்திசை
[தொறும்வான்
தூர்த்தான்இமை யவர்போர்வலி தொலேத்தான்நெடுங்
[கயிற்றுல்
சேர்த்தான்பினும் அசைத்தான்சல தியிலார்ப்பரித்
[தெறிந்தான். (43)

1778. சிரமிற்றன விழியிற்றன செவியிற்றன சிலேசேர்
கரமிற்றன புயமிற்றன களமிற்றன மணிமார்
புரமிற்றன அகடிற்றன வுடலிற்றன மரியா
வரமிற்றன சுழல்பொற்கணன் மலேயச்சுரர் படையே. ()

1779. எரிமுத்தலே அயில்வச்சிரம் எறிசக்கர மழுவாள்
சுரிகைப்படை பயில்கைச்சிலே தொடுமத்திரம் முசலம்
பரிகத்திரள் சுரர்விட்டெறி படைபொற்கணன் முடிநேர்
சொரியக்கதை கொடுதட்டிமொய் துகளுற்றெழ
வெறிவான். (45)

---

1776. பொற்கணன்—பொன்கண்ணன்—இரணியாக்ஷன் என்னும் அசுரன். விருது ஒட்டி—வெற்றிச் சபதம் செய்து.

1779. பரிகம்—ஓர் இரும்பாயுதம்.

1780 பவமுற்றிடு சுரரைப்பர பதமெய்ப்பொரு ளெனவே
அவமுற்றிடும்உயிர்முத்தியைஅடையக்குறுகுதல்போல்
எவமுற்றிடு களிறைச்சரண் எனமொய்த்தவிண்
[ணவரைச்
சிவமுற்றிடு வதனப்பொறி திகழ்பொற்கணன் வதைத்
[தான், (46)

1781. ஒருபோதுவிண் ணவர்யாவரும் உள்ளந்திசை நடுங்கிப்
பொருமாடக விழியானடப் புரண்டோடியச் சுதன்முன்
கருணாகர! சரண்நீயெனக் கலகாசுர ரரியாய்
அருள்வானவர் பதியாமரி அபயங்கொடுத் தனனால். (47)

1782. பிறைவாளெயி றிணையுங்குன்றி பிறழ்செங்கணுஞ்
[செவியும்
அறைகூறுசெம் புலனுடிமு னடல்சேர்கவிழ் தலையுங்
குறையாமிகு வலியுங்கொடு குளிர்வாரிசப் பொகுட்டு
மறையோன்நெடு நாசிக்கணம் வாராகமென்
றுதித்தான். (48)

1783. குருதிப்புயல் பெயமைக்கடல் குமுறத்திசை பெயரப்
பொருதிக்கயம் வெருவக்கிரி பொரஎய்த்துடு வுதிரப்
பருதிக்கதிர் மறையப்பணி பதிநெட்டுடல் நெளியக்
கருதிப்பொரு கனகத்தறு கணனச்சுற வெதிர. (49)

1784. திரிந்தோடின விரிந்தோடின தெரிந்தோடின தழலே
சொரிந்தோடின வெரிந்தோடின தொடர்ந்தோடின
[வெதிரே
பிரிந்தோடின முரிந்தோடின பெயர்ந்தோடின படைநேர்
அரிந்தோடின பொரநின்றனர் அடர்ந்தேவிடு சரமே. ()

---

1780. பவம்—பிறப்பு. எவம்—எவ்வம்—துன்பம். களிறு—ஐராவதம்.

1781. ஆடக விழியான்—இரணியாக்ஷன்; ஆடகம்—பொன்.
அட—அட்டதினால். அரி—பகைவன்.

1782. கணம் உதித்தான்—க்ஷணத்தில் உதித்தான்.

1783. பணிபதி—ஆதிசேடன்; பணி—பாம்பு, கனகத் தறுகணன்—இரணியாக்ஷன். கிரி—பன்றி.

1785 கிரியெட்டையும் இடறிப்பிற கிடஎற்றின மதமார்
கரியெட்டையும் ஒருகைக்கொடு ககனத்தினில் எறிய
எரிமுத்தழல் வடவைக்கன விருகட்கடை சிதற
விரிபொற்கணன் உயிரட்டது விறலச்சுத கிரியே. (51)

1786. அடியைப்பட வரவுச்சிக ளதிரப்புட வியினும்
கடியைப்பெரு வெளிமிக்குயர் ககனத்தல மிசையும்
முடியைச்சுர ருலகத்தினும் முறையெற்றுபு உகிரால்
இடியைப்பொரு மருபொற்பிர ணியவக்கனை யடுமே. ()

1787. பிலமுற்றிடு புவியைக்கிளர் பிறையொத்திடும் எயிறால்
வலமுற்றிடு மதனைக்கொடு வளையக்கடல் உடையாய்
நலமுற்றிமுன் நிலைபெற்றிட நடுவைத்திடு மதனுற்
சலதித்திர ளெழுவெற்பொடு சகமுற்றையு மடுமே. ()

1788. சுருதித்திசை முகன்மொட்டலர் சொரிகற்பக மகவான்
பருதிக்குல னெடுமச்சுரர் பதறிக்கயி லையிலே
கருதிப்பரன் அவையுற்றிரு கழல்முன்தொழு
[திறையோய்!
ஒருதிக்கிலை எறுழிச்சமர் உவமிக்கரி தரிதே. (54).

1789. பரவைக்கடு விடமுற்பகல் பருகிக்கடி தெமையா
தரவிற்சுர ரெனவைத்தனை சகலற்குநி னருளே
உரமிக்குய ரரண்மற்றல தொருதிக்கிலை யிருளிச்
சிரமிற்றுடன் மடியச்சமர் செயெனத்தொழு தனரால்.()

1790. படருற்றிடு சுரரைப்பசு பதிமெய்ப்பொருள் கருதி
மிடலுற்றிடு களிறக்கணம் விளிவுற்றிட நினையா
அடர்பொற்பரி புரதட்டைகள் அதிர்சிற்றடி எமையாள்
கடவுட்கும ரனைமுப்புர கரன்விட்டருள் புரிவான். (56)

1791. அடுபொற்கனை கழல்கட்டிவிண் ணரசுக்கதி பதியாய்த்
தொடுசத்திகு லிசகுக்குட துவசப்பல படைகள்
கொடுவெற்றியின் அணிவெட்சிகொள் குலவுப்புய
[முருகன்
முடுகிப்பரன் அருளிற்கவிழ் முகமைக்கிடி தனையே, (57)

---

1788. எறுழி—பன்றி
1789. இருளி—பன்றி.
1790. களிறு—(ஆண்) பன்றி; தட்டை—தண்டை.
1791. கிடி—பன்றி; மைக்கிடி—கரியபன்றி.

1792. கூடல்சுற்றிய புவிதொட்டுயர் ககனத்தள வெழுபேர்
உடலைத்தர குடுமிக்கிரி உருவொத்தெதிர் மதியா(து)
அடல்முற்செய வருமக்கிரி அலறக்கர மதனுல்
மிடலிற்பொரு பணையைக்கொடு விசைசுற்றிவி
[ணெறிவான். (58)

1793. பிறையைத்தொடு பணைகைக்கொடு பினுமச்சுற
[நெடுவான்
முறையிற்றிசை தொறுமெற்றுபு முடுகிப்புவி சுழலக்
குறைவற்றமெய் சுழலத்திசை குலவெற்பெதிர் சுழல
அறைகைக்கிரி உயிர்விட்டபின் அவிர்மற்றொரு
[பணையே, (59)

1794. திருகிக்கொடு வரலைச்சுரர் தெரிசித்திட இறையோன்
அருகிற்கது மெனவைத்தனன் அதனைப்பரன் விரிநீர்
பெருகிப்பொழி சடையிற்சிறு பிறையொத்திட அணிய
உருகிக்கட ருளர்சுற்றினில் உலவிப்பர வினரே. (60)

1795. ஒருமைப்பட விரைவிற்பல உயிர்கட்கதி சுகமாம்
இருமைப்பலன் அருள்சிற்பரன் இதயத்தினும் ஒளிகூர்
பெருமைக்கனல் விழியிற்கதி பெறுசற்கும ரனையே
அருமைப்பரன் நடுவைத்துமை யவள்பெட்புற
[மகிழ்வான். (61)

1796. கருணைப்பசு பதிபொற்கழல் கமலத்தயன் முதலாய்
வருபற்பல சுரரக்கணம் வழிபட்டனு மதியால்
நிருமிக்கரு மிறைபொற்பதம் நினைவிற்சிர மிசையே
பரவிக்கொடு தமதற்புத பதியிற்குறு கினரால், (62)

1797. வரமுற்பெரு முளரிக்கணன் மயல்விட்டபின் இறைவன்
சரணத்துணை வழிபட்டிடர் தவறக்கணம் ஒருவி
உரமொத்தனன் உலகிற்பினும் ஒளிசக்கரன் ஒருபோ(து)
இரகத்திர ணியனைச்சம ரினிலட்டிட நினைவான். (63)

---

1792. பணை—மருப்பு.

1794. வரல்—வருதல்.

1796. நிருமிக்க அருமையான இறை.

1797. முளரிக்கணன்——தாமரைக்கண்ணன். திருமால் உரம் ஒத்தனன்—உரம் (வலிமை) கூடினன். இரகம்—சூரியகாந்தம்.

வேறு

## 4. நரசிம்மாவதாரம்—வீரபத்திரர் அடக்கியது

### அறுசீர் விருத்தம்

1798. திங்கள் அணிந்தருள் அங்கணன் பங்கய
செஞ்சர ணங்களில்நீர்
கொங்கலர் தொங்கல் வனைந்து பணிந்திரு
கொங்கை நெருங்குமையாள்
பங்கன் மகிழ்ந்தருள் மைந்துகொ டண்டர்
பதந்தொட நின்றுயர்தூண்
எங்கு நடுங்கிட மைந்தர் மடங்கல்
எழுந்துமுன் வந்ததுவே. (64)

1799. பரவை சுழன்றிட மறுகிட எண்டிசை
பஃறலை வெம்பிலவாய்
உரகன் நெளிந்திட அசலம் உருண்டிட
உகமுடி வின்கிளர்கால்
விரவு நெடும்புயல் குமுறிட அந்தரம்
வெடிபட வெந்திறல்கூர்
நரகரி வெம்பொறி விழிசிதறும்படி
நகைசெய் தெதிர்ந்ததுவே. (65)

### எழுசீர் விருத்தம்

1800. மாயனிறை முன்புதவு தாமத குணங்கொடுயர்
மானிட மடங்கல் வடிவாய்ச்
சீயமென வந்துசம ராடிரணி யன்களரி
சேர்திறல் அகன்றி டமுனே
காயவொளி யிந்திரவி பாய்சுட ரொதுங்கவிழி
கால்சிறு புலிங்க வடிவைச்
சேயகல வந்திடையில் ஊழியென நின்றிடிகள்
சீறிமுன் முழங்கி யதுவே. (66)

---

1800. இறை—சிவன்.

## அறுசீர் விருத்தம்

1801. **அ**மரர் பெருந்தவர் இருடியர் புங்கவர்
அசுரர்கள் கந்தருவர்
சமர நெடும்படை நிருதர்கள் அந்தணர்
தமையுண ரும்புலனால்
இமகர மண்டலம் அமுத முணும்பகல்
இரணியன் என்றுணர்வார்
திமிர மகன்றிட அவனிசை யும்புகழ்
தினமு மறைந்தனரால். (67)

1802. **சு**ரநதி யின்றின முழுகுவ னிங்கித
துணைவியு டன்பிலமீ(து)
அரவ மடந்தையர் மகிழ விருந்துசெய்
தமுத நுகர்ந்திடுவான்
பரவு பொனின்கிரி அரசுசெய்வன்கிளர்
பகலர மங்கையர்பால்
இரவில் அயன்பதம் மரகத விஞ்சையில்
இரணியன் எங்கணுமே. (68)

1803. **கெ**ழுகதிர் விரிபக லினுமிர வினும்அறை
கீழினும் மேலினுமுள்
அழுவம தனுமுறு புறமதி னிலுமுயி
ராலுமெய் யாருயிர்பேர்
முழுதினு முலகினில் நிலைபெறும் உயிர்புவி
முடிபிற வாவரமெய்ப்
பொழுதினு முனுமிர ணியனர கரியொடு
பூசல்செ யாவெழுவான். (69)

1804. **த**ந்திகள் கொண்டெதிர் வந்து மலைந்திடு
தந்தி யறைந்திடுநீள்
கந்துக பந்தி தொடர்ந்தெதிர் வந்திடு
கந்துக நொந்துடலே

---

1803. அழுவம்—பரப்பு. முடிபு இறவா வரம் எனப்பிரிக்க.

1804. தந்தி—யானை. கந்துகம்—குதிரை.

சிந்த எறிந்திடு யந்திர மொன்ருெடு
சென்று மடிந்திடனோர்
குந்தமுன் வந்திடு சிந்திய தந்தர
குந்தமெ றிந்திடுமே. (70)

1805. துங்கவி லங்க லெனுங்கள பங்கள்
தொடுங்கலி னங்கடைவாய்
தங்கு நெருங்கு துரங்கமு மங்குல்த
யங்கிர தங்களெனு(து)
எங்கு நெருங்கனி கங்கள ணிந்த
இறந்தன அங்கமெலாங்
கங்கம் இருந்தசை நுங்க எழுந்து
கவந்த நடஞ்செயுமால். (71)

1806. தெண்டிரை மண்டலம் எண்டிசை யண்டின
செண்டெறி தண்டயில்வாள்
கொண்டு வெகுண்டெதிர் விண்டு மருண்டெழு
கொண்டலி லொண்டினர்போர்
அண்டர்கள் கண்டு வெருண்டு புரண்டிட
அண்டினர் தெண்டனெனு
கண்டனர் வண்பொன்மெய் கொண்டவன் வண்டிறல்
கண்டிறல் கண்டிலமே, (72)

1807. அந்தி யொழிந்திடு சந்தியி லின்படி
யந்த மிருந்துமடி
விந்தை நனந்தலை முந்தசு ரன்தலை
வெந்திற லின்கொடுமார்
பந்தனி லைந்துகிர் மைந்து பிளந்து
பரிந்துதி ரந்தனைவாய்
சிந்து நுகர்ந்ததை யைந்துகி ரைந்திர
சிந்தைசெய் துய்ந்திடுமே. (73)

---

1805. விலங்கல்—மலை. களபம்—யானை. கலினம்—கடிவாளம். துரங்கம்—குதிரை. மங்குல்—மேகம். அனிகம்—சேனை. கங்கம்—பருந்து. இருந்தசை—இரும் + தசை—பெரியவூன். நுங்க—உண்ண.

1806. கொண்டல்—மேகம்.

1807. மார்பம் தன்னில். பரிந்து உதிரம் தன்னை.

1808. பொன்கெழு கின்றமெய் துன்றசு ரன்றரை
பொன்றின பின்றனியே
வென்றி நரன்தனு வொன்றரி புன்தசை
மென்று வரன்றுபுணீர்
அன்றியும் வன்தடி தின்றமை வின்றி
யகன்ற வியன்தலமே
சென்றுயி ரன்றவை கொன்றனன் நின்றனர்
தென்றிசை மன்தொழவே. (74)

வேறு

1809. முளரிமங்கை மருவு மார்பன்
முருகு விண்டு நறவுலாந்
துளவ லங்கல் செறிதி ரண்ட
தோள னாழி புங்கவன்
அளவி றந்த புவிய டங்கல்
ஆரு யிர்க்கும் உயிரெனக்
கிளர்வ ரங்கொள் நரம டங்கல்
கேடி லாதெ ழுந்ததே. (75)

1810. பகலும் யாம முஞ்சி றந்து
பரவு னும்ப ரம்புநேர்
அகில மான கீழு மேலும்
ஆரு யிர்க ளாலும்நீள்
இகல்க டங்க ளாலுமே
இறந்தி டாத இரணியன்
புகலி டம்பெ ருது கொன்ற
போர்வி யந்து கொண்டனன். (76)

1811. படைத்த லும்ப டைத்தபார்
பரித்த லும்ப ரித்தபின்
துடைத்த லுந்த னக்க டுத்த
தொழில்க ளாகுமென்றுசீர்

---

1808. தடி—மாமிசம்; தின்ற அமைவு இன்றி. தென்திசை மன்—யமன்

1809. முளரி மங்கை—இலக்குமி. ஆழி—சக்கரம்,

1810. பரம்பு—பரவிய நிலம்,

கிடைத்த வெள்ளி வெற்பு மேவு
  கிரீச னுண்டெ னக்கொளான்
புடைத்த னன்பி டித்தனன்
  புரண்டி டப்பல் உயிருமே. (77)

1812. பங்க யன்தெ ரிங்தொரு
  பதம்பி னும்ப டைத்திடில்
இங்கண் அஞ்சி யேபுகுந்
  தடங்கி நின்றொ ளிக்காலம்
இங்க தன்றி வேறுமற்
  றிடங்க ளில்லை யெம்பிரான்
தங்கு வெள்ளி யங்கிரிச்
  சரண்கள் என்று சாற்றுவார். (78)

1813. அண்டர் யாரும் ஒண்டிநின்
  றடங்கி யண்ணல் கைலைசேர்ந்(து)
எண்டி சாமு கங்கள்கூ
  விறைஞ்சி யேத்தி முறையிடக்
கண்டு நந்தி கேச னம்பி
  காபதிக் கியம்பி நஞ்
சுண்ட தேவ ருட்கொடே
  உவந்த ழைத்து ளுய்த்தனன். (79)

1814. உம்பர் யாவ ரும்பணிந்
  துவந்தெ ழுந்து கைகுவித்(து)
எம்பி ரான்முன் நஞ்சமுண்
  டெமக்கி ரங்கி அருளினைத்
தம்ப மீது செங்கண்மால்
  சனித்து நார சிங்கமாய்
இம்ப ரூழி காலம் வந்த
  தென்ன வேதொ லைத்தனன். (80)

1815. நஞ்சமுன் பதங்கள் என்று
  சாற்றும் உம்ப ரைக்குறித்(து)
அஞ்சல் என்று குன்ற வில்லி
  அண்ணல் தக்கன் மாமகம்

---

1814. தம்பம்—தூண்.

துஞ்சநின் றழித்து வெற்றி
தொலைவி லாது கொண்டபோர்
விஞ்ச வல்ல **வீரனை**
விரைந்து ளத்தி லுன்னினன். (81)

1816. அங்கண் விஞ்சு தக்கன் வேள்வி
யவனொடே அழித்திடும்
துங்க வீர பத்திரன்
துணைக்க ரங்கு வித்துமேல்
தங்கு கின்ற தன்பதந்
தணந்தெ ழுந்து வருமுனம்
எங்க ணுங்கு ழீஇயபா
ரிடங்கள் சுற்று மெய்தியே, (82)

1817. பகரு மோடி யொன்றொ டொன்று
பாரிடங்க ளுதிபோய்
மகர வேலை யேழும்வாய்
மடுத்துடன் குடிக்கினும்
சிகர மேரு உலகெலாம்
செருக்கி யுண்கி னுங்கெடாப்
புகரி லூழி வடவை யோகொல்
பொங்க கட்டெ ழும் பசி. (83)

1818 சங்கு கன்னர் செங்கண் மால்
தலைம யிர்ப்ப றித்ததை
அங்கை கொண்டு பின்னியே
அரைக்க சைத்த சில்கணம்
பங்க முற்ற அரிபடப்
பரிந்து பாஞ்ச சன்னியம்
எங்க ணுஞ்செ விடுபட்
டிரங்க வார்த்த சில்கணம், (84)

1819. முன்றல்வா ரிசப்பொ குட்டு
வள்ளல் பொன்ற முளரிமுள்
துன்று நாளம் நவிரியாய்த்
தொனித்தி டுஞ்சி லகணம்

---

1818. சங்குகன்னர்—சிவகணங்களில் ஒருவர். "சிலதேவரைத் தலைமாமயிர் முழுதும் பறிக்கின்றனர்"—கந்த. புரா. யாகசங்காரம்—76.

1819. நவிரி—நவிராக—பண்ணோசை வர. இரட்டி—ஒலிசெய்து.

அன்றி யுங்க மண்டலத்
தளவ ணைந்து குடமுழா
என்று பல்க ணங்குழீஇ
இரட்டி யாடும் எங்கணும். (85)

1820. தக்கன்மா மகத்து வந்த
சந்தி ரன்ற னைப்பிடித்(து)
உக்க வேய டித்தலத்
துகைத்து ருட்டு துண்டம்நீள்
பக்கமா ரலம்பு கொண்டு
படலை யாய்த்த ரித்துமெண்
டிக்கும் நோக்கி வெடிபடச்
சிரித்து நின்ற சில்கணம். (86)

1821. அந்த வேள்வி வந்திருந்த
ஆதவன்பல் உடையவே
எந்தை வீர பத்திரன்
இடித்து குத்த தென்றுசேர்
பந்தி யான வச்சிரப்
பதக்க மாய்வ குத்துயர்
மந்த ராச லப்புயம்
வனைந்தி டுஞ்சி லகணம். (87)

1822. கந்த னுகும் எந்தை தார
காசு ராதி சூரர்போர்
சிந்த வேதொ லைத்தநாட்
செருக்க ளத்தி றைச்சிதின்(று)
அந்த ரஞ்செல் குருதியுண்
டரும்ப சீத ணிந்தபின்
இந்த நாள ளவும்வீணி
லேயி ருந்த மெனுஞ்சில. (88)

---

1820. மார்அலம்பு கொண்டு—மார்பில் அலம்புதல்கொண்டு; அலம்புதல்—அசைதல்.

1822. "சூரொடும்பொர வஞ்சிசூடிய பிள்ளையார்படை தொட்டநாள் ஈருடம்பு மிசைந்திரண்டு திரப்பரப்பு மிறைத்தனம்" தக்கயாக. 231.

1823. ஊழிநாள் அடுத்த தோவவ்
ஷூழி அன்றி இடையிலே
ஆழி யானி றக்குநாள்
அடுத்த தோகொல் அறிகிலேம்
பாழி யந்த டக்கைவீர
பத்தி ரன்ப டைத்திறம்
வாழி யென்று பாரிடங்கள்
வந்த வோ அனந்தமால். (89)

1824. அம்பு ராசி கரைபுரண்
டடங்க லுங்க லங்கின
உம்பர் நேமி யங்கிரி
உலைந்த னவ்வு லகுசேர்
தம்ப மான பஃறலைச்
சர்ப்ப மெய் நெரிந்திடப்
பம்புசெந் தழற்க ளோங்கிப்
பாழி வெம்மை தோன்றின. (90)

1825. சண்ட வாயு வுங்கதி
தவிர்ந்து நின்றொ டுங்கின
அண்ட மீது தண்சுடர்
அகன்ற னப்ப னிக்கதிர்
கொண்ட லேழொ ளித்தன
கொழுஞ்சு டர்த்தி வாகரன்
எண்டி சாமு கத்தும்வான்
இறந்தி ருள்மு யங்கின. (91)

### எழுசீர் விருத்தம்

1826. சாற்றரும் அனந்த கோடியிப் படியே
சமர்குறித் தெழுந்துசூழ் கணங்கள்
ஆற்றன்மிக் குயர்வெம் பூதவே தாள
அனிகங்கள் அந்தநாள் வெள்ளம்
காற்றுவெவ் வடவைக் கனல்நிகர்க் கரிதாய்க்
கதித்தவை யெனப்பரந் தெங்கும்
போற்றிடப் புவனம் பொடிபடக் கயிலை
போந்தனன் **வீரபத் திரனே.** (92)

---

1825. **திவாகரன் இறந்து இருள் முயங்கின.**

1827. கனைகழற் றுளும் கச்சுவீக் கிடையும்
கணிப்பிலா வெண்டலை மாலை
வனையுமார் பகமும் துடியொரு கரமும்
மணியொரு கரமுமுத் தலைவேல்
முனையிடைக் கடவெம் பொறிசித றிடப்பன்
முறைசுழற் றியவிரு கரமுந்
தனைநிக ருருவிற் சிறுபிறை எயிறுந்
தழல்விழி மூன்றுமாய்ப் பணிந்தான். (93)

1828. மறைமுடி அனந்த கற்பநாள் தொடர்ந்தும்
மனத்தினுங் குறிக்கரும் பொருளைக்
குறைவறு மகிழ்ச்சி பெருகுமுத் தழற்கண்
குளிரவே திருவழ கமுதம்
முறைமுறை பருகித் தற்பர! விமல!
முன்னருங் கருணையங் கடலே!
இறைவனே! தமியேன் தனைநினைத் ததுவென்
இயம்புதி பணிகளுண் டென்னில். (94)

1829. என்றுரைத் திறைஞ்சும் வீரனை நோக்கி
எம்பிரான் புகன்றிடும் வீர!
பொன்றிட வருமூ ழிக்கன லெனவே
பொருக்கென வடுநர சிங்கன்
வென்றிக ளனைத்தும் அவற்கிதம் பெறவே
விளம்பிமீள் தருகிவை யரிதேல்
ஒன்றெனும் எமது பேருழி கோடி
உலகெலாம் பயங்கர முறவே. (95)

1830. நீடுநிட் களசத் தியைநமை நினைந்து
நிட்கள சத்தியாற் கொணர்தி
சாடுமெய்த் தூல சத்தியைத் தூல
சத்தியாற் கொணர்திமாற் றரிய
பீடுறு நரசிங் கத்தையே வதைத்துப்
பிறங்குமா னனத்தையுங் குரம்பு
மூடுவெண் சருமந் தனையுநல் குதிவான்
முறைமுறை பரவவென் றுரைத்தான். (96)

---

1829. மீள்தருக—மீளுக. கோடி—கொள்ளுதி.
1830. குரம்பு—குரம்பை—உடல்.

1831. சிறுபிறைச் சடில நாயகன் மொழிதல்
சென்னிமேற் கொண்டவை தணந்து
முறுகுவெங் கதநீத் தருள்வடி வெடுத்து
முகமலர்ந் தடுநர சிங்கம்
உறுதலம் இமைப்பில் அடைந்துபா ரிடங்க
ளோடுகண் புடைச்செலச் சிறந்தான்
வெறிபடு துளவ மாயவன் தன்னை
விளம்பவே மேவிவீற் றிருந்தான். (97)

1832. ஓங்குபே ரண்ட முகட்டின்மா முடிசென்
றொருபத மில்லையெண் டிசையுந்
தாங்குமற் புயபூ தரங்கள்சென் றிடப்பொற்
றுளிணை பாதலந் தரிக்கப்
பூங்கன கப்பொற் குவடுவெண் குவடாய்ப்
பொருக்கென வெடுத்தமெய் கடுக்கும்
பாங்கர்வந் துலவுந் தனிநர மடங்கல்
பார்த்திட வீரனின் றுரைப்பான். (98)

1833. செங்கண்மா யவனே! மச்சமெய் கொணர்ந்து
தெண்டிரைப் புவியெலாம் புரந்தாய்!
துங்கமாங் கமட வடிவெடுத் திரங்கித்
தொல்லுல கனைத்தையும் பரித்தாய்!
அங்கணீர்க் கடல்வீ ழுலகினை ஆதி
வராகமாய்க் கோட்டினில் எடுத்துப்
பொங்குபாந் தளின்மேன் முன்னர்போல் இருத்திப்
பொதுவறக் கருணைசெய் தளித்தாய்! (99)

1834. கண்ணுதற் சாமி அருளினுல் அசுரர்
கடற்படை சூழுர ணியனை
விண்ணுளோர் முதலாம் உயிர்த்தொகை அனைத்தும்
வெருக்கொள வதைத்திசை படைத்தாய்!
தண்ணறுந் துளவப் படலையோய்! உண்மை
சாற்றிடில் உனக்கிணை யார்கொல்
அண்ணல்பே ரருளால் அசுரரைச் செற்ற
அகந்தைநீத் தவனிகாத் தருளே. (100)

1831. அவை—சபை.

1835. என்றுரைத் திடுசொல் செவித்துளை மடுப்ப
எரிதழற் செப்புநா ராசம்
ஒன்றுபட் டிடமுன் செருகிய தெனக்கொண்
டுடன்றுமால் வீரனை நோக்கி
நன்றுநன் றுலகில் சூழிதக் குரராய்
நன்மொழி புகல்பவர் போல
இன்றுநீ யெனக்கிங் கடாதவை புகன்றாய்
[இங்குநின் மொழியது கொள்ளேன்]. (101)

1836. இக்கணம் உனது பதத்திலே குதியான்
இனிப்புவி அடங்கலும் நடுங்கத்
தொக்கபல் லுயிரா கியசரா சரங்கள்
தொலைப்பனோர் இமைப்பொழு ததனில்
மைக்கடற் புவியா கியவுல கனைத்தும்
வகுப்பதும் புரப்பதும் அனைத்தும்
ஒக்கஈ ற்றினில்நின் றழிப்பதும் எனக்கிங்
குரியமுத் தொழிலுமென் றுணர்தி, (102)

1837. பங்கயப் பொகுட்டு நடுவண்வீற் றிருக்கும்
பண்ணவன் கண்ணுதற் கடவுள்
இங்கெழுந் தருள்கூர் சத்திபே தத்தால்
எண்ணிலா வுயிர்த்தொகை படைத்துஞ்
சங்கைய தறவே அழிப்பது மானூர் ;
தருக்குகா லனுக்கும்நான் காலன்
புங்கவர் அயனு தியரனை வருக்கும்
போற்றுதே வெனவெனை மதித்தி. (103)

1838. என்றுடன் எதிர்ந்து புகல்நர சிங்கம்
ஈசனை இகழ்ந்துரைத் ததுகேட்(டு)
உன்றனுங் காரம் கெடுவது திண்ணம்
ஓரிமைப் பொழுதுபா ரென்று
கன்றுவெவ் வடவை உருக்கொடு கிளர்ந்து
கவனவான் முகடிடி படமுன்
நின்றிதழ் துடிப்ப விழிபொறி சிதற
நீப்பருங் கோபமுற் றனனால். (104)

---

1835. இதக்கு—இதத்துக்கு; உரர்—உரத்தவர்;

**எண்சீர் விருத்தம்.**

1839. **உ**டுபதிசெங் கதிர்த்தபனன் சுடர்விடுமூ விழியும்
ஒளிர்குலிசப் படைநகமும் முருகுதசை நாவும்
முடுகுபயி ரவிகுமரி இருசிறகும் வடுகன்
முளரியித ழும்வடவை உதரமும்வெம் பிணிநோய்
தொடுகழற்கால் மறலியிரண் டுருவுமெண் திகையுந்
தொல்லைநிலை சூலையமோ தியசண்ட வாயு
அடுதிறல்வே கமுமாகச் சரபவுருக் கொணர்ந்தே
அந்தரத்தி னிடைவெளிப்பட் டார்ப்பரித்தோங்
கினனே. (105)

1840. **அ**ண்டமுக டிடிபடச்சென் றலம்வருகால் சுழல
அட்டதிசை சுவடுபட அசனிவெடித் துதிரக்
கொண்டலிறு தியின்முழக்கஞ் சிறுபறைபோற் கறங்கக்
கோரவெயி றுறவதுக்கிக் குமுறிடவே சிறிது
கண்டுநர மடங்கலுடல் கதுமெனக்கம் பிக்கக்
கண்கள்புதைத் திடநெடியக் கரங்கள்நிலந் துழவப்
பண்டைநினை வொடுங்கிவிழப் பாய்ந்திறகால்
[இறையைப்
பழித்தநெடு நாக்கடைவாய்ப் பற்களுதிர்த்
[ததுவே. (106)

1841. **பி**றங்குபடி வச்சரப நாயகன்கூ ரலகால்
பேரண்ட வுருக்கொணர மடங்கல்விழி பிதுங்கக்
கறங்கெனவெண் திசையும்வலம் சுழற்றியெறிந்
[திடவால்
கதுமெனக்கொண் டதனையிடஞ் சுற்றுபுவா
[னெறியப்
புறங்கிளர்வன் னச்சிறகர் ஒருநான்கும் அறைந்து
பொருக்கெனபா தலத்தெறியப் பொருந்தடர்கீழ்ச்
[சரணம்
குறங்குரமற் புயமென்பு குலைந்திடமூ தண்ட
கோளகை மேல் எறியவுடல் கொத்துபுநின்
[றுடற்றும். (107)

---

1839. ஊரு—தொடை,

1842. **கொ**ற்றமுறு சலந்தரனைச் செற்றசுட ராழி
கொடுத்தவிறை யெனப்பரவா தெடுத்தவகந்
[தையினுற்
சொற்றவசை தனையுளத்திற் சற்றுநினைந் துயிர்ப்பும்
தொலைந்திறக்க மணிமார்பும் பிளந்துதிரஞ் சொரிய
மற்றமணிக் குடரெலும்பூன் அற்றுதிரத் துவக்கு
வள்ளுகிரால் நரமடங்கல் வடிவனைத்தும் உரித்த
சுற்றதனுந் திருமுகமும் முற்றுமெடுத் தமலன்
துலங்கவைமுன் சயவீரன் இலங்கிடவைத்
[தனனே. (108)

1843. **வீ**ரன்முன்பாய் வைத்ததிறை பராபரன்கொண் டதனை
விரித்துடுத்துத் திகம்பரனென் றதுபோலப்
[பின்னும்
**நாரசிங்காம்** பரனென்றே பெயர்தரித்து முகத்தை
நளினஅயன் வெண்டலைமேல் நாயகமாய்த்
[தரித்தான்
ஆரணநான் முகன்குலிசன் அமரர்பணிந் தெம்மான்
அனுமதியால் தமதுபதம் அடைந்தனர்மா லோரா
நாரணன்பூ சித்தபரா தந்தணந்து பெம்மான்
நல்குமனு மதியாற்போய் நண்ணினன்தன்
[பதமே. (109)

5. **வாமனவதாரம்—வயிரவர் அடக்கியது**

1844. **பி**ன்னுமொரு காலத்து மதுசூதன் வலிதன்
பேரரசு குறைக்கநினைந் **ததி**திவழுத் தியபேர்
அன்னவள்தன் வயிற்றிலங்குக் **காசி**பன்பே ரருளால்
அவதரித்திந் திரன்பின்னோன் ஆகியுதித் தீசன்
தன்னருளால் **உபேந்திர**ன கிப்பிரம சரியம்
தண்டாவாச் சிரமமுற்றுத் தற்காலங் குறித்துப்
பன்னருமா **வலி**மகத்தில் **வாமன**னய்ச் சென்று
பாரினின்மூ வடியிரந்து பதியருளென்
[றனனே. (110)

---

**1844.** வலி—மாவலி—முதற்குறை. அதிதி—காசிபர் மனைவி.

1845. **க**ருதரிய விறலசுரன் மூவடியீந் தனனக்
காலைபுவி யோரடியுங் ககனமதோ ரடியும்
ஒருதிலமாத் திரமளவும் பிசகாமல் அளந்தே
ஓரடிக்கு நிலந்தாவென் றுருத்தெழுந்து நோக்கி
விருதுபுனை கனைகழற்கால் மாவலியைப் பிலத்தில்
விடுத்தரிய சிறைபுகுத்தி வேலையுல கனைத்தும்
பொருதசுரற் குடைந்திடுதே வேந்திரற்கு நல்கிப்
பொருவில்திரி விக்கிரம வடிவெடுத்துப்
[பொலிவான். (111)

1846. **அ**ண்டமுடைத் துடன்மீளப் படைத்தபார் வெருக்
[கொண்
டலம்வரவே சுழற்றுபுநின் றுங்கார மிகுத்தே
எண்டிசையும் இமைப்பளவில் அடல்புரியும் ஏல்வை
இமையோர்கள் கைலையிற்சென் றிறைஞ்சி முறை
[யோவென்(று)
ஒண்டியொண்டிச் சாரலடைந் துள்ளுறவே போற்ற
ஒங்குநந்தி கேசனுணர்ந் துமைபாகற் குரைக்கத்
துண்டமதிச் சடிலமுக்கண் நாயகன்அண் டரையிச்
சூழல்கொணர் கெனவிளித்துச் சோதிமுனம்
[விடுத்தான். (112)

1847. **உ**ம்பரனை வருமிறைஞ்சி ஓலமிட்டுப் பெம்மான் !
உபேந்திரனும் வாமனன்மால் உறுதிரிவிக் கிரமன்
அம்பரமா கியஅண்டம் அனைத்துமிடித் தெமையும்
அடல்புரிந்தான் அகந்தையகற் றுதியெனவே
[யிரங்கப்
பைம்பொனித ழிச்சடிலக் கடவுளனைத் துலகும்
பயங்கரமா கத்தோன்றும் **வயிரவனை** யேவத்
தும்புருவர் புகழ்விருத்த வடிவாமச் சுதனைச்
சோனைமழை யெனக்குருதி சொரிந்திடமார்
[பறைந்தான். (113)

---

1845. தில மாத்திரம்—எள்ளளவு, திலம்—எள்,

1848. அங்கமனைத் துங்குலவுந் தசையுதறித் துவக்கை
ஆங்காரத் துடன்கீறி யனைத்தும்உரித் தெடுத்துக்
கங்குமணி புரைநீலக் கஞ்சுகமாய்த் தரித்துக்
கழியுடற்கூ ரென்பினைக்கங் காளமெனக் கரத்திற்
சங்கையறத் தரித்தனன்விண் ணோர்பயந்தீர்ந் [திறைஞ்சித்
தம்பதமுற் றனருபேந் திரனுமருச் சித்த
கங்கைமுடிப் பானருளால் வைகுந்த மடைந்தான்
ஐந்தவதா ரங்கோறல் அருள்வதைந்தும் [உரைப்பாம். (114)

---

## அத்தியாயம் 65.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### (1) பரசுராமர் பூசித்தது.

**சூத முனிவர் சொல்கிறார் :**

சமதக்கினி முனிவருக்கும் இரேணுகைக்கும் பிறந்த பரசுராமர் தந்தையின் சொற்படித் தாயை வதைத்தார். தந்தை மகிழ்ந்து வேண்டும் வரத்தைக் கேள் என்றார். பரசுராமர் பணிந்து, 'என் அன்னையை எழுப்பித் தருதல் வேண்டும். தேவரீர் சினந் தவிர்தல் வேண்டும். சிவபெருமானை விதிப்படி எப்போதும் வழிபடும் பேறு வேண்டும்' என்று மூன்று வரங்களை வேண்டினர். தந்தையும் அவ்வரங்களை அளித்தார்.

பரசுராமர் சிவபெருமானை எப்போதும் உளத்தில் இருத்தித் தவம் புரிந்து கொண்டிருக்கும்போது, காமதேனுவைத் தனக்குக் கொடுக்காத காரணத்தால் கார்த்தவீரியார்ச்சுனன் சமதக்கினியை வாளால் வெட்டிப் போயினன். இரேணுகை கணவனுடன் எரியில் உடன்கட்டை யேறினள்; ஆனால், இடையே மழைபெய்ததனால் ஆடை மட்டும் வெந்து, ஆடையில்லாததால் நாணமுற்று வேப்பந்தழையை உடுத்திக்கொண்டு, புலைச்சேரி ஒன்றை அடைந்தாள். அங்கே ஒரு மாதங்கி மாவைக்கொண்டு இரேணுகையின் மெய்யெலாம் அப்பிச் சுகப்படுத்திப் போற்றினள்.

---

1848. துவக்கு—தோல். கஞ்சுகம்—சட்டை. அருச்சித்து—அகம்—கை, அகம்—அகம்பாவம், அகந்தை. கை—இடம்,

தவம் புரிந்துகொண்டிருந்த பரசுராமர் தந்தையின் மரணங்கேட்டு ஓடி வந்து, கார்த்த வீரியார்ச்சுனனை வெட்டி வீழ்த்தி, பிற அரசர்களையும் மாய்த்து அந்தக் குருதி நீரால் தந்தைக்குத் தருப்பணம் முதலியன செய்தார். இவ்வாறு மூவேழு தலைமுறைவரை கருவறுப்பேன் என்று சபதமும் புரிந்தார். அந் நிலையிலே வந்த தாயை வணங்கி இந்து மடுவில் மூழ்குவித்தார். பிறகு, ஊருக்கும் வெளியே அன்னையை வழிபட்டு மகிழ்வித்தார். பின்னர், 'வீரகத்தி' நீங்க வீரபத்திரரை வழிபட்டுப் புனிதரானார். கார்த்த வீரியார்ச்சுனன் ஆண்ட நிலமனைத்தையும் காசிபருக்குக் கொடுத்து விட்டுக் கேரளம் அடைந்தார்.

## (2) தசரத ராமர் பூசித்தது

அயோத்தியரசன் தசரதன் மகனாகத் திருமால் அவதரித்து, இராமனென்றே பெயர் தாங்கிச் சீதையை மணந்தார்; தந்தை மொழிப்படிக் காட்டுக்குத் தம்பியுடனும் சீதையுடனும் சென்றார். அங்கே இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். அகத்தியரின் உபதேசப்படிச் சிவபெருமானை வழிபட்டு, இராவணனை வெல்லும் சரமும் வரமும் பெற்றார். பிறகு, வானரருடன் சென்று சேதுவைக் கட்டி, இராவணனைக் கொன்று சீதையை மீட்டுக் கொண்டு அயோத்தி வந்து, வசிட்டர் பட்டாபிடேகம் செய்ய அரசாண்டார்.

அங்ஙனம் அரசாளும்போது உலவிய பழிச் சொற்குப் பயந்து சீதையைக் கானிலே விடுத்தார். சீதையும் புவியைப் பிளந்து மறைந்தாள். இராமர் சீதையின் பிரிவால் வருந்தி, பிறகு, அசுவமேத யாகஞ் செய்து, சிவ பெருமானை வழிபட்டுச் சரயுவை யடைந்து, உலகில் நீங்கித் திருப்பாற்கடலிற் சேர்ந்தார்.

## (3) பலராமர் பூசித்தது.

வசுதேவனுக்கும் உரோகிணிக்கும் திருமால் பலராமராக அவதரித்தார். கலப்பையைப் படையாகக் கொண்டு, அரக்கரை வென்று, உமையொரு பங்கரை வழிபட்டு, யோகமூலமாக வைகுந்தம் சென்றார்.

## (4) கிருஷ்ணன் பூசித்தது.

மற்றும், வசுதேவனுக்கும் தேவகிக்கும் மகவாகத் திருமால் அவதரித்துக் கிருஷ்ணனெனும் பெயருடன் சிவபெருமானைப் பூசித்துப் பூபாரந் தீர்த்தார். மேலும், உபமன்னிய முனிவரிடம் சிவதீக்கை பெற்றுச் சைவோத்தமராகிக் குன்றவில்லியைப் போற்றி வைகுந்தம் புகுந்தார்.

## (5) ஹயக்கிரீவர் பூசித்தது

கலியுகத்தில் திருமால் ஹயக்கிரீவன் என்று தோன்றித் தீயோரைக் கொன்று, பரம்பொருளைச் சிவலிங்கத்தில் வழிபட்டு வைகுந்தம் அடைந்தார்.

இவ்வாறு பிருகு முனிவர் சாபத்தைத் திருமால் அனுபவித்துக் கழித்தார். அருள்பெற்ற பரசிராமாவதாரம் முதலிய ஐந்தினும் அரக்கர் முதலானோரை அழித்த பாவந்தீர அமலனை வழிபட்டு நலம் பெற்று வைகுந்தம் அடைந்தார். மச்சம் முதலான அவதாரங்களிற் கொண்ட செருக்குச் சாத்தன் முதலானோரா லழிக்கப் பெற்றுச் சிவனருள் கிடைக்கப் பெற்றார்.

## திருமாலுக்குக் கண்ணுவர் சாபம்.

ஒருமுறை திருமாலும் உபேந்திரனும் வைகுந்தத்திலே உரையாடிக் கொண்டிருந்தனர். இலக்குமியும் அவர்களுடன் இருந்தாள். அப்போது கண்ணுவ முனிவர் திருமாலைக் காண வந்தார். அவரைத் திருமால் முதலானோர் வரவேற்று உபசரிக்காமல் மௌனமாயிருந்தனர். அதனால் கண்ணுவர் வெகுண்டு ' திருமாலே! சிவனடிமையாம் என்னைப் புறக்கணித்த நீ பல பிறப்புக்கள் ஊமையாய் உலகிலெடுத் துழல்வாயாக; இந்தத் திருமகள் மிருகம் போல நின்றதால் மானாக அலைவாளாக! இந்த உபேந்திரன் வேடனாகுக. உன் அடியர் சிவநிந்தை செய்யும் புத்தி கலக்கத்தை உறுவாராக' எனச் சபித்துத் தமதிருப்பிடம் அடைந்தார். இந்த சாபத்துக்கு அஞ்சித் திருமால் சிவபிரானை வழிபட்டு வேண்டினார். அப்பெருமான் இரங்கிக் கண்ணுவரை அழைத்துத் திருமால் முதலானோர் பிறப்பை ஒருதடவையிலே முடித்துக் கொள்ளுமாறு மாற்றும்படிப் பணித்தார். கண்ணுவரும் இணங்கி மாற்றி விட்டு வணங்கிச் சென்றார்.

கண்ணுவர் சாபத்தின்படி திருமால் சிவமுனி என்னும் பெயருடன் தோன்றிக் காட்டில் தவம் புரிந்தார். உபேந்திரன் வேடராஜனானான். மானாகப் பிறந்த திருமகள் சிவமுனிவரின் பார்வையாற் கருவுற்று ஒரு குழவியை வள்ளிக் குழியில் ஈன்றாள். அக் குழவிக்கு 'வள்ளி' எனப்பேர் வைத்து வேடராஜன் வளர்த்தான். வள்ளியம்மைக்கு மங்கைப் பருவம் வர புனங்காக்க விடப்பட்டாள். பின்னர், வேடர்கள் வெறியாட்டு முதலியன ஆடித் திருத்தணிகை நாயகருக்கு வள்ளியைத் திருமணஞ்செய்து சீதனங்கள் கொடுத்து வந்தித்தனர். சிவமுனியும், நம்பிவேடனும், மானும் தம் சாபம் நீங்கப் பெற்றனர்.

## சுவன் கதை.

### ததீசியுடன் திருமால் பொருதது

சுவன் என்னும் அரசன் பிரமாவின் புத்திரன். இந்திரனிடமிருந்து குலிசாயுதம் பெற்றவன். ததீசி முனிவருக்கு நண்பன். ஒருமுறை சுவனுக்கும் ததீசி முனிவருக்கும் வாதம் எழுந்தது. 'முனிவரே உயர்ந்தோர்' என்றார் ததீசி; ' அரசரே உயர்ந்தோர் ' என்றான் சுவன். ததீசி கோபித்துச் சுவனை உதைத்தார். அரசன் கோபித்து அவர்மேல் குலிசாயுதம் முதலிய படைகளை ஏவி

னன். முனிவர் அவைகளைத் தடுத்து வென்றார். இந்திரன் திருமால் முதலியோரிடம் சுவன் அபய மென்று ஓலமிடத் திருமால் ததீசியின் பன்னசாலைக்குச் சென்று "முனிவரே! அரசரே முனிவரினும் மேம்பட்டவர் என்றாவது அல்லது அரசரும் முனிவரும் ஒப்பாவார் என்றாவது சொல்வாயாக" எனக் கேட்டுக்கொண்டார். ததீசி நான் பொய் கூற மாட்டேன் என மறுக்கத், தேவர்கள் சூழத் திருமால் ததீசியுடன் போர் செயத் தொடங்கிப் படைகளை ஏவினர். ததீசி சூலமொன்றை நாட்ட அது திருமாலின் படைகளை விழுங்கிற்று. திருமால் விசுவரூபம் எடுக்கத் ததீசியும் தனது மெய்யில் விசுவ ரூபத்தைக் காட்டினர். திருமால் சக்கரத்தை ஏவ அது ததீசி மேற்பட்டு முனை மழுங்கி மீண்டது. அப்போது பிரமதேவர் அங்குத் தோன்றிப் போரை விலக்கினர். ததீசி திருமாலையும் தேவர்களையும் பார்த்து 'நீங்கள் வீரபத்திரரால் செல்வம் இழந்து சிதைவு பெறக் கடவீர்களாக. இந்தத் திருமாலின் பத்தர்கள் பாசண்டராய்ச் சிவனைப் பழித்து நரகங்களில் இடர்ப் படுவார்களாக'—எனச் சபித்தார்.

---

# அத்தியாயம் 65.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### 1. பரசுராமர் அருள் பெற்றது.

### எண்சீர் விருத்தம்.

1849. ஓங்குபர மானந்த வெள்ளத்துள் துளைந்தே
உமைபாகன் சரணம்நினைந் துணர்சூத முனிவன்
பாங்கர்மரு வியசவுன காதியரை நோக்கிப்
பகர்ந்தருள்வான் அச்சுதனும் பகவான்முன் பிருகு
தாங்கருஞ்சா பத்தாற்சம தக்கினியென் றொருபேர்
தரித்திடவே தவஞ்செய்சம தக்கினியாம் முனிவன்
கோங்குமுகை அனையகுவி முலையிரே ணுகைபாற்
கொற்றமிகுத் தடல்புரியி ராமனைப்பெற்
[றனனால். (1)

1850. ஏற்றபரு வங்குறித்த காலத்தின் மகிழ்ந்தே
இராமனுக்கு மறைப்படிதேர்ந் துபநயனம்
[புரிந்தான்
போற்றுமவ னும்பிதா மலர்ப்பதநன் மலர்தூய்ப்
பூசைபுரிந் தவன்சாயைப் போலிருந்து விருப்பால்

வேற்றுமனம் புரியாமற் பணிகுவனோர் போது
மிக்கவொரு காரணத்தால் அருமுநிவன் ஏவிச்
சாற்றுமொழிப் படிபுரியி ராமனிரே னுகையாந்
தாய்முடியை யோராது தடிந்தயலின் றனனே.(2)

1851. அக்கணநற் றந்தைசம தக்கினிமா முநிவன்
அறைகுவான் அருள்மதலாய்! அன்னையென [நோக்கா(து)
இக்கணமென் மொழிப்படிபோய் வதைத்தனையன் [றியுநீ
இவ்வளவென் றெடுத்தூரைக்கப் படாதபத்தி [புரிந்தாய்
மிக்கவிருப் பெமக்குளதென் றறிகவினி உனக்கு
வேண்டும்வரம் அனைத்தினையும் விளம்புதி நான் [தருகேன்
பக்குவமீ தெனப்பரவி யிராமனின்று போற்றிப்
பரவசப்பட் டொடுங்கியெதிர் பகர்ந்தனன்முன் [பணிந்தே (3)

1852. எந்தையடி யேற்குவரம் நல்க இசை குவையேல்
எளியேனுல் அன்னையுயிர் இறந்ததுமுன் போல
வந்தருளக் கருணை செய்தி ஆதிவரம் ஈது
மற்றுமடி கள்வெகுளி மாற்றுதியீ தன்றி
இந்துமுடிச் சடிலன்மலர்ப் பதமறையா கமத்தில்
எடுத்தவிதிப் படிபூசை யெந்நாளும் புரியச்
சிந்தைமகிழ்ந் திம்மூன்று வரமருள்தி என்னத்
தேர்ந்துமுநி வன்கொடுக்கச் சிறப்பொடுபெற் [றனனே. (4)

1853. சிந்தைமிசைச் சந்ததமும் எந்தைசிவ பூசை
செய்தருளி யிராமனத்யா னஞ்செய்தே வனத்திற்
பந்தவினை தொந்தமற ஐந்தழலின் நாப்பண்
பரிந்துக்ருதத் தருந்தவங்கள் புரிந்தருளும் ஏல்வை
அந்தமுநிக் கிந்தவம யந்தனில்வந் ததுவென்
றருள்காம தேனுநல்கா அபராதங் குறித்து
வெந்திறலின் முந்திவரு தந்திரங்கொள் கார்த்த
வீரியார்ச் சுனன்சமதக் கினிமுடிவீழ்த் தினனுல்.(5)

1854. பொருக்கெனமாய்த் திட்டுமதிற் புரமடைந்தான் இருடி
புங்கவனு கியசமதக் கினிமனைவி யுயிர்கொண்(டு)
இருக்குமது கற்பலவென் றழலிடைமூழ் கினளவ்
வேல்வைபெரு மழைபொழிந்த தெரிந்தணையத்
[துகிலின்
சுருக்குடைவெங் தகலல்கு லூருவெளிப் படமாத்
துயரமிக அடைந்துவெள்கித் துணைப்புருவ
[நிகர்க்கும்
மருக்குலவு தழைதழைக்கும் நிம்பவுல வையினல்
மறைத்துடுத்துப் புலைச்சேரி மறுகுசின்னு
[ளிருந்தாள். (6)

1855. அங்கண்மரு வியபோது தனிநல்லாள் மதங்கி
அழலின்வெந்து நொந்தவிரே ணுகையுரு
[மாக்கொண்டே
யிங்கிதமாய்த் திமிர்ந்துதரிப் பித்துடல்முன் போற்செய்
தேத்தினள்; இராமன்வனத் திருந்தபின்மா முனிவர்
புங்கவனும் தந்தைநற்ருய் செயல்கேளா ஈசற்
பூசைசெய்து வேண்ட எம்மான் புரந்த[மழுப்]
[படைகொண்(டு)
எங்குளனெங் குளன்கார்த்த வீரியார்ச் சுனனென்
றிமைப்பிலடைந் தவன்முடியை யெற்றினன்பார்
[விழவே. (7)

1856. மற்றநிரு பர்கள்முடி தடிந்தவர்கள் செந்நீர்
வாரிகொடு தருப்பணமும் அருக்கியாஞ் சலியும்
கொற்றமுற வேகொடுத்தான் இப்படியின் மூவேழ்
குலத்தளவும் இருந்தவர்கள் குருதிகள்தென்
[புலத்தோர்க்(கு)
உற்றவருக் கியங்கொடுப்பன் எனச்சபதம் புரிந்தான்
உடன்மீண்டும் அக்கணத்தில் உவந்தருள்நற் ருயை
நற்றவத்தின் வலியாலேத் துபுமலர்த்தாள் இறைஞ்சி
நயங்கொடுத்த விந்துமடு நன்னீர்மூழ்
[குவித்தான். (8)

---

1855 மதங்கி—பாணமகள்,

1857. போற்றவள மல்கியவூர்ப் புரத்திலன்னை மலர்த்தாள்
பூசைபுரிந் தேசிலநாள் புகழ்ந்துவதிந் தன்னை
தேற்றமனம் மகிழ்வித்தான் வீரகத்தி யனைத்தும்
தீர்ந்துபவித் திரனைச் சிந்தைசெய்து தக்கன்
ஆற்றுமகம் அழித்தருளுஞ் சயவீரன் மலர்த்தாள்
ஆராதித் தேபுனிதன் ஆகினன்கா சிபற்கு
மாற்றருஞ்சீர் கார்த்தவீரி யார்ச்சுனன்பா ருதவி
வைகுந்தத் திருந்தபின்னர் மருவினன்கேரளமே. ()

## 2. தசரதராமர் அருள் பெற்றது

1858. கனகநவ மணிவிசிறு கவிரொளிபாய் சிகரம்
கடவுளர்கள் வரவுணி காட்டியகோ புரங்கள்
தினகரன்வந் திளைப்பொழிய வளந்தருசூ ளிகைகள்
செய்யமுகில் கண்படுக்குந் திகழ்ஞாயில் மதில்சேர்
பனகதலம் அளவிடஆழ்ந் திடங்கொள்தெண்ணீ ரகழி
பல்லுயிரும் அஞ்சல்வம்மின் பரிப்போமென் [றழைக்கும்
அனகமணிக் கொடிமாட மறுகனந்த கோடி
அமரருல கெனவளங்கொள் அயோத்தியர்கா [வலனே; (10)

1859. இரவிகுல திலகனெனுந் தசரதபூ பதிமுன்
இருமைதரு புத்திரர்க்காய் ஈசன்மலர்ச் சரணம்
பரவியிறை கருணையினால் வசிட்டாதி யெனுந்தா
பதர்களுடன் புத்திரகா மேட்டிபுரிந்தருள்போ(து)
அரவிதழி கமழ்சடில அங்கணன்ஆ ணையினல்
அச்சுதன்வை குந்தமொரீஇ அயோத்தியில்வந் [துறமேல்
விரவிநிறை களபமுலை மனைவிகவு சலைபால்
மிக்குதச ரதராம வேந்தனென உதித்தான். (11)

---

1857. வீரகத்தி—வீரரைக் கொன்ற பாவம்.

1858. கவிர்ஒளி—முருக்கின் (சிவந்த) ஒளி. சூளிகை—மேல்தளம். ஞாயில்—மதிலுறுப்பு. பனக தலம்—(பன்னகம்—நாகம்) நாகலோகம்.

1860. **ப**ருதியென மிதுலேநகர் வரு**சனக** நிருபன்
பரவுதவத் தாற்பூமி பயந்தருள்**சீ தையை**நேர்
கருதிமணம் புரிந்து பின்னர்த் தந்தைமொழிப் படியே
கனிமொழியின் னவனெடுகான் கடந்தனனவ்
[வேல்வைக்
குருதிவடி வாட்படையி **ராவண**ன்வேற் றுருவம்
கொண்டுவந்தி ராமவிலக் குமணரைவஞ் சித்துத்
திருவாஞ்சீ தையைக்கொணர்ந்த கன்றனன்பின் விரக
வருத்தத்தால் இளவலுடன் மாயனிடர்
[உழந்தான் (12)

1861. **தெ**ன்றலிளங் கன்றுதவழ் குன்றமுனி வன்பால்
சென்று கலுழ்ந் தனன்முனி அஞ் சேலஞ்சே
[லென்றோர்ந்
தன்றுவலி துன்றரக்கர் பொன்றிடவே சிவனை
ஆராதித் துபதேசம் அளித்தருள இராமன்
மன்றல்கமழ் கின்றமிளிர் கொன்றைவனே குழகன்
மலர்ச்சரணம் நறுமலர்தூய் வழிபாடு புரிந்து
பொன்றிகழும் மன்றினடம் நின்றுபுரி யமலன்
புரந்தருளுஞ் சரந்தனையும் வரந்தனையும்
[அடைந்தான். (13)

1862. **க**ருவிரற்செம் முகநெடுவாற் கவியனிகத் துடனே
கடலினெடுஞ் **சேது**மைப்பிற் கட்டுவித்துப் படர்ந்து
பொருசமர விஞ்சைகவிக் குலசேனை யுடன்போய்ப்
பொருக்கெனவல் லரக்கர்படைப் புணரியுடன்
[தொலையாத்
திருகுசினம் புழுங்கியிரா வணன்முடிகள் தடிந்து
செந்தழற்சோ தனைகொடுத்த சீதையைக்கொண்
[டயோத்தி
வருகுரிசில் நவமணிசிங் காசனத்தில் உடனே
வதிந்தருள்பட் டாபிடேகம் பெற்றுமகிழ்ந்
[திருந்தான். (14)

1863. **ப**ரிமளமல் கியமலர்கற் பகமூல நிழலிற்
பருமணிசிங் காதனத்திற் **பரதன்**முத்தின் கவிகை
விரிவினயல் பிடிக்கமுன்**சத் துருக்கனன்**சா மரங்கள்
வீச **இலக் குவ**னங்கை விரைந்துவழி படவீள்

வரிவிழிவெண் ணகைக்கனிவாய்ச் சீதையிடப் [புறத்தின்
வதிந்திடப்பட் டபிடேகம் வசிட்டன்மன மகிழ்ந்து
புரியவிரிந் தெறிதிகிரிப் படைதிசைக ளனைத்தும்
பொதுவறவே செலவுருட்டிப் புரிந்தருளி யிருந்தான். (15)

1864. திரைக்கரமா மணிகொழித்துச் சிதறுகடற் புவியில்
தீராத வசைக்குடைந்து சீதையைக்கான் விடுத்தான்
விரைக்கமல மலர்ச்சரணத் தேவியும்பார் கீண்டி
மீளவுமுன் போலடைந்தாள் விரகத்தால் இராமன்
உரைக்கருமெய்த் துயருழந்து பரிமேத யாகம்
உவந்திழைத்துப் பரமேசன் உபயமலர்த் தாளில்
இரைக்குமறு காற்சுரும்புண் ணுமலர்தூய் வழிபட்
டிளையருடன் சரயுவின்மேய் இகந்துகடற் படர்ந்தான். (16)

1865. தசரதரா மனும்சுவர்ண மானுன்மா அறிவைத்
தகைவதனுற் பிரதிபந்தங் கான்மிகம்பின் பற்றி
விசையின்முத்தி தனிலறப்போ கத்திலிச்சை செலவே
விரும்புவித்த லனுபவந்தன் மாயேயம் விபுவாய்
இசைவதையா வரித்தேக செகசித்தான் மாவை
இருத்துதல்சம் பந்தமிவை சையோக பாசம்
அசைவறவே பந்திக்கத் தனையறியா தில்லாள்
அகன்றதுயர் மேற்கொண்ட அவதாரம் [இதுவாம். (17)

---

1864. கடற் படர்ந்தான்—கடல்—பாற்கடல்.

1865. சுவர்ணமான்—பொன்மான்—மாரீசன்; பிரதிபந்தம்—தடை; கான்மிகம்—கன்ம மலம்; அநுபவம்—நுகர்ச்சி; மாயேயம்—மாயை சம்பந்தமானது—பஞ்ச மலங்களுள் ஒன்று. விபு—எங்கும் வியாபகம் உள்ளது. ஆவரித்து—மறைத்து, ஏக—செல்ல, சையோகம்—சேர்க்கை,

### 3. பலராமர் அருள்பெற்றது.

1866. அன்னியமர் கியதுவா பரயுகத்திற் பின்னர்
அச்சுதன்தான் **வசுதேவன்** அழல்முனங்கை பிடித்த
பன்னியுரோ **கிணி**வயிற்றில் **இராமனென** வுதித்துப்
படைக்கலப்பை கொண்டரக்க பதாதிகளைத்
[தொலைத்துத்
தன்னிகரில் லாததீத் தொழில்புரி பாவங்கள்
தணந்தொருவ வுமையுடனே சங்கரன்தா ளிணையின்
மன்னிய ஆராதனைசெய் தியோகின்வழி **பலதே
வன்**படர்ந்து தனதிடமாம் வைகுந்தம்
[அடைந்தான். (18)

### 4. கிருஷ்ணன் அருள்பெற்றது.

1867. **சருகுநுகர் பிருகுமுனி** வன்சாப மதனால்
தண்டுழாய்ப் படலையண்ணல் **வசுதேவன்** மனைவி
குருகுசெறி காந்தளங்கை **தேவகி**தன் வயிற்றிற்
குமாரனென வியந்து**கிருட் டின**னாக உதித்து
முருகுகம ழிதழிநறுந் தோள்வனைகோ டீர
முதல்வனிரு சரணமலர் முளரியருச் சித்துத்
திருகுசினம் புழுங்கியெழு மருவலர்யா வரையுஞ்
செம்புலத்திற் பூ**பா**ரந் தீரவதைத் தனனால். (19)

1868. இரவுபகல் அற்றவிடத் திருந்துணர் மகத்தன்
ஈட்டுதவ மதலையுப **மன்னி**யமா முனிதாள்
பரவிநின்று திருநோக்கால் பரிசத்தால் வாக்காற்
பாவனையால் ஆகமத்தாற் பண்ணுமியோ கத்தால்
விரவுமௌளத் திரிகிரியா விதிஞான விதியால்
வீக்குபந்த பாசமறச் சமயவிசே டமுமக்
குரவனரு ளாற்சைவோத் தமனாகப் பெற்றுக்
குன்றவில்லி பதம்போற்றிக் குறுகினனாற்
[பதமே. (20)

---

1868. **எழுவகைத் தீக்ஷைகள்:—திருநோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், ஔத்திரி, ஔத்திரி—ஓமத்தோடு கூடிச் செய்யும் தீக்ஷை; இது இருவகைத்து—ஞானவதி, கிரியாவதி—சிவ. சித்தி 8—3.**

### 5. ஹயக்ரீவர் அருள் பெற்றது

1869. மீளவும்பின் கலியுகாந் தத்திற்கா யாம்பூ
மேனியன்வந் துதித்தவயக் கிரிவதொக்க சன்பார்
ஆளவிறல் கொடுகலியில் அவதரித்துத் தீயோர்
அனைவரையும் அடராநின் றண்ணல்சதா சிவனை
நாளமலர்ப் பீடலிங்கத் தருச்சித்தீ சன்தான்
நல்குகரு ணையையளித்திட் டடியரான் கொடியோர்
மாளவதைத் தச்சுதன்தன் வடிவெடுத்து முன்போல்
வைநதே யப்பரியின் வைகுந்தம் அடைந்தான்.(21)

1870. தண்டுளவ மால்பிருகு சாபத்தான் முறையே
சாற்றுமவ தாரமீ ரைந்தினுங்கண் ணுதலால்
கொண்டவிறல் அகற்றியிடப் படுவதுதான் ஐந்தாங்
கூரருள்பெற் றுடனின்பங் கொளப்படுவ
[தைந்தாம்
பண்டைவினைப் பிருகுசா பந்தீர்ந்தான் பினுமிப்
படிகற்பந் தோறுமநே கம்மவதா ரங்கள்
கொண்டனன்மால் புராணத்தி னிடைப்பட்ட தைந்துங்
கூறவிலை மற்றவைந்துங் கூறினது புகல்வாம். (22)

1871. அச்சுதன்தான் பரசிரா மன்முதலாம் ஓரைந்
தவதார மெடுத்தசுரர் இராக்கதர்மா னிடர்கள்
மெச்சுவிறற் படைதொலைத்து வரும்பழிபா வங்கள்
மீட்டானெண் ணிச்சுருதி விதிப்படிசெஞ் சூட்டு
நச்சரவக் கச்சைபுனை அண்ணல்மலர்ப் பாதம்
நாண்மலர்தூய் அருச்சித்து நள்ளிரவில் நடிக்கும்
விச்சுவநா தன்னருளால் மெய்தணந்து தனது
வியன்பதமே வினனைந்தும் விமலனருட்
[செயலே. (23)

1872. மறைசெலுவிற் கொடுவந்து திசைமுகனுக் கீந்த
மச்ச இணை விழிபிடுங்க மாசாத்தன் தனையும்
அறையடித்தாங் காமையென்புக் கொருகொம்பன்
[தனையும்
ஆதிவரா கக்கோட்டுக் கறுமுகச்சேய் தனையும்

---

1871. மெய்—உடல்.
1872. அறை—கடல்.

முறைசெருச்செய் இரணியனை அடுநரசிங் கத்தின்
முடியதளுக் கடல்வீரன் தனையுமூ வடிக்காய்க்
குறையுமுரு வாமனன் தோல் கங்காளந் தனக்காய்க்
கோரவயி ரவனையுமே கொடுவருகென்
[றணிந்தான். (24)

### திருமாலுக்குக் கண்ணுவர் சாபம்

### (வள்ளி திருமணம்)

### எழுசீர் விருத்தம்

1873. **செ**ஞ்சிறைக் கலுழப் பரியுகைத் தருளுந்
தேஅரும் பதத்துமுன் னோர்நாள்
**ம**ஞ்செனக் கிளர்பொற் புருவுபேந்தி ரன்போய்
மரீஇயவோ ரைம்படைக் கடவுள்
இன்சொலின் தமது மூர்த்திபே தத்தால்
இருந்தருள் உபேந்திர னுடனற்
குஞ்சரப் பீடர் வேள்முத லியர்போல்
கூடிநன் மொழியுரைத் திருந்தான். (25)

1874. **அ**ந்தஏல் வையினில் **காசிப** இருடி
அருந்தவப் பேற்றினால் உதித்த
மைந்தனிங் கியமைந் தொருவுகண் ணுவனும்
மாமுநி அச்சுத னுடனே
புந்தியுள் மகிழ்நன் மொழிபல விரும்பிப்
புகன்றிட வேண்டியோங் கியவை
குந்தமே வினன்மால் உபேந்திரன் சிவன்தாள்
குறித்தகண் ணுவனைநோக் கிலரால். (26)

1875. **அ**ன்றியும் இருக்க ஆசனம் பொருக்கென்
றளிக்கிலர் அவன்தனை வருக
என்றுநன் மொழிகள் ஆயினும் சிறிதொன்
றியம்பிலர் மவுனமுத் திரையாய்

---

1873. தே—கடவுள் (திருமால்). பொற்பு உரு—உபேந்திரன். பீடர்—பெருமை உடையவர்.

ஒன்றுபட் டிருந்தார் கண்ணுவ முனிவன்
உடன்றுமா யவன்தனை நோக்கிக்
கொன்றையஞ் சடையான் அடியனென் றறிந்துங்
குறித்தெமை வழுத்துகின் றிலையால்; (27)

1876. தண்டுழாய் வனைந்த விண்டுவே! அனேகஞ்
சனனநீ மூகனும் உருவம்
கொண்டுபா ரனைத்தும் எனது சாபத்தாற்
குறுகுதி யெனச்சொலி அயல்சேர்
புண்டரீ கச்செந் திருவுமே மிருகம்
போலநிற் கின்றதால் இவளும்
மண்டுகா னகத்தின் மான்வடி வெடுத்து
மறுகுக எனச்சொலிப் பின்னும், (28)

1877. மருங்குசே ரிந்த வுபேந்திரன் தானும்
வனத்திடை யிப்படி மருள்சேர்
இருங்கொலை புரியுஞ் சவரர்பா லுதிக்க
எனச்சபித் தன்றியும் உலகிற்
சுருங்குமா முகச்சங் காழியம் படையோய்!
துண்ணென உனதுபத் தர்கள்முப்
புரங்கடந் தவனிற் ககலநிந் தித்துப்
புந்திமோ கிக்கவென் றுரைத்தான். (29)

1878. அங்கணன் மலர்த்தாள் போற்றுகண் ணுவன்தன்
ஆச்சிர மத்தின்மே யினன்பின்
பங்கய மலர்ச்செங் கண்ணனுஞ் சாபப்
பயத்திலா குலம்புரிந் திறையைச்
செங்கையால் வழிபட் டேத்தியிச் சாபஞ்
செப்புமுன் இலிங்கபீ டத்திற்
சங்கரன் வெளிப்பட் டொல்லைகண் ணுவனைத்
தனதயல் அழைத்திவை உரைப்பான். (30)

1879. அருந்தவ முனியே! ஓர்சன னத்தில்
அச்சுதன் தானனு பவிக்கப்
புரிந்தருள் மிகுதி யானசெந் திருவைப்
பார்த்திவள் தானுமப் படியே

---

**1877.** சவரர்—வேடர்.

**1878.** ஆகுலம்—துயர்.

பொருந்தவோர் சனனம் மான்வடி வெடுக்கப்
புகலுதி உபேந்திரன் தானும்
திருந்தவோர் சனனங் கிராதனுய் உதிக்கச்
செப்புதி எனவுரைத் தனனுல். (31)

1880. **ஊ**ற்றிருந் துமிழ்செந் தேறல்கொப் புளிக்கும்
ஒள்ளிதழ்க் கடுக்கையஞ் சடையோன்
சாற்றிய வசனம் உடல்புள கிக்கத்
தன்றலை மேற்கொளா வணங்கிப்
போற்றிநின் றெந்தாய்! அப்படி யென்றே
புகன்றுகண் ணுவமுநி பணிந்தான்
ஆற்றருந் தவத்தோன் மொழிப்படி நெடுமால்
அருஞ்சிவ முநிவனு யுதித்தான். (32)

1881. **தொ**ழுதகு முநிசா பத்தினுல் முறுக்குத்
தோடவிழ்த் தாறுகால் வண்டு
முழுதுபாண் மிழற்றும் பெடைதழீஇ மதுவுண்
டுறங்குகொத் தலர்நறுந் துழாய்மன்
பழுதகல் அலங்கல் திருவுமான் தோன்றிப்
பாவுகான் அடைந்தனள் அயல்சேர்
முழுதுணர் புலனும் உபேந்திரன் முதலோர்
மூரிவில் வேடர்பால் உதித்தான். (33)

1882. **செம்**பொனின் சலத்தாழ் வரையிறை யகிலிற்
சிந்திய புன்னையம் போது
உம்பல தனைய உருக்கருந் தடங்கட்
டுபநெடுஞ் செவிமடற் குறுவாற்
சம்புவின் கனியொத் துறழ் குளப் படிமான்
தனைச்சிவ முநிவரன் நோக்கித்
தும்புரு வர்கள்சேர் மணமெனக் கருதச்
சூல்முதிர்ந் தசலமே வியதே. (34)

---

1881. துழாய் மன்(னும்) அலங்கல். முதல்—முதலில், முன்பாக.

1882. செம்பொனின் — சிந்திய—புன்னைப்போது — 'புன்னைநன்மாமலர் பொன்னுதிர்க்கும்—சம். தேவா—III—11—1; பொன்னினைர் நறுமலர்ப் புன்னை-அகநா—126 உம்பல்—எழுச்சி; கட்டு—கண்ணையுடையது. தும்புருவர்கள்—கந்தருவர்.

1883. குன்றுவர் முனம்வள் ளிக்கிழங் கெடுத்த
குழியின்மான் வயிறுநொந் துளைந்து
நின்றுகந் தீன்ற குழவியைக் கிராத
நிருபனு தரவுடன் வியந்து
தன்றுணைக் கரத்தால் எடுத்து மோந் துவந்து
தனையையாய்க் கொண்டுசீ றூரிற்
சென்றுசிற் றிலிற்போய் வள்ளியென் றொருபேர்
செப்பிமா மனைவிகைக் கொடுத்தான். (35)

1884. திங்களங் குழவி மகள்முலை கொடுத்துச்
செய்யகாப் பணிந்துவக் காவும்
சங்கநன் மணியுங் குன்றியுந் தரித்துத்
தளர்நடை பூந்தழை யுடுத்துக்
கொங்கைசற் றரும்பச் சேடிய ராய
குழுவொடம் மனைகழங் கூசல்
மங்கையம் பருவத் தாடவிட் டினிதில்
வளர்புனங் காக்கவைத் தனரால். (36)

1885. தண்டழை மலர்ப்பந் தரிற்கணம் வேண்டத்
தடமலர் குளவியந் தொடையல்
எண்டிசைப் புறமும் நாற்றிநெய் தீபம்
ஏற்றுபு நறும்புகை யெடுத்துத்
தொண்டகந் துவைக்கக் கொழுவிடைக் குருதித்
தூயவெள் ளரிசி சில் பலிச்செய்(து)
அண்டரும் வியப்பப் பொருமலர் சிதறி
ஐயவி நெய்யொடப் பினரால். (37)

1886. நிறைபெரு மரக்கால் அகனறு வகைய
நென்முதற் பரப்பிகுத் துபுகால்
குறைவறச் செந்நூல் சுற்றிநாப் பண்செங்
குருதியஞ் செந்தினை பரப்பி

---

1884. வக்கா—சிப்பிவகை; 'வக்காவின் மணிபூண்டு''—நற்று. குற.—79.

1885. குளவி—மலைமல்லிகை.

1886. குத்துபு—குத்தி.

1885—86. ''நறும்புகை எடுத்து''முதலிய—திருமுருகாற்றுப்படையைத் தழுவி நிற்கின்றன,

நறைகமழ் பசுமஞ் சட்புனல் தெளித்து
நதிபுரை யருவிமுன் அகன்ற
பிறைநுதற் கனிவாய் வள்ளியை நிறுத்தி
பிணிமுகம் புகர்முகம் வழுத்தி. (38)

1887. வள்ளுகிர்த் தகட்டுச் சூட்டுநீள் சிறகர்
வாரணக் கொடிதிசை உயர்த்தி
முள்ளரை நெடுந்தாட் சததளப் பொகுட்டு
முளரியஞ் சிற்றடிச் சதங்கை
வள்ளலெங் குலத்தே வாகிய திருத்த
ணியில்வருஞ் சரவணன் தனக்கு
விள்ளரு மகிழ்ச்சி பெறக்கொடுத் திறைஞ்சி
வீணையாழ் குறிஞ்சிபா டினரால். (39)

1888. செந்தினைப் புனமும் உமிழ்நறு வொழுகு
சேடிருல் அருவியாய் மலையச்
சந்தன வனத்தண் சாரலும் வளங்கள்
சகலமும் மரீஇயமா மலையும்
சிந்துரக் களிறும் நாவியும் மணியுஞ்
செம்பொனுஞ் சீதனங் கொடுத்து
வந்தனை புரிந்தே வினர் ; தம திடம்பின்
வல்லைசா பந்தணந் தடைந்தார். (40)

**சுவன் கதை.**

**(ததீசியுடன் திருமால் பொருதது)**

1889; செம்பொனின் கற்றை தெரித்தசெஞ் சூட்டுச்
சிறகரோ திமப்பரி உகைக்கும்
அம்புயன் ஒருகாற் கிருகர மருத்துள்
அடர்த்தெழும் மம்மரிற் பிறந்தோன்
உம்பரும் வியப்ப வருசுவன், மகவான்
உதவுவச் சிரப்படை தரித்தோன்
அம்பரம் புடைசூழ் அலர்தலை உலகம்
அனைத்தையும் பொதுவறப் புரந்தான். (41)

1886. அருவிமுன்—அருவியின் முன்பு.

1889. மருத்து—வாயு; கிருகர மருத்து—தசவாயுக்களுள் ஒன்று; கோபத்தை உண்டாக்குவது—(சிலப்—3—26—உரை) "கோபங் கிருகரனும்"—இசை நுணுக்கம். மம்மல்—என்று ஓலையில் உள்ளது.

1890. அன்னகா லையிலாற் றருந்தவக் கிழமை
அந்தணன் **ததீசி**மா முனிவன்
மன்னவ னுடன்நட் பானகா லையிலோர்
வைகல்மா தவன்முகம் நோக்கி
இந்நிலத் துயர்ந்தோ ரியாரெனத் ததீசி
யியம்புமா தவர்களே யென்னப்
பன்னரு முனிசொல் மறுத்துயர்ந் தோனே
பார்த்திபன் என்றுகோ வுரைக்கும், (42)

1891. அருந்தவக் கிழமை பூண்டருள் ததீசி
அரசனை முனிந்திடக் காலால்
வருந்திட வுதைத்தான் அரசனும் எழுந்து
வன்படைக் குலிசமா தியமெய்
பொருந்திட விடுத்தான் முனிவனும் படைகள்
பொருக்கென விலக்கினன் சுவன்போய்க்
குருந்தினிற் கலைகள் கவர்ந்துசென் றிருந்த
குழகனைச் சரணென அடைந்தான். (43)

1892, விரிகதிர்க் குலிசப் படைவலன் ஏந்தும்
விண்ணவர் கோன்மணி வண்ணன்
பரிவுடன் அபயம் அஞ்சலென் றமைத்துப்
பன்னக வயிரிமேற் படர்ந்து
வரியளி முரலும் பன்னசா லையிற்போய்
வாம்பரி தணந்துவஞ் சகத்தால்
எரிதழன் மகவே தியனெனச் சென்றே
இருந்தவத் ததீசியோ டுரைக்கும். (44)

1893. அந்தணர் அரசே! மறையவர் தமிலும்
அதிகராம் அரசரென் றொருகாற்
புந்தியுள் மகிழ உரைத்திமற் றலது
பூசுரர்க் கொப்பர்மன் னவரென்(று)
இந்தியஞ் சயித்தோய்! இயம்புதி மகிழ்ச்சி
எமக்குமாம் என்னலுந் ததீசி
ஐந்திகற் படையோன் மொழிதனைக் கேளா
அருந்தவத் தோன்பினும் உரைக்கும். (45)

---

1891. குழகன்—திருமால்.

1892. பன்னக வயிரி—கருடன்,

1894 பைந்துழாய் அலங்கற் பண்ணவன் என்றே
பகுத்தறிந் தனனுனே யுளத்தில்
ஐந்துபா வத்தி னுங்கொடி துரைக்கி
லம்புலே அழுகையா தலினல்
இந்தவா சகங்கட் டுரைப்பதோ இலேயான்
எறுழ்வலிக் குருசிலுக் கஞ்சேன்
சிந்தனே யிலேநீ செல்கென மலர்க்கட்
டேவுனற் கரும்படை விடுத்தான். (46).

1895. முனிவனுந் தண்டந் தனேநினேந் தெடுத்து
மூவிலே வேலென நாட்டித்
துனிவற இருந்தான் வருபடை யனேத்தும்
சூலமே விழுங்கிய ததனல்
பனியிரு விசும்பின் மாயன்விச் சுவமாம்
படிவமே எடுத்தனன் அதனேத்
தனிவல முநியும் விச்சுவ தேயம்
தன்னிடங் காட்டினன் அதனல், (47)

1896. மாயவன் மிகவும் முனிந்துபண் ணவன்மேல்
வலியினல் தொலேத்திடக் கருதி
ஆயிரங் கதிர்விட் டவிரொளி பரப்பும்
ஆழியம் படைதனே விடுத்தான்
போயது இருடி புங்கவ[ன் தனுமேல்]
பொருக்கெனப் பட்டதின் கூர்மை
காய்கதிர் மழுங்கிச் சுவரெறி பந்துக்
கடுக்கமீண் டோடிய தம்மா. (48)

1897 அரவணே துயில்பண் ணவன்தனக் காக
அமரர்கள் வரவர மிகுத்த
வரமொடு மிகுத்த திப்பியப் படைகள்
மழுங்கிமீண் டனவவ்வேல் வையினில்

---

1894. பாவத்தினும்—பாவங்களுள்ளும்; புலே—பொய். மலர்க்கட்டே—மலர்க் கண் தே—மலர்போலுங் கண்ணேயுடைய தேவு—திருமால்.

1896. பண்ணவன்—முநிவன்.

1897. குரவனும் மலர்த் தே—பிரமன்.

குரவனும் மலர்த்தே அச்சுதன் தனையுங்
கொடும்படை கொண்டு போர் புரியும்
சுரரையும் விலக்கி விடுத்தனன் ததீசி
துளவமால் அமரரைக் குறித்தே. (49)

1898. உருத்திர அமலன் சினத்தினிற் பொருக்கென்
றுதித்திடும் வீரனுல் நீவிர்
திருத்தகு வானுஞ் செல்வமும் உயிருஞ்
சிதைந்திடக் கடவிர்கள் என்றே
கருத்தினிற் புழுங்கி மாயனை நோக்கிக்
கடிதுநின் பத்தர் மெய்த் துறவோர்
பெருத்தபா சண்ட ராய்ச்சிவற் பழித்துப்
பின்நர கங்களாள் கென்றான். (50)

---

## அத்தியாயம் 66.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### திருமால் பூசித்தது

ததீசியின் சாபம் பெற்ற திருமால் தாம் சுவனுக்குப் பரிந்து சென்றது பிழையென உணர்ந்து வருந்தித் தில்லையை அடைந்து பெருமான் திருவருளால் பாதகந் தீர்ந்து, திருக்கூத்தைத் தரிசித்து அங்கேயே இருந்தார்.

### திருமால் அம்பும் விடையுமானது

மற்றொரு முறை கந்தமாதன பருவதத்தில் திருமால் கண்ணுதலை வழிபட்டு அம்பும் விடையுமாம் வரம்பெற்றுச் சிவபிரான் திரிபுரம் எரித்த நாளில் அங்ஙனமே அம்பும் விடையுமாகி மகிழ்ந்தார்.

### நரகாசுரன் வதை

பிறிதொரு காலத்தில் புவிமடந்தைக்குப் பிறந்த நரகாசுரன் தேவர்களை அழிக்கவும், சகல உலகங்களுக்கும் தலைவனுக விளங்கவும், திருமாலுடன் பொருது இறக்கவும் சிவபிரானிடம் வரம் பெற்றான். திருமால் சிவபிரானை வணங்கி 'அண்ணலே! நரகாசுரருடன் நான் (கிருஷ்ணமூர்த்தியாய்) இருபத்தொரு முறை போர்புரிந்து தோல்வியடைந்து வடமதுரையை விட்டுத் துவாரகையில் உள்ளேன். நான் அவனுடன் போர்புரியும் போது நீ என்னிடம் பொருந்தி அவனைத் தொலைக்குமாறு அருள்புரிவாயாக' என வேண்டினர். அங்ஙனமே சிவபிரான் அருள்புரியக் கிருஷ்ணபிரான் நரகாசுரனுடன் போர் செய்து சக்கரத்தால் அவனை அழித்தார். திருமால் உடலிற் சிவபெருமான்

கலந்து போர்புரிந்து வதைத்ததனல் நரகாசுரன் தன் இதய கமலத்தில் ஈசனைக்கண்டு வழிபட்டுச் சிவகணத் தலைவனுனன். விண்ணவர் கலக்கம் ஒழிந்தார். கிருஷ்ணபிரான் துவாரகையை அடைந்தார்.

## திருமால் மோகினியாக வரம் பெற்றது

ஒருமுறை, திருமால் திருவாலங்காட்டிலே சிவபெருமானை வழிபட்டுத் தாம் மோகினி வடிவமாகச் சிவனைக் கலக்கும் வரத்தைப் பெற்றார். தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்தபோது திருமால் ஆமை வடிவாயிருந்து மந்நர மலையாம் மத்தைத் தாங்கியும், மோகினி வடிவால் அசுரரை வஞ்சித்தும், தேவர்களுக்கு அமுதத்தை அளித்து தாமும் உண்டார்; மோகினி வடிவுடனே சிவபிரானைக் கூடி மகிழ்ந்து சாத்தனரை மகவாகப் பெற்றார்.

மற்றொருமுறை பிரமன் தன் ஆயுள் முடிந்து இறந்தபின், திருமால் பெண்வடிவுடன் சிவனைக்கூடி நான்முகனைப் பெற்றார். சிவபூஜை நாற்பொருளையும் தரும்.

## திருமால் துருவாசர் சாபம் பெற்றது

மற்றொரு முறை, துருவாசர் கேதார வெற்பில் சிவனை வழிபடும் போது, திருமாலும் அங்கு வழிபட்டுத் தம்முலகு சென்றார். துருவாசர் தம் வழிபாடு முற்றிய பின்னர் வைகுந்தம் சென்று 'திருமாலே! நீ கேதாரவெற்பில் எம்மையும் யாம்வழிபடும் இலிங்கத்தையும் மதியாமல் வந்ததனல் நின் கருடன் இறக்கவும், உன் மனையாள் கடலை யடையவும், நீயும் வயிரவன் படையால் நெற்றியிலிருந்து இரத்தம் சிந்தவும், உன் அடியவர் சிவநிந்தையராகி நரகடையவும் நேர்க' எனச் சபித்துச் சென்றார்.

இச்சாபத்தைப் பெற்ற திருமால் திருக்காளத்தியிற் சிவபூசைபுரிந்து வேண்டினர். சிவபெருமான் வெளிப்பட்டு, 'மாலே! வடுகன் உன் இரத்தத்தை எடுத்திடினும் மீள உனக்கு உயிர் கொடுப்பான். திருமகள் கடலை அடைந்திடினும் பாற்கடல் கடையும்போது மீண்டும் பிறந்து உன்னிடம் வருவாள். கருடன் உன்னுடன் போர்புரிந்து நட்புக்கொண்டு மீளவும் உனக்கு பரியாவான்' என்றருளினர். அவ்வாறே யாவும் நிகழ்ந்தன.

ஆகையாற் சிவபூஜையாற் கைவராதது யாதுமில்லை. அதற்கிணையாக வேறு பூசனையும் இன்று.

## சலந்தரன் சக்கரத்தைத் திருமால் பெற்றது

பின்னர் ஒருமுறை வானவர்கள் அசுரருக்குத் தோற்றுத் திருமாலிடம் சரணடைந்தனர். திருமால் 'அமரர்களே ! நான் ததீசியுடன் செய்த போரிற் சக்கரம் அவர் மெய்யிற் பட்டுக் கூர்மழுங்கிவிட்டது. அசுருடன் போர் புரிய

வேறு படையில்லையே! என் செய்வேன்' என வருந்தினர். தேவர்கள் முன்னர்ச் சலந்தரனை அழிக்கச் சிவபெருமான் நிலத்திலே கீறிய சக்கரம் சிவபெருமானிடமே உள்ளது என நினைவு கூட்டினர்.

திருமால் மகிழ்ந்து காஞ்சியிற் சென்று அரனடியிலே ஆயிரந் தாமரை மலர் கொண்டு அருச்சித்தார். ஒரு பகல் ஒரு மலர் குறையத் தம் கண்ணையே பறித்து வழிபட்டார். சிவபிரான் மகிழ்ந்து திருமால் விரும்பியபடியே சக்கரத்தையும், இழந்த கண்ணையும், செந்தாமரைக் கண்ணனெனும் பெயரையும், செந்தாமரைக் கண்ணனென்று வழிபடுவோர்க்கு நலம்பல கிடைக்கும் என்னும் வரத்தையும் அருளினர். திருமால் அவற்றைப் பெற்று, ஆழிப்படையால் அசுரரை வதைத்து அமரரைக் காத்தார்.

### திருமால் மகப்பேறு

ஒருமுறை மகப்பேறு விரும்பிய திருமால் திருவாஞ்சியம் என்னும் திருப்பதியிற் சிவனை மட்டும் வழிபட்டார். உமையம்மையார் வெகுண்டு நின் புதல்வன் சிவபிரானாலேயே எரிந்துபோகக்கடவன் எனச் சபித்தார். திருமால் அஞ்சிச் சிவபிரானை உமையம்மை, முருகவேள் சமேதராய் (சோமாஸ்கந்த மூர்த்தியாக) மறுமுறை வழிபட்டார். உமையம்மையார் மகிழ்ந்து எரிபட்ட மகன் மீளவும் சிவபிரான் திருவருளால் அழகிய வடிவுடன் எழுவான் என வரம் தந்து மறைந்தார். அவ்வாறே மன்மதனைத் திருமால் மகனாகப் பெற்றார். மன்மதனும் சிவனது நெற்றிக்கண் நெருப்பால் எரிபட்டுப் பின்னர் அப்பெருமானால் வடிவுபெற்று எழுந்தான். எனவே, சிவபூஜை மக்களையும் எண்ணிலாப் போகங்களையும் திண்ணமாகத் தரும்.

---

# அத்தியாயம் 66.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### திருமால் பூசித்தது

### எழுசீர் விருத்தம்

1899, பின்னரச் சுதன்தான் தன்னிலே பயந்து
பேதைமை யிழைத்தனம் கலக
மன்னவன் வசனம் மறுத்திடா தந்தோ
வஞ்சனை மறையவ ளாகிப்
பன்னருந் தவஞ்செய் ததீசியை வேண்டிப்
பழிபடு வாசகம் புகன்றேம்
என்னபெற் றனமிச் சாபமே அகல
ஈசனைப் பூசைசெய் குதுமால். (1)

1900. என்றுளத் துணர்ந்து தில்லைமா நகரில்
எய்தியே யிணையிலி மலர்த்தாள்
ஒன்றுபட் டருச்சித் தொருவர்மூ வர்கள்பா
ஓங்குசிற் றம்பல மெனும்பொன்
மன்றினிற் குனித்த வள்ளல்பே ரருளான்
மல்குபா தகத்தொடர் பொழித்து
நின்றுகட் புலத்தால் திருநடங் கண்டு
நித்திய னுகியங் கிருந்தான். (2)

**திருமால் அம்பும் விடையுமானது.**

1901. பின்னொரு பருவம் கந்தமா தனமாம்
பிறங்கலில் அச்சுதக் கடவுள்
பொன்னவிர் இதழிச் சடிலநா யகனைப்
பூசைசெய் தெந்தைநீ கேண்மோ
என்னையத் திரமும் விடையுமாய்க் கொணர்தி
யென்றிரு வரங்கள்கேட் டனன்சீர்
பன்னரும் அமலன் அப்படி யென்றே
பண்பினு லுவந்துசம் மதித்தான். (3)

1902. செழுந்திறல் அவுணர் குழீஇயமுப் புரமா
தெரிசன நனந்தலைப் பறனை
உழுந்துமுத் துருள்வை முன்னகைத் தெரிக்க
வுன்னுமேல் வையிற்பரம் பொருளாய்
எழுந்தனி முதலச் சுதன்சர மெனவும்
எறுழ்சின மழவிடை யெனவும்
அழுந்துரம் பெறமுன் கொணர்ந்தனன் திருமால்
அன்றுதொட் டப்படி யிருந்தான். (4)

**நரகாசுரன் வதை.**

1903 பைம்பொனம் புயத்தோட் டலர்பொகுட் டமலைப்
பைந்துழாய்ப் படலைமார் பண்ணல்
இம்பர்பின் னொருகால் அளக்கர்நாப் பண்ணில்
இருக்குமை நாகபூ தரத்தில்

---

1900. ஒருவர்—மூவர்கள்—பா—திருவாசகம், தேவாரம்.

1902. பறனை—தட்டு.

1903. அமலை—இலக்குமி. நல்கித் தம்பமான பரன்,

உம்பரும் வியப்ப ஆயிர கோடி
உறுவரம் நல்கியே கருணைத்
தம்பமாம் பரனை யிறைஞ்சியா தரித்துத்
தடக்கைகூப் புபுபுகழ்ந் துரைத்தான். (5)

1904 ஐந்தொழில் புரக்கும் அண்ணலே! பரனே!
அனைத்துல கேசனே! சுருதி
வந்தனை புரிபொற் பதசரோ ருகனே!
வாக்குணர் வினுக்குமெட் டாத
இந்துசே கரனே! முனமுனை வழிபட்
டிருநில மடந்தைபா லுதித்து
விந்தைகூர் நரகா சுரனளப் பரிய
விண்ணவர் குழுத்தொலைந் திடவும், (6)

1905. சூரிமுகப் பணில முரிதிரை கொழித்துச்
சுழித்தெறி மகரவா ரிதிசூழ்
விரிநில வுலக முதலிய புவன
வேந்தென இருக்கவும் முடிவில்
வரியளி முரலும் இதழலர் துளவ
மாலுடன் பொருதிறந் திடவும்
அரியமெய் வரங்கள் அண்ணல்நின் பாற்பெற்
றமரர்யா ரையுந்தொலைத் தனனால். (7)

1906 அன்றியும் அவன்மூ வுலகிலோம் பரிதாய்
அளப்பரும் போகமே துய்த்து
வென்றியோ டிருக்கின் றனனவ னுடன்நான்
வெஞ்சமர் இழைத்திரு பத்தோ(டு)
ஒன்றெனும் அளவும் அடுபகல் தொறும்போர்க்
குடைந்துதோற் றுத்தரிப் பறப்போய்ச்
சென்றிடு புதல்வ ரோடுமித் திரரா
தியருடன் மதுரைவிட் டகன்றேன். (8)

---

1904. நரகாசுரன்—வராக உருக்கொண்ட திருமாலுக்குப் பூமிதேவியிடம் பிறந்த அசுரன்.

1906. மதுரை—வடமதுரை.

1907. பரவையின் நடுவண் மருவிய துவரைப்
பட்டின மீதிருக் கின்றேன்
அரனென வருநால் வகையிடத் தினும்வந்
தவனெனைத் தேடுவிக் கின்றான்
புரகர! தமியேன் இடத்தில் நீ யொன்றாய்ப்
பொருந்தினின் றவன்தனைத் தொலைத்தி
வரமிது எனப்பார் முறைபணிந் திருகைம்
மலர்கள்கூப் புபு இரந் தனனால். (9)

1908. விழுதுவிட் டொளிர்செம் பவளநீள் குடில
வேணியன் மால்முகம் நோக்கிப்
பழுதற வுனது வலப்புறம் இருந்து
பண்ணவர்க் குபகரித் தருள்வான்
முழுதுமா மதுகை அளிக்குதும் என்ன
முதிர்வரம் பெற்றுமா யவன்முன்
தொழுதுகோ பால னாகிமண் பயந்த
தொல்லசு ரனைச்சமர்க் கழைத்தான். (10)

1909. இருவர்தம் படையும் வெகுண்டறை கூறி
இகற்படை புரிந்திடும் வேலை
விருதசு ரர்களியா வரையுமே தொலைக்கும்
விச்சுவேச் சுரன்துழாய் அரிபால்
பொருவருங் கருணை யாற்புகுந் தெழுமற்
புயவலப் புறத்திருந் தனன்மால்
செருவினில் எதிர்த்துச் சக்கரப் படையால்
தீயன்மா முடிதடிந் தனனால். (11)

1910. மணிவண னிடத்தில் இருந்தரு ளீசன்
வதைக்கவே யிறந்திடும் அதனால்
அணிபெறு நரகா சுரன்தன திதய
அம்புயத் தினிற்சதா சிவனைப்
பணிமன முவந்து கண்டுகா ணாதி
பத்தியம் பெற்றனன் அங்கண்
தணிவில்வெஞ் சமர்கா ணியஅடைந் தோர்கள்
தமதுளங் களிக்கவாழ்ந் திருந்தார். (12)

1911. **பி**றையறு கிதழி பகீரதி வனேயும்
பிஞ்ஞகன் மாயனேத் தணந்து
மறைமுறை பரவுங் கயிலேமால் வரையின்
வதிந்தினன் வாசுதே வனுந்தன்
குறையிரந் திறைவன் மலர்ப்பதம் இறைஞ்சிக்
கோபுரத் துவாரகா புரியில்
இறையருள் விருப்பால் எய்தினன் வியப்பால்
இமையவர் தம்பதம் அடைந்தார். (13)

**திருமால் மோகினி வேடம் (பாற்கடல் கடைந்தது)**

**சாத்தனுர் அவதாரம்.**

1912. **பி**ன்னரா லங்காட் டினில்திரு மகிணன்
பிணங்குசெஞ் சடாடவி இறையை
உன்னரு மகிழ்ச்சி யாலருச் சித்தே
ஒண்ணுதற் பார்ப்பதி கொழுநன்
தன்னருள் வரம்பெற் றண்ணலே! அடியேன்
தடவரை நகிலமோ கினியாய்
உன்னுடன் கலவி புரியவே விருப்பம்
உளதது வேவரம் எனக்கே. (14)

1913, **எ**ன்றுரைத் திறைஞ்சும் மாயனே நோக்கி
ஈர்ஞ்சடைக் கடவுளப் படியென்
றென்றுநல் வரமீந் தொளித்தனன் பின்னர்
ஓங்குமக் காரணம் அதனுல்
கன்றெடுத் தெறிந்து கனியுதிர்த் திடுமால்
கட்டழ கனேத்துமோர் வடிவாய்
நின்றவி ரொளிவிட் டனங்கவேள் பெருநாண்
நிறையழிந் திடவுரு எடுத்தான். (15)

1914. **சு**ரிகுழைப் பிறையுந் திலதவா ணுதலுந்
தோடெழப் பாய்ந்தயல் பிறழ்செவ்
வரிபரந் தழகு மதர்த்தசேல் விழியும்
வடவரை யெனப்புடைத் திறுகிக்

---

1912. நகிலம்—நகில்—தனம்.

கரியெனச் சுணங்கு விரிந்தெழு முலையுங்
கலாபநுண் மருங்குமென் சதங்கை
பரிபுர மிழற்றுஞ் சிற்றடி மலரும்
படைத்துமோ கினியெனச் சிறந்தான். (16)

1915. சந்திரன் பிணிக்குந் தறியெனத் தான்கீழ்
தாங்கிய கச்சப மென்ன
மந்திர சயில மத்தெனப் பூட்டும்
வாசுகி கயிறெனத் திருப்பாற்
சிந்துவே பதலை யெனஇரு புறம்புத்
தேளிரும் அசுரருங் கடைய
வந்தெழும் அமுதை அசுரரை மயக்கி
வானவ ரோடுதான் துய்த்தான். (17)

1916. பைங்கழை குனித்துச் சுரும்புநா ணேற்றிப்
படுகுறி அமலமே னியிலே
ஐங்கணை தொடுத்த மதனனை யெரித்திட்
டயல்படர் இந்தியஞ் செயித்துத்
துங்கமேற் படரும் இரேதசை யுடைய
சுத்தனைத் தழீஇக்கல வியின்வான்
புங்கவர் பரவச் சாத்தனைத் தனக்கும்
புத்திர னாகவே அடைந்தான். (18)

**திருமால் பிரமனை ஈன்றது.**

1917. பின்னரும் ஒருகற் பத்துவா ரிசத்திற்
பிறந்திடும் விதியிறந் திடுநாள்
மின்னவிர் திகிரிப் பண்ணவன் பரனை
விரும்பியர்ச் சித்துமெல் லியலாய்த்
தன்னிக ரமல னொடுதழீஇ விரிஞ்சன்
தனைப்பயந் தனன்விரி நிலத்தில்
உன்னருஞ் சிவபூ சைப்பலன் பொருள்நான்(கு)
உதவுமீ தெவைக்குமே அதிகம். (19)

---

**1915.** பதலை—தாழி—(பானை)

**1917.** விதி—பிரமன்.

**திருமால் துருவாசராற் சாபம் பெற்றது.**

1918. **மு**னிவர்புங் கவனு கியதுரு வாசன்
முன்னர்கே தாரவெற் படைந்து
பனிமதிச் சடிலக் குழகனைப் பூசை
பரிந்துசெய் போதுவை குந்தத்
தனிநகர் தணந்து மால்கரு டனிற்கே
தாரமே விச்சிவ பூசை
இனிதிழைத் துடன்சுத் தாசம னஞ்செய்
திறைஞ்சியே தன்னுல கடைந்தான். (20)

1919. **பொ**ருவில் சீர்த் துருவா சன்விதிப் படியே
பூசையை முடித்துமால் பதம்போய்
விரிநில மளந்த மாயனே! விண்ணோர்
விரும்புகே தாரவெற் பினில் நான்
இருமையும் பெறவே வழிபடும் அமல
இலிங்கபீ டத்தையும் எனையும்
பரவியேத் தாத கன்றனை யதனுல்
பரியிறந் திடக்கட வதுவே. (21)

1920. **ப**ரிமள வனசத் திருவுமிக் கணமே
பரவையை யடைந்திடக் கடவள் ;
சொரிதழற் கடைக்கண் வயிரவக் கடவுள்
சூலவெம் படையினு லுனது
விரிநுதல் அதிரக் குத்தியே யிரத்தம்
விரைந்துடன் வாங்கிடக் கடவன்;
பரிபவப் படுமுன் னடியருஞ் சிவனைப்
பழித்தள றடையவே கடவர். (22)

1921. **எ**ன்றுமா தவனை முனிதுரு வாசன்
இப்படிச் சபித்துவந் தனன்; பின்
சென்றுமால் **திருக்கா ளத்தியை** அடைந்து
சிவனையா ராதனை புரிந்தான்
குன்றவார் சிலையா னுடன்வெளிப் பட்டுக்
கூறுவன் கண்ணனே! வடுகன்
வன்றிறற் படையால் வதைத்துனை மீள
மனமகிழ்ந் தெழுப்பவே கடவன். (23)

1922. சுணங்குபூத் திளங்கேழ் கனிந்தழ கொழுகுந்
துணைமுலைக் கமலமண் டபஞ்சேர்
அணங்குபாற் கடல்விண் ணவர்கடைந் திடுநாள்
அதனிடை யுதித்திடக் கடவள்
பணங்கொள்மா சுணத்தே வயிரிநின் னுடன்வெம்
பறந்தலை யமர்புரிந் துடன் மீண்(டு)
இணங்குவாம் பரியா கக்கட வதுவென்
றிடரொழிக் குஞ்சிவன் உரைத்தான், (24)

1923. அங்கணன் உரைத்த படிமரைப் பொகுட்டில்
அணங்குபாற் கடலக டுதித்துப்
பங்கய மலர்ச்செங் கண்ணனை அடைந்தாள் ;
பன்னக வயிரிகா சிபன்பால்
பொங்குள மகிழத் தோற்றிமா லுடனே
பொருதுவா கனமதா யினது ;
செங்கண்மால் சாப மொன்றினுந் தவாமல்
சிவனருச் சனையினால் அகன்றான். (25)

**சிவ பூஜை விசேடம்.**

1924. விரிகடற் புவியில் ஆகையாற் கரத்தின்
மேவுநெல் லிக்கனி யெனவே
தெரிதரக் கலிகா லத்தினும் எவர்க்குந்
தெரிந்துகை கண்டதே தென்னில்
அரியயற் கரிய பரமநா யகன்தன்
அருச்சனை அதற்கிணை யாகப்
பிரிவறத் தணவாப் போகமும் உயர்மெய்ப்
பேறுநல் குவதுமற் றிலையால். (26)

**சலந்தரனது சக்கரத்தை பெற்றது.**

1925. பின்னரும் ஒருகா லத்துவிண் ணவர்கள்
பிரிவறப் பொருமசு ரர்கள்பால்
உன்னருந் திறலும் ஊக்கமும் வரனும்
உடைந்துநொந் தச்சுதக் கடவுள்

---

1922. மாசுணத்தே வயிரி—பாம்பின் பகையாம் கருடன்.

சன்னிதி சரண மாயடைந் துள்ளந்
தளர்ந்துமெய் நடுநடு நடுங்கிப்
பன்னரு மறைதேர் பகவனே! அசுரர்
பண்ணவர் பதங்கள்கைக் கொண்டார். (27)

1926. **பொ**ருவில்மா தேவன் அருளினல் முன்பு
புனிதரைக் காத்தருள் செயவும்
இருமையுங் கருதாக் கயவரை வதைத்தே
இசைபடைத் திடவரம் பெற்றய்
செருவில்வல் லசுரர் தமைவதைத் திரங்குந்
தேவரைக் காத்தரு ளென்னும்
பருவர லுறுபுத் தேளிரை நோக்கிப்
பைந்துழாய்ப் பண்ணவன் உரைக்கும். (28)

1927. **வி**ருத்தரைத் தமர்செய் அசுரரை வதைக்க
வேண்டிடுஞ் சக்கரப் படைமுன்
பொருதிரு டியர்கள் புங்கவ ஞன
புண்ணியத் **ததீசி**மெய் யனைத்துங்
கருதுவச் சிரமாம் என்பினிற் பட்டுக்
கதிர்முனை மழுங்கிய தந்தோ
நிருதரை வதைக்க அரிதெனும் அரியை
நேர்குறித் திமையவர் உரைப்பார். (29)

1928. **சலந்தர அசுரன்** மணிமுடி விரைந்து
தடிந்திடு நிமித்தமாய் இறையோன்
நிலந்தனிற் பொறித்த திகிரிவெம் படையை
நின்கையில் வரத்தவம் புரிதி
பொலந்துகி லுடையோய்! என்னலும் முராரி
பொருந்தியே **காஞ்சியை** அடைந்து
பலந்தருங் கருணை யீசன்பொற் பதத்திற்
பதுமமா யிரமருச் சித்தான். (30)

1929. **ஒ**ருபக லொருநற் பதுமமே குறைய
ஓர்ந்ததற் கிணையென விழியைப்
பருவர லறவே பிடுங்கியங் கணன்பொற்
பதத்தின்மீ தருச்சனை புரிந்தான்

பொருவரு கடவுள் ஆயிரம் பருதி
போன்றிடு திகிரியோர் பங்கு
கருதியக் கணமீங் தளவிலா வரங்கள்
கட்டுரை வேண்டுவ தென்றான். (31)

1930. அப்பகல் மதுசூ தனனும்வீழ்ந் திறைஞ்சி
அடியனேன் தனக்குநீள் கமலம்
ஒப்பெனும் விழிவேண் டுதுமெனப் புகன்றே
உலகினில் யாவனே ஞெருவன்
எப்பொழு தினுஞ்சேங் **தாமரைக் கண்ணன்**
என்றெனைப் போற்றிசெய் கின்றான்
துப்புறு சடையோய்! அவற்கு வேண் டுவன
தோற்றிநீ யருடியென் றனனல். (32)

1931. கடுவிடம் நுகரும் மணிமிட றுடையோன்
கதுமென அளித்தனவ் வரங்கள்
கொடுவிறல் அசுரர் தமைவதைத் தசுரர்
குழுக்களுக் குடைந்ததே வரையும்
வடுவின்மூ வுலகம் அனைத்தையும் புரிந்தான்
மாதவர் அன்றுதொட் டேயன்
பொடுமலர்க் கமலக் கண்ணனென் றுரைப்பர்
உவணவூர் தியுமகிழ்ந் துறைந்தான். (33)

**திருமால் மகப்பேறு விரும்பியது.**

1932. திருமறு மார்பன் பின்னுமோர் காலஞ்
சிறுவனை வேண்டிவாஞ் சையினல்
மருமலர்த் **திருவாஞ் சி**யங்க ரடைந்து
மழவிடைப் பாகன்மா மலர்த்தாள்
ஒருமையோ டருச்சித் திறைஞ்சினன் அப்போ
துமைதனை அருச்சியா ததனல்
வெருவரத் துளவோய்! பரன்தரு மகவும்
விமலனல் வேவவென் றுரைத்தாள். (34)

1933. சமையநா யகியிப் படிவெகுண் டுரைத்த
சாபமேற் கொண்டுமால் வெருவி
உமையுடன் எமது குமரவேள் தனையும்
ஒற்றைவா ணுதற்கண தனையும்

இமையுடன் இமைகள் மருவிடா வகைநின்
றிறைஞ்சியா ராதனை புரிந்து
சிமையமார் கயிலை நாயகன் மகிழச்
செய்துளங் களித்து வாழ்த் தினனே. (35)

1934. கதமெரி நுதற்கட் சாமிபே ரருளாற்
கவுரிமுன் தோற்றிமா தவனே!
மதமலை உரியைப் போர்த்தபிஞ் ஞகன்தன்
வரத்தினால் வந்தருள் புதல்வன்
கதுமெனப் பரனால் எரிந்தபின் மீளக்
கண்ணுதல் அருளினால் வடிவற்
புதமென எடுக்கக் கடவனென் றுமையாள்
புகன்றுகண் ணுதலொடு மறைந்தாள். (36)

1935. எரியுமிழ் திகிரி யண்ணலப் படியே
இரதியும் மகிழெழில் மதனைப்
பரிவினிற் பயந்தான் நுதற்கண ரழலாற்
பாலனும் எரிந்தபின் முராரி
பிரிவரு மிமையோர் மகிழுமன் மதனைப்
பின்னரும் மதலையாய்ப் பெற்றான்
புரிசிவ பூசை மைந்தனோ டனந்த
போகமும் நல்குநிச் சயமே. (37)

---

## அத்தியாயம் 67.

## சிவபூஜை மான்மியம் —தொடர்ச்சி

### திருமால் மாயனானது

ஒரு முறை திருமால் காலநேமி முதலான அசுரர்க்குத் தோற்று மாயா புரியில் பரமனை வழிபட்டு, ' அண்ணலே ! காலநேமி முதலானோர் மா மாயை வடிவினர். அவர்களுடன் பொர மாயை வேண்டும். அருள்புரிக ' என வேண்டினார். சிவபிரான் அவ்வாறே மாயை வடிவம் அருள, திருமால் காலநேமி முதலானோரை வதைத்து வென்றார்.

### சிவபிரான் எலும்பாபரணரானது

ஒருமுறை திருமால் காசியிற் கண்ணுதலை வழிபட்டுப் 'பெருமானே ! தேவரீர் எங்கள் அகந்தை நீங்க எங்கள் எலும்புகளைத் தரித்தீர்கள்; எனினும், அடிக்கடி அகந்தை அடைகிறோம்; எனவே, தங்களைத் தரிசிக்கும்போதெல்லாம்

அடக்க வுணர்ச்சி உண்டாகுமாறு அந்த என்புகளை எப்போதும் அணிந்து எலும்பாபரணன் என்னும் திருநாமத்தைப் பூண்டருளுக. மேலும் விண்டு கந்தரம் ஈர்த்தவன், மச்சவிழியணிந்தவன், கமட என்பணிந்தவன், வராகக் கோடு பூண்டவன், நரசிங்க முண்டமுந் தோலும் புனைந்தவன், வாமனன் முதுகென்பும் தோலும் பூண்டவன்—என்பன போன்ற திருப்பெயர்களும் தரித்தருள்க! இத்திருப் பெயர்களை இயம்பி வழிபடுவோர்க்கும் இன்பம் அளித் தருள்க !' என வேண்டினர். இறைவன் அங்ஙனமே வரம் தந்தனர். எலும்பாபரணர் முதலாய திருநாமங்களைச் சொல்பவர் இருமையும் பெறுவர்.

### திருமால் மத்தள மாயனனது

மற்றும் ஒருமுறை திருமால் சிவபெருமானை அரீச்சுரத்தில் வழிபட்டுப் பரமனுடைய திருக்கூத்துக்குப் பொருந்தப் படகம், மத்தளம் முழக்கும் பேறு பெற்று மகிழ்ந்தார்.

### திருமால் பிறப்பிறப்பு அற வேண்டியது

ஒருமுறை திருமால் பரமசிவனைத் திருவெண்காட்டில் வழிபட்டு 'ஐயனே! பிறப்பிறப்பினால் அலுத்தேன், இனி மூத்தியை விழைகிறேன்' என்றார். கங்காதரன், 'நன்று ! சர்வபூத சங்கார காலத்து, உன்னை மாய்த்து, உன் என்பு முதலியவற்றைப் புனைந்து, உன் அடியவர் பிழைகளைப் பொறுத்து, உமாதேவி வாழ்த்த நடம் புரிவோம்; பின்பு ஒரு படைப்பில் உனக்கு எம் சாரூபமும் அளித்துப் பின்னர் முத்தி யளிப்போம் என்று வரமளித் தருளினர்.

இவ்வாறு, திருமால் சிவபூசையினால் எல்லாப் பேறுகளும் பெற்றார். இனி, பிரமன் செய்த சிவபூசை மான்மியத்தைச் செப்புகின்றேன் (என்று சூதர் சொல்கிறார்.)

---

# அத்தியாயம் 67.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### திருமால் பூசித்தது (தொடர்ச்சி)

### எழுசீர் விருத்தம்

1936. பின்னொரு பருவந் தன்னில்மா மாயன்
பீடுறு காலநே மிப்பேர்
என்னும்வல் லசுர ராதியர்க் குடைந்தே
யேத்துமா யாபுரி யடைந்து

பொன்னவிர் இதழிக் கடுக்கையோன் சரணம்
பூசைசெய் திடப்பரன் வெளிப்பட்(டு)
உன்னருங் கருணை புரியமால் முகமன்
உரைத்துவந் தித்தறை குவனுல். (1)

1937 நிருமலக் கடவுள்! கேண்மதி கால
நேமியா தியவிற லசுரர்
பொருவின்மா மாய வடிவின ரவரைப்
பொருதட அடியனேன் தனக்குப்
பெருவலி சிறிதும் இல்லைநின் மாயைப்
பேற்றினுல் அபசயப் படுத்த
ஒருவரம் அருள்தி ஆயிரம் வரங்கள்
உதவுவோய்! உனக்கரி திலையே. (2)

1938. என்றுரைத் துழுவை அதளுரித் துடுக்கும்
ஈசனல் கியவரம் அடைந்து
வென்றிபெற் றிடுமா மாயையாம் வடிவம்
மேவியே அச்சுதக் கடவுள்
குன்றென வரும்வல் அசுரர்தம் வலியும்
கோரமும் அகற்றுமா வலியாய்
மன்றலந் துளவோன் அசுரரியா வரையும்
வதைத்துவை குந்தமே வினனே. (3)

**சிவபிரான் எலும்பா பரணரானது**

1939. பின்னொரு பருவம் கயல்விழிக் கனிவாய்ப்
பிறைநுதல் திருமணி மார்பன்
கன்னலங் கழனிக் **காசிமா நகரிற்**
கண்ணுதற் சாமியை அருச்சித(து)
உன்னரும் வரங்கேட் கின்றனன் அடியேன்
உற்ற ஆங் காரநீத் திடுவான்
என்னுடை எலும்பும் அம்புயக் கடவுள்
என்புமங் கந்தரித் தனையே. (4)

1940. எந்தைகேண் மதியப் படியிருக் கையிலும்
எமததி காரகேண் மையினுல்
முந்தையில் அடுத்த அகந்தைமீ தூர
முளைத்தங்நன் நீயெவர்க் கேனும்

சிந்தையுள் மகிழ வெளிப்படும் போது
தெரியஎன் னெலும்புகள் அனைத்தும்
நிந்தைய தற ஆ பரணமாய்த் தரித்து
நேர்வெளிப் படுகநின் மலனே! (5)

1941. சகமனைத் தினுக்குங் குரவனே! அடியேன்
தனக்குமம் போருகன் தனக்கும்
மகபதி தனக்கும் விண்ணுளோர் தமக்கும்
மற்றுள பேர்களியா வருக்கும்
புகலென இருக்கும் உனதுமெய் யனைத்தும்
பூணுமென் பதனையே நோக்கி
இகல்வலி அடங்க என்றுமே வனைதி
இந்தநா மங்களும் புனைதி. (6)

1942. விண்டுகந் தரமீர்த் தவன், திறல் மச்ச
விழிமணி யணிந்தவன், கமடம்
கொண்டஎன் பணிந்தோன், கவிழ்தலை வராகக்
கோடுபூண் டவன்,நர சிங்க
முண்டமோ டதள்வேய்ந் தவன், பின்வா மனன்தன்
முதுகெலும் பதள்புனைந் தவனென்(று)
எண்டரும் இந்நா மந்துதிப் போர்கட்
கெளியையாய் வேண்டுவ அருள்தி ! (7)

1943. என்றிரந் திறைஞ்சி நின்றமா யவனுக்
கினியநல் வரங்கொடுத் துமையோ(டு)
ஒன்றுபட் டிருக்குங் கருணையங் கடவுள்
உம்பரில் திருவுரு மறைந்தான்
அன்றுதொட் டென்றும் இந்தநா மங்கள்
அறைபவர் இருமையும் பெறுவர்
மன்றலந் துளவ மணிப்புயன் தனக்கும்
வானவர் தமக்குநே யர்களே. (8)

1944. கனைகடல் அகடு சுழலமத் தெறியும்
கண்ணன்வெண் திங்களங் கண்ணி
புனைசடைக் குழகன் அடியர்பா லகந்தை
புரிந்திடா திருந்துநே யமதாய்

நினைவுரை தொழிலொத் தொன்றினன் சிவன்தாள்
நெஞ்சமீ திருத்திய பத்தன்
தனையுணர்ந் தகண்டா காரவா னந்தச்
சலதிவெள் ளத்தமிழ்ந் தனனுல். (9)

**மத்தள மாயன் (மாயவன் மத்தளம் வாசித்தல்)**

1945. **கூ**ன்றுகொண் டெதிர்ந்து கனியுதிர்த் திடுசெங்
கண்ணன்மீ ளவுமொரு காலம்
பொன்றயங் கிதழி புனைசடா டவிசேர்
புண்ணியன் தனை**யரீச் சரத்தில்**
மன்றலந் தளிரால் அருச்சனை புரிந்து
வரமடைந் தவன்புரி நடத்துக்(கு)
ஒன்றவே படகம் மத்தளம் சதியோ
டொத்திட முழக்கியுண் மகிழ்ந்தான். (10)

**திருமால் பிறப்பு இறப்பு அற வேண்டியது**

1946. **வ**ரியளி முரல்பா சடைத்துழா யலங்கல்
வனைந்தமால் பின்னொரு பருவம்
கரிபலந் துறவோற் குதவிய **திருவெண்**
**காட்டி**னின் முக்கணு யகனைப்
பரிவுடன் வழிபட் டெதிர்வரு பரனைப்
பணிந்துகேட் கின்றனன் எந்தாய்!
விரிநிலம் படைக்கின் றனையளப் பருநாள்
மெலிந்தனன் பிறப்பிறப் பலுத்தே. (11)

1947. **அ**டியனேன் தனக்கு வேண்டுவ தினியுன்
அடியிணை நீழல்சேர் முத்தி
கடிதருள் புரிதி யென்றமா தவனைக்
கண்ணுதல் நோக்கிமா யவனே!
படிமுத லியபல் பூதசங் கார
பராந்தகா லத்துலீ லையினுல்
முடிவுற உனமாய்த் துன்னெலும் பதள்மெய்ம்
முழுதுநாம் அணிந்தெழில் படைத்தே, (12)

---

1946. கரி—வெள்ளையானை (ஐராவதம்). இது திருவெண்காட்டில் வழிபட்டுப் பேறுபெற்றது. "வெள்ளானை வேண்டும் வரங்கொடுப்பார் வெண்காடு மேவிய விகிர்தனரே" அப். தேவா.—vi. 35—9.

1948. போற்றுநின் அன்பர் பாதகங் களையும்
பொறுத்துமை கண்டுபல் துதிகள்
சாற்றுமா னந்த நிருத்தமே புரிந்து
தக்கபின் ஒருபடைப் பினில்நாம்
ஏற்றமாம் எமது திருவுரு உனக்கிங்
கீந்துபின் மீண்டிடா முத்திப்
பேற்றையீ குதுமென் றொருவரங் கொடுத்துப்
பிஞ்ஞகன் திருவுரு மறைந்தான். (13)

1949. படவர வசைத்த கண்ணுதற் சாமி
பரிந்தருள் வரப்படித் துளவக்
கடவுளை வதைத்தென் பாதியால்
உருவம் கனிந்தழ கொழுகவே தரித்துப்
புடவிமற் றொருகா லம்படைத் திடுநாள்
புயல்வணற் கனந்தமாம் பிறப்பில்
இடரகற் றிடுசா ரூப்பியம் அளித்தே
இன்பவீ டுங்கொடுத் தனனால், (14)

1950. ஆகையால் நெடுமால் பரசிவன் மலர்த்தாள்
அருச்சனை புரியுமான் மியத்தால்
ஓகையால் உலகம் அளித்திடச் சத்தி
உடையனாய் வலிகள்சேர் பவனாய்
வாகைமா மாயா வடிவனாய்ச் சகல
வானவர்க் கதிகனு மெவையும்
ஈகைசேர் புதல்வ ருடையனாய்ச் சாபம்
இலோனுமாய்ச் சுகியுமா யிருந்தான். (15)

1951. இப்படிச் சிவனை யச்சுதக் கடவுள்
இழைத்தபூ சைகளிலோர் சிறிதிங்(கு)
ஒப்பறு பூசை உரைத்தனன் பூசை
உள்ள எல் லாஞ்சொல யாவர்
துப்புர வுடைய சித்தர்? அந் தணிர்காள்!
சொல்லின்மற் றொருவரும் இல்லைத்
தப்பில்பூ சைகள்கேட் கின்றவ ரவர்க்குச்
சகலசா மியமுமுண் டாமால். (16)

---

1951. சாமியம்—சொத்துரிமை.

1952. என்றுவெண் பொடியுங் கண்டியும் புனைந்த
இருடியுங் கவனெனுஞ் சூதன்
மன்றலங் கமல வள்ளல்பூ சனைசெய்
மான்மியங் களிற்சிறி துரைக்கேன்
கொன்றையஞ் சடிலக் குழகனை உளத்துள்
கொண்டுகா மாதிஉள் பகைகள்
வென்றிடு முனிபுங் கவர்களெல் லீரும்
விரைந்துளம் ஒருப்படக் கேண்மின். (17)

---

## அத்தியாயம் 68.

### பிரமன் சீகாழியிற் பூசித்தது
### படைப்புச் சத்தி பெற்றது

பிரமன் சீகாழியில் சிவபிரானை வழிபட்டு, 'அண்ணலே ! எளியேன் கொண்ட அகங்காரத்தை அடக்க வயிரவக் கடவுள் என் தலையில் ஒன்றைக் கிள்ளினர். அதனால் என் உள்ளம் கலங்கிப் படைப்புத் திறனை இழந்தது. அருள் கூர்ந்து முன்போற் படைக்குந் திறனை அருள்க !' என வேண்டினன். உமைபங்கர் அவ்வரத்தை அருளி மறைந்தார்.

### திலோத்தமையைக் காமுற்றது

படைப்புத் திறம் பெற்ற பிரமன் முன்போல் உயிர்களைப் படைத்து வரும்போது திலோத்தமை யென்னும் அரம்பையைப் படைத்தான். அவள் அழகு யாவரையும் மயக்கக் கூடியதாக இருந்ததனால் நான்முகன் கருத்தழிந்து அவளைக் காமுற்று வேண்டினன். அவள் திடுக்கிட்டு 'அண்ணலே ! தேவரீர் என்னைப் படைத்ததனாலே தந்தையானீர்; சுருதியாவும் உணர்ந்த தாங்கள் என்னை மோகிப்பது தவறாகுமே' என்று கூறியும் அவன் செவி யேற்கவில்லை. ஆகவே அவள் அச்சுற்றுக் கண்களில் இரத்தம் பாய ஓடினள்; நான்முகனும் அவளைப் பின் தொடர்ந்து ஓடினன்.

சிவகணங்கள் இச்செயலைக் கண்டு பிரமனைத் தடுத்து வெருட்டினர்; அவன் அச்சுற்று அசுவமலையில் ஒடியொளித்தான். பழிக்கு இடமான செயலைச் செய்தோமே எனப் பிரமன் உள்ளம் வெட்கி அரனைப் பூசித்து வணங்கி 'இறைவ ! தேவரீரின் மாயையினால் அடியேன் மோகத்தால் கருத்தழிந்தேன் ; சிவகணங்கள் என்பிடர் பிடித்துத் தள்ளி என்னை ஓட்டினர். என் பாவந் தீரவும், என் மனைவியர்களான சாவித்திரி, காயத்திரி, சரஸ்வதி ஆகிய

அணங்குகளைத் தவிர மற்றைய அரம்பையர் முதலாம் எவரிடத்தும் என்மனம் செல்லாதிருக்குமாறும் அருள் புரிக' என வேண்டினன், இறைவனும் அவ்வாறே அருளி மறைந்தார். பிரமனும் மனைவியர் தவிரப் பிற மாதர்களைக் குறியாது சம்புவின் மலர்த்தாளைப் போற்றி மகிழ்ந்திருந்தான்.

## பிரமனுக்கு அசுரர் பிறந்தது

ஒரு முறை நான்முகன் கலைமகளிடம் கூடிக் களித்தபோது பாற்கடலில் விடமெனக் கலைமகள் வயிற்றில் அசுரர்கள் பிறந்தனர்; அவர்கள் கொடும்பாவம் செய்தனர்; அதைக் கண்ட பிரமன் கடுஞ்சினத்துடன் அவர்களைத் வதைத்துக் கொன்றான். அப் பாவம் நீங்கத் திருக்காளத்தியில் பரமனைப் பூசித்துத் தூயனாய்க் கலைமகளுடன் தன்னிடத்தை அடைந்தான்.

## முருகவேளிடங் குட்டுப்பட்டது

ஒரு முறை கயிலையிற் பரமனை வழிபடத் திசைமுகன் சென்றான். அங்கே, முருகக் கடவுள் சிறு குழவியாகத் தமது கிண்கிணியும் சதங்கையும் சரிகமபதநியில் ஐயாயிரத்து நாற்பான் சுரங்களுக்கு ஒத்து ஒலிக்கத் திருவிளையாடல்கள் செய்வதைக் கண்டுங் காணாதவன் போற் சென்றான். அவன் செருக்கைக் குலைக்கச் செவ்வேள் அவனைக் கூப்பிட்டுப் பிரணவப் பொருளை வினவினர். அயன் உளறினன். ஆகவே, அவனைக் குட்டி வீரவாகுவிடம் சொல்லிச் சிறைப்படுத்திவிட்டுப் பிரமன் தொழிலைத் தாமே செய்தார். இதனை அறிந்த சிவபிரான் ஆங்கெழுந்தருளி முருகப் பெருமானைப் புன்முறுவலுடன் கொஞ்சித் துதித்து நான்முகனை விடுவித்தார். முருகவேள் அம்மையையும் அப்பரையும் பூசித்து வழியனுப்பினர். குமரக் கடவுளுக் கிழைத்த அபசாரம் நீங்கவேண்டிப் பிரமன் காஞ்சியிலே தன் பெயராலே இலிங்கம் ஒன்றை அமைத்துப் பூசித்துத் தூயனானன்.

## பிரமன் தாளம் பெற்றது

மற்றொரு முறை பிரமன் நீலவெற்பிலே நீலகண்டரைப் பூசித்தான். அண்ணல் வெளிப்பட்டவுடன் வணங்கி 'ஐயனே ! தேவரீர் செய்யுந் திருநடனத்தைக் காணக் கூட்டத்தில் நின்றால் பிரம்படி விழுந்து பொறி கலங்குகின்றது. ஆதலால் திருமாலுக்கு மத்தளப் பணியருளியது போலவே எளியேனுக்குத் தாளம் போடும் பணியை அருள வேண்டும்' என்று வேண்டினன். பெருமானும் அங்ஙனமே அருளித் தாளமுங் கொடுத்தார். அன்று முதல் பிரமன் இறைவன் கூத்துக்கு ஒத்த தாள வாத்தியப் பணியைச் செய்தான்.

## பிரமன் சாரதியானது

பின்னர் ஒருமுறை பிரமன் இறைவனை வழிபட்டு 'அண்ணலே! தமியேன் தேவரீருக்குப் பணிபுரிய மிகவும் விரும்புகின்றேன்; எனினும், நந்தியாதிய

சிவகணங்கள் அடிக்கும் பிரம்படியால் உள்ளம் நடுங்குகின்றது. ஆகவே, திருவுள மிரங்கித் தங்கள் மணித்தேரின் சாரதியாய் வேதக் குதிரைகளை ஓட்டும் பேற்றை அருளுக !' என வேண்டினன். இறைவன் அவ்வாறே அளித்தனர்.

## பிரமன் மற்றும் சத்தி பெற்றது

பரமனை மற்றொரு முறை கமலத்தோன் பூசித்துத் திருமால் முதலான யாவரையும் விழுங்கி வெளிப்படுத்துந் திறனைப் பெற்றான்.

## பிரமன் அண்ணாமலையிற் பூசித்தது

திருமாலும் பிரமனும் அண்ணலின் அடிமுடி தேடியபோது பிரமன் அண்ணலின் முடியைக் கண்டதாக மொழிந்த பொய்யுரையின் பாவம் நீங்க அண்ணாமலையிலே விச்சுவேச்சுரனைப் பூசித்துப் புனிதனாகித் தன் படைப்புத் தொழிலைப் புரிந்து வந்தான்.

## பிரமன் அன்னமும் தாமரைப்பீடமும் பெற்றது

முன்னொரு காலத்தில், அயன் ஸ்ரீசயிலத்தில் அரனைப் பூசித்து, 'விமலரே! தக்கன் வேள்வியின் போது தமியேனுடைய தாமரைப் பீடமும் அன்ன வாகனமும் அழிந்து போயின. ஆகையால், அருள் கூர்ந்து தாமரை ஆசனத்தையும் அன்னப் பறவையையும் அளித்தருள்க !' என்று வேண்டிப் பெற்றான்.

## பிரமன் வேதநகரிற் பூசித்தது

மீளவும் ஒருமுறை பிரமன் வேதநகரில் விமலரைப் பூசித்து அவரருளால் மறை விதிப்படி சராசரங்களைப் படைத்து வந்தான்.

## பிரமன் ஏமகூடத்திற் பூசித்தது

பிரமன் ஒருமுறை ஏமகூடத்தில் இறைவனையும் இறைவியையும் பூசித்துப், 'பரம்பொருளே ! அடியேன் பிறப்பிறப்பினால் வருந்தி விட்டேன். திருமாலுக்கிரங்கி அவரது கால முடிவில் அவரது எலும்பையும் கபாலத்தையும் பூண்டு நடனம் செய்தது போல, என் முடிவின்போதும் என் என்பையும் கபாலத்தையும் ஆபரணமாகத் தரித்து நடனம் புரிந்தாற் பிறப்பறுவேன்' என்று வேண்டினான். அண்ணலும் அங்ஙனமே அருளினார். அயன் முதலானோர் செய்த புண்ணியம் எவர்க்கும் உரைத்தலரிது—என்றார் சூதமுனிவர்.

## அத்தியாயம் 68.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### பிரமன் சீகாழியிற் பூசித்தது

### படைப்புச் சத்தி பெற்றது

### எழுசீர் விருத்தம்

1953. **வ**ள்ளவாய்க் கமல மண்டபக் கடவுள்
மழைதவழ் சோலைமா மலர்த்தேன்
வெள்ளவாய்க் கழனி கருங்கயல் குடக்காய்
மிளிரிளந் தெங்கினிற் கமுகில்
துள்ளவார்ந் துடைந்த தண்ணிருல் அருவி
சொரிந்ததோ டெழுந்துமின் னனையார்
கள்ளவாள் விழியெள் ளியவளந் திகழ்சீ
காழிமா நகரின்மே வினனே. (1)

1954. **அ**ங்கணு தரவான் மழுவலன் ஏந்தும்
அண்ணலை அருச்சனை புரிந்து
துங்கமாந் தவத்தால் மகிழ்ச்சிசெய் வித்தான்
சோதிமுன் வந்துநான் முகனே!
இங்குவேண் டுவதே தியம்புதி தருகோம்
என்னலும் வேதனப் படியே
செங்கைகூப் புபுநின் றமலனை நோக்கிச்
சிற்பரா! கேட்டியென் றுரைப்பான். (2)

1955. **எ**டுத்துரைக் கரிதாய் மல்குமாங் காரம்
எளியனேன் சித்தமீ தூர
அடுத்திடும் அதனுல் வயிரவக் கடவுள்
ஐந்துமா முடியிலோர் முடியை
மடுத்தகூ ருகிரால் கொய்தனன் அதனுல்
வந்திடும் அச்சமப் போது
தொடுத்திந்நாள் அளவும் சித்தமே கலக்கித்
தொழில்செயா வகைமருட் டியதே. (3)

---

1953. வள்ளம்—கிண்ணம்,

1956. கூடவுளே ! அதனுன் அடியனேன் முன்போற்
கணிப்பிலா வுயிர்படைப் பதற்கு
மடமையா யினனப் படைப்புறு சத்தி
வந்திட வரம்புரிந் தருளென்(று)
இடரினே டுரைக்கத் திசைமுகன் மொழியை
ஈர்ஞ்சடைக் கடவுள்கேட் டுமையா
ளுடன்மனே கரமாய் மிகுவரங் கொடுத்தே
உமையுடன் உம்பரின் மறைந்தான். (4)

**பிரமன் திலோத்தமையைக் காதலித்தது**

1957. அந்தவே லையில்வா ரிசப்பொருட் டுறையும்
அண்ணல்மார்க் கண்டனுக் காக
வந்தகூற் றுவன்மார் புதைத்துடன் வதைத்த
மாதுமை பாகனல் வரத்தால்
முந்தைசோ பமுந்தீர்ந் துளந்திறல் படைத்து
முக்கண யகன்மலர்ச் சரணம்
சிந்தியா வுலகம் படைத்தர மகளிர்
சேரவே விதிமுறை படைத்தான். (5)

1958. கருங்கயல் எனப்போய்ச் செவ்வரி பரந்து
கடைமதர்த் திருகுழை யிடறிப்
பொருங்கண்மா மேருக் குன்றென வளர்ந்த
பொம்மல்வெம் முலையிழை பாதி
மருங்குல்வா ரிசத்தில் அலத்தகக் குழம்பு
மல்கவூட் டியவடி யழகு
தருங்கலா பச்சா யல் திலோத் தமையைச்
சகலரும் மயங்கவே வகுத்தான். (6)

1959. ஓங்குதெள் ளமுதங் கனிந்தழ கொழுகும்
உருவமத் தனையுமே கண்டுள்
ஏங்கிடை வருந்தப் பெருத்தெழு கொங்கை
யிணைதழீ இக் களிக்கமோ கித்துப்
பூங்குயில் அனையாய் ! அணைந்தித ழமுதம்
புரந்தருள் எனஅவள் நடுங்கித்
தீங்கடுத் ததெனக் கன்னலூட் பழுத்த
தேன்மொழிக் குதலையாள் உரைப்பாள். (7)

1957. சோபம்—ஆயாசம்; சிந்தியா—சிந்தித்து.

1960. சுருதிநா யகனே! பிரமனே! என்னைத்
தோற்றரு ளிய பிதா நீயே
கருதிமோ கத்தால் என்னுடன் கூடிக்
கலவியின் மகிழ்தல்தீ தாகும்
மிருதியா தியநூ லறிந்திலாய் கொல்லோ!
மீளுதி யெனப்பயந் தோடிக்
குருதிநீர் விழிபாய்ந் திடப்படர்ந் தனளக்
குரவனுங் கூடவே துரந்தான். (8)

1961. திரிபுரம் எரியூட் டியநகைப் புனிதன்
சேவடி வணங்கிய கணங்கள்
வரிவிழித் துவர்வாய்த் திலோத்தமை தனையே
மலரயன் தொடர்ந்தனன் எனக்கண்(டு)
அரிவையுள் நடுங்கும் பயந்தணந் திடச்சென்
றம்புய னவளைவிட் டங்கண்
பிரியவே துரத்தி விட்டனர்; அசுவப்
பிறங்கல்சேர்ந் தயனொளித் திருந்தான். (9)

1962. கடவுள ரெவரும் நிந்தையே புரியக்
கருத்தழிந் தேதுசெய் தனமென்(று)
இடருழந் துள்ளம் நடுங்கியே வெள்கி
ஈசனை அருச்சனை புரிந்தான்
வட்டரு வடிசேர் சனகரா தியர்க்கு
மகிழ்ந்தருள் வள்ளல்முன் தோற்றப்
படவர வசைத்த அண்ணல்முன் வீழ்ந்து
பணிந்துகை கூப்பிநின் றனனால். (10)

1963. அடியருக் கெளிய கண்ணுதற் பரமன்
அறைந்திடும் அயன்தனை நோக்கி
கடிமலர் மருவு பிரமனே! வேண்டுங்
காமியம் ஏதுசொல் என்றான்
துடியிடை உமைபா கனையயன் பணிந்து
சுத்தனே! நினதுமா யையினுன்
முடிவிலாக் காதல் வெள்ளமீ தூர
மோகமா யெனதறி வழிந்தேன். (11)

---

1960. மிருதி—ஸ்மிருதி.

1961. அசுவப் பிறங்கல்—குதிரைமலை.

1964. அன்றியுந் தொடர்ந்து பைங்கழை குனித்த
ஐங்கணைக் கிழவன்வெம் படையாற்
கன்றிவெவ் வழலின் மெழுகென வுருகிக்
கரைந்துநா யேன்திலோத் தமையைச்
சென்றிரந் தடங்கா வாஞ்சையால் அவள்தன்
செப்பிள முலைதழீஇ முயங்கப்
பின்றிரிந் தனன்நின் கணங்கள்கண் டுருத்துப்
பிடர்பிடித் தென்னையோட் டினரால், (12)

1965. பொருக்கென அடியேன் ஓடிவந் திந்தப்
பொருப்பில் நீள் முழைதனில் அடைந்தேன்
வெருக்கொளக் கணங்கள் துரத்திய பயங்கள்
மீண்டினம் நீங்கவோ இல்லை
இருக்கெனும் மறையா திகள்புகழ்ந் திறைஞ்சும்
எந்தையே! பகவனே! உள்ளம்
திருக்கென உனக்கே பத்தனும் எனக்குச்
சித்தியாய் எதிர்வெளிப் படிலே, (13)

1966. குங்குமம் பொறித்துச் சுணங்கரும் பியபொற்
கொம்மைவெம் முலைக்கயல் விழியார்
இங்கிதக் கலவி மாயைவிட் டகலும்
இலகுவிச் சுவாதிய ரென்றும்
பொங்கிமேல் நோக்கும் இரேதசு வுடைய
புனிதரென் றும்புகழ் படைத்தோய்!
அங்கையால் உனைத்தேர்ந் தருச்சனை புரிந்த
அறிஞரை மதனனே வருத்தான். (14)

1967. சம்புவே! பரனே! தந்தையே! யிடர்சேர்
தமியனேற் காகையான் மாயை
யிம்பர்விட் டகலக் கடவது பின்னர்
இலகுகா யத்திரி திரண்ட
கும்பமா முலைச்சா வித்திரி கயற்கட்
குமுதவாய்த் தவளவே டலரும்
அம்புயா சனத்தி யிவர்கண்மேல் விருப்பம்
அனந்தமாய் முயங்கவேண் டுதுமால். (15)

---

1965. இனம்—இன்னம்.

1968. அன்னவர் விருப்பம் அன்றியே மற்ற
அரம்பையர் முலைதழீஇ மருவக்
கன்னலின் மதனைங் கணைவருத் தாமற்
காத்தருள் புரிதியன் றியுமே
மின்னிடை வருந்தத் திலோத்தமை தனைநான்
விரைந்துபின் தொடாந்தபா வந்தீர்
என்னலும் பரனப் படியென வரமீந்
திமையவ ளுடன்மறைந் தனனால். (16)

1969. அம்புயக் கடவுள் அப்படி சிவனீந்
தருள்வரஞ் சேர்ந்துதன் பதத்திற்
செம்பொன்மெய் பிறழ்கா யத்திரி சாவித்
திரிமகிழ் வாணிமூ வர்கள்தங்
கும்பமா முலைசேர்ந் தன்னியர் கலவி
குறித்திடா தகிலமே படைத்துச்
சம்புவின் மலர்த்தாள் நினைந்திமை யோர்கள்
தாழ்ந்துபோற் றிடமகிழ்ந் திருந்தான். (17)

## பிரமனுக்கு அசுரர்கள் பிறந்தது

1970. முண்டகப் பொகுட்டு வள்ளல்பின் ஞெருகால்
மொய்குழற் கயல்விழிக் கனிவாய்க்
கண்டமு தெனுஞ்சொற் பாரதி களபக்
கலசமா முலைதழீஇ முயங்கத்
துண்டவெண் பிறைவாள் எயிற்றுவல் லசுரர்
சொல்லிருங் கிழத்திதன் வயிற்றிற்
பண்டைவல் வினையாற் பாற்கட லுளைந்து
பயந்தவெவ் விடமென வுதித்தார். (18)

1971. சில்லரிக் குரல்நந் துயிர்த்துவெண் டரளத்
திரைகொழித் தெற்றுவா ரிதிசூழ்
தொல்லுல கனைத்தும் இடருழந் திரங்கச்
சொலற்கருந் தண்டமே புரிந்திங்(கு)
எல்லையில் கொடும்பா வஞ்செய்மைந் தர்கள்பால்
எட்டுணை யேனுமன் பிலாமல்
ஒல்லைவெஞ் சினத்தால் வதைத்தனன் நினைத்தான்
உறுபழி பாவநீங் குதற்கே. (19)

1972. அளவிலா திழைத்த கொடியபா வங்கள்
அகற்றுகா ளத்தியை அடைந்து
துளவமா லெனக்கண் ணிடந்துபே ரன்பாற்
சூட்டுகண் ணப்பனுக் கருளி
உளமவா வுடைய ஈசனைப் பூசை
யுடன்செய்து பாவமே நீத்துத்
தளவவாள் நகைப்பா ரதியுடன் கூடச்
சரோருகன் தன்பதம் இருந்தான். (20)

## முருகவேள் பிரமனைக் குட்டியது

1973. பாசடைச் சிறுமுட் டாட்சரோ ருகத்தே
பனிமதிச் சிறுபிறை புனிற்றுத்
தேசுடைத் தவளக் கோடுபட் டுரிஞ்சுஞ்
செம்பொன்மெல் லிதழ்முறுக் குடைந்தே
வீசகட் டுமிழ்தேன் அருவிதூற் றிதழி
வேணியிற் பகீரதி மிலைச்சும்
ஈசனை யொருகாற் கயிலைசென் றருச்சித்
திருகை கூப் புபுசெலும் ஏல்வை, (21)

1974, பத்துநூற் றடுக்கும் இதழ்முறுக் கவிழ்பொற்
பங்கயத் தொடைபுயம் மிழற்றுஞ்
சத்தமேழ் கிளைத்தை யாயிர நாற்பான்
சரிகம பதநியிற் சுரங்கள்
ஒத்தெழு மணிக்கிண் கிணிச்சிறு சதங்கை
உபயசிற் றடியருட் கந்தன்
வித்தகன் எனையாள் குமரன்முன் லீலை
விளைத்திடு கின்றதை அறிந்தான். (22)

1975. அறிமட முடைத்தாய்ச் சென்றனன் குகவேள்
அதுதனை நோக்குறு வுமிழ்தேன்
வெறிகமழ் பொகுட்டுப் பதுமனை விளித்து
விவிதமாங் தனதுலீ லையினல்

---

1974. இசைவகை 5040—செய்யுள் 895, 927 பார்க்க. சரிகமபதநியிற் சுரங்கள் ஒத்தெழுமணிக் கிண்கிணிச் சிறு சதங்கை உபய சிற்றடியருட் கந்தன்—"நாதகீத கிண்கிணி", சதங்கை தருகீதம்" திருப்புகழ்.

1975. விவிதம்—பலவிதம்.

அறிவதற் கரிய தாரகப் பொருளே
தறைகுதி யென்னவவ் வேல்வை
பிறிதொரு பொருள்சொற் றனன்விரல் முடக்கிப்
பிடித்தயன் சென்னிகுட் டினனால். (23)

1976. மருங்குநின் றொதுங்கித் துகிலுமுள் ளடக்கி
வணங்கிவீ ழ்ந் தெழுந்துபத் தியினால்
நெருங்குகைம் மலர்கூப் புபுசெவ்வேள் மலர்த்தாள்
நினைந்திடும் வீரவா குவைப்பார்த்(து)
இரங்குகட் கருணை யாலயன் தனைநீ
யிருஞ்சிறை புகுத்தியென் றிடுவித்(து)
அருங்கடி கமழ்வா ரிசத்திறை உலகம்
அனைத்தையுந் தான்படைத் தனனே. (24)

வேறு

அறுசீர் விருத்தம்

1977. வெடிக்குந் தரளங் கொழித்தெறியும்
வேழ அரசாம் புல்லகண்டம்
பிடிக்குஞ் சிலையாக் குனித்துமலர்
பெய்யும் மதவேள் தனையெரித்தோன்
படிக்குஞ் சுருதிப் பொருளறியாப்
பதுமன் செயல்கேட் டக்கருமம்
முடிக்கும் படிக்கா தரவாற்புன்
மூரல் விளைத்தே றூர்ந்தடைந்தான். (25)

1978. கந்தன் இருக்கும் இடங்குறுகிக்
கனியே! கனியின் நறுஞ் சுவையே!
எந்தம் உயிரே! உயிர்க்குயிரே!
இருக்கா தியநான் மறைவழுத்தும்
முந்தைப் பொருளே! கண்மணியே!
முதலே! குமரன் எனவடிவாய்
வந்த பரனே! எனத்துதித்து
மலரோன் சிறையை விடுவித்தான். (26)

---

1977. புல்லகண்டம்—ஒருவகைக் கரும்பு.

1979. **வி**ரிசெஞ் சுடரா யிரக்கரஞ்சேர்
வெய்யோன் அனந்த கோடி குழீஇச்
சொரிகின் றனபோற் பிறைநுதற்கண்
தோன்றுங் குமரன் மலர்கள் கொடு
வரிசிந் தியகட் கருணையுமை
மழவெள் விடையோன் இருவரையும்
பரியுங் குமரன் னவர்சரணம்
பரவி வழிபட் டனுப்பினனுல். (27)

**எழுசீர் விருத்தம்**

1980. **ஏ**ரிமணிச் சுடிகைப் பஃறலைப் பாந்தள்
எடுத்தபார் மிசையளப் பரிதாய்ப்
பிரிவறு வியப்பின் மல்குசீர் வளங்கள்
பெருத்தெழு **காஞ்சிமா நகரிற்**
கரியத ளுரித்துப் போர்த்த ஏ கம்பன்
கழலருச் சனைபுரிந் தங்கண்
பரிவினில் தனது பெயரிலோ ரிலிங்கம்
பரிந்துதா பித்தருச் சித்தான். (28)

1981. **தெ**ன்றிசைக் கடவுள் வெருவவே வடிவைத்
தீயுமிழ் கொலைபழுத் தொழுகும்
வென்றியங் கதிர்வேற் படைவலன் ஏந்தும்
வேள்பதங் குறித்திடாப் பாவம்
ஒன்றறத் தணந்து தன்பதத் தினிற்போய்
உடைதிரைப் புவிமுத லியவாய்
நின்றநற் புவனம் அனைத்தையும் படைத்து
நேயமோ டிருந்தனன் மாதோ. (29)

**பிரமன் தாளம் பெற்றது :—பிரமதாளம்**

1982. **க**ஞ்சமென் பொகுட்டு வள்ளல்மீ ளவுமே
கதிர்மணி **நீலவேற்** பதனில்
தஞ்சமென் றடைந்து பத்திமீ தூரச்
சங்கரன் தனையருச் சிக்க
அஞ்சலென் றமலன் தோற்றிவே தனைப்பார்த்
தறைந்தனன் விரிஞ்ச! கேண் மதிநீ
நெஞ்சினில் விழைந்த துரைத்தியென் றிடவந்
நேரமஞ் சலிசெய்தே உரைப்பான். (30)

1979. நுதற்கண்ணில் தோன்றிய குமரன்.

1983. எந்தைநீ குனித்த திருநடம் உளந்தேர்ந்
திருவிழி களித்திடக் காண்பான்
கொந்தலர் மலர்த்தண் துளவமால் உனது
குரைகழல் அருச்சனை புரியச்
சிந்தையே மகிழ்ந்து படகமீந் திலயஞ்
சேவைசெய் யென்றருள் புரிந்தாய்
நந்தியம் பகவான்! எனக்குமே **தாளம்**
நல்குதி நிருத்த் நோக் குதற்கே. (31)

1984. சிறியனேன் தனையும் அடிமையாக் கொண்டே
திரிமலம் அறுத்தருள் புரிதி
பிறிதுதேர்ந் திடிலீ தன்றிமற் றதனாற்
பெட்பினேக் கப்படா திலயம்
மறிதிரைக் கடல்நேர் கணங்குழீஇத் தொடர்ந்து
மணிப்பிரம் பறைந்திடிற் புலன்கள்
பொறிவழி கலங்கி அறிவழிந் துயிரும்
போமெனக் கருதியஞ் சுவனே. (32)

1985. என்றுமுட் பொதிந்த தாளதா மரைத்தே
இறைஞ்சி நின் றியம்பு சொற் கேளா
மன்றில்நின் றிடத்தாள் எடுத்துமுன் நடித்த
வள்ளலொப் பற்றமா தாளம்
தன்றுணைக் கரத்தாற் கொடுத்துடன் மறைந்தான்
சதுமுகன் இறைஞ்சிவாங் குபுநின்(று)
அன்றுதொட் டரிய தாளவா த்தியமொக்
கடித்தனன் சதிதனக் கேற; (33)

1986. கருத்திறல் தொடர்ந்தும் அளப்பருங் காலம்
கருதவும் வெளிப்படா விமலன்
நிருத்தமா தரவால் விழிமலர் களிப்ப
நெஞ்சநெக் குருகவே கண்டு
திருத்தகு மனத்தில் உவகையாய்ப் புவிமேற்
சேருமுப் பஃதொன்பான் கோடி
எருத்தமீ திருக்கும் பிரமலோ கத்தில்
இணையிலி பதங்குறித் திருந்தான். (34)

---

1983. படகம்—ஒருவகை முழவு; இலயம்—கூத்து விகற்பம்

1985. ஏற—பொருந்த.

**பிரமன் சாரதியாக வரும் வரத்தைப் பெற்றது.**

1987. **பி**ன்னரும் மலரோன் பிரமலோ கத்திற்
பிஞ்ஞகன் பதம் அருச் சிக்க
உன்னரும் பகவான் முனம் வெளிப் பட்டே
உவந்துபுன் மூரலோ டுரைப்பான்
நன்னர்நெஞ் சுடைய விரிஞ்ச! நின் னுளத்தில்
நயந்ததே தெனக்கறை மிடற்றோய்!
பன்னரும் இரதா ரூடனும் உன்னைப்
பணிந்துபோற் றிடவிருப் புளதால். (35)

1988. **அ**ங்கண! நினது சேவை செய் தேத்த
அடியனேற் கரிதுபல் வாதை
இங்குள நந்தி யாதிய கணங்கள்
எற்று கைப் பிரம்படி குறித்துப்
பொங்குளம் நடுங்கிப் பயந்தனன் நோக்கிப்
போற்றிவந் தனைசெயும் பொருட்டுத்
தங்கநன் மணித்தேர் மறைப்பரி கடவச்
சாரதி யாகவே யருள்தி. (36)

1989. **எ**ன்றுரைத் திறைஞ்சு திசைமுகன் மொழிகேட்
டிராவணன் கயிலைவெற் பொருபால்
நின்றகழ்ந் தெடுத்த விறற்புயந் தகர்ந்து
நெரிந்திட ஒருவிரல் ஊன்றிக்
குன்றிடப் பிலம்வீழ்த் தருளிறை வரங்கள்
கொடுத்தநன் மறைந்தனன், மலரோன்
அன்றுதொட் டிரத சாரதி யாகி
அருமறைப் பரிகடா வினனால். (37)

**பிரமன் சத்தி பெற்றது**

1990. **வ**னசமென் பொகுட்டு வள்ளல்முன் கயிலை
வளர்மணிச் சிகரமீ துதயத்
தினகரன் அனந்த கோடிமுன் குழீஇய
திருவுரு முக்கணு யகன்தாள்
இனவரி யளிகள் முரல்மது மலர்கொண்
டேத்தியா ராதனை புரியச்
சினமழ விடையோன் வெளிப்பட விரிஞ்சன்
செங்கைகூப் புபுமொழிந் தனனால். (38)

1991. அடியவர்க் கெளிய கண்ணுதற் கடவுள்
அண்ணல்நின் அருளினாற் கருடக்
கொடியவன் தனையும் அளப்பரு முலகக்
குழுத்தொகு தியையுமென் வயிற்றிற்
படியவே பரிக்கச் சத்தியும் பரித்த
படியவை அபானமார்க் கத்தால்
முடியவே தணப்பச் சத்தியும் அளித்தி
முக்கண ! என அவை அளித்தான். (39)

1992, செஞ்சொலின் கிழத்தி கோமுன்மா யவனைச்
செருவில்வென் றவனொடெவ் வுலகும்
விஞ்சவே மறைத்து வாய்மடுத் தெடுத்து
விழுங்கவவ் வுயிரெலாம் நீயே
தஞ்சமென் றிரங்கி யேத்திட அபானச்
சரியினால் விடுத்துமுன் போல
அஞ்சலென் றுவந்து கண்ணுதல் அருளால்
அனைத்தையும் படைத்தனன் மாதோ. (40)

**பிரமன் அண்ணுமலையிற் பூசித்தது**

1993. ஓதிமம் உகைத்த பண்ணவன் பெரிய
உன்னத இலிங்கமா முடிபண்
போதிலெண் மொழியாற் கண்டனன் என்றோர்
பொய்யுரை புயல்வணற் கஞ்சா(து)
ஓதினன் தொலையா அப்பெரும் பாவம்
ஒழிந்திட அருணமால் வரையில்
ஆதியாம் விச்வேச் சுரனிணை மலர்த்தாள்
அருச்சனை புரிந்துபோற் றினனால். (41)

1994. எடுத்துரைக் கரிய பூசையின் பலத்தால்
எண்ணிலாப் பாவமத் தனையும்
விடுத்துடன் அமல வடிவமா யளக்கர்
மீதக டுளைந்திட எழுந்த
கடுத்தனை நுகருங் கண்டன் மெய் வரத்தாற்
கணிப்பிலா வுலகமத் தனையும்
எடுத்துடன் படைத்தான் தூங்கலோர் சிறிதும்
இன்றியே தன்னுல கிருந்தே. (42)

1992. செஞ்சொலின் கிழத்தி—நாமகள்.

**பிரமன் அன்ன ஊர்தி, தாமரை வாசம் பெற்றது**

1995. முன்னொரு பகற்சீ பருப்பதத் தரன்தாள்
முளரியா சனன் அருச் சித்தே
உன்னரு மிலிங்கத் தெதிர்வரு பரனை
உவந்துபூ முடியுற வணங்கிப்
பன்னரும் பொருளே! அன்னவா கனமும்
பதும ஆசனமுமே தக்கன்
தன்னரு மகத்தில் நினதுமா கணங்கள்
தழல்நிறக் கருடனோ டெதிர்த்தே, (43)

1996. ஆதரம் பெருக அனைத்தையும் நுகர்ந்துள்
அகட்டெரிக் களித்தன கொணர்ந்திப்
போதுள மகிழ்ந்திங் கடியனேன் தனக்குப்
புண்டரீ காசனந் தனையும்
ஓதிமப் பரியாம் ஊர்திதன் னையும்நீ
ஒல்லைதந் தருள்தியென் றிறைஞ்ச
நாதனப் படியென் றவ்வரம் மகிழ்ந்து
நல்கிவிண் மறைந்தனன் மாதோ. (44)

1997. புடவிமுன் படைத்த பண்ணவன் மகிழ்ந்து
பொருக்கெனப் பிரமலோ கத்திற்
கடவுள ரனந்த கோடியோர் குழிஇயக்
கதிர்மணி மகுடகோ டிகள்முன்
சுடர்விட நெருங்கி ஒன்றினோ டொன்று
துண்ணென உரிஞ்ச நேர் சூழ
இடரகன் றுமையோ டீசனை வழுத்தி
இன்பமுற் றிருந்தனன் மாதோ, (45)

**பிரமன் வேதநகரில் பூசித்தது**

1998. மீளவும் மலரோன் வேதமா நகரில்
விமலனும் அத்தியா கேசன்
தாளிணை மலரில் அருச்சனை புரிந்து
சம்புவின் பால்முனம் பெற்ற

1998. வேதமாநகர் — வேதாரணியம். திருவேதிகுடி, திருவேற்காடு, திரு அழுந்தூர், என்னும் தலங்களில் சுவாமிபெயர் வேதபுரீசுரர். திருக் கழுக்குன்றம்—வேதகிரி.

நீளுமா மறையின் விதிப்படிப் பயந்த
நிகழ்சரா சரவுயி ரெலாங்தோர்ந்(து)
ஆளுமா கருணை இருத்துபு படைத்தே
அண்ணல்பே ரருளினுல் வதிந்தான். (46)

### பிரமன் ஏமகூடத்திற் பூசித்தது

1999. **ப**னுவலாட் டியைநா இருத்திய வனசப்
பண்ணவன் **ஏமகூடத்திற்**
பினுமொரு பருவம் மறைவிதிப் படியே
பீடலிங் கத்திலங் கயிற்கட்
குனிசிலைப் புருவ உமையுடன் சிவனைக்
குறித்தருச் சிக்கமுன் தோற்றும்
புனிதனைப் பரம பதியையத் தனைநேர்
போற்றிவந் தனைசெய்தே உரைப்பான். (47)

2000. **ப**னிமதிச் சடையோய்! பிறப்பிறப் பினில்யான்
பயந்தனன் பராந்தகா லத்திற்
கனிகுழக் கன்றுல் உதிர்த்தமா லுடனே
கணிப்பிலாச் சராசரம் அனைத்தும்
முனிவற வதைத்து மாயன்மேற் கருணை
முன்னம் வைத் துகந்துநீ யவன்மெய்ப்
புனிதநீ றுரோமம் என்பொடு கபாலம்
பூண்டுதாண் டவம்நடித் தனையே. (48)

2001. **அ**ண்ணலே! அதுபோற் பராந்தகா லத்தில்
அடியனேன் சரமமாங் காலம்
நண்ணுபோ துடலந் தனைவிளை யாட்டால்
நாடிநீ வதைத்தென துடலிற்
கண்ணுறு வுரோமம் என்புவெண் ணீறு
கபாலமா பரணமாய்த் தரித்தே
எண்ணிலா நடனம் புரிந்தரு ளதனுல்
எளியனேற் கினிப்பிறப் பிலையே, (49)

---

1999. பனுவலாட்டி—கலைமகள்.

2001. சரமம்—முடிவு.

2002. அத்தனே! நுதற்கண் அழலிலுண் டான
அருமயா னத்துநீ றணிய
முத்தரா மவர்க்குப் பினும்பிறப் புண்டோ
மூரிநின் சடிலமார் கங்கை
சுத்தநீ ரவரென் புரோமமே விடாது
தொல்லையம் பிறப்பவர்க் கிலைநீ
நித்தமே அணியென் புரோமநீ றுளேற்கு
நிகழ்த்திட வேண்டுமோ கதியே. (50)

2003. என்றுரைத் திடுவே தனுக்குநல் வரமீந்
தீசன்மெய் மறைந்தனன் மலரோன்
அன்றுதொட் டுளத்திற் பராந்தகா லம்பார்த்
தறிவினோ டிருந்தனன் மலரோன்
பொன்றிட வருகா லத்தரி யுடனே
போதனை வதைத்தனன் என்பு
மன்றல்மா லிகையாய் அணைத்துதன் னுன்மா
மதித்துவேண் டியநடம் புரிந்தான், (51)

2004. கண்ணுதற் சாமி இப்படி மலரோன்
கருதரு தத்துவம் விடுவித்(து)
எண்ணில்பே ரின்ப அமுதவா ரிதியை
ஈந்திட அயன்வெளிப் பட்டே
அண்ணல்மெய் வரம்பெற் றமுதவா னந்த
அளக்கருட் படிந்தனன் அவர்கள்
புண்ணியம் எவர்க்கும் உரைக்கரி தென்றே
புகன்றனன் சூதமா முனியே. (52)

---

## அத்தியாயம் 69.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### இந்திரன் முதலானோர் பூசித்தது

சூதமுனிவர் சொல்கின்றார்:—

### இந்திரன் பூசித்தது

இந்திரன் இறைவனைத் திருக்காளத்தியிற் பூசித்து வலாசுரனை வென்று தேவர்களுக்குத் தலைவனானான். விருத்தாசலத்திற் பூசித்து துருவாசர் சாபத்தால் இழந்த சிந்தாமணி, உச்சைச்சிரவம், வெள்ளை யானை, காம

தேனு, கற்பகத்தரு முதலியவற்றை மீள அடைந்தான். காஞ்சியிற் பூசித்து கவுதமமுநிவர் சாபத்தால் பெற்ற ஆயிரம் யோனியும் ஆயிரம் கண்களாகும் படிப் பெற்றான். கேதாரத்திற் பூசித்து முநிவர்களால் தான் அடைந்துழன்ற வேற்றுருவம் நீங்கப் பெற்றான். காஞ்சியிற் பூசித்து சயந்தனை மகனாகப் பெற்றான். திருவாரூரிற் பூசித்து மேக வாகனமும் உச்சைச் சிரவமும் பெற்றான். புண்டரீக புரத்தில் (சிதம்பரத்தில்) பூசித்து கணாதிபத்தியம் அடைந்து கயிலை மேவினன் திருவண்ணாமலையிற் பூசித்து அரம்பையரையும் சசியையும் அடைந்தான்.

### சூரியன் பூசித்தது

சூரியன் பல தலங்களில் இறைவனைப் பூசித்துப் பேரொளியைப் பெற்றான்; ஒரு சூரியன் தக்கன் யாகத்தில் வீரபத்திரரால் தான் இழந்த கண்களை ஈசனை வழிபட்டுப் பெற்றான்; ஒரு சூரியன் அந்த யாகத்தில் தான் இழந்த பற்களை ஈசனைப் பூசித்து முன்போலப் பெற்றான். இங்ஙனம் பல சூரியர்களும் இறைவனை வழிபட்டுப் பாவங்கள் நீங்கப்பெற்று நல்லுருவம் பெற்றார்கள்.

### சந்திரன் முதலானோர் பூசித்தது

சந்திரன் இறைவனை வழிபட்டுத் தக்கனிட்ட சாபமும், தக்கன் யாகத்தில் வீரபத்திரரால் தேய்க்கப்பட்ட உடல் மெலிவும் நீங்கப்பெற்றான். மகப்பேறும் பெற்றான். அசுவினி தேவர்கள் இறைவனைப் பூசித்து நோயகற்றும் நால்வகை மருந்துகளையும் பெற்றார்கள். எண்திசைக் கடவுளரும், அட்ட வசுக்களும், பதினொரு ருத்திரர்களும், எழுமுநிவர்களும் அண்ணலை வழிபட்டுப் பாவங்களும் குறைகளும் நீங்கி வேண்டிய வரங்களைப் பெற்றுப் பலவகைப் போகங்களையும் துய்த்தனர்.

---

# அத்தியாயம் 69.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### இந்திரன் முதலானோர் பூசித்தது.

எழுசீர் விருத்தம்

### இந்திரன் பூசித்தது

2005, குன்றிருஞ் சிறகர் ஈர்த்து வென்றிபுனை
 குலிசன் வேண்டுபொருள் கருதியே
மன்றில் நின்றுமுன் நடித்த கண்ணுதல்
 மலர்ப்ப தங்கருதி யிந்தியம்

வென்ற ருச்சனை தெரிந்தி மைத்தவையில்
வேண்டி யோர்சிறிது சொல்லுகேன்
கொன்றை யஞ்சடில எந்தை தாள்மலர்
குறித்த அந்தணிர்கள் ! கேண்மினே. (1)

**(காளத்தியிற் பூசித்தது)**

2006. குயந்தி ரண்ட எழில் இந்தி ராணிபதி
கோர வெந்திறல் வலன்பட
நயந்து வந்துகா ளத்தி யீசர் பதம்
நாடி யர்ச்சனைசெய் தேவரம்
வியந்து பெற்றிகல் வலாசு ரன்முடி
விழுத்த டிந்துகா ளத்தியிற்
பயந்து குற்றமற அண்ணல் பூசைசெய்து
பண்ண வர்க்கதிபன் ஆயினன். (2)

**(விருத்தாசலத்திற் பூசித்தது.)**

2007. வச்சி ரக்குரிசில் ஈற தற்ற துரு
வாச சாபமுன் மரீஇமணி
உச்சையிச் சிரவம் வெள்ளை யானைபசு
உம்பர் தாருவிவை நாசமாய்
அச்சம் உற்றுததி மூழ்கி நல்குர
வடைந்த பின்னர்முது குன்றர்தாள்
இச்சை யிற்பரவி முன்னி றந்தவைகள்
எய்தி விண்ணுல கிருந்தனன். (3)

**(காஞ்சியிற் பூசித்தது.)**

2008. இந்திரன் கவுத மன்சொல் சாபமுனம்
எய்தி ஆயிர மியோனிமெய்
நிந்தை பெற்றிட அடைந்து வெள்கியருள்
நீடு கச்சிநகர் மீதினில்
அந்தி வண்ணனிறை விச்சு வேச்சுரனை
ஆத ரித்துவிழி ஆயிரம்
சிந்தை யுண்மகிழ வேய டைந்துசசி
தேவி யோடினி திருந்தனன். (4)

(கேதாரத்திற் பூசித்தது)

2009. பின்னும் ஓர்பருவம் இந்தி ரன்கொடிய
பெற்றி யாற்சிறிது முனிவர்மேல்
தன்னி லேப்பதம் உறச்சி னந்தவர்
சபித்த தீற்றிவுரு வேறெடுத்(து)
இன்ன லோடுழல்க என்ன அப்படி மெய்
இந்தி ரன்கொடஎ வற்றநாள்
மன்னி ஆதிகே தார நாதனை
வழுத்தி முன்னுருவில் வாழ்ந்தனன். (5)

(காஞ்சியிற் பூசித்தது)

2010. இந்தி ராணிபதி பின்னர் காஞ்சிநகர்
எய்தி நீதிபொறை வாய்மைசேர்
மைந்தன் வேண்டியம லன்ப தாம்புயம்
வழுத்தி அண்ணல்முனம் வந்துசீர்
விந்தை மேவிய சயந்த னைத்தவம்
விரும்பி யேயருள வாசவன்
சிந்தை ஆதரவி னோடு பெற்றமரர்
தேவெ னப்பொனுல கெய்தினன். (6)

(திருவாரூரிற் பூசித்தது)

2011. வாச வன்சனன முத்தி *நல்கியருள்
வண்மை மேவுகம லாலயத்(து)
ஈசர் பாதம்வழி படம கிழ்ந்தமலன்
ஈந்த நன்கதிகள் †ஐந்துமே
வீசு வேகமுள வுச்ச யிச்சிரவ
மேக வாகனமு நல்கவே
நேச மோடவைகள் பெற்று விண்ணுலகில்
நித்த னுகிமு னிருந்தனன். (7)

2011. *'தில்லையைக் காணக், காசியில் இறக்க,......ஆரூர் தனிற் பிறக்க... அருணையை நினைக்க எய்தலாம் முத்தி. அருணு—புரா. † கதிகள் 5- மெல்லிய நடை, விரைவு நடை, இருகால் தூக்கி யாடிவரும் நடை, சுற்றியோடல், முழு ஓட்டம்,

**(தில்லையிற் பூசித்தது)**

2012 புரந்த ரன்சிகர கோபு ரங்கள்திகழ்
புண்ட ரீகபுரம் மேவியே
வரந்த ருங்கருணை யீசர் தாளிணை
மலர்கள் தூய்வழி படப்பெமான்
நிரந்த ரம்புரி கணுதி பத்தியம்
நினைந்த ளித்ததனை மேவியே
அரந்தை அற்றிட இருந்து விண்ணினிறை
அண்ணல் வெள்ளிமலை நண்ணினுன். (8)

**(அண்ணுமலையிற் பூசித்தது)**

2013. மருத்து வானருண வேற்பில் ஈசனை
வணங்கி ஆதரவின் வழிபட
நிருத்த நாயகன் அரம்பை ஆதிய
நெருங்கு தேவமட வாருடன்
இருத்து கோமளப் பயோத ரச்சசியை
ஈந்தி டக்கடிது பெற்றனன்
பொருத்த மானசிவ பூசை யிப்படி
புரிந்த னந்தபலம் மேவினுன், (9)

**சூரியன் பூசித்தது**

2014. அருக்கன் முக்கணனை ஆல யங்களில்
அருச்ச ஞதிகள் புரிந்துதன்
உருக்கொள் வக்கிர மகிழ்ச்சி சாகரை
யுடைத்து கின்றவைகள் ஒருவியே
பொருக்கெ னப்பரம மான பேரொளி
பொருந்து திப்பிய உருக்கொணர்ந்(து)
இருக்கு வேதமுத லியவ மூத்தமணி
இலகு மானம திருந்தனன். (10)

---

2012. புண்டரீக புரம்—தில்லை (சிதம்பரம்); புண்டரீகம்—புலி (வியாக்ர பாதர்); "ஆனந்த தாண்டவம் நின்ருடல் இம் மண்டலத்துள் எத்தலத்தும் அதிக மிகஅதிகமென வயங்கா நிற்கும் புண்டரீகபுரம்"—சிதம்பர புராணம். பெமான்—பெம்மான்.

2013. மருத்துவான்– இந்திரன்.

2014. இரண்டாவது அடி விளங்கவில்லை.

2015, தக்கன் வேள்விவரு பானு மான் விழிகள்
தன்னை அங்கைகொ டறைந்தபின்
திக்கெலாம் வெருள வீர பத்திரர்
செருப்பு ரிந்தவை பிடுங்கவே
இக்கு வேளைமுன் எரித்த அண்ணலடி
யிணைய ருச்சனைசெய் திருவிழி
அக்கமா யிரவி பெற்று யிர்த்தொகை
அருட்க ணுற்கடிது நோக்கினன். (11)

2016, அந்த வேள்விசவி தா அடைந்தவி
அருந்தல் கண்டவை பொருமலே
விந்தை கூர்விசய வீர பத்திரன்
விறற்கை யாற்கவுள் புடைக்கமுன்
தந்த மேயுதிர ஈசர் பாதமலர்
தனில ருச்சனை புரிந்துபல்
முந்தை போற்கடிது பெற்று கந்துநறை
முளரி நாயகன் இருந்தனன். (12)

2017. அனந்த ஆதபர்கள் பூசை யிப்படி
அறிந்து செய்தவ ரவர்க்கெலாம்
முனந்த வாதுதொடர் பாத கப்புணரி
முற்று நீங்கியுள மதனிலே
நினைந்த காமியம் அனைத்தும் நல்லுருவம்
நிமல மெய்ப்பபடிவ முஞ்சுடர்
தினந்த மேனிவிடு கற்றை யுங்கடிது
சேர்ந்து மானமிசை வாழ்ந்தனர். (13)

**சந்திரன் பூசித்தது.**

2018. சந்தி ரக்கடவுள் தக்கன் முன்னரிடு
சாப மும்பெரிய வேள்வியின்
அந்த ரத்தினிடை வீர பத்திரன்
அடித்த லங்கொடுடல் தேய்த்திடச்

---

2015. கண்ணிழந்த சூரியன் "பகன்" : "உண்ணைப்புகுந்த பகனொளித் தோடாமே கண்ணைப் பறித்தவா றுந்தீபற"—(திருவாசகம்); "பகன் தாமரைக் கண்கெடக் கடந்தோன்"—திருக்கோவையார்.

2016. சவிதா—சூரியன். தந்தம்—பல். சூரியன் பல்லை உதிர்த்தது—"சூரிய னார் தொண்டை வாயினிற் பற்களை, வாரி நெரித்தவா றுந்தீபற"—திருவாசகம்.

சுந்த ரப்படிவம் வேறு வேறவை
துணிந்த துஞ்சிவன் மலர்ப்பதம்
மந்தி ரத்துணர்கள் தூவி நீத்தபினர்
மகவ டைந்துளம் மகிழ்ந்தனன். (14)

**திசைக் கடவுளர் பூசித்தது.**

2019. எண்டி சைக்கடவு ளோர்க ளியாவரும்
இறைஞ்சி எந்தைசிவ பூசையால்
அண்ட ருக்கதிபர் ஆன மைந்தரும்
அளப்பில் செல்வமும் அவ்வாவிலுட்
கொண்ட சித்தியொடு காம முஞ்சுடர்
கொழிக்கு மேனியும் அடைந்துசூழ்
வண்ட ரற்றிதழி அண்ணல் பேரருளின்
மாசு தீர்ந்தினிது வாழ்ந்தனர். (15)

**அட்ட வசுக்கள் பூசித்தது.**

2020. கரந்தை சந்திரன் விரிந்த நீரிதழி
கமழ்ச டாடவி மகேசர்தாள்
அரந்தை பற்றிட வருந்தி யட்டவசு
அறிவ றிந்துபழி பட்டுமுன்
பொருந்தி நிந்தையொ டிருந்த பாவவினை
போக்கி யெந்தைபதம் நோக்கியே
நிரந்த ரம்புடை திருந்த ருஞ்செல்வம்
நிலாவ விண்ணிடை யுலாவினர். (16)

**அசுவினி தேவர்கள் பூசித்தது**

2021. தரங்கம் எங்கணும் மிரங்கு பைங்கடல்
தருங்க டோரவிட முண்டுமுப்
புரங்க டந்தருள் பரன்ப தங்களொரு
பூசை செய்துதொடர் பாசமோ(டு)

---

2021. மருந்து நால்வகை—சல்லியகரணி—ஆயுதங்களால் உண்டான (இரணம் மாற்றும் மருந்து); சந்தானகரணி—அற்ற உறுப்புக்களைப் பொருத்தும் மருந்து; சமனிய கரணி—விரணத்தையும் தழும்பையும் போக்கும் மருந்து. மிருத சஞ்சீவினி—இறந்தஉயிரை எழுப்பும் மருந்து.

உரங்கொள் வெம்பவ மடங்க லுங்கடிதின்
ஒருவி **அச்சுவினிகள்** விரைவினுல்
வரங்கள் சுந்தரமெய் நோய கற்றுநன்
மருந்து நால்வகையும் மேவினுர். (17)

**பதினொரு ருத்திரர் பூசித்தது**

2022. **மு**க்கண் மேவிய பவன்சி வன்அரன்
முதற்கொள் சங்கரன் மனீலமார்
செக்கர் மேனியன் ஈசானன் பெற்றிபல
சேர்ந்திடும் விசயன் வீமன்மெய்
மிக்க தேவதே வன்ப வோற்பவன்
விளங்குகைக் கபாலி வீச்சுரன்
தக்க பன்னொரு ருத்தி ரர்சிவார்ச்
சனைசெய்தே கருதல் பெற்றனர். (18)

**எழுமுனிவர் பூசித்தது**

2023. **ஆ**ற்ற ருந்தவ வசிட்டர் காசிபரோ
டங்கி ராக்கவு சிகர்மறை
சாற்று கின்றகௌ தமர்வி வேகசம்
தக்கி னர்பரத்து வாசரோ(டு)
ஏற்று கின்றவெழு முனிவ ரீசனடி
யிணைய ருச்சனைசெய் தேத்தியே
தோற்று வெம்பவம் அகற்றி வேண்டுவன
துய்த்து முத்தரென மேவினுர். (19)

---

2022. பதினொரு ருத்திரர்—ஏகாதச ருத்திரர்—மாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்(திவா.) சிவன் என்னுமிடத்து—அரன்(பிங்). மன் + நீலம்.

# அத்தியாயம்—70

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### துருவன் முதவனோர் பூசித்தது

சூதர் சொல்கிறார்:—

உத்தான பாதன் மகன் துருவன், சூரியன் முதலான நவக்கிரகங்கள், அசுவினி முதலான இருபத்தேழு நட்சத்திரங்கள், யேடம் முதலான பன்னிரண்டு இராசிகள், விட்கம்பம் முதலான யோகங்கள், கரணங்கள், வித்தியாதரர், கந்தருவர், கருடர், இராக்கசர், இயக்கர், சித்தர், குய்யகர், கிம்புருடர், கின்னரர், பிரகலாதன் முதலான அசுரர், பிசாசர், மனிதர், பசுக்கள், மயில் முதலிய பறவைகள், மரம் முதலான தாவரங்கள், மற்றுமுள்ள ஜீவராசிகள், கங்கை முதலான நதிகள், வசிட்டர்முதலான பிரமரிஷிகள், நாரதர் முதலான தேவரிஷிகள், மற்றுமுள்ளார் யாவரும் சிவபெருமானை மலர்தூவிப் பணிந்து, நினைத்தவை கைகூடி வாழ்ந்து, வீடு பெற்றனர்.

### திரிபுரத்தினர் பூசித்தது

முன்னொரு காலத்தில் தாரகன் மைந்தர்களாம் வித்தியுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் மூவரும், இவரைச் சார்ந்த அறுபத்தாறு கோடி அசுரரும் தேவ மடவாரை வருத்தி, எப்போதும் அழிவின்றி நித்தியராக இருக்க விரும்பிச், சீரிய தவம் இயற்றினர். பிரமன் வெளிப்பட்டு வேண்டுவது யாது என்றான்; அசுரர்கள் வணங்கி, 'நித்தியத்துவம் வேண்டும்' என்று வேண்டினர். பிரமன் அவர்களை நோக்கி, 'எனக்கு நித்தியத்துவம் இருந்தாலன்றோ உங்களுக்குக் கொடுக்க என்னால் இயலும்? சிவபிரான் தவிர, திருமால் முதலான எவருக்குமே நித்தியத்துவம் இல்லையே; ஆகையால், வேறு வரம் கேளுங்கள்' என்றான். அதற்கு அவர்கள் ஒன்றுகூடிச் சிந்தித்து, 'ஓராயிரம் வருடத்தில் ஒருகணப்பொழுது முப்புரங்களும் கூடவும், அக்கணப்பொழுதில் சிவபிரானே எங்களுக்கு இறுதி விளைவிப்பராகவும் வேண்டும்; அளவற்ற செல்வம் வேண்டும்; முப்புரமும் அசுரர்களுக்கெல்லாம் பாடிவீடாக அமைதல் வேண்டும்' என்று வேண்டினர். பிரமன் அவ்வாறே வரம் கொடுத்து மறைந்தான். தாரகன் மைந்தர்கள் பெற்ற வரத்தைக் கேட்ட பிற அசுரர்கள் யாவரும் ஒன்றுகூடி அம்மூவரை அடைந்து வணங்கிக் கூடிக் கொண்டனர். மயன் என்னும் சிற்பி பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆய மனைகள், நீண்ட கொடிஞ்சியுடைய தேர், கடைகள், பலவகைய வீதிகள், மதில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், சோலைகள், வாவிகள் முதலியன அமைத்துக் கொடுத்தான். அவன் படைப்பின் திறம் நோக்கி வியந்த மூவரும் 'ஐயனே! எங்களுக்கு அறிவுரை கூறுக' எனக் கேட்டுக் கொண்டார்கள். மயன் 'அசுரர்களே! நீங்கள் பிரமனிடத்தில் பெற்ற வரம் எல்லா அசுரர்களுக்கும் மகிழ்ச்சியைத் தந்தது;

புரங்கள் மூன்றும் ஆயிரம் வருஷத்துக்கு ஒருமுறை கூடி ஒரு க்ஷணநேரம் ஒன்றியிருந்து பிரிவதன்முன் சிவபிரானது அம்பால் நாசம் வருக' என வரம் பெற்றோம் என்கின்றீர். சிவனை வழிபடுவோரை நோய், கிரகம், பகை அணுகா. சிவபூஜை செய்பவரை வதைக்க முயலுவோர் மடிந்துபோவார்; ஆகையால் நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் லிங்கமூர்த்தியை அமைத்து வழிபடுவீர்களாக; சகல செல்வமும் பெருகும்'' என்றான். அசுரரும் அம்மொழிக்கு மகிழ்ந்து மயனிடம் லிங்கமூர்த்திகளைப் பெற்று, அவன் சொன்னபடியே வழிபட்டு வந்தார். தலைவராம் மூவரும் மயன் கொடுத்த லிங்கத்தை விபூதி, ருத்ராக்ஷ மணிந்து பத்தியுடன் மனத்தை ஒருவழிப் படுத்திப் பூசித்து வந்தனர். சகல போகங்களும் அவர்களுக்குக் கூடின.

முப்புரத்துடன் மூவரும் எல்லாவுலகங்களிலும் உலாவித் திரிந்தனர். அதனால் கீழே அகப்பட்ட உயிர்கள் அழிந்தன. வானவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அவர் 'அசுரர்கள் சிவபூஜை செய்கின்றார்கள்; அவர்களுடைய மனைவியர்கள் தூய கற்பினர். ஆதலால், அவர்களை வதைப்பது முடியாது' என்றனர். அதற்குத் தேவர்கள் 'அசுரர்கள் சிவபூஜை உள்ளன்பு உடையதல்ல; வேள்விசெய்து பூதங்களை வரவழைத்து அனுப்புவோம்' என்றார்கள்; அப்படியே வேள்வி ஒன்று செய்தனர்; பூதங்கள் எழுந்தன. அசுரர்களை அழிக்க அவைகளை ஏவினர். விபூதி ருத்ராக்ஷத்துடன் சிவபூஜை செய்யும் அசுரர்களைக் கண்டு பூதங்கள் அஞ்சி நடுங்கின; பின்னர் அப் பூதங்கள் குரங்குகளின் வடிவங்கொண்டு அசுரர்களின் சோலைகளிற் புகுந்து கனிகளைப் பறித்துத் தின்று சோலைகளைப் பாழ்படுத்தின. அதைக்கண்ட அசுரர் அப் பூதங்களை மாய்த்து இது தேவர்கள் சூழ்ச்சி என அறிந்து, தேவருலகுக்குச் சென்று தேவர்களைப் பிணித்து அடித்தனர். அவர்கள் அஞ்சி ஓடி மேருமலையில் ஒளித்துக் கொண்டார்கள்.

பின்பு, திருமால் அமரர்களுடன் சிவபிரானிடம் முறையிடச் சென்றனர்; வாயில் காக்கும் சிவகணங்கள் இது சமயம் அல்ல என்று தேவர்களை வெருட்டிவிடத் தேவர் யாவரும் 'சங்கரசம்போ! மகேசா! பரமேசா! சந்த்ரசேகரா! விபோ! அரகர! பூதேச! உமைபங்கா!'' என உரக்க ஓலமிட்டனர். காவற் பூதங்கள் கோபித்து அரி அயன் ஆதிய தேவர்களை முடிசிதற அடிக்கத் தேவர்கள் உளம் பதைத்து 'நாம் கூச்சலிட்டதால் அடிபட்டோம்! இனி என்செய்வது' என்று யோசித்துத் திருமாலை நோக்கி 'அசுரர்கள் சிவபூஜையைக் கைவிடச் செய்தாலன்றி அவர்களை வெல்லமுடியாது' என்றனர். திருமாலும் உடன்பட்டு அசுரர்கள் சிவபூஜையைக் கைவிடவும் அவர்கள் மனைவியர்களின் கற்பு நிலை குலையவும் செய்யவேண்டித் தாம் புத்த ஆசாரியராகவும் நாரதர் தமது மாணக்கராகவும் உருக்கொண்டு திரிபுரத்தை அடைந்தார். தமது மாயையாலும், கனிமொழியாலும், விசித்திர வடிவாலும் அசுரர்களை மயக்கினர். பலவித அற்புதங்களையும் ஆபரணங்களையும் காட்டி அசுரர்தம் மனைவியரின் கற்பைக் குறைத்தனர்.

---

# அத்தியாயம் 70.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### துருவன் முதலியோர் பூசித்தது

### எண்சீர் விருத்தம்.

2024. உன்னத உத் தானபா தன் குமரன் துருவன்
ஓங்குசூ ரியனுதி ஒன்பானுங் கிரகம்
மின்னிரலை யாதியிரு பத்தேழாம் உடுக்கள்
மேடாதி முந்நான் கிராசிவிட்கம் பாதி
தன்னிலியோ கங்கள்மூ வொன்பா னேழ்கரண
சகுனுதி நாற்கரணம் வித்தியா தரர்கள்
இன்னிசைய கந்தருவர் கருடரிராக் கதர்கள்
இயக்கர் சித்தர் குய்யகர்கிம் புருடர்கள்கின்
[னரரே. (1)

2025. பிரகலா தன்முதலா கியஅசுரர் குழீஇக்கட்
பிசாசர்மா னவர்பசுக்கள் பிணிமுகமா தியபுள்
மரமுதலாந் தாவரங்கள் சங்கமங்கள் வேறு
வருசீவ செந்துக்கள் மலைகள் குரை கடல்கள்
சுரநதியா தியநதிகள் வசிட்டாதி பிரமந்
தோற்றிருடி யர்கள்நார தாதிசுர இருடி
வரர்சகல மானபிர மாண்டங்கள் சகலா
வரணங்க ளோடுபரு மலர்தூவிப் பணிந்தே. (2)

2026. தேவதே வேசனுமாய் நித்தியனு மாகித்
திகழிலிங்க மூர்த்தியாஞ் சிவனையெலா உயிரும்
பாவனையால் அருச்சித்துத் தங்கள்தங்கள் துரிதம்
பற்றறவே தணந்துதத்தம் பதங்களிலா தரவாய்

---

2024. இரலை—அசுவினி நக்ஷத்திரம். குய்யகர்—குபேரன் நிதியைக் காவல் புரியும் தேவகணத்தார்.

2025. குழிக்கண் பிசாசர்; பிணிமுகம்—மயில்.

2026. துரிதம்—பாவம்,

மேவியுளத் தினில்விழைந்த காமியங்கள் அருந்தி
வீடுபின்னர் அடைந்தனர்சீர் விரும்பியவ ரவர்மா
தேவனையா ராதித்து விரும்பியவை அனைத்துஞ்
சேர்ந்தன்ரெம் மாலவையுஞ் செப்பிடப்பட்
[டனவே. (3)

**திரிபுரம் எரித்த வரலாறு ; திரிபுரத்தவர் பூசித்தது**

2027. **தொ**ழுதகுமா முனிவீர்காள் ! முன்னாட்சங் கரன்தாள்
துணர்பலதூய் அருச்சித்துத் துரிதமெலாம்
[அகற்றிப்
பழுதறுகா மியமனைத்தும் பெற்றோர்கள் அவரைப்
பகர்கின்றும் ஒருமையுடன் எல்லீரும் கேண்மின்
முழுதும்அயத் தாலும்வெள்ளி யாலும்பொன் னாலும்
முப்புரம்பூ மியினும்விண் ணினுஞ்சுவர்க்கத்
[தினுமெப்
பொழுதுமிருக் கின்றதில்தா ரகன்சேய்வித் **மாலி**
புகழ்தார **காக்கன்**விறற் **கமலாக்கன்** மகிழ்ந்தே, ()

2028. **வீ**ரியவா ளுகவரும் இவரொருமூ வரும்போர்
வெற்றியறு பத்தாறு கோடியசு ரர்கள்செய்
காரியங்கள் புரியவிருந் தொழிலில்வினை யாட்டாற்
கடவுளர்யா ரையும்பொருதக் கணஞ்செயித்தெவ்
[வுலகோ(டு)
ஆரியராம் அமரர்மட வாரையிடர்க் கடலுள்
அமிழ்த்துவித்து நித்தியராய் அளப்பருகா
[லங்கள்
சீரியராய் இருக்கநினைந் தயன்மலர்த்தாள் கருதிச்
செயுநியமத் தொடுகோரத் தவமுறச்செய்
[தனரே. (5)

2029. **ஐ**ங்கரனை மூலாதா ரத்தில்நினைந் தெழுந்த
அனிலமிடை பிங்கலைசெல் லாதடக்கிச் சுழுனை
தங்கியவுட் டுளையுள்விடுத் தெரிமூட்டிக் கபாலத்
தனிவெளியில் விடவுலகிற் சராசரங்கள்
[தொடர்ந்தே

---

2027. அயம்—இரும்பு. தாரகனது சேய் (மக்கள்).

எங்குமெரித் தோங்கிமூ வுலகனைத்தும் பற்றி
எரித்திடஇந் திரன்முதலாம் இமயவர்கள் போற்ற
துங்கநெடுந் தூவியன்ன வாகனத்தோன் கடிது
தோற்றஅவன் தாளின்மலர் தூய்வழிபட்
[டனரே. (6)

2030. வரிச்சுரும்பின் முறுக்கவிழ்பொன் தகட்டகட்டு முளரி
மலர்ப்பொகுட்டில் இருந்துலகம் மதித்துமுதற்
[படைத்து
விரிச்சிறைச்சூட் டுருவெண்தூ விக்குருகு நடத்தி
விண்ணவருக் கதிபதியாம் வேதனே! அடியோம்
மரிச்சிறவா தென்றுநித்தி யத்துவமா யிருக்க
வரங்கடிது தந்தருள்நின் மலர்ப்பதமே
[சரணென்(று)
உரிச்சொலினல் துதித்துரைத்தோர் தமைப்பார்த்தே
[வேதன்
ஓங்கும்அசு ரோத்தமரே! உரைப்பேன்கேட்
[டிடுமே. (7)

2031. நடுக்கருதா திருக்கும்அசு ரேந்திரரே! கேண்மின்
நமக்குநித்தி யத்துவமுண் டாகிலன்றே தாந்தாம்
கொடுப்பதற்குச் சத்தியுண்டு கொடுக்கின்றேன் தானும்
குவலயத்தில் லாதபொருள் கொடுக்கவுமாட்
[டானே
எடுக்குமுரு நாமுமனித் தியரேயன் னியனும்
எறிதிகிரிப் படையோனும் அநித்தியனே
[செம்பொற்
கடுக்கையணி அமலனொரு வனையன்றி யெல்லாக்
கடவுளரும் அநித்தியரே கண்டதுரைத் தனமே.()

2032. ஒகையின்மா மறைகளெல்லாம் கடற்புவியில் மிருத்தி
யுஞ்சயராம் ஒருவரையே நித்தியரென் றுரைக்கும்
ஆகையினல் நம்மிடத்தில் நீவிர்மகிழ்ந் திப்போ
தன்னியமா கியவரத்தைக் கேண்மின்கள் என்றே

---

2030. மரிச்சு—மரித்து—இறந்து. உரிச்சொல்—உரியசொற்கள்.

2032. மிருத்தியுஞ்சயர்—இறப்பை வென்றவர்—இறப்பிலார்—சிவன்,

ஈகைவடி வானதிசை முகனுரைத்த மொழிகேட்
டிசைந்தொருவர்க் கொருவர்செய்கை
[யிதுவெனச்சம் மதித்து
வாகையருள் மலர்க்கடவுள் பதம்போற்றி யிறைஞ்சி
மரியர்நித் தியத்துவநோர் வரங்கேட்கின்
[றனரால். (9)

2033. அருமறையோய்! துணைவர்களாம் அடியோங்கள்
[புரங்கள்
அவனிவிசும் பமரருல கடைவிலிருந் தவர்கள்
வருடமொரா யிரத்துக்கோர் கணப்பொழுது கூடி
வதிந்துவிரிந் திடவேண்டும் மருவியவக் கணத்திற்
கருதருவே தங்கள்தொறும் இரண்டாம்பே ரில்லாக்
கண்ணுதலோர் சரத்தாற்சங் காரமதுண் டாகில்
ஒருமையுடன் எங்கட்கு நாசம்வர வேண்டும்
உள்ளத்தில் எழுந்ததிது உற்றவரம் எமக்கே, (10)

2034. அடியோங்கட் கதிகமாஞ் செல்வமுமொப் பறவே
அளப்பருவீ ரியமுமுள தவரவர்கள் வேண்டும்
படியேநின் றெடுக்கும்வே டமும்புரங்கள் விரிவாய்ப்
பாழிவிற லசுரருக்கெல் லாம்படைவீ டாகக்
கடியேறு மணிமாடம் எண்ணிலவுண் டாகக்
கடவவென அப்படியே கடிதுகொடுத் தன்னக்
கொடியேறு கொடுஞ்சிநவ மணியொளிமா னத்திற்
கோகனதன் பிரமலோ கத்தையடைந் தனனே, ()

2035. பொன்னுலகத் தமரருக்குப் பயந்தங்கங் கொளித்துப்
போயிருந்த அசுரரெலாம் பொருக்கெனமூ வருமாய்
இன்னவரம் பெற்றனரென் னும்வரலா றனைத்தும்
இறும்பூதிற் சொல்லக்கேட் டெறும்ழ்வலிபெற்
[றிசைகள்
பன்னுகனை கழல்கட்டி அரும்படைகள் அனைத்தும்
பரிந்துவரிந் தவரவர்கள் பயந்தமுகு கனிந்த
கன்னியரும் நவமணிப்பூ ணும்பொனுந்திப் பியமாம்
கலைகளுமற் றப்பொருளும் காணிக்கை
[கொண்டே. (12)

---

2034. கோகனதன்—பிரமன்.

2036. **தா**ரகன்மைந் தரைக்கண்டு சகலமுமுன் சொரிந்து
தாழ்ந்துதிறை யெனக்கொடுத்துத் தாங்கள்பட்ட
[துயரம்
சேரவுரைத் திடரனைத்தும் ஒருவியரும் போகச்
செல்வமடைந் தசுரரளப் பருஞ்சுகம்பெற்
[றனர்பின்
வீரமத லையர்மாயை வல்லமயன் தன்னை
விரைந்துதரு தக்கணத்தின் மேவியிவ ருடனே
வாரமுறச் செயும்வகையெல் லாங்கேட்டு மயன்தான்
மகிழ்ந்திரும்பு வெள்ளிபொன்னுல் மனையவர்க்குச்
[சமைத்தான். (13)

2037. **அ**ண்டமுக டளக்குநெடுங் கொடுஞ்சிமணித் தேரோ
டாவணம்நா னுவீதி ஆடகப்பொற் புரிசை
மண்டபங்கோ புரஞ்சிகரம் சூளிகைகொத் தளங்கள்
மகரதோ ரணங்கள்நவ மணியிழைத்த சாலை
புண்டரிக மடந்தைநட மிடுமாட மேடை
புயல்வளரும் அரமியமெப் புறத்துமலர் வாவி
தண்டலைகள் அனைத்தும்விசித் திரமாக எடுக்கத்
தனையர்கள்முப் புரமசுரர் தம்முடன்பார்த்
[தனரே. (14)

2038. **அ**திசயப்பட் டுளமகிழ்ந்து மயன்முகம்பார்த்
[துரைப்பார்
அறிவினுந்தக் கோனுமாய் அண்டமெலாம்
[சமைக்கும்
மதியுடைய புத்திவித்தா ரனும்நீயே எமக்கு
மாறுமல் இதமகிதம் வருவதெலாந் தேர்ந்து
விதியிலுரைத் தருள்தியென மயனுளத்திற் குறித்து
விதியுளமால் முதலாமவ் விறல்புடைகொள் ளசுரர்
புதியமலர் முகமனையின் ஒக்கின்றல் நீவிர்
புண்டரிக னிடத்தில்வரம் பொருக்கெனப்பெற்
[றதுவே. (15)

2039, புரங்களா யிரம்வருடம் தமக்கொருகாற் கூடிப்
பொருக்கெனவோர் கணம்வதிந்து போமுனங்கண்
[ணுதலோன்
சரங்கடிதே வப்படிலப் போதெமக்கு நாசம்
தப்பாதுண் டாகவென்று சதுமுகன்பால் வியந்து
வரங்கள்பெற்றேம் என்றுபெட்பின் மகிழ்ந்தெமக்கு
[நீவிர்
வாய்மையிஞ தரம்பெருகி மல்கவுரைத் தனிரால்
உரங்கொடுமுக் காலம்உள்கிப் பாணித்துத் தெளிந்தே
உமக்குரைக்கேன் என்மொழியும் உவப்பொடுகேட்
[டிடுமே. (16)

2040, மறைகளனைத் துஞ்சிவனே எல்லாத்தே வர்களும்
வழிபடவேண் டுவவரங்கள் வழங்குபவன் என்றும்
குறையிரந்து பரவுபத்தர் குற்றமெலாம் போக்குங்
குழகனென்றுஞ் சகந்தனையாட் கொண்டபதி
[யென்றும்
உறைகழித்த அயிற்படைகள் பரித்தருள்வோன்
[என்றும்
ஒழிவறவிப் படிவழுத்தி உரைக்கின்ற வதனுல்
கறைமிடற்றண் ணலையருச்சிப் போர்களைநோய் கிரகம்
கருதலர்கள் குறுகுவது கனவிலுந்தா னிலையே. (17)

2041, நீவிரும்வல் லெறுழசுரர் கிளைகளுடன் கூடி
நின்மலமா கியபீட இலிங்கமூர்த் தத்தில்
ஒவிலருட் புணரிகடை கொழிக்குமுக்கட் டேவாய்
உலகமனைத் தினுக்கும்விழை வுறுசுகம்நல்
[குவனுய்த்
தாவில்விறல் மதுகையளிப் பவனுயெவ் வுயிர்க்குந்
தண்டாத பத்திமுத்தி தருபவனுய் மரீஇய
தேவிருபொற் பதம்பூசை செயுமவரை வதைக்கச்
சிந்திப்போ ரவர்களொல்லை சீவன்மடி குவரே. ()

2039. முக்காலம்—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். பாணித்து—நிதானித்து.

2041. மரீஇய தே—மருவிய தேவன் (சிவன்)

2042. அனுதினமும் எல்லீரும் இலிங்கமூர்த் தியினில்
அனுதியாய்ச் சகத்தினுக்கோர் அண்ணலெனும் [பரனைப்
புனிதநறு மலர்கொண்டு பத்தியினுல் இசைத்துப்
பூசைசெயில் அப்பூசைப் புண்ணியத்தால் [என்றும்
நனி மகிழ்ச்சி மல்கியசெல் வமும் விழைந்த நாளும்
நாண்மலர்க்கை வந்ததென நாடியறி மின்கள்
எனவிவனை இவர்நோக்கி யிகபரங்கள் நல்கும்
இலிங்கமூர்த் தியைக் கடிதிங் கெமக்கருளென் [றறைந்தார். (19)

2403. அக்கணத்தின் மயன்சிறப்ப அருநூல்கள் அனைத்தும்
ஆராய்ந்து சூத்திரங்கள் அனைத்து வகை வகுத்துத்
தக்கவவ ரவர்க்கேற்ற இலிங்கம்வெகு விதமாய்ச்
சமைத்துநீ ரெல்லீருந் தத்தமனை களில்நீ(று)
அக்கமணி தரித்தீரைந் தாகியவிந் தியமும்
அந்தமுறு கரணமுஞ்செல் லதரொருவிச் [சினம்விட்(டு)
இக்குவேள் தனையெரித்த ஈசனையா ராதித்(து)
இறைஞ்சுமின்கள் எனவவன் சொற் [கிசைந்தொருமித் திருந்தே, (20)

2044. வித்தியுன்மா லியுந்தார காக்கனும்பின் னவனும்
மேவுகம லாக்கனுமாய் விரும்புமயன் கொடுக்கப்
பத்தியினுல் அவரவர்கள் வேண்டுமிலிங் கங்கள்
பரிந்துவிரைந் துடன்வாங்கிப் பன்மறைகள் ஓதி
நித்தியநீ றக்கமணிந் திந்தியங்கள் சயித்து
நிறைதவத்தாற் பாவமொரீஇ நிமலனையோ ரைந்து
சுத்தியினுல் அருச்சித்தீ ரெட்டுபசா ரமுநோர்
துதித்ததிக செல்வமுடன் துகள்தீர இருந்தார். ()

---

2043. அதர்—வழி.

2044. ஐந்து சுத்தி—பஞ்சசுத்தி—பூசைக்கு இன்றியமையாத ஆத்ம சுத்தி, பூதசுத்தி, மந்திர சுத்தி, திரவியசுத்தி, லிங்க சுத்தி என்ற ஐவகைச் சுத்திக்கிரியை. "பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசைசெய்தால் விஞ்சிய ஞானம்விளங்கும் பராபரமே" தாயுமா—பராபர—154. ஈரெட்டு உபசாரம்—செய்யுள் 1083 பார்க்க.

2045 அன்னவர்கள் தழைகுழைக்கும் தண்டலைகள் எல்லாம்
அளிமுரன்று தேறல்நுகர் அலர்விரிகற் பகங்கள்
கன்னல்வில்வே ளனையர்தொழு வங்கெழுபெற் றங்கள்
காமதே னுக்களவர் கவின்மனையங் கணத்தின்
மன்னுசிலை யனைத்துமவி ரொளிவிசிறு சிந்தா
மணிகள்வலம் புரியாதி வரந்தருபன் னிதிகள்
பன்னுசங்கீ தம்புகல்வோர் கின்னரர்கிம் புருடர்
பரதவிதம் நடிப்போர்கள் பரவுமரம் பையரே. (22)

2046. அனுதினம்பண் ணவர்மகிழ இழைத்தருளும் விழவும்
அளப்பருமங் கலங்களுமே அபரிமித மாகப்
பொனுமணியுங் குயிற்றிரதங் கரடதடக் கவுட்செம்
புகர்முகக்கிம் புரிமருப்புப் புழைக்கை நெடுங்
[களிறு
மினுமொளிர்வச் சிரக்கலினக் கொய்யுளைக்கங் துகமும்
விரைந்துகைத்தெங் கணுங்கடவி விளையாடல்
[புரிந்து
பினுமலர்க்கா வாவிபொய்கை நதிதேங்கள் தொறும்
[போய்ப்
பெட்பின்வினோ தம்புரிந்து போற்றியுண்டாட்
[டயர்ந்தார். (23)

2047. மாயிரும்பைங் கடற்பெருக்கா றெடுத்தவெள்ளங்
[கடுக்கும்
மல்லலசு ரக்கிளைஞர் மருங்குழீஇக் குலவ
ஆயிரஞ்செங் கதிர்கள்திகை தொறுங்கெழுமு கற்றை
அவிரொளியோ ராழியங்தேர் ஆதபன்மண்
[டலமுஞ்
சேயிரவெங் கணும்பொதிந்து மல்குமிருட் பிழம்பு
சீத்தொளிர்தண் கதிர்திகழ்சந் திரனிறைமண்
[டலமும்
மீயுறுவில் லுமிழ்தார காகண மண் டலமும்
மேதினியும் அந்தரமும் விண்ணவர்சே ருலகும். ()

2045. தொழுவம்——பசுவின் கொட்டகை; பெற்றம்—எருது.

2046. தேங்கள்—தேசங்கள். தேம்—தேயம்,

2047. திகை—திசை.

2048. பரிமளப்பொற் றகட்டரவிந் தக்கடவுள் உலகும்
பைந்துளவப் படலேவனை பண்ணவன்வா ழுலகும்
பிரிவறமற் றிடங்களுந்தத் தம்புரங்க ளுடனே
பிஞ்ஞகன்றன் பேரருளாற் பெட்பினுடன் [திரிந்தார்
புரிகளலம் வருமதனுற் கீழிருந்த சனங்கள்
பொன்றினரவ் வேலேவிண்ணேர் புயல்வணன்பாற் [குறுகி
அரிகரிகோ விந்த! மது சூதன! முப் புரத்தோர்
அலம்வர ஆ ருயிரிறந்த அபரிமித மாமால். (25)

2049. என்றமரர் வருந்திமுறை யிடச்சிறிது நோக்கி
எறிதிகிரிப் படைசுமந்த இறைசொலும்புத் தேளிர்
வன்றிறல்சேர். அசுரர்சிவ பூசைபுரி கின்ருேர்
மற்றுமவர் மனைவியர்கள் மாருக்கற் புடையோர்
கொன்றைகமழ் செஞ்சடையோன் அடியர்களெஞ் [ஞான்றுங்
கோறல்செய அரிதென்று கூற, விண்ணேர் [உரைப்பார்
வென்றிவிறல் அசுரர்சிவ பத்தியிலா மையினல்
மிகுபூசை புரிகின்ருர் விமலனருள் இலரே. (26)

2050. வரங்கருணை யாலருள்கண் ணுதல்மலர்ப்பொற் பாதம்
வழிபாடு புரிந்திறைஞ்சி வழுத்தியடி யோமும்
இரங்குபரன் திருவருள்பெற் றருமகத்தில் உதித்த
இருபிறைவாள் எயிற்றசல அகட்டுபய குறுந்தாள்
உரங்கொள்பில வாய்ப்பூதப் படையொடுசென் றமரில்
உருத்தெழுந்தெங் கணுஞ்சூழ ஓடிவனைந் [திகல்முப்
புரங்களையும் அடுபடையால் வதைக்கின்ருேம் என்னப்
புத்தேளிர் முகநோக்கிப் புயல்வண்ணன் [உரைக்கும் (27)

---

2048. அலம் வருதல்—சுழலுதல்.

2049. அடியார்கள்; அவர்களைக் கொல்லுதல் அரிது.

2051. பண்ணவர்கள் எல்லீரும் இனிவருந்தல் வருந்தல்
பாணமொன்ருல் முப்புரமும் பாழ்படவே மாய்தல்
திண்ணமிகும் பாரிடங்க ளொடுநீவிர் விரைந்து
சென்றுசயம் புரிவதென்று செப்பியது வீணும்
எண்ணம்விடு குதிரென்ன இமையவர்கள் உரைப்பார்
எயின்மூன்றும் பூதருடன் யாங்கள்படர்ந் தெங்கும்
நண்ணியவ ரிடர்ப்படச்செய் வோமதனுல் எவரும்
நடலையற மகிழ்வரென்று நாரணனுக்
[குரைத்தார். (28)

2052. பொருசிறகர் உளர்த்தியினத் தொடுககனம் பறவாப்
பூவைவண்ணன் அமரருடன் போங்கெழுதாக்
[கேள்வி
அருமறைகள் தமைக்கூவி உபநிடதப் பொருளால்
ஆதிநடு அந்தமிலா அண்ணல்பதம் போற்றிக்
கருணையருட் கடலமலன் அருளாற்ருேற் றியவெங்
கதமெறுழ்பூ தங்களையக் கணம்விடுத்து நீவிர்
திருகுசினக் குறும்பொடுமுப் புரங்களையும் அவுணச்
சேனையையுங் கறித்தருந்தித் திரும்புமினென்
[றுரைத்தான். (29)

2053. இடிகள்நடுக் குறக்குமுறி ஆர்ப்பரித்துப் படர்ந்தே
இன்றெமக்கு வடவையென எரிக்குமகட் டனல்கூர்
கொடியபசி தணிக்கவிதி கிடைத்ததெனக் களித்துக்
குப்புறவந் தாங்குதி[ரண் டேசெல்ல] உரத்திற்
படிகவரை யெனப்பொடியுத் தூளனஞ்செய் தக்கப்
பருமணிவேய்ந் தொளிர்குடிலப் பவளசடை
[புனைந்து
நெடியகட்செவ் வரிபரந்த உமையிடங்கொள் பாகம்
நினைந்துவழி படுமசுரர் நிறைந்திடக்கண்
[டனவே. (30)

2054. அடுத்திகலிற் கறிக்கவெமக் கரிதரிதென் றெடுங்கி
அவரவர்பட் டாங்குரைத்திட் டாராய்ந்து வலிகள்
விடுத்தினிநாந் திரும்புவது நன்றலவே தேனும்
விறல்புரிக வேண்டுமென விசாரித்து மீளக்

---

2052. பறவாப் பூவை—காயாம்பூ.
2054. ஆமிரச் செங்கனி—மாம்பழம்.

கடுத்துமலர்ச் சோலைகளிற் கவிக்குலங்கள் வடிவாய்க்
கடிதுபடர்ந் தாமிரச்செங் கனிபலவின் கனிகள்
மடுத்தலையிற் பரிமளிக்கும் விளங்கனிபல் கனிகள்
மரங்குலுங்கப் புடைத்தொடித்து வாரிவிழுங்
[கினவே. (31)

2055. மதுகைவிறல் அசுரரவை நோக்கிமுன்னர் காந்தி
மல்கியசிற் றேடுகுணில் வாரியெடுத் தெறியக்
கதுமெனவெம் பொறிவிழிப்பா ரிடங்கள்கொலை அசுரர்
கன்றுடன்று சமர்விளைக்கக் கண்ணுதலோன்
[அருளால்
விதுவிழுங்கு படவரவம் எனக்கறுவி அசுரர்
விறற்பூதர் உயிர்குறைத்தே விண்ணவர்தஞ்
[செயலாம்
இதுவெனவே உளத்தறிந்து புத்தேளிர் உலகத்
தெய்திநிலை யம்புரிசை இடித்துருத்தார்ப்
[பரித்தார். (32)

2056. எறும்வலிமல் கியவமரர் தலைவர்களைப் பிணித்தே
இழுத்தடிக்கப் பதைத்துவெருண் டிடருழன்றே
[ஓடிக்
குறுகிவட வரைமுழைஞ்சில் வதிந்தொளிக்க அசுரர்
கொக்கரித்துக் கதுமெனத்தங் குலவுபதம்
[அடைந்தார்
முறுகுமிதழ்க் கமலனளி முரன்றநறுந் துளவ
மொய்ம்பனிமை யவர்கள்குழீஇ மூவசுரர் செயல்
[கேட்(டு)
அறுகுபிறை செருகுசடை அண்ணல்கயி லையிற்போய்
அங்கைகுவித் தியம்புதுமென் றடைந்தொடுங்கிப்
[பணிந்தார். (33)

2057. படவரவக் குடர்பிடுங்கிச் சிறைவிரித்துப் புடைத்துப்
பஃறலைகொத் தியகலுழப் பரியுகைக்குங் கடவுள்
விடநுகர்பண் ணவன்புதவு மல்குமணி வாசல்
வீற்றிருக்கும் பாலகர்தாள் மீதுவிழுந் திறைஞ்சிக்

---

2057. புதவு—கதவு; பாலகர்—(வாயில்)காப்போர்.

கடவுள்க ளொடுதுதித்துப் பகீரதிசெஞ் சடையோன்
　கருணைசுரந் தருள்புரியுங் காலமெப்போ தென்ன
உடனவர்கள் இப்பொழுது வேளையல நீங்கள்
　ஓடுமின்கள் என எமக்கார் உறுதியென்றங்
　[குறைந்தார்.　(34)

2058. அங்கணருட் கருணைவள்ளல் தனக்கெப்போ தினிய
　அருள்சுரக்கும் அமயம்வரும் அவ்வளவுங் கூடிச்
செங்கைகுவித் திறைஞ்சிவழுத் துபுஇருப்போம் என்று
　செறிந்தொருவர்க் கொருவர்சொலிச் சேர்ந்துரக்க
　[விளித்தே
சங்கர! சம் போ!மகே சான பர மேச!
　சந்திரசே கரவிபோ! அரகர!பூ தேச!
மங்கையுமை பங்க!எனச் செங்கைவிசும் பெடுத்து
　வலிதளர்ந்து கூப்பிடவே மல்குமொலி கேட்டார். ()

2059. பைம்பொனவை மணிகளிடை யிடைகுயிற்று பெரும்பூண்
　பதித்துரத்தப் பாம்புகொடு படர்சூரிகை வீக்கிச்
செம்பொன்மணி வாசனிற்கும் பாரிடபுங் கவர்கள்
　செயிர்த்துவிரைந் தோடிவந்து செங்கணெடு மாலே
அம்புயனை இமையவரை மணிமுடிகள் சிதற
　அடிக்கடிக்கக் கரமேந்தி அபயமென நொந்து
வெம்புமுளம் பதைபதைத்து மெல்லவடி வைத்து
　விரிதிரைமா நதிமடுவின் மெலிந்துவிழுந் துழன்றார்.

2060. சூர்குழுமி நறுந்துளவோய்! யாமெல்லாஞ் சேரச்
　சொலற்கரிய கருமங்கள் தொடர்ந்தேது புரிந்தோம்
அரவசைத்த இறைதிருமுன் நிற்பதுமெப் படியோ
　அன்றியும்வா சற்பாலர் அணுகிநிற்க ஒட்டார்
பரமெமக்கார் என்னமணி வண்ணனவை கேட்டுப்
　பதுமன்முத லியர்வதனம் பார்த்துரைப்பான்
　[நாம்போய்
அரகரவென் றுரக்கவெடுத் துரைத்ததனல் அடித்தார்
　அசைவறவே நாமிருந்தால் அடிப்பர்களோ
　[எமையே.　(37)

2061. சகலஇமை யோர்களுக்குந் தலைவனென இருந்த
தாணுமணி வாசல்சென்று தரிப்பதற்குப் பிடிப்பார்
இகலியடித் திடுகுவரல் லாதுவறி தேதான்
இருப்பர்களோ என்றுரைக்க இமையவர்கேட்
[டெந்தாய்!
புகலிதுண்மை யாகுமினிச் செயும்வகையீ தென்று
புத்தியுரைத் திடுதியெனப் புயல்வணன்பார்த்
[துரைக்கும்
அகலுளந்தேர்ந் தெமக்குரைக்க அரிதெரிதெல் லோரும்
ஆராய்ந்து நெடுநாட்டேர்ந் தறைகுதிர்நிச் சயித்தே.

2062. என்றுரைத்த களங்கனிவண் ணன்வதனம் நோக்கி
இமையவர்கட் டுரைக்கின்றார் எறிதிகிரிப்
[படையோய்!
துன்றசுரர் சிவபூசை புரிபவர்வெண் ணீறு
தூளனஞ்செய் பவர்கண்டி சூடுபவர் வேதம்
ஒன்றுபட வோதுபவர் இலிங்கஅருச் சனையே
உவந்துசெய்வோர் முத்தழல்வேட் டுவப்பவர்க
[ளாமால்
அன்றியுமற் றவர்மனைவி யனைவருங்கற் புடையோர்
ஆகையினால் எவர்க்குமினி அவரைவெல்வ தரிதே.

2063. எடுத்துரைக்க அரிதுநின்மா யையினாலவ் வசுரர்
இலிங்கஅருச் சனைகள்விட்டா ரெனிற்சிவன்தான்
[வதைக்கும்
அடுத்தவைசெய் யாவிடிலெல் லோர்க்குமுறை விடங்கள்
அணுத்துணையும் இல்லையென அச்சுதன்தான்
[உரைப்பான்
வடுத்தவிர நீவிர்மிழற் றியதுநன்றிப் பொழுதே
வல்லைபுரி குதும்நீரெம் மானைவழி படுமின்
கடுத்தனையுண் டிருண்டகண்டன் மூவெயிலோ டசுரர்
கணங்களைமாய்த் திடுவனுண்மை காண்மினென
[வுரைத்தான். (40)

2064. பின்னதிக மாயைகொடு தண்டுளவோன் படிகப்
பிறங்கலென வருமகதி வீணைகொள்நா ரதனைத்
தன்னருகு விளித்தவனே டெயிலடைந்து மாயன்
தக்கபுத்தா சாரியனுய்ச் சகலருமேத் திசைக்க
மன்னியுழை மருவியநா ரதமுநிவன் தனையே
மாணவக னுய்க்கொணர்ந்து மாயைசொல்நூ
[லாலும்
கன்னல்மொழி யாலும்விசித் திரவடிவி னுலும்
கருதுணர்வா லும்மசுரர் கணத்தைமயக் கினரால்.

2065. சூரவனுமா ணுக்கனுமாய் மாயைவல்லோர் அசுரர்
குலமனைவி யானவர்கள் கொண்டகற்பு நீங்க
இரவியொரு கோடியுதித் தனநிகர்மா மணியும்
இலகுதிப்பி யாபரணம் இருநிதியுங் காட்டிப்
பரவியவ ரவர்கொண்ட பதிவணக்கங் குறைந்து
பலபண்ட மனைத்தினுமுட் பற்றுவைக்கப் படுத்தி
விரவியொரு வர்க்கொருவர் மெய்யுரைசொல் லாமல்
வேட்கையினுற் கற்பொருவி விடமாயை புரிந்தார்.

---

## அத்தியாயம் 71.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### திரிபுரத்தவர் பூசை—தொடர்ச்சி.

இங்ஙனம் மயங்கினவர்கள் மாணக்கரை (நாரதரை) அணுகி, "உங்கள் ஆசிரியர் யார்? அவர் ஊர் எது?" என வினவினர். நாரதர், 'உலகம் யாவும் அவருடைய ஊரே. உலகைப் புரக்கும் வள்ளலாகிய அவர் உலகெங்கும் கண்டு மகிழ்த்திரிகின்றார். ஆங்காங்கு வந்து அடுத்தோரை மாணவர்களென ஏற்று, அவர்களுக்கு அறுபத்துநான்கு கலைகளையும் விளக்கி, உபதேசித்து முத்தி நெறியுங் காட்டிக் கரையேற்றுவார்" என்று மொழிந்தார். அசுரர்கள் நாரதர் பேச்சில் மயங்கி அவரைச் சூழ்ந்து வணங்கி நின்றனர். நாரதர் தம் மாயையி னுல், பொன், மணி, அரம்பையர்கள், பட்டாடை, நெல் முதலான பல்வகைப் பொருள்களையும் அழைத்தளித்தார். இவற்றைப் பெற்றுச் சென்ற அசுரர் பெறுமல் இருப்போரை அனுப்பினர். அவர்களும் வியந்து வந்து பெற்றுச் சென்று மகிழ்ந்தார்.

---

2064. படிகப் பிறங்கல் எனவரு...நாரதன்—படிகப்பிறங்கல்—ஸ்படிகமலை. நாரதர் ஸ்படிக (பளிங்கு) நிறத்தினர்—செய்யுள் 2076 ம் பார்க்க.

சில அசுரர் நாரதரை வணங்கி, "உங்கள் அடியார்களுக்கும் இத்தகைய விஞ்சை வருமோ?" என வினவினர். நாரதர் "அவருடைய மாணவர்களில் 'அறிவில் 'கடைப்பட்டவன்' என்று ஒதுக்கப்பட்ட எனக்கே எவ்வளவோ சித்திகள் வருமே!" என்றார். பிறகு, தமது கமண்டலத்திற் சிறிது நேரம் கையைவைத்து அசையாமல் இருந்து நீரை யெடுத்து வீசினார். பிரமனும், திருமாலும் பிற வானவரும் எதிரே தோன்றினர். அசுரர் கண்டு வியப்படைந்து நாரதரை வணங்கினர். திருமால் முதலானோர் மறைந்த பிறகு நாரதர் அசுரர்களுக்கு அமுதவுணவும் பிறவும் தம் வல்லமையால் அழைத்துக் கொடுத்தார். அசுரர் வணங்கி, "ஐயனே! தங்கள் ஆசிரியருக்கு எம்மை ஆட்படுத்துக!" என வேண்டினர். நாரதர் அவர்களை அழைத்துச் சென்று ஆசிரியராம் புத்தர் பெருமான் முன்பு விடுத்தார். புத்தர் அசுரரை நோக்கி, "நீங்கள் இனி அறவாழி அந்தணனையே பரவுதல் வேண்டும். சிவபூஜையை விட்டு விட்டு எம்மைப் பூசித்து எமது பெயரை ஜெபம் செய்யுங்கள். உமக்கு வேண்டுவனயாவும் கிடைக்கும். இவ்வுலகிலே நாம் கண்ணுற் காண்பதுவே மெய்; மறுமையில் இறைவன் கொடுப்பான் என்பது பொய்; ஆகையால் நீங்கள் சிவ வழிபாடு செய்வது வீண். திரு நீற்றையும் கண்டிகையையும் நீக்குங்கள்" என்று கூறினார். அவ்வாறே அசுரர்கள் சிவபூஜையைக் கைவிட்டனர். அசுரர் மனைவியர் ஆடை ஆபரணங்களை இச்சித்தவராய்க் கற்பினின்றும் வழுவினர்.

அப்பொழுது புத்த உருவாக அமர்ந்திருக்கும் திருமால் நாரதரை நோக்கி, "அசுரர் குலமெல்லாம் நம் மாயையாற் சிவநெறியை விடுத்துப் புத்தநெறிக்கு வந்தனரோ?" என வினவினர். நாரதர், "மூன்று மதிலுக்கும் ஒவ்வோரசுரர் தவிர மற்றையோர் மயக்க முடையவராய் நம் வசப்பட்டனர். அம் மூவரும் மாயை தவிர்ந்த புனிதர்கள்; சிவயோக முடைய சீல பரர்கள்; மாசற்ற தவத்தினர்; நீறும் உருத்திராக்கமும் அணிந்து சிவ பெருமான் திருவடி மலர்களை உள்ளன்புடன் போற்றும் உத்தமர்கள். உபமன்னியு, ததீசி, பிருகு, அகத்தியர் ஆகியவர்களினும் தவநிலையில் மேம்பட்டவர்கள்! அவர்கட் கிணையாவார் இலர்! தாமரை நூலாற் களிற்றைக் கட்டமுடியாதது போல நம் மாயையால் அவர்களைப் பிணிக்க இயலாது" என்று கூறினர். அவ்வுரை கேட்ட திருமால் சமாதியில் அமர்ந்து திரிபுரத்தலைவர் மூவரையும் வந்தனை செய்து, பரவசமாகி, சிவனடியாரின் பெருமை செப்புந் தரத்ததோ என்று பரவினர். பிறகு, மற்ற அசுரர்களை நோக்கி, "நீங்கள் யாம் கூறிய வழியே நில்லுங்கள். அம்மூவருடன் வாதிடவோ, பேசவோ, இணங்கவோ வேண்டாம்" என்று கூறி நாரதருடன் அங்கிருந்து நீங்கிக் கயிலையின் அடிவாரத்தை அடைந்தார்.

ஆனால், திருமாலுக்குக் கயிலை மலைமீதேற முடியவில்லை. முப்புரத்தவரைச் சிவபூசையிலிருந்து வழுவச் செய்த பாவத்தாலேதான் இவ்வாறு நேர்ந்ததென்று அறிந்து அந்தப் பாவம் அகலப் பரமனை வந்தித்துத் தவமியற்றினர்.

பிரமன் வானிடையிருந்து இடிபோல அதிர்ந்து "சீச்சீ! சாரங்க பாணியே! முப்புரத்தவரை நன்னெறியில் நின்றும் வழுவச் செய்தாய்! ஆகையால்; உன்னால் கயிலை வரை மீதேற முடியாது. நீயும் பிறரும் மானத வாவிக் கரையிலே எம்மை நினைந்து தவம் புரியுங்கள்' என்று கூறி மறைந்தார். அவ்வாறே திருமாலாதியர் தவம் புரிந்தார். திருமால் தேவர்களை நோக்கி 'மயனும் சுக்கிரனும் இல்லாத சமயத்தில் அசுரர்களை நமது மாயையில் சிக்க வைத்தோம். இதனால் வந்த பாவந் தீரத் தவம்செய்வோம்' என்று கூறி இறைவன் கூறியவாறே யாவரும் நீரில் நின்று தவம்புரிந்தார்கள். இறைவனும் தேவியுடன் கணேசர் ஆகிய கணங்களுடனும் வெளிப்பட்டுக் காட்சியருளினர். திருமாலும் வானவரும் கண்குளிரக் கண்டு போற்றினர். சிவபெருமான், "நீவிர் யாவரும் பாசுபதவிரதம் நோற்றால் யாவும் சித்திக்கும்" என்றார்.

அப்போது குழந்தை முருகன் காரணம் ஒன்றுமின்றிக் கொட்டித் திருக்கூத்து ஆடினார். முருகன் ஆடல்புரிய திருமாலாதிய சராசரங்கள் ஆடின. பரனும் உமையும் முருகவேளுடன் மறைந்தனர். பிறகு, வானவர் நமது காரியம் முடியவில்லையே என வருந்தி, பாசுபத விரதத்தை நோற்றனர். சிவபிரான் மகிழ்ந்து நந்தியை விளித்து "வானவரிடஞ் சென்று திரிபுரத்தை அழிக்கத் தேர், வில், அம்பு ஆகிய எவற்றையும் கொண்டு வரக் கூறுக" என்றனுப்பினர். அவ்வாறே நந்தி சென்று வானவரிடம் சொல்ல, அவர்கள் தேர் முதலியவற்றைச் சமைக்கத் தொடங்கினர்.

தேவர்களே தேர்; சூரிய சந்திரர்கள் தேர்ச்சக்கரங்கள்; மறைகள் குதிரைகள்; பிரமன் சாரதி; மேரு வில்; சேடன் நாண்; மால் அம்பு; காற்று அம்பின் இறகு; அக்கினி அம்பின் கூர்முனை; பிரணவம் சவுக்கு; யோகம்—கரணம்—அயனம் முதலியன தேரின் உறுப்புக்கள்; இவ்வாறு தேரைச் சமைத்தனர். திக்குப் பாலகர் சேனைத் தலைவராயினர். வசிட்டர் முதலானோர் ஆசி கூறுவோராயினர். கின்னரர் முதலியோர் வந்திகராயினர். கந்தருவர் முதலோர் கவி, கமகன், வாதி, வாக்கி—என்னும் நால்வகைப் புலவராயினர். சனகன் முதலானோர் சாமகானம் இசைப்போராயினர். இங்ஙனம் எல்லாம் ஏற்பட்டவுடன் சிவபிரான் உமையுடன் விடைமீதேறி தேரின் அருகில் வந்தார்; தமது மலரடியைத் தேரின் மீது சிறிதே வைத்தார்; உடனே தேர் நெரிந்து புவியில் அழுந்தியது. அமரர்கள் அஞ்சிப் போற்றினர். திருமால் விடையாகி அமிழுந் தேரைத் தன் முதுகில் தூக்க முயன்றார். அப்போது அவர் பாரம் தாங்க முடியாது உடலம் பதைத்து வீழ்ந்து மூர்ச்சித்தார். மூர்ச்சை தெளிந்தவுடன் அவரும் பிரமனுதியரும் போற்ற இறைவன் திருமாலுக்கு நிறைந்த வலிமையை வழங்கினர்; அதன் பிறகு திருமால் இறைவன் திருவருளால் தேரை முன்போல் நிறுத்தினர். சிவபிரானும் உமையுடன் தேரின் மீது அமர்ந்தருளினர்.

அப்போது இறைவன் திருமாலை உனக்கு என்னவரம் வேண்டுமென வினவினர். திருமால் 'ஐயனே! சத்திகளில் ஒன்ருகிய நான் உன்னை எந்நாளும் சுமக்க வாயுவினும் மிக்க வலிமையுடைய மழவிடையாகவும், மாரூத பத்தியாளனுகவும் அருள் புரிக' எனவேண்டி அவ்வாறே ஆகும் பேற்றைப் பெற்றனர்.

பிரமன் இறைவன் ஆணைப்படி சாரதியாகித் தேரை நடத்தினன். இடையூறு என்றும் வாராதிருக்க ஐங்கரமூர்த்தியை அருச்சித்துக் கனி, மோதகம் முதலியன நிவேதித்துத் தேவர்கள் வழிபட்டனர்; பரனும் சிந்தை மகிழ அருச்சித்தார். பல வாத்தியங்களும் முழங்கின. ஐங்கரன் பெருச்சாளி மீதும், முருகவேள் மயில் மீதும் ஏறி இறைவனுக்கு இரண்டு பக்கங்களிலும் வந்தனர். திருமால் கருடன் மீதும், அயன் அன்னத்தின் மீதும், இந்திரன் வெள்ளை யானையின் மீதும், அக்கினி ஆட்டின் மீதும், யமன் எருமையின் மீதும், நிருதி குணபத்தின் (பிசாசம்) மீதும், வருணன் மகரமீனின் மீதும், வாயு கலைமான் மீதும், குபேரன் புட்பக விமானத்தின் மீதும், ஈசானன் விடை மீதும் பரவித் தொடர்ந்தார்கள். நந்தி தேவர் கையிற் பிரம்புடன் அணிவகுத்து வந்தனர். தேவர்கள், நாரதாதி முனிவர்கள், இயக்கர், சித்தர் முதலியோர் தவமிழைத்தோம் என்று மகிழ்ந்து புரவி மங்கலம் உரைத்து வந்தனர்.

---

## அத்தியாயம் 71.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### : திரிபுரத்தவர் பூசித்தது—தொடர்ச்சி

அறுசீர் விருத்தம்

2066. மூளைக்கும் பெருமான் மாயையினால்
மோகித் தசுரர் அடங்கலுமால்
விளைக்குந் தவவே டங்கொடுப்பார்
வியப்பக் கதிசேர் சமயமிதென்(று)

---

2066. இந்நூல் ஆசிரியர் சமணருக்கும் சாக்கியருக்கும் (புத்தருக்கும்) வேற்றுமை காட்டாது ஆங்காங்கு உரைப்பர். செய்யுள் 8, 11, கீழ்க் குறிப்பைப் பார்க்க. பிண்டி—அசோகு. பொன்எயில்நாதன்—அருகக் கடவுள். முக்குடை—அருகக் கடவுளுக்கு உரியது; சந்திராதித்தம், நித்யவிநோதம், சகலபாசனம் என மூவடுக்குள்ள குடை. "பொன் இஞ்சி எயிலோய்நீ குளிர் முக்குடையின் நிழலோய்நீ" சிந்தா—1244. 'பிண்டி...முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானை—சிந்தா—1467.

உளைக்குங் களிவண் டூதுபிண்டி
ஒளிர்முக் குடைக்கீழ்ச் சாக்கியர் நூல்
கிளைக்கும் படிபொன் எயில்நாதன்
கிருபை குறித்தே இவர்தமையே. (1)

2067. கண்டு விழிகள் களிகூர்ந்து
கண்ணீர் ததும்பி உடல்புளகம்
கொண்டுள் உருகி இவரிடத்திற்
குறுகும் மனத்தாற் பத்திவைத்துத்
தொண்டு புரிந்து தனித்தயலில்
தொழுமா ணுக்கன் தனைவிளித்துப்
பண்டு வதிந்து மகிழுமிவர்
பதியே துரைத்தி எனப்பகர்ந்தார். (2)

2068. தரங்க மணியெற் றுபுகடல்சூழ்
தரையில் தமியேம் அளப்பருநாள்
உரங்கொள் வலியிந் தியமடக்க
ஓவில் தவஞ்செய் ததனுன்முப்
புரங்கள் தமையும் எம்மையுமே
புரக்க வெளிப்பட் டதுவோகொல்
வரங்கள் கொடுக்க வருமிவரார்
வாய்மை உரைத்தி மகிழ்ந்தெமக்கே. (3)

2069. என்று தொழுத அசுரர்தமக்
கிறைமா ணுக்கன் எடுத்துரைக்கும்
மன்றல் கமழும் புயப்பொருட்டு
வள்ளல் இவராம் உலகனைத்தும்
ஒன்று படவந் தருளுமிவற்
குறையுள் இடமா கையிலெங்கும்
சென்று மகிழ்ந்து நோக்கிடவா
சிகேசாதி திரிகின்றார். (4)

2070. இரைந்து களிவண் டுறங்குமசோ
கிருக்கும் இவர்க்கெவ் விடமினிது
வரைந்து பொருந்திற் றவ்விடத்தே
மரீஇய வரைமா ணுக்கரென

2069. இறை—விடை. உலகனைத்தும் உறையுள் (இருப்பிடம்).
2070. மரீஇயவரை—மருவினவரை.

விரைந்து மகிழ்ந்தெண் ணெண்கலையும்
விளங்க வுபதே சித்துமனம்
கரைந்து புவிமீ ளாதமுத்திக்
கரையேற் றுவரெக் காலமுமே. (5)

2071. என்று பகர்ந்த மொழிசிலர்கேட்
டிறைஞ்சி யவர்தம் புடைசூழ
நின்று வழுத்திப் புவிதாழ்ந்து
நிறைய மருங்கு வீற்றிருந்தார்
வென்று புடைசேர் அசுரருக்கு
வியன்மா யைகளாற் புவனங்கள்
சென்று பெறமோ கம்புரிந்து
செம்பொன் முதல்யா வையுங்கொடுத்தார். (6)

2072. விரும்பி அசுரர் இரவியொளி
விசிறும் மணியும் மணிப்பூணும்
அரும்பி இடங்கொள் குவிமுலைசேர்
அரம்பை யரும்பட் டாடைகளும்
கரும்பின் விளைசெந் நெற்குவையும்
கனகா திகளும் பெற்றுடனேர்
திரும்பி வருவோர் தமைக்கண்டு
சிலர்சா ரணர்பாற் சென்றிருந்தார். (7)

2073. விழைந்து வணங்கு மவர்க்குமுனம்
வேண்டும் பொருள்பின் வெறுப்ப நல்கிக்
குழைந்து கருணை கூர்த்தனர்மால்
கொண்டு சிலர்தாங் கொடுகம்பி
தழைந்த மகதி நாரதனைத்
தனியே கூவி யிவரடியார்க்(கு)
இழைந்த திதிகள் சித்திசெல்வம்
இவைபோல் வருமோ இயம்புகென்றார். (8)

2074. ஆற்று தவங்கூர் நாரதன்பின்
அசுரர் முகநோக் கிப்புகல்வான்
போற்றும் இவர்தம் அடியார்தமிற்
போதம் இலானும் எவரும்நிந்தை

2072. சாரணர்—சமணரிலும் புத்தரிலும் சித்திபெற்றோர்.

2073. இழைந்த—விரும்பிய. திதி—சம்பத்து, கவுரவம்.

சாற்ற அறிவற் றவனுகித்
தள்ளப் படுமேவான் ஆமெனக்கும்
ஏற்றம் உளசித் திகள்தமையே
எல்லீ ரும்பார்த் திடுமினென்ருன். (9)

2075. கருந்தா திலங்கு கமண்டலத்திற்
கரம்வைத் தபிமந் திரித்தசையா(து)
இருந்தா தரவிற் புனல் வாங்கி
எதிராய் இறைத்து நினைக்க அங்கண்
வருந்தா தோதி மக்கடவுள்
வனமா லிகையோன் சகலருமாய்ப்
பொருந்தா தபனு தியஇமையோர்
பொருக்கென் றெதிரே தோற்றினரால். (10)

2076. களிக்கும் அசுரர் அவைநோக்கிக்
கருதி வியப்பாற் கண்கள்தெண்ணீர்
துளிக்கும் படிமெய் கம்பலையாய்ச்
சுகநாண் மலர்த்தாள் தொழுதனர்சீர்
அளிக்கும் பிரமா தியஇமையோர்
அண்டத் துருவம் மறைந்தனர்பின்
பளிக்குப் படிவ மாணுக்கன்
பரவும் அவுணர்க் கமுதளித்தான். (11)

2077. பின்னும் அவர்வேண் டுவஅனைத்தும்
பெட்பின் உடனீந் துடுபதிபால்
துன்னும் அமுது பெண்டுமணிச்
சூடு வனவுந் தருதுமென
மன்னும் அவுணர் தமைத்தனது
மாயை யதனுல் மயல்செய்தான்
பன்னும் அவுணர் எந்தாய்தா
பதருக் கெமையாட் படுத்துகென்ருர். (12)

---

2075. கருந்தாது—இரும்பு. ஓதிமக்கடவுள்—பிரமன். வனமாலிகையோன்—துளசி மாலையன்—திருமால்.

2076. பளிக்குப் படிவ மாணுக்கன்—நாரதர்—செய்யுள் 2064 பார்க்க.

2078. பரவும் அவுணர் மொழிகேட்டுப்
பத்தி புரிநா ரதமுநிதன்
குரவன் இணைத்தாள் தொழுதசுர
குலத்தோர் தமையெம் பெருமானு
தரவின் அடிமை கொண்டுபதே
சஞ்செய் தருள்தி எனப்பவுத்தர்
விரவும் அவுணர்க் குபதேசம்
விரைந்து புரிந்தே விளம்புகின்றார். (13)

2079. ஆளும் கருணை அறவாழி
அந்த ணாளன் அடியிணையெந்
நாளும் பரவு மின்மலர்ப்பா
ணங்கள் தொடுத்தே பொருதமத
வேளும் படச்செவன் றேன்பூசை
விடுமின் எமைப்பூ சைகள்புரிமின்
நீளும் எமது பெயர்ச்செபங்கள்
நித்தம் செயுமின் நினைத்திடுமின். (14)

2080. புத்தா சரியர் ஆமெமையெப்
போதும் வழுத்திப் புதியநறுங்
கொத்தார் மலர்கள் தூய்ப்பரவிக்
குறையா வழிபா டியற்றிடில்நீர்
மெய்த்தா பதரா குவிர்நுமக்கு
வேண்டும் பொருள்கள் அனைத்தும்வரும்
இத்தா ரணிகண் டதுவேமெய்
இறையம் மையில்ஈங் திடுமெனல்பொய். (15)

2081. ஈசன் சரணம் வழிபாடிங்
கியற்று வதுகா ரியமலநீர்
பூசுந் திருவெண் ணீற்றுடன்மெய்
புனையுங் கண்டி தணந்திடுமின்
வீசும் புகழ்சேர் மறைமுழுதும்
விளம்பு வதுபொய் ஆகையினால்
நேசம் பெருக இவையனைத்தும்
நீத்து விடுமின் எமைநினைந்தே. (16)

2082. என்று கரக மயிற்பீலி
எடுத்து மணிப்பாய் உடுத்துமற்றோர்
கொன்று கொடுத்த ஊனருந்திக்
குஞ்சி பறித்துத் துவர்க்கடுக்காய்
தின்று வடிவம் மாசுறுமா
சீவ கேசர் சொலுமொழிகேட்(டு)
அன்று சிவசா தனம்வெண்ணீ
றக்கஞ் சிவபூ சைகள்தணந்தார். (17)

2083. அரிய தவங்கூர் கற்புடைய
அசுரர் மனைவி அனைவர்களும்
உரிய மகதி நாரதன்சொல்
உவந்து விரைந்து கேட்டெவர்க்குந்
தெரிய அரிய கலைமணிப்பூண்
சிறக்க அணிந்து மாயையினுற்
கரிய குழலார் மனைவியர்கள்
களவிற் பரரைத் தழீஇயினரால். (18)

2084. கொடுமுள் ளெயிற்றுப் பஃறலைகா
கோத ரேசக் கச்சசைத்துக்
கடுவுண் டிருண்ட களத்தோன்ஆ
கமஞ்சொல் சமயா சாரமொரீஇ
வடுவுண் டெனநோக் காவிளக்கு
மாறு சுவர்பூ சித்துளமெய்
தொடுமந் நியர்தோள் இரவுபகல்
தோய்ந்து களவிற் களித்தனரால். (19)

2085. அந்த அமயம் புத்தவுரு
ஆகும் மணிவண் ணக்கடவுள்
கந்த வகைநாற் பான்மூன்றும்
கருவி யுடனுன் மாவலது
சிந்தை செயல்வா னுயர்காலம்
திக்கென் றேவே றிலையெனவே
வந்த சமய விதிகள்தழீஇ
வருநா ரதனைப் பார்த்துரைக்கும். (20)

---

2082. ஆசிவக ஈசர் —சமண தவத்தலைவர்.

2084. காகோதரம்—பாம்பு.

2086. ஆற்றுந் தவநா ரதமுநியே!
அசுரர் குலங்கள் அடங்கலும்நாம்
சாற்றும் பெருமா மாயையினல்
சமண வுருவம் கொணர்ந்தெமையே
போற்றும் படிக்கு நமதுவசம்
பொருந்தி னர்களோ அவர்மனையார்
தோற்றுந் தகைமை கற்பொருவிச்
சோர விடர்பாற் சேர்ந்தனரோ. (21)

2087. அங்கங் கசுரர் இருக்குமிடம்
ஆராய்ந் துரைத்தி யெனப்புகலும்
செங்கண் முகுந்தன் தனைவணக்கம்
செய்து முநிநா ரதன்சொலும்வெண்
சங்கந் தரித்தோய்! மூவெயிற்கும்
தனித்தொவ் வொருவர் ஒழியமற்றத்
துங்க அசுரர் மோகிதராய்த்
தொழுது நமது வசமானர். (22)

### திரிபுரத்தாருள் மூவர் பெருமை

2088. புரத்துக் கொருவர் மாயைதவிர்
புனிதர் பரம யோகமொன்றும்
வரத்திற் சீல பரரென்று
மாசில் தவங்கூர் விரத்தரென்றும்
உரத்தில் திருநீ றக்கமணி
ஒருவா தெம்மான் மலர்ப்பதம்ஆ
தரத்திற் பரவு பாசுபதோத்
தமராம் அவர்மூ வருமம்மா. (23)

2089. தக்க உபமன் னியன்பிருகு
ததீசி மலையா சலமுநிவன்
மிக்க இவர்க ளினுந்தவத்தான்
மேலாம் அதிகர் மூவருமே
நக்கன் இணைத்தாள் உளத்திருத்தி
நம்பன் கருணை பெறுமவர்கள்
தொக்க அவர்க்கு நிகராகச்
சொலுதற் கொருவர் இலைமாதோ. (24)

2090. அடவி அதிரக் கடுநடையால்
அடங்கா வலியால் அசலமெற்றிக்
கடவி கடமால் அருவிசொரி
களிறு மரைநூற் கட்டுறுமோ
புடவி மிசைமற் றதுபோலப்
பொருக்கென் றவரை நம்மாயை
தடவிப் பிணிக்க அறியாது
தண்டு மூாய்த்தார்ப் பண்ணவனே! (25)

2091. என்று சொலும்நா ரதனுரைகேட்
டெறிசக் கரத்தே ஐம்புலனும்
வென்று சமாதி தனிலிருந்து
விரும்பி உளத்தால் அவர்தமையே
ஒன்று படவந் தனைபலவும்
உவந்து புரிந்து பரவசமாய்
நின்று சிவபத் தர்கள்பெருமை
நிகழ்த்தற் பாற்றே எனநினைந்தான். (26)

2092. ஓங்கு தவங்கூர்ந் திடுமவரை
ஒழிய மற்றோர் தமைநோக்கி
ஈங்கு விபவம் மிகவிரும்பி
எமதா சிகளும் உடையோராம்
நீங்கள் சிவபூ சைகள்புரிந்து
நிற்கும் மூவ ரொடுகலகம்
பாங்கு புரியா தவருடன்சொற்
பகர்ந்தி டாமல் இருந்திடுமே. (27)

2093. என்று கருடப் பரியுகைத்தோன்
எல்லோ ரையுந்தன் மாயையினால்
வென்று தனவா மிகுமோகம்
விளைப்பித் துடனே தனதுபங்காய்
ஒன்று படவே நின்றுபுத்தி
உடற்றி மயக்கும் புத்தவுரு
நின்று புறஞ்சேர்ந் திடஇருத்தி
நேய னெடுமுப் புரந்தணந்தான். (28)

---

2091. சக்கரத் தே—சக்கரத்தேவு—திருமால்.

2094. விரிக்குஞ் சிறைப்புள் ளரசுயர்த்தோன்
மிருநா ரதனை விளித்தயல்ஆ
தரிக்கும் அமரர் முனிவருடன்
சார்ந்து படர்ந்தெட் டுணையும் எங்கோன்
தெரிக்குந் தருமம் சிறிதுமிலார்
சித்தம் அணுகப் படாதுயர்ந்து
கிரிக்கும் பெரிதாம் திருக்கயிலை
கிட்டி யேறப் படாதிருந்தான். (29)

2095. அண்டர் நிமித்தம் ஆகஇப்போ
தசுரர் வெருவ மாயையினல்
தண்டம் இழைத்து நீறுகண்டி
தணப்பித் தீசன் சரணமன்பு
கொண்ட வழிபாட் டினையும்விடக்
குறித்து மோகம் புரிந்தவர்கள்
துண்ட மதிவா னுதன்மனையார்
சோரர் பதிசேர்ந் திடச்செய்தோம், (30)

2096. கேட்டேன் அதனல் வருபாவம்
கிளைத்துப் பருத்த ததற்குளகப்
பட்டேன் இதனுக் கையமிலை
பாவம் அதனல் திருக்கயிலை
தொட்டே றவுமல் லாதுளத்தில்
தொடர்ந்து நினைத்தற் கும்மரிதாய்
விட்டேன் இனியப் பாவம் அற
விமலன் மலர்த்தாள் வணங்குவனே. (31)

2097. வணங்கி வருநா ரதனுடனே
வாக்கு மனத்துக் கெட்டரிதாய்
உணங்கும் அரிய தவமிழைத்திட்
டுள்ளத் தினில்ஈ சனைநினைக்கப்
பிணங்கு சடையோன் வெளிப்பட்ட
பின்நா ரதனே டச்சுதனைக்
குணங்கள் தவிர நோக்கிவிண்ணிற்
குமுறும் உருமே றெனப்பகரும். (32)

2098. வியப்பா குஞ்சா ரங்கி! சிச்சீ
விண்ணோர் பொருட்டாய் உளம்சிறிதும்
பயப்பா டின்றி நீபுரத்தெம்
பத்த ரியாரும் சங்கையற
நயப்பா கியநன் மார்க்கம்விட
நாடிப் புரிந்தாய் ஆகையினால்
உயப்பார் விளங்குந் திருக்கயிலை
ஓங்கல் இவரப் படாதுனக்கே. (33)

2099. இம்பர் ஒருவி நீசுரரோ
டிமய வரையின் மணிகொழிக்கும்
பம்பு திரைமா னதமடுவில்
..............................
கிட்டியமரர் குழுக்களுடன்......... (34)

2100. ..............................
மண்டு வியப்பாற் காயாம்பூ
வண்ணன் எதிர்நோக் குபு அறையும். (35)

2101. பருவம் ஒருமுப் பான்தணவாப்
படிவம் ஒளிர்பண் ணவிர்காள்! யாம்
வெருவ வருமுப் புரவசுரர்
விரைந்தெம் மாயைப் பெருவலியால்
உருவம் குறிப்பு வேதனையி
னெடுபா வனைவிஞ் ஞானமென
மருவு மைந்து கந்தமுறை
மரீஇய புத்த வடிவெடுத்தார். (36)

2102. பின்னும் இதழி நறுஞ்சடிலப்
பெம்மான் சமயா சாரமொரீஇப்
பன்னும் பிடக நூலுணர்ந்தே
பதிதர் ஆனார் அவர்மனையார்

2098. சாரங்கி—சாரங்கம் என்னும் வில்லை ஏந்திய பெருமாள்.

2099. பிற்பாகம் ஏடுகளில் இல்லை.

2100. முதல் மூன்று அடிகள் ஏடுகளில் இல்லை.

16

துன்னும் களவிற் சோரர்புயம்
தோய்ந்து நிறைகற் பொருவினரால்
முன்னும் நமக்கிங் கிதமாக
முளரி அண்ணல் ஏவல்பெற்றே. (37)

2103. மயன்பார்க் கவனும் இருவரும்மும்
மதில்சேர் அசுர ருடன்பொரலால்
கயமா வுரிமுக் கட்குழகன்
கனன்று சபித்த சாபமுறீஇ
நயமா கியசாந் தியின்பொருட்டு
நாடி இமய வரையடைந்தார்
சயமாம் அசுரர் நம்மாயை
தளைப்பட் டாரிப் பொழுதம்மா. (38)

2104. இனிநாம் ஒருமை யுடன்பொருக்கென்
றெல்லோ ரும்பன் னெடுநாட்சேர்
துனிநீத் திடுவான் இக்கணமே
துணைமா முலைச்சேல் விழிக்கொவ்வைக்
கனிவாய் உமைகேள் வன்மகிழ்ந்து
கடிது தோற்றத் தவம்புரிவோம்
பனிமா மடுவில் என்றுகண்ணன்
பதுமத் தோனு தியர்க்குரைத்தான். (39)

2105. திரைமுத் தெறிமா னதமடுவில்
திகிரிப் படையோன் மூழ்கியிருந்(து)
உரையற் றுணர்வற் றொளிர்பரம
உருத்தி ரப்பேர் மந்திரங்கள்
கரையற் றிடவே செபித்தனன்கோ
கனதன் ஆதி அமரர்மழை
நிரைமுற் பரித்தோன் புடைசூழ்ந்து
நீரின் நடுவண் நெடிதுநின்றே. (40)

2106. விண்ணிற் கரங்கள் நிமிர்த்தெடுத்து
விமலா! அமலா! எம்பெருமான்
பண்ணிற் கனிந்த பெருகொலியே!
பரமா! கருணை வாரிதியே!

---

2103. பார்க்கவன்—சுக்கிரன்.

எண்ணிற் குறிக்க அரியோனே!
　　எளியோர்க் கிரங்காய் என்றேத்திக்
கண்ணிற் ககனம் நோக்க வுள்ளங்
　　கருத அரிய தவம்புரிந்தார். (41)

2107. அந்த அமயம் குடிலசடை
　　அணியும் பிறைக்கோட் டெம்பெருமான்
சந்து மரவங் கமழ்குரும்பைத்
　　தடமா முலையம் பிகையுடன்சூழ்
தொந்தி வயிற்றுப் பிறையெயிற்றுச்
　　சுழல்கட் பூத கணங்களுடன்
வந்து நெடுமால் ஆதியர்முன்
　　மகிழ்வெள் விடைமேல் தோன்றினுல். (42)

2108. வரிவண் டுமிழ்தே றற்பகுவாய்
　　மடுத்துப் புரையே றிக்குமட்டிப்
பிரியும் பெடைகள் தழீஇமுரலும்
　　பிணையல் துளவோன் ஆதியர்கள்
சொரியும் கரடக் களிற்றுரியோன்
　　துணைமென் மலர்த்தாள் முனம்வீழ்ந்து
விரியும் புளகங் கெழுமவெதிர்
　　விரைந்து பணிந்து புகழ்ந்தனரால். (43)

2109. நிலவு கொழிக்கும் பிறைச்சடையோன்
　　நெடியோன் முதலோர் தமைநோக்கிக்
குலவு கருணை யாலொருசொற்
　　கூறும் நீவிர் அருந்தவங்கள்
பலவும் இழைத்தீர் இனியெமது
　　**பாசு பதமா விரதமிப்போ(து)**
உலவு விடயம் அறநோற்கில்
　　ஒல்லை குறித்த தனைத்துமுண்டாம். (44)

2110. என்று நுதற்கட் பரனுரைக்கும்
　　ஏல்வை கயிலைக் கிரிமுதலாங்
குன்று தொறுமே வெமதுகுலக்
　　கோமான் சரவ ணேற்பவன்முன்

---

**2108. புரையேறிக் குமட்டி—புரைக்கேறுதல் (புரையேறுதல்)**

தொன்று படர்கா ரணமறவே
சோதி விமலாங் கத்தினயல்
நின்று நடித்தான் உலகீன்ருள்
நினைத்துச் சிறுபுன் முூரல்செய்தே. (45)

2111. கரத்தில் எடுத்து விளையாடும்
கமல மலரால் அனந்தவிதி
சிரத்தில் உறுமா லிகைபுரளும்
திண்தோள் புடைத்தீ சனைநோக்கி
வரத்தின் மதலை உடையோரில்
வரனே! நடனம் நோக்கெனத்தன்
உரத்திற் குமரன் தனைநிறுத்தி
உமைகோன் கரங்கொட் டுபுவுரைத்தான். (46)

2112. கண்ணே! மணியே! உயிர்க்குயிரே!
கனியே! கனியின் நறுஞ்சுவையே!
பண்ணே! ஒலியே! எமதுருவும்
பனிமால் வரையாள் உருவுமொன்ருய்
எண்ணே ஒருமித் தாறுமுகம்
எனஆள் குமரா! உனதுகொட்டி
விண்ணே பரவ நடித்தியென
வேலன் நடனம் மிகப்புரிந்தான். (47)

2113. சகல வுலகுக் கதிபதியாம்
சம்பு நடனம் புரிதியென்று
புகல மணிவண் ணன்பதுமப்
புத்தே ளாதி சராசரமும்
விகலம் அறவெங் கணும்நடனம்
மேன்மே லுஞ்செய் தனவிரிநீர்
அகலம் ஒடுங்கும் சடையிறையோன்
ஆணை யெவர்தாம் கடப்பவரே (48)

---

2111. விதி—சிர—மாலிகை—பிரம கபால மாலை.

2112. கொட்டி—ஒருவகை ஆடல்.

2113. இச்செய்யுளின் கருத்தை "அதலசேடனாராட! என்னும் திருப்புகழுட னும்(1056), "யாவையும் ஆடிடும் எம்இறை ஆடவே"—என்னும் திரு மந்திரத்துடனும் (2731) ஒப்பு நோக்குக.

2114. மழலை மொழிக்கிண் கிணிச்சிறுதாள்
மதலை நடிக்கக் கண்டுபசுங்
குழவி தனைமார் பணைத்துமுக்கட்
குழகன் இமைய வல்லியுடன்
அழகு பலகால் நோக்கி உச்சி
அனைத்து மோந்தங் கையிலெடுத்து
பழகு வயிரத் தூணுறையுட்
படர்ந்து கொடுபோய் இருந்துகந்தான். (49)

2115. விண்டு பதுமக் கோன்முதலாம்
விண்ணோர் ஒருவர்க் கொருவர்துயர்
கொண்டு புகல்வார் மறமனத்தாற்
குறித்தற் கரிய பரம்பொருளைக்
கண்டும் ஒருகா ரியம்நமக்குக்
கடிது முடிந்த திலையினிநாம்
பண்டு பரன்சொற் றிடும்விரத
பாசு பதநோற் றிடுகுவமால். (50)

2116. என்று விரகர் ஓமாரி
இடையிற் பிறந்த திருநீறு
துன்றும் உடலம் அனைத்தினுமுத்
தூள னஞ்செய் தைம்புலனும்
வென்று சிவபூ சைகள்புரிந்து
விமலன் பாசு பதவிரதம்
ஒன்று படநோற் றனரெம்மான்
உளத்தில் அதனைக் குறித்துகந்தான். (51)

**திரிபுராதிகள்மேல் போருக்கெழுந்தது.**

2117. கணங்கட் கிறையாம் நந்திதனைக்
கடிது விளித்தீ சன்சொலும்நீ
குணங்கள் குறித்தே விண்ணவர்கள்
குறுகும் இடஞ்சேர்ந் தெயின்மூன்றும்

---

2116. விரகர்—திருமால் ஆதியோர்.

2117. அணங்கு—துன்பம்.

அணங்கு புரிவித் தழிக்கவிப்போ
  தம்ருக் கேற்ற சாதனங்கட்(கு)
இணங்கும் இரதந் தனுமுதலாம்
  எவையும் கொணர்திர் என்றுரைத்தி. (52)

2118. என்று விமலன் உரைத்தசொற்கேட்
  டெழுந்து நந்தி புறப்பட்டே
மன்றல் கமழ்தண் டுளவஇறை
  மலரோன் ஆதி இமையவர்முன்
சென்று நுதற்கண் நாயகன்முன்
  செப்பும் வரலா றனைத்தும்விண்ணோர்க்(கு)
ஒன்று படவே உரைத்தவண்விட்
  டொல்லை அமல னுழையடைந்தான். (53)

2119. அரவம் அசைத்த பரன்மொழிகள்
  அனைத்தும் நந்தி சொலக்கேட்டுப்
பரவும் அமரர் உளமகிழ்ந்து
  பலரும் மீளச் சுத்தாந்தம்
விரவு கரண முடன்குழுமி
  வினயத் துடனே நெடுங்காலம்
இரவு பகலாய்ப் பரன்சமருக்
  கேற்ற வகையே தெனநினைந்தார். (54)

2120. தேருக் ககில தலவலயம்
  திகழா தபன்மாய் விந்தகிரி
பாருக் கதிட்டா னமதாகிப்
  பகர்கே சரவெற் புடுக்கிடுகா
ஆருக் கிதமாம் உருளிவெய்யோன்
  அமுத கிரணன் னாகிமறை
தாருக் கயமாய் வனவேதன்
  சார தியாயச் சுரர்தேராய். (55)

---

2120. அகிலதலம்—பூமி. வலயம்—வட்டம்; அதிட்டானம்—நிலைக்களம். கிடுகு—சட்டப்பலகை; ஆர்—(சக்கரத்தின்) ஆரக்கால்; அமுத கிரணன்—சந்திரன். தார்—தார்—தார்க்குச்சு. அயம்—குதிரை. வனம்—அழகு.

2121. செம்பொன் வரையோர் பிநாகமதாய்ச்
சேடன் நாணாய்க் கழுகிறகு
பம்பு மருத்தாய்ப் பாற்கடலிற்
பள்ளி கொளுமால் நெடுங்கோலாய்
வெம்பு சுடர்ப்பா வகனலகு
மிகுகூர் முனையாய் வகுத்தயன்கை
உம்பர் புகழ்தா ரகங்கசையாய்
உவாவிண் ணவகா சமதாயே. (56)

2122. ஏற்று மகத்திற் செயுங்கருமம்
தருமம் காலம் கற்பமிவை
தேற்றும் இரத கீலகமாம்
தினமூர் யோகங் கரணமதி
போற்றும் அயனங் கள்முழுத்தம்
புகலும் காலை இவையிரதம்
ஆற்று நிரைஅஞ் சுருவாணி
அனைத்தும் திருத்தேர் உறுப்பாமால். (57)

2123. குடுமி வரைகள் எட்டுங்கா
கோத ரேசர் ஒரெட்டும்
முடுகு திரைப்பைங் கடலேழும்
முகில்கள் ஏழும் இரதத்தின்
நடுவண் உயர்மேற் கட்டிமஞ்சம்
நாஞ மணிப்பூண் ஆதிகளாம்
நெடுமங் திரங்கள் கலைதேனு
நிதிகள் இரத சம்பத்தே. (58)

2124. திக்கு மருவிந் திரன்முதலோர்
சேனைத் தலைவர் சுரர்படைஞர்
தக்க வசிட்டர் முதலாகச்
சாற்று முநிவர் யோகசைவம்

---

2121. பிநாகம்—வில். கோல்—அம்பு. தாரகம்—பிரணவம். கசை—குதிரைச் சம்மட்டி (சவுக்கு).

2122. கீலகம்—ஆணி; பொருத்து. முழுத்தம்—முகூர்த்தம். அஞ்சுருவாணி—அச்சாணி.

2124. சுவத்தி வாசகர்—ஆசிகூறுவோர். அநுசரன்—பின்பற்றுவோன்.

மிக்க நிலைசேர் தவசிகள்பல்
விதஞ்சேர் சுவத்தி வாசகராம்
செக்கர் மணிவை குந்தமுகில்
தேர்ப்பின் தொடரும் அனுசரனே. (59)

2125. ஓங்கு புவிமீ தினின்முப்பத்
தொன்பான் கோடி உன்னதமாய்த்
தாங்கும் மொளிர்சத் தியலோகத்
தலைவன் பரிசா ரகனுகும்
தேங்கும் இசைகின் னரரியக்கர்
சித்தர் வீணை கிம்புருடர்
பாங்கர் மருவித் தொண்டரடி
பரவு கீர்த்தி வந்திகரே. (60)

2126. கனக மணியாழ் கந்தருவர்
கருடர் வியப்பாம் சாரணர்கள்
அனக இயல்கூர் கவிகமக
அடல்சேர் வாதி வாக்கியெனச்
சனகன் முதலோர் பரவுமிறை
சாம கானந் துதிப்பவராம்
பனக அணைமால் இவைகொணர்ந்து
படர்ந்து கயிலை அடைந்தனனல். (61)

2127. பருதி நிகர்பன் மணிகுயிற்றும்
பைம்பொன் முதற்கோ புரவாயில்
கருதி வினயத் துடனடந்து
கணங்கட் கிறையாம் நந்திபதம்
சுருதி பலவும் எடுத்தேத்திப்
தொழுது வரலா றனைத்துமுரைத்(து)
ஒருதிவ் வியச்சூ ழல்நெடுமால்
ஒடுங்கி வதிந்தான் இவையுணர்ந்தே. (62)

2128. நந்தி நுதற்கட் பரன்திருமுன்
நடந்து கரங்கூப் புபுவணங்கிப்
புந்தி மகிழ நறுந்துளவோன்
புகன்ற வகையா வையுமுரைத்தான்

---

2126. கவி, கமகன், வாதி, வாக்கி—செய்யுள் 1616—கீழ்க் குறிப்பைப் பார்க்க.

அந்தி நிறஅங் கணன்கேளா
அகிலம் முழுதீன் றவளுடனே
முந்தி மகிழ்வெள் விடையேறி
முடுகு இரதத் தருகடைந்தான். (63)

2129. மஞ்சு புரைமே னியன்முதலாய்
மரீஇய அமரர் துதித்திறைஞ்சப்
பிஞ்சு மதிசேர் குடிலசடைப்
பெம்மான் கருணை கூர்ந்தயல்சேர்
கொஞ்சு மொழியம் பிகையுடனே
குலவும் மழவெள் விடைதணந்து
விஞ்சு சிலையம் பெடுத்திரத
மிசையோர் மலர்த்தாள் சிறிதுவைத்தான். (64)

2130. பாழி நெடுந்தேர் பொறுக்கரிதாய்ப்
பாதா ளத்திற் சடசடெனப்
பூழி கெழும நெரித்துவிழப்
புயல்வண் ணத்தே வாதியர்கள்
வாழி யெனப்போற் றுபுநடுங்கி
மருண்டு வீழ்ந்து தெளிந்து கண்ணன்
ஆழி நெடுந்தேர் தனைவிடையாய்
அடுத்து வெரிந்கொண் டெடுத்தனனால். (65)

2131. கூற்று வெருண்டு விழவுதைத்துக்
கொல்லுங் கடவுள் அதிபாரம்
தோற்றும் அதனால் நெறுநெறெனச்
சுமத்தற் கரிதாய்ச் சுழல்விழிநீர்
வீற்று வீற்றாய் விழக்குருதி
வெள்ளம் பெருக்கா றெடுத்துளையத்
தூற்று வுடலம் பதைபதைத்துத்
துணுக்கென் றடித்து வீழ்ந்தயர்ந்தான். (66)

2132. அண்டம் அனைத்தும் வயிற்றடக்கி
அருளும் மதுகைப் பூவைவண்ணன்
கொண்ட மயக்கந் தணந்திதழிக்
குடில சடிலக் குழகனைநேர்

கண்டு துதிக்க அயன்முதலோர்
கரங்கள் எடுத்தேத் திடப்பெம்மான்
விண்டு தனக்கு மருத்தினிலும்
வியன்மா மிடல்கள் அளித்தனனால், (67)

2133. விந்தை செறிவெள் விடையுருமால்
வியந்து கரத்தாற் கமழ்மருத்து
மைந்து நிகழக் கொடுஞ்சியந்தேர்
வரையிற் பாரம் வெரிநெடுத்துத்
தந்தி யுரித்தோன் கருணையினால்
தாங்கி முனம்போல் இருத்தினன்பின்
சிந்தை மகிழ உமையுடன்மா
தேவன் இரதத் தினிலிருந்தான். (68)

2134. பின்னர் மணிவண் ணக்கடவுள்
பெட்பின் மலரோன் ஆதியரோ(டு)
உன்ன அரிய பரன்திருமுன்
உவந்து துதிக்கத் திருநெடுமால்
தன்னை நுதற்கட் பரனோக்கித்
தரணி புரப்போய்! உனதுளத்தில்
என்ன வரம்வேண் டியதுரைத்தி
இப்போ தனைத்தும் ஈகுதுமே. (69)

2135. என்று கடல்நஞ் சயின்றுகண்டத்
திருத்தும் இறைசொற் றதுகேளா
மன்றல் கமழ்தண் டுளவஇறை
வழுத்தி நறுந்தேன் புடைபிலிற்றும்
கொன்றை அலங்கல் வனைபவளக்
கோடீ ரத்தோய்! சத்திகளில்
நின்ற தமியேன் மூலசத்தி
நினையெந் நாளும் பரித்திடவே (70)

மால் விடையானது

2136 பிறங்கு வலிமா மருத்தினிலும்
பெரிய வலியீந் தெஞ்ஞான்றும்
அறங்கள் கெழும மழவிடையாய்
அடிமை கொண்டாய் அப்படியே

---

2133. மருத்துமைந்து—வாயுவின் பலம், வெரிந்—முதுகு.

கறங்கு திரைப்பா ரதிசயிக்கக்
கனவெள் விடையாக் கொணர்திப் பின்
மறங்கள் தவிர்குற் றேவல்செய
மாறுப் பத்தி அளிக்குதியே. (71)

2137. இந்த வரமே அடியேற்கிங்
கென்ஞான் றும்வேண் டுவதென்று
சிந்தை மகிழ வீழ்ந்திறைஞ்சிச்
செங்கை கூப்பி நின்றேத்த
அந்தம் அறுசிற் றடியார்கட்
கருளுங் கருணை வாரிதிதான்
விந்தை மகிழ்வெள் விடைவடிவும்
மிகுபத் தியுமா தவற்களித்தான். (72)

2138. பொருவில் அமரர் அனைவருமிப்
போதுய்ந் தனமென் றுளங் களித்தார்
அருவம் ஒருவி உருவாகும்
அண்ணல் இரத சாரதியா
மருவு விரிஞ்சன் தனைநோக்கி
மறைவாம் பரிநீ நடத்துகெனச்
செருவி லுறுமங் கணனுனை
சிரத்திற் கொடுமா நடத்தினனால். (73)

2139. புத்தே ளிர்கள்யா வரும்பொருமுப்
புரஞ்செல் இடையூ றகலவொரு
மித்தே ஒருகொம் பைங்கரன்தாள்
விரும்பி யுமிழ்பைந் தேறல்கமழ்
கொத்தே ரலரால் அருச்சித்துக்
குறைவில் கனிமோ தகங்கள்நிவே
தித்தே வழிபட் டனர்பரனுஞ்
சிந்தை மகிழ அருச்சித்தான். (74)

2140. பொறிசிந் தியகட் பிறையெயிற்றுப்
புவனம் அடக்கும் பெருவயிற்று
நெறிசென் றிடுசிற் றடிக்கணங்கள்
நிகரில் கணநா தர்கள்படகம்

---

2140. பணவம்—தம்பட்டம்.

குறிசல் லரிமத் தளமுரசு
 கோர முகத்தூ ரியமுழவஞ்
செறியும் பணவம் துடிபேரி
 திமிலை பலவாத் தியமதிர்த்தார். (75)

2141. சங்க மணிகள் இழைத்தகொம்பு
 தாரை நவிரி யெக்காளை
எங்கும் அதிர்கைம் மணித்தாளம்
 எறிதெண் டிரைச்சக் கரமனைத்தும்
பொங்கி முழங்கிக் குமுறுமொலி
 புரையத் திசைகள் செவிடுபட
எங்கும் அதிர அவைக்கிணங்கி
 ஏற்ற நாதம் எழுந்ததுவே. (76)

2142. மரவம் பொறித்த முலையிமய
 வல்லி கோமுன் கடைவிழியாற்
பரவும் முகுந்தன் ஆதியரைப்
 பரிமேற் கொளுமென் றருள்செயஆ
தரவி லொருகொம் பண்ணல்பெருச்
 சாளி தனிலும் எமது செவ்வேள்
குரவு கமழ்தோ கையில்வந்து
 குலவி யிருபா லினுமடைந்தார். (77)

2143. திருமால் கருடன் அயனனமிந்
 திரன்வெள் ளானை கனலிதகர்
தருமா தரன்போர் மயிடம்நிசி
 சரர்கோக் குணபம் வருணனலை
வருமா மகரம் மருத்திரலை
 வடதிக் கிறைமா னப்பரியீந்
துருவா மீசன் விடைகடவி
 உளத்திற் பரவித் தொடர்ந்தனரால். (78)

---

2141. நவிரி—ஊதுகொம்பு: சக்கரம்—கடல்.

2142. மரவம்—குங்குமம்—தொய்யில் (ஆகுபெயர்)

2143. நிசிசரர் கோ—நிருதி.

2144. விரிசெஞ் சுடர்ப்பன் மணிகுயிற்றும்
மிளிர்பொற் பிரம்பு கரத்தெடுத்து
வரியுங் கலனை விடைகடவி
மழுமான் ஏந்தும் நந்தீசன்
திரியும் அமரர் குழூஉக்கணங்கள்
செறியும் சமுகம் விட்டயலே
பரியுங் கடவிசெலப்புடைத்துப்
பார வாரி பண்ணினனால். (79)

2145. சுருதி அனைத்தும் திசைகள்தொறும்
சூழ்ந்து துதிக்க மணித்தேரிற்
பருதி யபரி மிதகோடிப்
பனிவெண் கதிர்கள் அனந்தமொன்றாய்க்
கருதி விரவி வருவதெனக்
கருணா கரனம் பிகையுடனே
விருது குறிக்கப் படர்ந்தனன்பின்
விறல்முப் புரம்வீட் டிடும்பொருட்டால். (80)

2146. உம்பர் முனிவர் இயக்கர்சித்தர்
உணரும் மறைவித் தியாதரர்கள்
செம்பொன் மணித்தேர் இருக்குமண்ணல்
சிறக்கும் உருவங் கண்டுபிறப்(பு)
இம்பர் எடுத்துப் பலமடைந்தேம்
யாமே அருத்தம் அடைதக்கோர்
அம்பை அருகொத் திருக்கமுனம்
அரிய தவமே திழைத்தனமால். (81)

2147. என்று பரவும் அவர்மொழிகள்
இன்ப மொடுகேட் டிறைவியுடன்
மன்று குனித்தோன் முப்புரமும்
வதைக்க நடந்தான் அவ்விருபால்
துன்றும் அமரர் யோகர்கணந்
தொல்லை முனிவர் தும்புருவர்
என்றும் உணர்நா ரதர்முதலோர்
இல்லா ளுடன்மங் கலமுரைத்தார். (82)

---

2144. கலனை—சேணம்.
2146. அம்பை—அம்பிகை.

# அத்தியாயம் 72.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### திரிபுரத்தவர் பூசித்தது—தொடர்ச்சி

திருமாலின் மாயையினுல் மயங்கிய அசுரர்கள் சிவபூசனையை விட்டுப் பௌத்தராகிக் காட்சி யளவையே மெய்யென்றும் கருதலும் உரையும் பொய் யென்றும் இருந்தனர். அவர்தம் மனைவியர் கற்பு நீத்தனர். தீய நிமித்தம் அவர்கள் மனைகளில் உண்டாயது. கற்பகம் முதலியன மறைந்தன. ஆண்டு ஆயிரத்துக் கொருபகலாய் முடியும் வேளையும் வந்தது. கண்ணன் முதலான சுரர்களின் உள்ளம் மகிழ்ந்தது. திரிபுரத்தை அழிக்குமாறு சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் உமையை நோக்கிப் புன்முறுவல் செய்து, மேருவை வளைத்து நாண்பூட்டி அம்பைக் கையிற் சுழற்றி யெடுத்துத் திரிபுரத்தைக் கடைக்கண்ணுல் நோக்கிச் சிறிது புன்முறுவல் செய்தார். அப்போது முறுவலிடைத் தோன்றிய தீயானது மன்மதனை எரித்ததுபோலப் புரங்கள் மூன்றையும் நீறுக்கியது.

அதனைக் கண்ட அம்பின் வடிவான அரியும் அங்கியும் காற்றும் எங்களையும் பணியாற்ற அருளுக என வேண்டினர். அரனும் அம்பை விடுத்தார். அம்பிலிருக்கும் அக்கினி, முறுவல் அக்கினியை நோக்கி, 'நாங்களும் புரங்களை எரித்தனம் எனப் புகழ்பெற வேண்டும்' என்று இரக்க அங்ஙனமே அதன் அனுமதியைப் பெற்று உடன் சென்று புரத்தை யெரித்ததாகப் பெயர் பெற்றது.

அப்போது, புத்தர் சொற்கிணங்கி யிருந்த அசுரர்கள் இறந்து சிவார்ச்சனை செய்த பலத்தால் சிவகணங்களாயினர். சிவ வழிபாட்டில் வழுவா திருந்த மூவரும் புரத்தில் வேகாமல், நீரிடை யிருப்பவர் போலத் துன்பமொன்றிலாது இன்புற இருந்தனர். 'புத்தர் மாயையில் அகப்படாமல் இறைவனை வழுத்தி யிருந்தோம். மாயையிற் சிக்கியிருந்தால் நாமும் நீறுகப்போயிருப்போம்' எனப் பேசி மகிழ்ந்தனர்.

சிவபிரான், அம் மூவரும் வேண்டிக் கொண்டவாறு, கயிலையிற் காவலராகும் பேற்றை அவர்களுக்கு அருளினுர். அன்று முதல் சிவ வழிபாட்டின் சிறப்பை யாவரும் உணர்ந்து மேற்கொண்டனர். சிவ பூசை செய்யாதோர் சண்டாளரே. சுருதி மிருதிகளின் உறவும் அவர்கட்குப் பயன் தராது.

ஆகையால், எவ்வாறு வருந்தினும் சிவபிரானையே உவந்து வழிபடல் வேண்டும்.

---

# அத்தியாயம் 72.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### (திரிபுரத்தவர் பூசித்தது—தொடர்ச்சி)

2148. தூண்டுழாய் அலங்கல் அண்ணல்மா யையினுற்
சகலராம் அசுரரும் மயங்கிக்
கண்டிநீ றமலன் அருச்சனை சுருதி
கலைமிரு திகளெலாம் தணந்துள்
கொண்டுபுத் தர்களா சாரமே யடைந்து
கூர்த்திடக் கண்டதே மெய்யென்(று)
எண்டிசா முகமும் இருந்தனர் மனையார்
எவரும்நா ரதர்மொழிக் கிசைந்தார். (1)

2149. கண்டபே ரளவை தன்னைமெய் யெனவே
கருதலோ டுரைகள்பொய் யென்று
கொண்டசத் திகளாய்ப் பிறர்புயந் தழுவிக்
குறிக்கருங் கற்புநீத் தனர்கள்
அண்டமீ துயர்ந்த மனைகள்துன் னிமித்தம்
ஆனது கற்பகஞ் சுரபி
கொண்டல்நேர் நிதிசிந் தாமணி யிறந்து
குற்றமேற் கொண்டதெங் கணுமே. (2)

2150. வருடமா யிரத்துக் கொருபகல் துலங்கி
வருபடி மக்கலத் துழுந்துள்
உருளள வையுமச் சமயமீ தடுத்திங்
கொல்லைவந் தடைந்தது *பெம்மான்
திருவுள மகிழ்ந்தால் உடன்கிடை யாத
தேதெனக் கண்ணனு தியர்கள்
பொருவின்முப் புரங்கள் நைவதைக் கண்டு
புந்தியுள் மகிழ்ந்துபோற் றிசைப்பார். (3)

---

2149. கொண்டு அசத்திகளாய்

2150. படிமக்கலம்—கண்ணாடி: கண்ணாடியில் உழுந் துருளும் அளவை—செய்யுள் 524 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

* முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ—'' பெரியபுரா,

2151. மூக்கணு யகனே! வெஞ்சரம் விடுத்து
முப்புரம் அழித்தரு ளென்று
திக்குநோக் குத்தாழ்ந் திறைஞ்சிவிண் ணப்பஞ்
செய்திடக் கண்ணணு தியர்கள்
தொக்கமா மகிழ்ச்சி யும்பர பரப்புஞ்
சூலிநோக் குபுகருணை யினுற்
பக்கமே வியபார்ப் பதிமுக நோக்கிப்
பரிந்துபுன் மூரல்செய் தனனே. (4)

2152. செம்பொன்மா மேரு வரைச்சிலை கோட்டித்
திறலிடப் புயமலை யிருத்தி
அம்புரா சியின்மான் மருத்தெரி சரமோ
ரங்கையாற் சுழற்றிமுப் புரத்தைப்
பம்புமுக் கடைக்கண் பார்த்தனன் முறுவற்
பாவகன் தனிலணுத் துணைபட்(டு)
இம்பர்முப் புரமுங் கண்ணழல் மதன்போல்
எரிந்தவை பதங்கமா யினவே. (5)

2153. அக்கணங் கிரீசன் கரத்தினிற் சுழலும்
அங்கிகா லரிசசி முதலாய்த்
தொக்கவிண் ணவர்கள் சிரிப்பினுல் வெந்து
தொலைந்தமுப் புரங்களைக் கண்டு
நக்கனை யசுரா ரியைத் தொழு தெமையும்
நாடிவிட் டருடியென் றிரக்க
மிக்கமே ருவிலிற் பணிவிரல் நுதியான்
மெல்லவேற் றிச்சரம் விடுத்தான். (6)

2154. சரத்தினி லெரிபுன் மூரலின் எரிபின்
தழீஇத்தொடர்ந் தடியனேன் எரிந்த
புரத்தினை நானும் எரித்தன னென்று
புகழ்பெற வேண்டுமென் றிரக்க
வரத்தினை மூர லெரிசர எரிக்கு
வழங்கவே கூடமாய்த் ததுமுன்
புரத்தினை மூர லெரிசுட இறந்தோர்
புத்தர்சொற் கேட்கமுன் பணிந்தோர். (7)

2152. பாவகன்—அக்கினி; பதங்கம்—விட்டில்.

2153. கிரீசன்—சிவன்.

2155. மழவிடைப் பரன்தா ளருச்சனை புரிந்தார்
வந்தவப் பலத்தினுற் கணங்கள்
தொழுவரு நானு திபத்திய மான்மா
தோற்றுமெய்ஞ் ஞானமோ டடைந்து
பழவினை தணந்து கண்ணுத லருகு
பணிந்தொரு வாதிருந் தனர்வண்(டு)
உழஅலர் துளவ இறைபுரி மாயை
உருதமூ வர்கள் செயலுரைப்பாம். (8)

### மூவர் பிழைத்தது

2156. அக்கமா மணிவெண் ணீறுதற் பரன்தாள்
அருச்சனை விடாதுளந் துதிக்குந்
தக்கமூ வசுரர் புலிங்கம்விட் டெழுந்து
தழற்பிழம் பாகமுப் புரமும்
ஒக்கவே யெரியும் பேரரண் நடுவண்
உற்றும்வெண் டிரைகொழித் தெறிநீர்
தொக்கவா ரிதிநாப் பண்ணிருந் தனர்போல்
துன்பமற் றின்பமே யினரால். (9)

2157. ஒருவருக் கொருவர் உரைத்துளம் வியப்பார்
ஊழ்வினைப் பெருவலி யதனுல்
வெருவரப் புகலும் புத்தர்மா மாயை
விளைக்குமோ கத்தினுட் படாமல்
இருவருக் கரிய இறைநினைத் திருந்தோம்
யாமுமோ கித்திடி லவர்போற்
பருவரற் புரத்துள் வெந்துநீ றுவோம்
பகர்ந்திடி லையம்வே றிலையே, (10)

2158, என்றுரைத் திருக்கும் அசுரர்முப் புரத்துள்
எரிதழற் பிழம்பிடை யிருந்து
மன்றலங் கடுக்கை வள்ளல்பொன் மலர்த்தாள்
வழுத்திய பலத்தினுற் கொடுமை
துன்றுதுர்க் காலங் கடந்தனர் என்றே
தொல்லுல கெலாமதி சயிக்க
வென்றிபெற் றிடுவோர் படவர வசைத்த
வேந்தயல் சேர்ந்துபோற் றினரால். (11)

2159. உள்ளம்நெக் குருகக் கண்கள்நீ பிலிற்ற
உரைதழு தழுக்கமெய் புளகங்
கொள்ளவீழ்ந் திறைஞ்சும் அடியரை நோக்கிக்
குரைகடல் நஞ்சயின் றருளும்
வள்ளல்கட் டுரைக்கும் நீவிர்நம் பத்தர்
மலிபுக ழாயவும் உடையோர்
எள்ளரும் வரங்கள் யாவைவேண் டுவவிங்
கியம்புதி ரென்றுகூ றினனால். (12)

2160. அங்கண னுரைத்த போதின், உத்தம மாம்
அரியநல் வரங்கள்கேட் கின்றார்
மங்கைபங் குறையும் வள்ளலே ! கருணை
வரந்தரும் இன்பவா ரிதியே !
புங்கவ ரிறைஞ்சுங் கயிலையிற் சேர்ந்தப்
புரத்தினிற் காவலா யடியோம்
மங்கலத் துடனே வதிந்திட வேண்டும்
வரமரு ளென்றுபோற் றிசைத்தார். (13)

2161. மழுவல னேந்துங் கண்ணுதற் சாமி
மகிழ்ந்தவர் கேட்டநல் வரங்கள்
முழுதருள் புரிந்து வாயில்காப் பவராம்
முதன்மையுங் கொடுத்துமீ ளவுமே
தொழுதகு திருமான் முதலிய சுரர்க்குந்
தொல்லுயிர்க் குங்கிடைக் கரிதாம்
பழுதிலா வரங்கள் அனைத்தையுங் கொடுத்துப்
பரன்திரு வுருமறைந் தனனால். (14)

2162. கறையணற் பகுவாய்ப் பஃறலை அரவிற்
கண்டுயில் அண்ணலா தியர்கள்
முறைமுறை யொருவர்க் கொருவர்பா ணித்து
முற்றுமா ராய்ந்தொரு சபதம்
அறைகுவர் உலகில் இன்றுதொட் டென்றும்
அமரர்கள் அசுரர்கள் முனிவோர்
குறைவில்சித் தர்கள்கந் திருவர்மா னவர்கள்
கூறுமற் றோர்களியா வருமே. (15)

---

2162. பாணித்து—நிதானித்து.

2163. நித்திய சிவபூ சைகள்புரி யாதோர்
நீறுகண் டிகைதரி யாதோர்
முத்தியை விரும்பும் முநிவரா கிலுமே
முழுநரா தமர்கள்பா சண்டர்
பத்திகொள் தருமர் எனினுமன் போடு
பகர்ந்திடப் படாதவ ரவரோ(டு)
ஒத்திசை சுருதி மிருதிகள் மங்கள்
உறவுளோர் கில்லைகாந் திகளே. (16)

2164. இந்தநன் மொழிசத் தியஞ்சத்தி யம்மென்
றென்றுமீ ளவுமுரைத் தங்கண்
விந்துநா தமதா மிலிங்கபூ சனைகள்
மிகுநெடு நாட்புரிந் திருந்தார்
அந்தமில் சபத மிப்படிப் பின்னும்
அறைந்துதத் தமபதம் அடைந்து
புந்தியுள் மகிழ்ந்தீ சன்சிவ பூசை
புரிந்தனர் நிரந்தரம் புகழ்ந்தே. (17)

2165. ஆற்றரு முநிவீர்! அசுரர்கள் அறிவற்
றமலனு ராதனை புரிந்து
போற்றுவ தமர ரால்விடப் பட்டுப்
பொருவில் கண் ணுதல்முறு வலினல்
சுற்றினில் இறந்து கணங்களுக் கரசா
யிருந்தனர் ஆகம விதிகள்
சாற்றிய படியீ சனையருச் சித்தோர்
தற்பரன் கயிலையிற் சார்ந்தார். (18)

2166. சங்கர னிருந்த பப்பறு வாயில்
தருமெனத் துவாரபா லகராய்
மங்கல வரிசை யோடிருந் தனர்கள்
மணிவணன் விரிஞ்சனு தியராம்
புங்கவர் அசுரர் தமைச்சயம் புரியும்
பொருட்டம லனையருச் சித்தார்
எங்கணும் அசுரர் சுரரமர்க் குடைந்தே
யிறந்தனர்; பூசுரோத் தமரே! (19)

2166. பப்பு—ஒப்பு "பப்பறவீட்டிருந்து"—திருவாசகம்.

2167. ஆகையால் உலகில் எப்படி வருந்தி
யாகிலுங் கருவிழித் துவர்வாய்த்
தோகைபா கனையே வழிபட வேண்டுஞ்
சுரர்முநி சித்தர்கந் திருவர்
வாகைமா னவர்வீ ரியஞ்சுகஞ் செல்வம்
வருசயம் போகவீ டனைத்தும்
ஓகையாற் பெறவேண் டிற்சிவ பூசை
உவந்துசெய் திறைஞ்சவேண் டிடுமே. (20)

## அத்தியாயம் 73

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### அந்தகாசுரன் பூசித்தது

அந்தகன் என்னுங் கொடிய அசுரன் தனது தவத்தின் வலிமையால் அரி முதலிய அமரரைப் போரில் வென்றனன். அவனுக்கு அஞ்சிய அமரர்கள் அரம்பையர் போல வடிவ மெடுத்துத் திசைகள் தோறும் ஒளிந்து திரிந்தார்கள். அங்கும் அவன் அவர்களைத் தேடிவர, அவர்கள் ஓடிப்போய் உமையம்மையாரின் சேடிகளுக்குத் தொண்டுபுரிந்து கொண்டிருந்தனர். அங்கும் அவன் அவர்களைத் துன்புறுத்தச் சென்றான்.

அரி, அயன் ஆதிய அமரர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். அவர் வடுகக் கடவுளை அனுப்பினர். வடுகக் கடவுளின் படையும் அந்தகன் படையும் பொருதன. அப்போது அந்தகன் படைகள் மடிந்தன. அசுர குருவாகிய சுக்கிரன் மிருத்தியுஞ்சய மந்திரத்தால் இறந்த அசுரர்களை உயிர்ப்பித்தான். அதனைக் கண்ட வடுகர் சுக்கிரனைப் பற்றி யிழுத்துக் கடித்து விழுங்கி விட்டு, அசுரப் படைகளை வதைத்தார். பிறகு, தம் சூலப் படையில் அந்தகாசுரனைக் குத்தி யேந்திச் சிவபிரான் திருமுன் சென்றார். சிவபிரான் அந்தகனை நோக்கினார்; அக்காட்சியினால் அசுரன் துர்க்குணம் நீங்கித் தூயனானன். சிவபிரான் கருணையுடன் உனக்கு என்னவரம் வேண்டுமெனக் கேட்டனர். அசுரன் அவரைப் போற்றிச் சிவகணத்தலைமையை வேண்டி அங்ஙனமே பெற்றனன். பின்னர், வடுகக் கடவுள் சுக்கிரனைத் தம் வயிற்றிலிருந்து வெளியே விடுத்தனர். சுக்கிரன் அரனை வழிபட்டு முன்போலத் தன் பதத்தைப் பெற்றான். நெடுமால் முதலான அமரரும் சிவனை அருச்சித்துத் தம் பெண்ணுரு நீங்கித் தத்தம் இடங்களை அடைந்தனர்.

# அத்தியாயம் 73.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### எழுசீர் விருத்தம்

### அந்தகாசுரன் பூசித்தது

2168. **தொ**ழுதகு முனிவீர்! திங்களங் கண்ணி
சோதிதா ளருச்சனை புரிந்து
பழுதில்கா மியங்கள் தேவரா லடையப்
பட்டன நுங்களுக் கதனில்
வழுவற எடுத்தோர் காதைசொல் கேன்முன்
வலிகெழும் **அந்தகா சுரன்**தான்
முழுவலி கெழுபூ லோககண் டகனாய்
மோகநீத் தருந்தவம் புரிந்தான். (1)

2169. **மி**டல்கெழு வலிபெற் றதிகவீ ரியமும்
விசயமும் படைத்திகல் புரிந்தே
படவர வணைமால் பதுமனு தியராம்
பண்ணவ ரோடுமூ வுலகத்(து)
அடல்புரிந் திடப்போ ரபசயப் பட்ட
அமரரியா வரும்பயந் தொளித்து
மடவர லாகி யவர்கள்போல் மொழிந்து
வலியஆ ணுருவிகந் தனரே. (2)

2170. **தெ**ருமர லொடும்போய்த் திசைகள்பத் தினுமே
திகைத்துளம் நடுங்கியே திரிந்தார்
பருவர லுடன்ஆண் உருவமாய்த் திரியும்
பண்ணவர் தமைப்புடைத் துள்ளம்
வெருவரச் சிறைச்சா லையிற்றொடர்ப் பிணித்து
வீழ்த்தினன் பெண்களாய்த் தளிர்மெல்
உருவுகொ ளமரர் தம்மையும் புடைக்க
ஓடிமந் தரகிரி யடைந்தார். (3)

2171. **ப**ங்கயன் முகுந்தன் ஆதிய இமையோர்
பகீரதி மிலைச்சுசெஞ் சடிலப்
புங்கவன் மலர்த்தாள் போற்றிவீழ்ந் திறைஞ்சிப்
புண்ணியன் ஆணையால் இமய

மங்கைதோ ழியர்க்கே வற்றெழில் புரிந்து
வணங்கினர் அந்தகா சுரன்கேட்
டங்கணுந் தொடர்ந்தான் பெண்ணுரு வான
அரியயன் அமரர்கண் டொளித்தார். (4)

2172. வரிகெழும் உழுவை யதளிறைக் கசுர
வஞ்சகன் செயும்வர லாறு
தெரிதர வுரைத்தார் கருணைவா ரிதியாஞ்
சிற்பரன் அமரரைப் புரப்பான்
சொரிதழற் கடைக்கண் வடுகனை யனுப்பச்
சுழல்விழிக் கணத்துடன் படர்ந்து
பிரிவற அசுரப் படையுடன் வடுகன்
பெரும்படை யெதிர்த்துமோ தியதே. (5)

2173. இருவகை யனிகம் பொரவுடற் குருதி
யெழுந்துசெந் நீர்ப்பர வையதாய்ப்
பெருகிட வடுகன் அனிகம்வல் லசுரப்
பிணமது துவைக்கவெம் புழுதி
யொருவகைப் படச்செல் பருதியை மறைக்க
ஒல்லைவல் லசுரர்சே னைகள்வெஞ்
செருவினின் மடியப் பிருகுமா முநிவன்
தேர்ந்து ம்ருத் யஞ்செபஞ் செபித்தான், (6)

2174. இறந்தவல் லசுரச் சேனைவன் மீகத்
தெழுந்திடும் ஈசல்போன் மனுவாற்
பிறந்திடல் தனைக்கண் டதிசயித் தொல்லை
பிறையெயி றதுக்கியே வடுகன்
பறந்தலைப் புறத்திற் பிருகுமா முநியைப்
பறபறத் திழுத்துயிர் பறக்க
வுறந்துடற் கறித்து விழுங்கினே ரசுரன்
உறுபடை யனைத்துமாய்த் தனனே. (7)

2175. செருவுபேந் திரனும்வாமனற் றடிந்து
செங்கையால் மெய்யத ளுரித்துப்
பொருவில்சட் டையதாய்ப் புனைந்தருள் வடுகன்
புழுங்கியே திருகுவெஞ் சினத்தால்

---

2173. பிருகு—சுக்கிரன்.

2174. பறந்தலை—போர்க்களம். பறபறத்தல்—மிகவிரைதல்.

வெருவரப் பொருத அந்தகா சுரனை
வீற்றிரு சூலவெம் படையாற்
சொருகியே குத்திக் கண்ணுதல் திருமுன்
தூக்கிநேர் சென்றவை அடைந்தான். (8)

2176. **வ**ள்ளிலைச் சூல வைந்நுதி பொருது
மடுத்துடல் கோத்திட அமரர்
எள்ளமேல் நான்று சுழலுமந் தகனை
யீர்ஞ்சடைச் கடவுள்கண் டிடத்தீ(து)
உள்ளதாம் அசுரன் துர்க்குணம் அனைத்தும்
ஒருவியே தற்பரன் கருணை
வெள்ளமீ தூர நோக்கிநீ யுளத்தில்
வேண்டுவ தென்கொலென் றுரைத்தான். (9)

2177. **அ**ங்கணு ! அடியேன் தனக்கு நீ கணங்கட்
கரசெனுந் தலைமையை யளித்தி
இங்குவேண் டுவதும் ஈதெனப் பெம்மான்
இசைந்துகா ணுதிபத் தியமே
புங்கவர் வியப்ப நல்கினன் உதரம்
புகுந்தசுக் கிரன்தனை வடுகன்
எங்கணும் உவப்ப விட்டனன் பிருகு
ஈசனை அருச்சனை புரிந்தே. (10)

2178. **ஓ**ங்குதன் பதமெய் தினன் ; அயன் நெடுமால்
உம்பர்ஈ சனையுமை யவளோர்
பாங்குற அருச்சித் திசைந்தபெண் உருவம்
பற்றறத் தணந்தவண் ஒல்லை
நீங்கியே தத்தம் பதமடைந் தனர்கள்
நிந்தைகூர் அந்தகா சுரனும்
ஆங்கம ரருக்கும் பெறற்கருங் கணங்க
ளாதிபத் தியமுமே அடைந்தான். (11)

---

2176. உரைத்தான்—வினவினன்; அல்லது, என்கொல் எனக் கேட்க உரைத்தான்,

# அத்தியாயம் 74.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### பண்டாசுரன் பூசித்தது.

ஒரு முறை சிவபெருமான் தேவியுடன் சிங்காரவனத்துக்குச் சென்றனர். அச்சோலையில் கற்பகத் தருக்கள் தழைந்தன; அறுமுகவேளுக்கு உகந்த கடம்பு, குருந்து முதலிய பலவகை மரங்கள் பொலிந்தன; சுரும்புகள் பாடின; மல்லிகை முதலிய மலர்கள் மணம் வீசின; நீர்நிலைகள் தாமரை முதலிய பூக்களுடனும் நீர்ப்பறவைகளுடனும் இலகின; மரங்களிற் பறவைகள் ஒலி எழுப்பின. இத்தகைய வனப்புக்களைப் பார்த்து வந்த பரமன் உமையம்மையுடன் ஒரு பெரிய ஆலமரத்து அருகே ஒரு சிங்காதனத்தில் அமர்ந்தார். அப்போது, அண்ணலை நோக்கிய அம்பிகை, 'இந்த ஆலமரத்தைப் போல நான் எங்குங் கண்டிலேன். இதன் வரலாறு என்ன?' என வினவ, இறைவன் "அம்பிகையே! இந்த ஆலமரம் பிரம கற்பமாகிய பிரளயகாலத்தில் பிரளய மட்டத்தினும் நூறு மடங்குயர்ந்திருக்கும். திருமால் இதன் இலை ஒன்றிற் குழந்தையாக உலகினை வயிற்றில் அடக்கித் துயில்வான். பிரளய முடிவில் அவன் உந்தியிலிருந்து நான்முகனைத் தோற்றுவித்துத் திரும்பவும் உலகைப் படைப்போம்' என்றார்.

இவ்வாறு பரமன் பகர்ந்து தம் குமாரரை நோக்கி இரு பறவைகளைப் பிடித்துவர ஏவினர். அவர்கள் கிளி யொன்றையும் அன்னம் ஒன்றையும் கொண்டு வந்தார்கள். அப்பறவைகள் அந்தி வண்ணர் அடியிணைகளில் வணங்கி ஒடுங்கி நின்றன. பெருமான் அவற்றை அருளுடன் நோக்கி 'நீங்கள் இங்கே என்ன செய்வீர்கள்?' என்று வினவினர். கிளி 'அண்ணலே! திருமால் முதலானோர்க்கு அளத்தற்கியலாத அடிகளின் புகழைப் பாராட்டுவேன். பொன்போல மலர்ந்து நாரிற் கட்டப்படாத மாலைகளுடனும் தங்கள் சடை போன்ற காய்களுடனும் இந்தச் சரக் கொன்றை அமரர்க்கு வரமளித்து நிற்பதையும் அடிகள் தேவியுடன் இக் கொன்றையைப் பிரியாமலிருப்பதையும் புகழ்ந்து பரவி இக் கொன்றையைப் பிரியாமல் வாழ்வேன்' என்றது.

அன்னம் 'பரம்பொருளே! அடியேன் எல்லா உலகங்களிலும் அலைந்து திரிந்தேன். இறுதியில் முன் செய்த நல்வினைப் பயத்தால் இங்கு வந்து அமுதனைய பொய்கையின் நீரைப்பருகி, அடிகளின் திருமுடியிற் பிரியாத அறத்தின் வடிவான கங்கையை அடிகளின் மனைவியெனப் பாராட்டி, அவள் பெருமையை வழுத்தி இந்த வனத்திடை வாழ்கின்றேன்! என்றது.

பெருமான் புன்முறுவல் செய்து அவைகளைப் போகுமாறு பணித்தார். உமையம்மையார் 'இறைவரே! கங்கையைத் தங்கள் மனைவியெனக் கூறிய போது புன்முறுவல் செய்ததேன்? என்று கூறி சிறிது ஊடிச் சிவபிரானது

இதயம் திடுக்கிடச் சென்றார். சென்றவர் ஓரிடத்திற் புழுதியைக் கூட்டி ஒருருவம் செய்து கொண்டு சிந்தனையின்றி யிருந்தார். சிவபிரான் பின்சென்று ஊடலைத்தணித்து அழைத்துச் சென்றார். அம்பிகை புழுதியாச் செய்த வடிவம் ஓரரக்கனுக உருப்பெற்றுக் கயிலை யருகிற் செல்லச் சிவ கணத்தவர் அவ்வரக்க னுக்குப் பண்டன் என்று பெயரளித்து, 'நீ தேவர்க்குப் பகைவன்' என்று விரட்டிவிட்டனர். பண்டன் சினந்து, இறைவனைப் பரவி நீண்டகாலம் தவ மிழைத்து அவரிடம் திருமால் முதலான தேவர்களின் வீரியத்தைப் பருகும் வரம் பெற்றான். அவ்வசுரனால் அமரர்கள் வீரியம் இழந்து தம் காதலிகளின் முகத்தை நோக்கவும் ஆற்றலின்றி வெட்கமுற்றனர். இந்த இடர்தீரச் சிவனைப் பூசித்தனர். இறைவன் 'உங்கள் வீரியங்களைப் பண்டாசுரன் உண்டான். இனி உங்கள் உயிரை யெல்லாம் ஆகுதி செய்து சருவசங்கரா யாகம் ஒன்று இயற்றுவோம். அந்த வேள்வியில் ஒரு சத்தி தோன்றுவாள். அவளைக் கொண்டு அந்த அசுரனை ஒழித்து உங்களைப் படைப்பிப்போம் என்று இயம்பினர்.

பிறகு, இறைவர் கூறியபடியே இயற்றப்பட்ட வேள்வியில் மலர்க்கணை யும் கரும்பு வில்லும் குங்கும நிறமுங் கொண்ட திரிபுரசுந்தரி வெளிவந்தாள். இறைவன் அவளை அனுப்பிப் பண்டாசுரனை மாய்த்தனர். அவளையே திரு மால் முதலான தேவர்களையும் அவர்களின் சத்திகளையும் உலகையும் படைத் திடுக என்று பணித்தனர். அவ்வாறே அரனருள் பெற்ற அந்த அம்மை யாவரையும் படைத்து, உமையம்மையாரிடம் ஒன்று பட்டாள்.

அதன் பின்னர் முத்தேவரும் முக்கண்ணர் ஆணையால் முத்தொழிலையுஞ் செய்து, பல்வகைப் போகங்களையும் அனுபவித்தனர். பண்டாசுரனே உருத்திரகணத் தலைமையைப் பெற்றான்.

---

## அத்தியாயம் 74.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### பண்டாசுரன் பூசித்தது.

### அறுசீர் விருத்தம்

2179. கலைவெண் மதியம் உமிழ்நிலவு
கடுக்கும் வெண்ணீற் றொளிபரப்ப
மிலையு மணிக்கண் டிகைமார்பின்
மின்முப் புரிநூ லிடைநுடங்கத்

---

2179. 'தலையும் மலையும் நிலமும் மலர்த்துணரும் உறழ் சூதன்'—''நில மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சி''—நன்னூல்—26.

துலையு மலையு நிலமுமலர்த்
துணரும் உறழ்கூ தன்சொலுமால்
நிலையுந் தவமும் பெறுமுநிவீர்
நீவிர் கேண்மின் ஒருகாதை. (1)

2180. ஒன்று சொலுமுன் னொருகாலத்
துமிழ்செந் தேறற் கலுழிவெள்ள
மன்றல் கமழும் இதழியந்தார்
வனையும் பவளச் சடிலஇறை
குன்று திரண்டு வளருமிளங்
கொங்கை வரைமா தொடுபின்னர்ச்
சென்றுள் ளுறையுள் மரீஇயகணச்
சேனை சூழப் புறப்பட்டான். (2)

2181. கரவாள் கட்கங் கொண்டயல்கங்
காளி துர்க்கை காத்திருபால்
வரவே பனுவ லாட்டிதுதி
வாழ்த்த மணிப்பூண் திருவெடுக்கத்
திரமா யடப்பை சசிபிடிக்கத்
தீர்த்தங் கவரித் திரள்வீசப்
பரமாங் கயிலா யந்துதிமேற்
பரிக்கக் கொடுபார்ப் பதிநடந்தாள். (3)

2182. விரைமெல் லிதழ்க்கோ மளஅனிச்சம்
மிதிக்குந் தொறுங்கொப் புளமாகு
மரையுள் அடிகன் றிடச்சிவப்ப
வருந்தி முலையுஞ் சுமந்துமெல்லத்
தரையின் பதம்வைத் திடவுடைந்து
தள்ளப் படுமன னமும்பிடியும்
இரையும் அறவெள் கிடநடக்கும்
இமய மயிலை நோக்கினனால். (4)

2183. சாற்றும் புவனம் பிரகிருதி
தன்னில் நூற்றே டெட்டெட்டாம்
தேற்று மசுத்த மாயைதனிற்
சேரும் புவன மூவொன்பான்

---

2181. தீர்த்தம்—கங்கையாதிய தீர்த்த கன்னியர்,

போற்றுஞ் சுத்த மாயைதிகழ்
புவன முப்பான் மூன்றிவையில்
ஆற்றும் அறமெண் ணுன்குமையாள்
அனந்தம் வளர்க்கு மலர்க்கரமே. (5)

2184. என்று கருதிக் கருணைவள்ளல்
இமிழ்தேன் துளிக்குந் துழாய்மார்பன்
மன்றல் கமழுஞ் சரோருகத்தே
வானோர் முதலாஞ் சராசரத்துக்(கு)
ஒன்று படவேய் வரமனைத்தும்
உதவும் மலர்க்கை யாற்பிடித்துச்
சென்று மலர்ச்சிங் காரவனஞ்
செல்வி யுடனே படர்ந்தனனால். (6)

**சிங்கார வன வர்ணனை 2185—2198**

2185. மடையுங் குரம்புஞ் செழுந்தாதும்
மருவல் லியுமென் றுடைத்தொழுகிப்
புடையும் பெருக்கா றெடுத்துவெள்ளம்
புரளுந் தரங்கச் செந்தேறல்
பெடையுஞ் சுரும்பும் வாய்மடுத்துப்
பெரிதுண் டுண்டாட் டயர்ந்துமுரன்(று)
அடையு மலர்க்கற் பகத்தாரு
அலங்கல் அரிசந் தனந்தருவே. (7)

2186. சந்தா னங்கொத் தலர்பாரி
சாத மலர்ப்பைந் தழைகுழைக்கும்
மந்தா ரஞ்சுற் றும்புரிசை
மருதிப் பொதும்ப ராரைவளர்
ஐந்தா ரெழுந்தெண் டிசைப்புறமும்
அண்ட முகடுந் தழீஇக்கலந்து
கொந்தார் நறுமென் மலரருவி
கொழிக்குந் தேறல் பிலிற்றுமம்மா. (8)

---

2184. சரோருகத் தே—தாமரைத்தேவு—பிரமன்.

2185. குரம்பு—வரப்பு. அலங்கல்—தளிர்.

2186. ஐந்தார்—ஐந்தாரு—தேவலோக விருக்ஷங்கள் ஐந்து—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம்.

2187. குருந்து சரளஞ் செண்பகம்பொற்
கொன்றை கமழ்குங் குமங்கோங்கு
செருந்தி குரவஞ் சுரபுன்னை
திமிசு ஞாழல் அறுமுகவேள்
பொருந்து கடம்பு வெட்சிபன்னீர்
புன்னை காசை பாதிரிதான்
திருந்து மலர்க்குஞ் ருத்திவன்னி
தேறல் கொழிக்கும் அசோகமுமே. (9)

2188. நறைமல் கியமா நோக்கமுல்லை
நகைக்க மிளிர்சண் பகம்உடலின்
உறையும் நிழல்பட் டிடப்பாலை
யுறவு செய்ய அசோகுபதம்
அறையத் திகழ்பா திரிநினைக்க
அலங்கு புன்னை நிருத்தமிட
இறையெண் குரவு தழுவக்கோங்
கினைய மகிழ்முத் தங்கொளவே. (10)

2189. மன்றல் கமழுஞ் சததளச்செவ்
வந்தி குடமல் லிகைமலர்க்காத்
தென்றல் தவழுங் குறுமுலவைச்
சிறுசண் பகம்பைங் கொடிநெடுந்தாள்
துன்று தவள இதழ்ப்பிச்சி
சுரும்பார் வெண்டோட் டிருவாட்சி
வென்று முறுவல் கடுக்குமுல்லை
வெண்சங் கனைய மல்லிகையே. (11)

---

2187. சரளம்—தேவதாரு. திமிசம்—வேங்கை. 'அறுமுகவேள் பொருந்து, கடம்பு'—"தண்டலை பொதுளு நீபத் தண்ணிழற்...பள்ளி"—கந்• புரா—திருஅவ. 118.

2188. "ஏடவிழ் மகிழ் சுவைக்க, எழிற்பாலை நண்பு கூடப்,
பாடலம் நிந்திக்கத் தேம் படிமுல்லை நகைக்கப் புன்னை,
ஆட, நீள் குரா அணைக்க, அசோகுதைத் திட, வா சந்நி
பாட, மாப் பார்க்க, வார்சண் பகம் நிழல் படத் தளிர்க்கும்."
—சூடாமணி நிகண்டு.

எண்மா தவிசண் பகம்பாலை புன்னை எழிற் படலி
கொண்மா மகிழ்(மர)மாவொ டசோகு குராமுல்லை மின்
பண்பாட னீழற் படனட்ட லாடற் பழித்தலுண்ணல்
கண்ணேக் குதையணைத் தல்சிரித் தற்கலர்க் காடுறமே.
—ரத்தினச்சுருக்கம்.

2190. அணங்கி நுணங்கு மிடைசுமத்தற்
கரிதாய்ப் புடைத்துப் பணைத்தெழுந்து
சுணங்கு விரிந்த களபமுலை
துணையெள் ளியசக் கரவாகம்
நிணங்கொள் அயிலம் புறழ்கருங்கண்
நெடுமை யிகழுஞ் சகோரமுகில்
இணங்கும் அளகத் தேன்துளிவேட்
டிருக்கும் எழிற்சா தககுலமே. (12)

2191. துளிருண் குயில்பூ வைபுறவு
சரணா யுதங்கா டையசுண
மிளிர்தண் கயங்கூர் சிரலையன்றில்
வெடிவால் வலியன் கரிக்குருவி
களிவண் டினங்கொண்ட லாத்திகுக்கில்
கலிங்கம் போதா கவுதாரி
உளியின் றுருவு மரங்கொத்தி
ஓங்கும் அண்ட பேரண்டம். (13)

2192. வரிவண் டுழுமெல் லிதழ்முறுக்கு
மலருஞ் செந்தா மரைக்குலமும்
விரிவெண் டகட்டுத் தேறல்கமழ்
வெண்டா மரையும் முரன்றுவலம்
புரிநின் றௌிரா யிரந்தகட்டுப்
பொற்றா மரையுங் குவளையுந்தேன்
சொரியுந் தகட்டிந் தீவிரமுந்
துலங்கு நெய்தற் குலங்களுமே. (14)

2193. மறையு மிருதி விதிகளுநூல்
வழிவாய் முழங்கு சுரிசங்கம்
அறையுஞ் சுருதி யுபநிடத
அந்தப் பொருள்தேர் வலம்புரியும்

---

2190. அயில் அம்பு உறழ் கண்.

2191. சரணாயுதம்—காலாயுதம்—கோழி: சிரலை—சிச்சிலி; குக்கில்—செம்போத்து; கலிங்கம்—வானம்பாடி; போதா—பெருநாரை.

2193. சிறைத் திமிங்கிலம்—திமிங்கிலத்தின் ஒருவகை; திமிங்கில கிலம்—திமிங்கிலத்தை உண்ணும்பெரியமீன்.

இறையும் பசுவும் பாசமுமாய்ந்
தேத்திப் புகலுங் சலஞ்சலமுஞ்
சிறையம் பருதித் திமிங்கலமுந்
திமிங்கி லகில மகரமுமே. (15)

2194. அலங்கு மலர்ப்பொற் றமரைத்தண்
டடுத்துக் கறிக்கும் பசும்பொனனம்
துலங்கும் மதிய நிலவுமிழ்வெண்
தூவி அனம்செங் கால்நாரை
விலங்கி உகளும் வரிக்கெண்டை
விழுங்குந் தாரா மடுகொட்கு
மலங்குண் அலகு திறந்தெடுத்து
வருபோ தாவண் டானமுமே. (16)

2195. செய்ய மணிப்பொற் சுடிகைமுடிச்
சேடன் உறைபா தலமளவும்
துய்ய புனல்நின் மலமாகித்
துலங்கு மணியும் நித்திலமும்
ஐயம் அறநோர்ந் தறிந்திடவே
அறவோ ரிதயம் எனக் காட்டும்
மையில் தரங்க மணிகொழித்து
வரன்றி எறியும் வாவிகளே. (17)

2196. குயில்பைந் தளிர்கோ திக்கறித்துக்
குறிஞ்சி பாட அளிமிழற்ற
மயில்முன் பரத நடஞ்செயப்பூ
வையும்பைங் கிளியுஞ் சுருதி சொல
கயில்மந் திகளொக் கடிக்க அனம்
காணக் கணிபொன் கொடுக்கமுறை
பயிலுஞ் சுத்த விஞ்சையர்க்கொப்
பாஞ்சிங் கார வனமாமால். (18)

---

2194. மலங்கு—ஒருவகைமீன்; வண்டானம்—நாரைவகை.

2196. கயில்...ஒக்கடிக்க—கையால் தாளம்போட; அனம்—அன்னம்; கணி—வேங்கைமரம்.

2197. வளங்கொள் நரந்தம் தமரத்தை
வாசங் கெழுபொற் செம்பீரம்
துளங்கும் இரத எலுமிச்சை
தும்பி முகனார் விரவுசெம்பு
விளங்கு கனிமா துளைகொமட்டிப்
மிகுமா துளைசெங் குளஞ்சி நெல்லி
உளங்கொள் கதலி இலஞ்சிபலா
உயர்தெங் கமுகு தேமாவே. (19)

2198. சந்து கமழும் மரகதப்பா
சடைமல் கியபச் சிலையுநறுங்
கொங்கெதங் கணுங்கான் நிறை மருவுங்
கொழுந்துங் கதிர்ப்பச் சையு நெடுந்தாள்
கந்து குலவு சவரநிவர்
கற்றை வேரும் பரிமளஞ்சேர்
இந்த வகைய வனமனைத்தும்
இமய வரைமா துடன்பார்த்தான். (20)

2199. அங்கண் அடவின் நனந்தலையில்
அளத்தற் கரிய தழைகுழைக்கும்
பொங்கர் உலவைப் பாசடைகள்
பொதுளி அண்ட முகடணவித்
திங்கள் தவழ உமைமலர்க்கைச்
செய்ய பவளம் உறழ்கனிகள்
எங்கும் உலவை நெருங்கவளர்
இறும்பூ துடைத்தாம் வடதருவே. (21)

2200. அண்டம் அனைத்தும் ஈன்றுமக
வருந்தா முலைமென் மேற்புளகங்
கொண்டு சுணங்கு கனிந்தழகு
கொழிக்குங் கன்னி உமையுடனே
வண்டு முரலும் இதழியந்தார்
வள்ளல் வடதா ருவின்மூலத்(து)
எண்டி சையும்போற் றிடமகிழ்ந்தங்
கிருந்தான் திப்பி யாசனமே. (22)

---

**2197.** தும்பி முகனார் ... மாதுளை—பந்தயத்தில் விநாயகர் பரிசுபெற்ற மாதுளை. குளஞ்சி—கிச்சிலி.

**2198.** கான்—வாசனை; சவரம் ..சாமரை; நிவர்தல்—ஓங்குதல்.

2201. **வி**ரைமென் மலர்த்தா ருகவனத்தின்
மின்னார் வளைக்கை கழலவுடை
அரையின் நெகிழ மயல்பூட்டி
அழித்தோ னென்றோ அங்கணனை
வரைமெல் லியலஞ் சனவிழியுண்
மதர்த்துக் களிகூர்ந் திடமகிழ்ந்து
நிரைபுன் முறுவல் சிறிது செய்து
நெடிது நோக்கிப் புகல்கின்றாள். (23)

2202. **க**ண்ணன் அயனு தியரளத்தற்
கரிய விளையாட் டபரிமிதம்
பண்ண நினைக்கும் எங்கோவே!
பரவை உடைய முழுதுலகத்(து)
எண்ணம் வியப்ப இத்தருப்போல்
எங்க ணுங்காண் கிலனிதென்கொல்
திண்ணம் உரைத்தி யெனக்கேட்குஞ்
செல்விக் கமலன் செப்புகின்றான். (24)

### வடதாரு வரலாறு

2203. **கோ**ஞ்சு கிளிமென் மழலைமொழிக்
குயிலே! இந்த வடதாரு
மஞ்சு திகழ வளர்ந்ததினி
மலரோன் பிரள யத்துத்தீ
விஞ்சு முகங்கோத் திடிதினிலும்
மிக்க நூறு மடங்குயரம்
எஞ்சல் அறவோர் இலையில்மக
வெனமால் உறங்கும் இருவிழியே. (25)

2204. **அ**ந்த நெடுமால் அறிதுயின்ற
அல்லின் விடியும் வைகறையிற்
சிந்தை மகிழ அரவிந்தத்
தேவைப் படைப்பான் எமைநினைக்கும்
நந்தல் அறநாம் அவனுடைய
நாபிக் கமல மலர்முன்போற்
சந்த மருவி ரணியகர்ப்பன்
தனையுண் டாக்கிச் சகங்கொடுப்போம். (26)

2204. படைப்பான்--படைக்க, இரணிய கர்ப்பன்—பிரமன்.

2205. **அ**ன்ன கமலக் கடவுள் தொல்லை
அகில புவனம் அனைத்தினையும்
தன்னில் விரையப் படைப்பனென்று
தரள வடமெவற் பிணைசுமக்கும்
மின்னை முகநோக் குபுவுரைத்து
விமல பதியாம் பிறைமவுலி
முன்னர் அவள்பா லகரான
மூவர் தம்மை விளித்துரைக்கும்; (27)

2206. **கோ**டும் பிறழ மணிவரன்றிக்
கொழிக்குந் தரங்க மலர்வாவி
யூடு வதிந்த பறவைகளின்
உபயங் கொடுவங் துதவுமென
நாடு மவரப் படியென்று
நணுகி நெடுவாற் பசுங்கிளியும்
நீடு தவள ஓதிமமும்
நிமிடங் கொடுவங் தெதிர்விடுத்தார். (28)

2207. **ப**றவை யிரண்டும் புழைமுகத்தாற்
பரிந்து நோக்கிக் களிகூர்ந்து
சிறகர் உளர்த்தி ஒருசிறகு
சேர விரித்துச் சுற்றிவலங்
குறுக வளைத்துப் புன்றலைகள்
குப்புற் றலகும் பொறிதாளும்
மறுகப் புரண்டு நீட்டியுடல்
வளைத்தங் கெழுந்து வணங்கினவே. (29)

2208. **உ**ள்ளம் மகிழ்ந்து வினயத்தோ
டொடுங்கி ஒருபால் தலைசாய்த்துக்
கிள்ளை யுடன்வெண் தூவியனம்
கீர்த்தி உரைத்தங் கிருந்தனவாற்
பிள்ளை மதிச்செஞ் சடிலமுக்கட்
பெருமான் இரண்டு பறவையும்பார்த்(து)
எள்ளல் அறவிங் கெதுசெய்வீர்
என்னக் கிளியேத் துபு பகரும். (30)

2206. உபயம்—இரண்டு.

2207. புழைமுகத்தான்—விநாயகர். புழைக்கை—தும்பிக்கை; யானை.

2209. கண்ணன் முதலோர்க் களப்பரிதாம்
கணிப்பில் உனது புகழ்சீர்த்தி
பண்ணில் எழுதாக் கேள்வியினாற்
பாராட் டிப்பாட் டிளமூரல்
நண்ணு கனகத் தோடொருவா
நாரிற் பிணியா மலர்த்தாரும்
அண்ணல் சடிலம் உறழ்காயும்
அமரற் குவரம் அளித்துநிற்கும். (31)

2210. அடிகள் அதனிற் பிரியாமல்
அகிலம் அனைத்தும் ஈன்றவரைக்
கொடியோ டிருக்கும் என்பதனைக்
குறித்திங் கடியேன் முற்செய்தவம்
நெடிது குயிற்று பெரும்பலத்தால்
நினது மலர்மொய் வனஞ்சிறக்கும்
படிநின் றொளிருங் கடுக்கைமரம்
பரவி யிருப்பேன் என்றதுவே. (32)

2211. தவள மணிச்சூட் டனம்பரவிச்
சாற்று மலர்த்தேத் திகிரி யண்ணல்
கவள இணைக்கோட் டிபவெருத்தக்
கடவுள் முதலாம் பரலோகம்
எவள வுளதெங் கணுந்திரிந்தேன்
எண்ணில் பெரும்புண் ணியபலத்தால்
பவள மணிப்பொற் குடிலசடைப்
பரமா ! உனது பதமடைந்தேன்; (33)

2212. இறந்து படரா வகையுயிர்கட்
கிரங்கி யருள்தெள் ளமுதமெனச்
சிறந்து கமழும் மலர்வாவித்
தெண்ணீர் பருகி எண்டிசையும்
பறந்து வருந்தா திருந்துனது
பவள மணிக்கோ டீரமென்றும்
அறந்தன் வடிவாம் நிலையமென
அணைந்த மந்தா கினிதனையே, (34)

2209. நிற்கும்—(கொன்றை) நிற்கும்.

2212. கோடீரத்தை அணைந்த மந்தாகினி,

2213. பொருவில் உனது மனைவியெனப்
போற்றி யவள்தன் மான்மியமே
கருதி வழுத்தி யெஞ்ஞான்றுங்
கமழ்சிங் கார வனத்திடையே
மருவி யிருப்பேன் என்னலொடும்
வள்ளல் கிளியோ டனம்நோக்கித்
தருவில் இனிச்செல் லுதிரென்றே
சற்றே நகைத்து விடுத்தனனால். (35)

2214. அன்ன பகலூ டற்புலவி
அன்றித் துனிவெஞ் சினம்பெருகக்
கன்னல் மொழிச்செவ் விதழ்க்கருங்கட்
கவுரி யெழுந்தங் கணன்வதனம்
பின்னம் அறநோக் குபுபுகலும்
பெம்மான் கங்கை நின்தேவி
என்ன எகினம் சொலநகைத்த
தெனவென் றவண்விட் டெழுந்தனளால். (36)

2215. செம்பொற் சிலம்பு பரிபுரமேற்
சிறுமென் குதலைச் சதங்கைதண்டை
பைம்பொற் சரணக் கடகமுறை
பதறி யிரட்டப் பிடிவெருள
நம்பர்க் கிதயந் திடுக்கெனப்பொன்
நளின மலர்ச்சீ றடிசிவப்ப
உம்பர்க் குலகந் திருந்துசெல்வம
உதவம் பிகைநீ ளிடைநடந்தாள். (37)

2216. அங்கண் மறைந்தோர் இடத்தில்விளை
யாட்டாற் புழுதி அதர்வரன்றிச்
செங்கண் வடிவப் புத்தளியாய்ச்
செய்ய அதுசீ வன்கொணரப்
பொங்கு மகிழ்ச்சி உமையெழுந்த
போதம் பிகைசிற் றடியெடுத்தே
இங்கி தமதாய் அமிவைத்த
இறைபின் தொடர்ந்தே யெதிர்நடந்தான். (38)

---

2216. எழுந்தபோது அம்பிகை; அமி—அம்மி.

2217. விரைந்து படர்ந்து பின்தொடர்ந்து
வெகுளேல் என்றம் பிகையடைந்தே
இரந்து குறைபே சிச்சினம்விட்
டிணங்க முகமன் சொலியழைத்துப்
பொருந்தும் மணிப்பொன் குயிற்றுமந்தப்
புரத்திற் கொடுபோய் மகிழ்ந்தனன்;முன்
துரந்து மதனை யெரித்தபொடித்
துகளாற் சமைத்த புத்தளியே. (39)

2218. புருட வடிவாய்த் துர்க்குணமாய்ப்
புனிதன் கயிலை அணித்தடையத்
திருகு சினத்தாற் கணேந்திரர்கள்
செயிர்த்து நோக்கிச் சுரர்பகைத்தீ
அருகு மருவப் படாதுபண்டன்
ஆகும் பெயர்கொள் அசுரன்உள்ளம்
வெருவ அகல்தி யென்றோட்டி
விட்டார் பண்டன் மீண்டனனால், (40)

2219. சீற்றம் அளத்தற் கரிதாகித்
திரும்பி வருபண் டாசுரன்முன்
கூற்றம் மடிய வுதைத்தபதக்
குழகன் ஆன பசுபதியைப்
போற்றி வயிராக் கியத்தினொடு
பொருவில் அகோர அருந்தவங்கள்
ஆற்றற் புதாயு தப்பருவம்
ஐந்திந் தியமுஞ் செயித்திழைத்தான். (41)

2220. பருதி அனந்த கோடிவெளிப்
பட்ட தெனமுக் கட்குழகன்
சுருதி வழுத்த அந்தரத்தில்
தோற்று தலும்பண் டாசுரனோர்

---

2217. புத்தளி—(தருப்பையாற்செய்த) உரு.

2218. (நீ)சுரர் பகைத்தீ.

2219. ஆற்ற அற்புத அயுதப் பருவம்; அயுதம்—பதினாயிரம்.

கருதி யிறைஞ்சி எந்தாய்!பங்
கயன்மால் மகவான் சுரர்பகைஞர்
விருதின் அவர்வீ ரியங்களெலாம்
விரைந்துன் அருளால் அருந்துதற்கே, (42)

2221. வரந்தந் தருள வேண்டுமென
வள்ளல் இவன்முன் அருந்தவங்கள்
திருந்து நெடுநாள் இழைத்ததனைத்
தேர்ந்து கேட்ட வரமனைத்தும்
பொருந்த அளித்தான் அவைபெற்றுப்
போதன் ஆதி சுரரிதயத்(து)
இருந்த விறல்வீ ரியங்களெலாம்
இமிழ்செந் தேறல் எனநுகர்ந்தான். (43)

2222. பிரமன் முதலாம் சுரரிதயம்
பெருத்த வலியாம் வீரியங்கள்
உரம தறவே கெட்டதனால்
உடன்சேர் தமது மனைவியர்பால்
திரம தெனுமா லற்றுநொந்திச்
செயல்கள் பண்டா சுரன்புரிந்த
வரம தெனவே யறியாமல்
மயங்கி மெலிந்து வருந்தினரால். (44)

2223. இந்த இடர்தீர்ந் திடச்சாந்தி
ஈசன் வழிபா டென்றயன்மால்
ஐந்து தருநீ ழற்கடவுள்
ஆதி திசைப்பா லகர்குழுமிப்
புந்தி மகிழ்ந்தீ சன்கயிலைப்
புனித வரைசேர்ந் திலிங்கத்தில்
உய்ந்து வரம்பெற் றிடப்பதினு
றுபசா ரத்தால் அருச்சித்தார். (45)

2224. செங்கை மலர்கூப் புபுநின்று
தேவர் தேவே! அடியோங்கள்
சங்கை அறவீ ரியந்தணந்தோந்
தபக்கா ரணமே தெனப்பெம்மான்

---

2221. இதயம்—இடம் என்னும் பொருளில் வந்துளது.

2224. தப—கெட.

பங்க யனைமா யனைச்சுரரைப்
பரவு முநிவோர் தமைநோக்கி
அங்கை அமைத்து வீரியங்கள்
அனைத்தும் பண்டா சுரன்நுகர்ந்தான். (46)

2225. பிழைக்கும் பண்டா சுரனிமித்தம்
பிரள யம்போல் இப்போதும்
இழைக்கும் சருவ சங்கார
யாகம் புரிகின் றேமதனல்
தழைக்கும் அத்தீ யினிற்கடிது
சகல ஆன்ம கோடியையும்
குழைக்கும் திரவி யாகுதியாய்க்
கொண்டோ மங்கள் குயிற்றிடுவோம். (47)

2226. குண்டத் திடையோர் சத்திவந்து
கொடிய பண்டா சுரன்றனுயிர்
உண்டக் கணமே உங்களையும்
உண்டாக் குவளீ துண்மையென்றே
அண்டர்க் குரைக்க மலர்க்கடவுள்
ஆதி யர்களப் படியேயென்(று)
எண்டிக் கினுஞ்செல் சத்திகைகால்
இடத்தில் அறவோய்ந் திருந்தனரால். (48)

2227. அங்கைத் துணையும் மலர்ப்பதமும்
அசந்து சிறிதும் சத்தியற்று
மங்கைப் பருவத் துணைவியர்பால்
மனமற் றொடுங்கி வறிதிருந்தார்
கங்கைச் சடையோன் வேள்விபுரி
கடவுள் ஆகிக் கலசமணிக்
கொங்கைக் கவுரி நங்கையுடன்
கோர அனலை எழுப்பினனல். (49)

வேறு

2228. கோத்தலர் அயன்எறி சக்கர அரிசுரர்
கொற்றவர் பருதியினோ(டு)
இத்துயர் அமரர்கள் புற்சமிதைகள் கணம்
எட்பொரி திரவியநேர்

---

2228. அரி அழல்—எரிஅழல். வச்சிர முடியவன் = சிவன்.

ஒத்திடு கலைமதி சுத்தநெய் அவியுல
குற்றபல் உயிர்பவமாய்
வைத்தரி அழலிடை இட்டனன் அவிரொளி
வச்சிர முடியவனே. (50)

2229. சிந்தைசெல் பொறிபுலன் வென்றிடு முனிவரர்
தென்புல மிசையுறைவோர்
கந்திரு வர்கள் துணை வெண்பிறை எயிறுரி
கஞ்சுக உரகர்கள் போர்
வெந்திறல் அவுணர்கள் மைந்தர்கள் பறவைகள்
விஞ்சுபன் மிருகமொடே
அந்தமில் கதிபெறு சங்கம நிலையுயிர்
அங்கணர் அறவிடுமே. (51)

### எழுசீர் விருத்தம்

### திரிபுரசுந்தரியின் தோற்றம்

2230. புண்டரிகன் நச்சரவு கண்படைகொள் பச்சைமுகில்
புங்கவர்கள் அட்ட தழல்கூர்
குண்டவிடை புட்பவிசி கங்கழைவில் வக்ரமுனை
கொண்டவல கெற்றிடுபொனாள்
முண்டக மலர்க்கைகொடு குங்கும நிறப்படிவம்
முந்துகரு ணைப்ப ரவைமூ
அண்டமொடு சத்திநிமி டந்தனில் உதித்தருளி
அங்கணனை யுற்ற றைகுவாள். (52)

### அறுசீர் விருத்தம்

2231. பல்லுயிரும் புரந்தருளும் பகவனே !
யான் செய்தொழில் பகர்தி யென்ன
வில்லுமிழும் மணிக்குழைபாய் விழியுமைகேள்
வன்அவளை வியந்து நோக்கிச்

---

2229. அங்கணர்—சிவன்.

2230. புங்கவர்கள் அட்ட—புங்கவர்களை அட்ட. புட்ப விசிகம்—புஷ்ப பாணம். கழை—கரும்பு. பொனாள்—பொன்னாள் ''பீதவர்ணா''—லலிதா—507. பிங்கலை—திருப்புகழ். ''பஞ்சபாணம் தனுக் கரும்பு...செம்மை யம்மை. நாமம் திரிபுரை''—அபி. அர். 73.

சொல்லுமிகு விறல்படைத்த சத்தியே!
ஆன்மாக்கள் சுக்கி லங்கள்
ஒல்லைநுகர்ந் ததிசோர மானபண்டா
சுரன்தனைநீ உற்று நோக்கி, (53)

2232. அனைத்துயிரும் இக்கணங்காத் தருள்பொருட்டாய்
அவன்தனைமாய்த் தருள்தி என்ன
நினைத்தவளப் படியென்றே கண்ணுதலா
ணையைச்சிரத்தில் நெடிது கொண்டே
இனைத்தெனவென் றுரைக்கரிய விறல்சேர்பண்
டாசுரனை யெதிர்த்தோர் பாணந்
தனைத்திருகு வெஞ்சினத்தால் விட்டுவிரைந்
தவனுயிர்மாய்த் தாளவ் வேலை, (54)

2233. ஆதரங்கூ ரண்ணல்சொலும் சத்தியே!
நீயருள்மூன் றண்ட மீது
வேதனெடு மாலரன்மூ வரைப்படைத்து
வாணிதிரு விமலை யான
மாதரையும் படைத்தவர்கள் மனைவியெனக்
கொடுத்தவரால் வையம் நீயிப்
போதுபடைத் தளித்தழித்தி என்னஅவள்
சிவனாணை புனைந்து கொண்டே, (55)

2234. அன்னையெனுஞ் சத்தியுரு அண்டமுழு
தும்உதவ அளவி லாத
பன்னருநா காபரணம் முதலான
பணிமுந்நூல் பாய்ந்தி லங்கக்
கன்னல்மொழி உமையவள்பால் கருணையுட
னேயுகந்த கடவு ளே! நீ
சொன்னமொழி அடியேற்குன் சுருதிவழி
நெறிகாணத் தோற்று விப்பாய். (56)

2235. வந்திடுமூ வரும்பூசா மான்மியத்தாற்
படைத்தளித்து மாய்த்தெஞ் ஞான்றும்
இந்துமுடி யோனாணை யாலுண்டாம்
அவரவர்தாம் எண்ணில் போகம்

2234—2235. இவை நடுவில் பாடல் விட்டுப்போயிருக்கலாம்.

அந்தமிலா துண்டுபர மானந்த
சிவபோகம் அனுப வித்தார்
சுந்தரியாற் கண்ணுதல்முன் வதைத்தருள
இறந்தபண்டா சுரன்ப டர்ந்தே. (57)

2236. பண்ணவர்க்கும் அனுகரிதாம் உருத்திரன்தன்
காணுதி பத்தி யத்தை
நண்ணியனே கங்கணங்கள் உடன்கூடி
உமைகோன்முன் நாளும் மேவி
விண்ணவர்கள் சேவிக்க இருக்கின்றான்
யாதொருத்தி விமலை பங்கில்
உண்ணிறைந்து புறப்பட்டே ஈசனழல்
ஓமகுண்டத் துதித்தாள் மாதோ. (58)

வேறு

2237. நீலமதி மண்டல வதனம் இரங்கிய
கயல்விழி செங்கனிவாய்
மலைநிகர் கொங்கைகள் சிறிய மருங்குல்பொன்
மலரடி அங்கையின்மேல்
நிலைபெறும் அங்குசம் வருகயி றைங்கணை
நிமிர்புல கண்டமதாம்
சிலைகொடு சங்கரன் எரியிடை வந்தருள்
திரிபுர சுந்தரியே. (59)

2238. என்றுல கந்தொழு கின்றவ ளுஞ்சடை
யிந்து வணிந்தபெமான்
மன்றல் விரிந்தரு ளுஞ்சர
ணங்களில் வம்பலர் கொண்டெதிர்தூய்
நின்று வணங்கி விரைந்து நடந்துதன்
நெஞ்சம் மகிழ்ந்துமைபால்
ஒன்று படும்படிச் சென்று பொருந்தி
உகந்து சிறந்தனளே. (60)

---

2237. பு(ல்)லகண்டம்—கரும்பு.

2238. பெமான்—பெம்மான்.

வேறு

2239. நாதன் தனது மகத்தழலின்
நாவிற் பண்டா சுரநிமித்தம்
ஓதும் அயன்மால் ஆதிசத்தி
ஓம சமித்தாய் வேள்விசெயும்
போது விரைந்து வந்ததிரி
புரையாற் பண்டா சுரனைவதைத்(து)
ஏதம் தவிர அவளான்மீண்
டிமையோர் உதிக்க எழுப்புவித்தான். (61)

---

# அத்தியாயம் 75

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### எழுமுனிவர் வேள்வி—இரத்தாசுரன், இரத்த பீஜாக்கன், பஞ்சராவணர் வதை.

மூன்னொரு காலத்தில் இந்திரன் சபைக்கு எழுமுனிவரும் வந்தனர். அவர்களை வரவேற்று இந்திரன் அசுரர்களால் நேரும் இடையூறுகளை எடுத்துக் கூறி அசுரர்களை அடக்க வேள்வி யொன்று புரியவேண்டினன். முனிவரர்கள் "வேள்வி புரிவதனால் எங்கள் கடமைகள் சரியாக நடவாமற் போகுமே" என்றனர். அதற்கு இந்திரன், 'நீங்களோ மெய்ஞ்ஞானிகள், உங்களுக்கு நியதி வேண்டுமென்பது அத்துணை அவசியமன்று' எனக் கூறிப் பின்னும் பணிவுடன் வேண்டினன். எழு முனிவர்களும் ஒப்புக் கொண்டு வேள்விச் சாலைகள் எடுப்பித்துத் தனித்தனியே 'இராக்கத வதம்' எனும் யாகத்தைச் செய்தனர். அப்போது யாக குண்டங்களிலிருந்து இரத்தாசுரன், இரத்தபீசாக்கன், பஞ்சராணவர் என்னும் எழு அசுரர்கள் தோன்றி முனிவர்களைத் துரத்தி யடித்தனர். பின்பு அவர்களை விட்டு விட்டு இந்திரன் முதலிய தேவர்களைப் புடைத்தனர். முனிவர்கள் கயிலையை அடைந்து இறைவனைப் பூசித்தனர். சிவபிரான் வெளிப்பட்டு, இந்திரன் தனது போகத்துக்காகச் செய்வித்த வேள்வி விபரீத பலனைத் தந்தது' என்று விளக்கிக் குண்டோதரனையும் உமையிடமிருந்து கொற்றவையையும் அந்த அசுரர்களை வதைக்கும் பொருட்டு விடுத்தார். கொற்றவை தன் நாவிலிருந்து காளியைத் தோற்றுவித்தனள். காளி இரத்தாசுரனையும் இரத்தபீசாக்கனையும் பற்றி அவர்கள் உதிரத்தைப் பருகி ஊனையுந் தின்றாள். அதனால் காளி செருக்கு மிகுந்து உலகை வருத்தத் தொடங்கினள். அதைக்கண்ட சிவபிரான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்து அவள்

செருக்கை அடக்கினர். பின்பு கொற்றவையும் காளியும் தேவியிடம் அமர்ந் தார்கள். குண்டோதரன் சிவபிரான் ஆணைப்படி பஞ்சராவணர்களை வதைத்துச் சிவசந்நிதியை அடைந்தான். பிறகு திருமால் முதலானவர்களும் முநிவர்களும் தத்தம் இருப்பிடம் அடைந்தனர். அயனும் அரியும் இறைவனைப் பூசித்து இன்பமுற்றனர்.

ஆகையால், சிவபூசனை யாவற்றையும் நல்கும். சிவபூசனையின் மான் மியத்தைச் சொல்வோரும், கேட்போரும், எழுதினோரும், பூசிப்போரும் தந்தை, தாய், மனைவி, மக்கள், முதலிய எல்லாத் தமர்களுடன் சகல போகங்களையும் துய்த்து இறைவன் திருவடி நீழலைச் சேர்வார்.

---

## அத்தியாயம் 75.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### எழுமுநிவர் வேள்வியும், ரத்தாசுரன், ரத்த பீஜாக்கன், பஞ்ச ராவணர் வதையும்.

### எழுசீர் விருத்தம்

2240. பலகலை யனைத்தும் விதிமுறை யுணர்ந்து
பதிபசு பாசமே அளித்துள்
அலமரு கொடிய இந்தியஞ் செயித்தே
அருள்புரி சூதமா முநிவன்
மலர்தலை யுலகிற் சராசரம் அனைத்தும்
வாழ்கவே நைமிசா ரணியத்
தலமிசை மருவு சவுனகா தியர்க்குத்
தற்பரன் காதைகட் டுரைப்பான். (1)

2241. முன்னொரு காலத் தீரிரு மருப்பு
முளைத்தவெம் பகட்டெருத் தத்து
மின்னவிர் குலிசப் படைவல னேந்தும்
விண்ணவ ரிறையரும் போகம்
இன்னமு தெனத்துய்த் திருந்திடும் எல்வை
எழுமுநி வரருமே துறக்க
மன்னனைக் காண்பான் வந்தனர் மகவான்
மலர்க்கரங் கூப்புபு மொழிவான். (2)

2242. **அ**ருந்தவ முநிவிர்! நீவிரெல் லோரும்
அடைந்ததால் அடியனுய்ங் தனனேர்
வரந்தர வேண்டும் அமரர்கள் நரர்கள்
மற்றுமே தென்புலத் தோர்கள்
இருந்துநட் பாக வதிந்தனர் அசுரர்
இராக்கதர் பிசாசர்கள் இணங்கப்
பொருந்திமே வினர்கள் அவர்களில் அசுரர்
பொருந்தலர் ஆகையால் விரைந்தே, (3)

2243. **ஏ**ங்களுக் கிடுக்கண் புரிந்தனர் அந்த
இடரெலாம் அகற்றிட இருடி
புங்கவ ராக வந்தருள் புரிந்தீர்
பொருக்கென நீவிரெல் லோரும்
சங்கையில் அமரா வதிநக ரடைந்து
சமரிராக் கதவதை நிமித்தம்
எங்கணு மியாக மண்டபம் அமைத்துள்
எரிதழற் குண்டமும் வகுத்தே, (4)

2244. **அ**ருமகம் புரிந்தா தரவுடன் சிவனை
அருச்சனை யேழ்முநி வரரும்
ஒருமையிற் புரிமின் எனுமவன் தனைப்பார்த்
தொல்லையேழ் முநிவரும் பகர்வார்
குரிசில்! எங் கடன்கள் தணந்தரு மகங்கள்
குயிற்றுவ தெப்படி யென்னத்
தருநிழற் கடவுள் மீளவும் நோக்கித்
தடக்கைகூப் புபுபணிந் துரைக்கும். (5)

2245. **ஆ**ற்றருந் தவங்கூர் இருடிபுங் கவர்காள்!
அடியனேற் காயரு மகங்கள்
ஏற்றமா யிழைக்க வேண்டுமெய்ஞ் ஞானி
யென்னுநுங் கட்குநன் னியதி
போற்றுவ தேதுக் காகவென் றமரர்
புரவலன் ஏத்திட அவன்தான்
சாற்றிய வசனம் மறுத்திடா திட்டிச்
சாலைகள் வகுத்தனர் மாதோ. (6)

2246. **சி**ந்தையுள் அரந்தை பொருந்திடப் புறம்பிற்
சிறப்பொடு மகிழ்ச்சிபொங் கிடவே
இந்திரன் களிக்க எழுமுனி வரரும்
**இராக்கத** வதமெனும் யாகம்
அந்தமற் றிழைக்க அவரவர் குண்டத்
தடல்புரி கோரமா அசுரர்
வந்தனர் **இரத்தா சுரன்**முனோன் பின்னர்
மருவினன் **இரத்தபீ சாக்கன்,** (7)

2247. **பி**றையெயி றதுக்கி இதழ்புடை துடிக்கப்
பின்னரும் **பஞ்சரா வணர்கள்**
முறையினிற் குண்டத் தழலிடை உதித்தேழ்
முனிவரைத் துரத்தினர் முனிவர்
இறைவனை நினைத்தோ டினரவர் தமைவிட்
டிந்திர லோகமே அடைந்தங்(கு)
உறையும்வச் சிரத்தோன் ஆதியர் முடியில்
உறப்புடைத் தங்கர் இடித்தார். (8)

2248. **மீ**ளவும் மலர்த்தே வுலகுமால் உலகு
மேவியங் கிருந்தவிண் ணவர்கள்
தோளினுஞ் சிரங்கள் மீதினும் புடைத்துத்
தொடர்ந்தவர் புரங்களும் இடித்துக்
கோளிலா மாக்கள் அனைத்தையும் வதைப்பான்
குறுகுமேல் வையிலெழு முனிவர்
தாளதா மரையோன் மால்திசைப் பாலர்
தரிப்பிலர் சாந்தியின் பொருட்டே, (9)

2249. **க**ண் ணுதற் சாமி அருச்சனை புரியக்
கயிலையஞ் சிகரமீ தடைந்தே
அண்ணலை அருச்சித் திறைஞ்சிநின் றேத்தி
அசுரர்தஞ் செயலெலாம உரைத்தார்
புண்ணியன் புகலும் இந்திரன் தனது
போகமார் நிமித்தம தாய
எண்ணிய முனிவர் இராக்கத யாகம்
இயற்றிட வலியினுல் விடுத்தான். (10)

---

**2248. கோள்—வலிமை.**

2250. மற்ற அம் மகமே விபரித மாகி
வானவர் அடங்கலும் வதைக்க
உற்றமா மகமா யினதது சகத்துக்
குற்றிடர் புரிவதென் றுரைத்துப்
பெற்றமூர் கடவுள் மலர்க்கரங் கொட்டிப்
பின்புபுன் மூரல்செய் துமைபாற்
**கொற்றவை** யொடுகுண் **டோதரன்** தனையுங்
கூடவே விடுத்துபின் னுரைப்பான். (11)

2251. பொம்மல்வெம் முலைசேர் குமரியே ! நீயிப்
போதிரத் தாசுர னோடும்
பைம்முகில் புரையும் இரத்தபீ சாக்கன்
பஞ்சரா வணர்களோ டெழுவர்
தம்மையும் எமதா ணையின்வதைத் திடென்று
தக்ககுண் டோதரன் தனையும்
அம்மபின் விடுத்தான் இருவரும் படர்ந்தே
அடல்புரி செம்புலம் படர்ந்தார். (12)

2252. குமரிதன் னுவிற் **காளி**யைப் படைத்துக்
கோரமாய் விடுத்தனள் காளி
சமர்புரி யிரத்தா சுரன்விறல் மறலி
தனைநிகர் இரத்தபீ சாக்கன்
அமரர்கள் பகைவர் இவரென முடிகள்
அறுத்தவர் தசையுடன் குருதி
கமரிடை விடுவ தெனப்பில வாயாற்
கறித்துடன் குடித்தனள் அம்மா. (13)

2253. அடுபடை விறல்கூர் பயிரவி களித்துள்
அடங்கிடா மதுகைமீக் கொண்டு
கடுவிட மறலி யெனவுருத் தெழுந்தே
களிப்பிலெவ் வுலகுமாய்த் திடுவான்
முடுகிய பகலெவ் வுயிர்களும் பரமன்
முன்னடைந் திடர்கொடு விசிகம்
படுமுழை யெனப்போய் முறையிடப் பெம்மான்
பல்லுயிர் புரக்கவே நினைத்தான். (14)

2252. குமரி—(அப்படிச்சென்ற) கொற்றவை.

2253. விசிகம்—அம்பு. உழை—மான்.

காளியுடன் நடனம்

2254. கலைபல தெளிந்து மிடலடங் காத
காளியை வெல்குவ தரிதென்(று)
அலைவிலுள் ளத்திற் கருதுபு பரத
அடைவினிற் குனிப்பவ ளுடனே
தலைதெரி வரிய நடஞ்செய் தூர்த் துவதாண்
டவம்புரிந் தனனவள் நாணி
நிலைகுலைந் துள்ளம் ஒடுங்கியே காளி
நீலியோ டுமையரு கடைந்தாள். (15)

2255. கொற்றவெண் குடைச்செங் கரமலர் பிடித்துக்
குல்லைமா யவனுருக் கொணர்ந்த
பெற்றமுன் செலுங்குண் டோதரன் தனையும்
பிழைபுரி பஞ்சராவணரைச்
செற்றிடென் றனுப்ப அவர்களியா வரையுஞ்
செம்புலத் தினில்தசை குருதி
துற்றமை வடிவுந் தொலைத்துயிர் நீத்துச்
சோதிசந் நிதியில்வந் தடைந்தான், (16)

2256. அந்தவே லையினின் மரைமலர் பொகுட்டில்
அண்ணல்தண் துளவமால் துறக்க
இந்திரன் தவங்கூர் இருடியர் எழுவர்
இமையவர் சிவன்தனு ணையினுற்
புந்தியுள் மகிழ்ந்தே அவரவர் பதங்கள்
பொருந்தினர் இப்படிப் பலகால்
வந்தகா லங்கள் தொறுங்கொலை அசுரர்
வருத்தஅப் போதெலாம் கினைந்தே, (17)

2257. கலையுணர் மடந்தை கொழுநன்மால் ஒற்றைக்
கண்ணுதல் மலர்ப்பதங் கருதித்
தொலைவிலா வழிபா டியற்றியே மீளச்
சுகோததி படிந்தனர் வெவ்வே(று)
அலைவறு வழிபாட் டாலவ ரவர்தம்
அரும்பதம் அடைந்தனர் என்னும்
நிலைமைமுன் னுரைத்தேன் இப்பகலி னுர்யான்
நிகழ்த்தினன் உண்மையீ தம்மா, (18)

2258. ஆற்றருந் தவத்தீர்! உத்தமம் ஆகும்
அண்ணல்மான் மியங்கள்கேட் கின்றோர்
சாற்றுகின் றோரேட் டினில்வரைந் தாரா
தனைபுரி கின்றவர் அவர்கள்
மாற்றரும் பிணிகள் அனைத்தும்நீத் துடனிம்
மையினுமோ வறுபல வளங்கள்
ஏற்றமாய் நிறைசெல் வங்களியா வையுமே
இடர்தணந் தருந்திவாழ்ந் தென்றும், (19)

2259. பைந்தொடி மனைவி மைந்தர்கள் பெற்ற
பாலர்தம் மனைவியர் பயந்தாள்
தந்தையர் தமது முன்பினுற் பவித்தோர்
தக்கநற் றோழர்தந் தையர்தம்
மைந்தர்கள் தமர்கள் வருக்கமோ டென்றும்
வாழ்ந்துகண் டவையெலாம் அருந்திச்
சிந்தையுண் மகிழ்ந்தே இருந்துமை பாகன்
திருவடி நீழல்சேர் குவரால். (20)

## அத்தியாயம் 76

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வியாசர் பூசித்தது

முன்னொரு காலத்தில் நான்முகன் புதல்வரான சனகர், சனந்தனர் சனாதனர், சனற்குமரர் என்னும் நால்வரும் ஈசனை வழிபட அவர் அவர்களுக்கு வேதமும்,ஆகமமும், பதினெண் புராணங்களும், இதிகாசங்களும் அறிவித்தனர். அவர்கள் சிவ வழிபாட்டினாலே மேம்பட்டுச் சிவனடி நீழலிலே களித்திருக்கின்றனர்.

### வியாசர் கை தம்பித்தது.

பின்னர் ஒருகாலத்தில், வியாசமுனிவர் பரமனைப் பூசித்து, அருமறைகளையும் புராணங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்து தமது மாணக்கருக் குரைத்துச் சிவபெருமானே பரம்பொருள் என்றறிந்தார். அவர் கல்விச் செருக்கால் ஒருமுறை மாயையின் வயப்பட்டு அறிவிழந்து, நாராயணனே பரம்பொருள் என்று கூறினர். அவர் மொழி கேட்ட மாணவ முனிவர்கள் 'சத்தியவதியின் புத்திரரே'! முன்னர் நீலகண்டரே பரம்பொருளென உரைத்தீர்; இப்போது சுருதி புராணங்களுக்கு மாறாக என் கூறுகின்றீர்' எனக் கேட்டார்.வியாசர், 'நான் முன் கூறியது தவறு; இப்போது கூறுவது தான் உண்மை' என்றார். முனிவர்கள், 'மறைகளும் சிவபுராணங்களும் ஓதும்

2259. பயந்தாள்—தாய்.

சிவபெருமானே பரம்பொருளென்று கூறி வந்த நீர் இப்போது அடாத இம்மொழி கூறுகிறீர்! எந்த மொழிதான் உண்மை' என, வியாசர் அப்போதும் 'அந்தணரே! உங்கள் முன்னிலையில் இப்போது தேற்றமாய்க் கூறுகிறேன். திருமாலே பரம்பொருள்' என்றார். 'அங்ஙனமாயின் உம் உறுதிமொழியைக் காசியில் விசுவநாதர் சந்நிதியிலே கையெடுத்துக் கூறுக' என்று முனிவர்கள் சொல்ல, வியாசர் அங்ஙனமே காசியில் விசுவநாதர் திருமுன் சென்று நின்று அச்சமின்றி ஒரு கையை உயரத் தூக்கி "மால் ஒருவனே பிரமம், பரஞ்சோதி, பரமான்மா, பரப்பிரமம், பராற்பரம், பரம தத்துவம். நான் கைதூக்கிக் கூறும் இம்மொழி உண்மை, உண்மை" என்று இயம்பினார். அந்நிலையில் தூக்கின அவர் தடக்கை அப்படியே தம்பித்து நின்றது. மொழிந்த நாவும் அசைவற்று நின்றது. வியாசர் பட்ட மரம்போல் துயருடன் நின்றார்.

அவருடைய மாணாக்கர்கள் மனம் வருந்தி வியப்புடன், 'எல்லா மறைகளையும் புராணங்களையும் உணர்ந்தும் விபரீதப் பொருள் உரைத்ததனால் வியாசர் நாவும் கையும் தம்பிக்க நிற்கின்றார். இறைவர் அவருக்குக் கொடுத்த தண்டனை' என்று கூறி விசுவநாதரை வாழ்த்தி வணங்கினர். அப்பொழுது, திருமால் அங்கு வந்து வியாசரை நோக்கி, நடுங்கி, 'விபரீதம் உரைத்த வியாசனே! உன் அறிவு எங்கே ஒளித்தது? காசியில் விசுவநாதர் திருமுன் இவ்வாறு பொய் புகன்றாய்! சாந்தராய், பரராய், விச்சுவாதிகராய்ச், சச்சிதானந்த ரூபராய், யோகீசர் இருதய வாசராய், உமா காந்தராய், எவருக்கும், மேம்பட்டவராய், இறவாதவராய், வேதாந்தராய், எமக்கும் இறைவராய் இருக்கும் சம்புவைக் கூறாமல், மயக்க அறிவால் அவருக்குப் பரம்பரை அடிமையான என்னைப் பதியென மதித்தனை! அதனால் துரோகம் உனக்கே அன்றி எனக்கும் ஆயிற்று' என்று கூறினார். பிறகு, தம் மலர்க் கையை வானிலெடுத்து 'ஈசன் ஒருவனே, பரம், பரப்பிரமம் விச்சுவாதிகர்! நான் உலகினுக்குத் தலைவன், எனக்குத் தலைவர் பசுபதி. அவருக்கு மேம்பட்ட கடவுள் வேறில்லை. உயிர்களை யெல்லாம் அன்னையாக வளர்ப்பவர் அவரே. அவர் அருளே எவர்க்கும் பிறவியை அகற்றும். இது உண்மை' என்றனர்.

---

## அத்தியாயம் 76.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வியாசர் பூசித்தது

### எழுசீர் விருத்தம்.

2260. முன்னொரு காலம் முறுக்கவிழ் தகட்டு
முளரியம் பொகுட்டிறை புதல்வர்
தந்நிகர் சனகர் சனந்தன ரோடு
சனாதனர் தஞ்சனற் குமரர்

என்னுநால் வருமீ சன்பதம் வழிபட்
டேத்தவே யமலன்முன் வெளிபட்(டு)
அன்னவர்க் களித்தான் சுருதியா கமமூ
வறுபுரா ணம்மிதி யாசம். (1)

2261. அருங்கலை யுணர்ந்து சிவார்ச்சனு பரராய்
அரனியோ கினிற்பவித் திரராய்
வரங்கொடு சிவஞா னுக்கினி யதனுல்
மல்குபா தகவனம் எரித்திட்(டு)
உரங்கொள்பே ரறிவாற் சிவன்முத் தர்களாய்
ஓவறு சச்சிதா னந்தத்
தரங்கவா ரிதியிற் படிந்துதற் பரன்தாள்
சார்ந்துளங் களித்திருக் கின்ருர். (2)

**வியாசரது கை தம்பித்த கதை,**

2262. பின்னரும் ஒருகா லத்தினில் வியாதன்
பிரிவற விச்சுவம் புரக்கும்
பொன்னவிர் கடுக்கை அண்ணல்பொற் பாதம்
பூசைசெய் தருமறை புராணம்
உன்னறு பதினுன் கரியவித் தைகளும்
உணர்ந்துமா னுக்கர்பால் உரைத்துத்
தன்னுளங் களிப்ப ஈசனே பரம
தத்துவம் என்றறிந் தனனுல். (3)

2263. தொழுதகு வியாதன் செல்வமா மதத்தாற்
சுருதிகள் வருமெனும் உரத்தால்
வழுவை வல் லுரிபோர்த் தருளிறை விடுத்த
மாயையால் முதுக்குறை தணந்து
பழுதில்மா னுக்க ரிருடிபுங் கவர்க்குப்
பார்க்கில்நா ராயணன் தானே
முழுதுமாம் பரதத் துவம்பரப் பிரமம்
மூலகா ரணமென வுரைத்தான். (4)

---

2262. விச்சுவம்—அகிலம்.

2263. வழுவை—யானை; முதுக்குறை—அறிவு.

2264. **அ**ன்னபோ தவன்மா ணுக்கராம் முனிவர்
அனைவரும் அருந்தவ வலியால்
தன்னிலே யொருவர்க் கொருவரோர்ந் துரைப்பார்
**சந்திய வதி**யருள் தவத்தோய்!
இன்னநாள் அள்வும் முக்கணு யகனை
யிறைவராய்ப் பிரமமென் றுரைத்தாய்
முன்னர்சொற் றிடுவே தாந்தநூல் புராணம்
முறைபிழைத் திடுசொலென் மொழிந்தாய்? (5)

2265. **எ**ன் றுரைத் திடுமந் தணரையே நோக்கி
இந்தியஞ் செயித்தருள் வியாதன்
நின்றுமீ ளவுஞ்சொல் கின்றனன் முனிவீர்!
நீல்நிற வடிவமாம் விண்டு
ஒன்றெனப் படுவீ டருள்பரப் பிரமம்
ஒருவர்வே றவனலா தில்லை
அன் றுநுங் கட்கு வறிதுநாம் தேரா
தறைந்தனம் அதுமறந் திடுமின்; (6)

2266. **உ**ண்மையீ தென் று வாதரா யணன்சொல்
உவந்துகேட் டவன்முகம் நோக்கித்
திண்மைசேர் பரமா னந்தவா ரிதியில்
திளைத்திடு முனிவரர் புகல்வார்
நுண்மைவே தங்கள் சிவபுரா ணங்கள்
நுவன்றிடு பரசிவன் தனையே
அண்மைசேர் விச்சு வேச்சுரன் என்றே
அறைந்தநீ மறத்தியோ அதுதான். (7)

2267. **க**ண் ணுதற் சாமி மாயையால் உள்ளம்
கலங்கிமோ கித்ததற் கடாது
நண் ணுவா சகஞ்சொல் கின்றனை அதனுல்
நவிற்றிய வுனதுசொற் களவை
எண் ணுவ தேதிங் குண்மையாய் உரைத்தி
என்றிடும் முனிவர்சொற் கேளாப்
பண்ணவர் இறையாம் **சுகன்**றனைப் பயந்தோன்
பார்த்துமீ ளவுமுரைக் கின்ருன். (8)

2268. **அ**ந்தணீர்! தெளிந்து நுங்கள்சன் னிதியில்
ஆணையாய்க் கட்டுரைக் கின்றேன்
பந்தநீத் தருளும் விண்டுவே மேலாம்
பரமதத் துவம்பரப் பிரமம்

முந்தையா கியநித் தியமெனுங் கடவுள்
முதல்வனென் றுரைத்திட வியாதன்
புந்திநேர் வருமா ணுக்கர்யா வருமே
பொருக்கெனக் குழீஇயுரைக் கின்றார். (9)

2269. கருதரு மறைதேர் வாதரா யண! நீ
காசிமா நகரியில் அடைந்து
தருமநா யகனும் விச்சுவேச் சுரன்தன்
சன்னிதிப் புறத்துநேர் சென்றே
ஒருகரம் விசும்பில் உயர்ந்திட எடுத்தே
உண்மையா கச்சொலில் அப்போ(து)
இருமையும் பயக்கும் உனதுசொல் அளவை
இதற்குவே றையமற் றிலையால். (10)

2270. என்றுசொற் றிடுமா முனிவர்சொற் கேளா
ஈர்ஞ்சடைத் தாபத வியாதன்
தொன்றுதொட் டிடுபா தகமெலாம் அகற்றுஞ்
சூழலாங் காசிமா நகரில்
சென்றுவிச் சுவேசன் சன்னிதி யடைந்து
சேணிடைப் பயமற மலர்க்கை
ஒன்றெடுத் துயர நீட்டிநின் றேமால்
ஒருவனே பிரமமென் றுரைத்தான். (11)

2271. பின்னருஞ் சொலும்நா ராயணன் தானே
பேறருள் புரிபரஞ் சோதி
பன்னரும் பரமான் மாப்பரப் பிரமம்
பராற்பரம் பரமதத் துவமென்(று)
உன்னரும் புயமேற் கொண்டுநான் சொலுஞ்சொல்
உண்மையீ துண்மையென் றமலன்
சன்னிதி முன்மோ கத்தினுல் உரைக்கத்
தடக்கைவான் நின்றது தனித்தே. (12)

2272. அரிபரப் பிரமம் என்றிடும் நாவும்
அசைந்திடா திருந்தது முநிவன்
சொரிமதத் துளியாற் பட்டமா மரம்போல்
துயரமீக் கொளத்தனி நின்றான்

பிரிவறத் தொழுமா ணுக்கர்நோக் கவனைப்
பெரிதுபின் னேக்கிமோ கத்தால்
பரிபவப் படுதல் ஒருவருக் கொருவர்
பார்த்ததி சயத்தொடே புகல்வார். (13)

2273. அனந்தவே தங்கள் தம்மையும் புராணம்
அனைத்தையுந் தேர்ந்துதேர்ந் துளத்தில்
நினைந்துதான் பிரித்தெப் போதுமே அறிந்தும்
நின்மலப் பொருளுரை யாமல்
மனந்தனுல் விபரீ தப்பொருள் எடுத்து
மம்மருற் றடாதுரைத் ததனுல்
இனந்தனு வுந்தக் கையுமே அசையா
திருந்தனன் வியாதனென் றுரைத்தார், (14)

2274. புனிதன்மா யையினுல் வியாதனும் அந்தோ
பொய்யுரை சொற்றனன் அவற்கும்
பனிமதிச் சடில நாயகன் சிறிது
பார்த்ததற் கேற்றதண் டங்கள்
துனியுறப் புரிந்தான் என்றுளம் நடுங்கித்
தொழுதுநின் றொருவருக் கொருவர்
தனிமுதற் கடவுள் புகழ்விரித் திறைஞ்சிச்
சகலருஞ் சூழீஇத்துதித் தனரால். (15)

2275. அங்கண்மா யவன்வந் தெடுத்தகை தம்பித்
தரந்தையுள் வியாதனை நோக்கிச்
சங்கையுற் றிடநேர் நடுநடு நடுங்கித்
தவறுசொல் வியாதமா முனியே!
எங்கொளித் தகன்று போந்ததுன் அறிவும்
ஈர்ஞ்சடைக் கடவுள்கா சியில்வந்(து)
எங்கள்சிற் பரன்சன் னிதியில்நின் றொருகை
எடுத்தென வாசகம் புகன்றாய், (16)

---

2273. இனம் தன் நா; உந்து—அக்—கை.

2274. துனி—துன்பம்.

2275. என வாசகம்—என்ன வாசகம்.

2276. சாந்தராய்ப் பரராய் விச்சுவா திகராய்ச்
சச்சிதா னந்தரூ பருமாய்
ஆய்ந்தயோ கிசர் இதயமே குடிகொண்
டருள்பவ ராயுமை அம்மை
காந்தராய் எவர்க்கும் அதிகராய் இறவாக்
கடவுள ராயெழு தரும்வே
தாந்தரா யெமக்கும் இறைவராய் இருக்குஞ்
சம்புவைத் தணந்து மோகித்தே, (17)

2277. பரம்பரை அமலற் கடிமையாய் எனைநீ
பதியென மதித்தனை அதனல்
வரம்பிலாத் துரோகம் உன்றனக் கல்லால்
மற்றுமென் றனக்குமாம் என்றே
உரம்பெறு மலர்க்கை ஒன்றெடுத் தீசன்
ஒருவனு மேபரப் பிரமம்
நிரம்பிய விசால விச்சுவா திகனும்
நிமலனே பசுபதி யம்மா, (18)

2278. சகமனைத் தினுக்கும் கடவுள்நான் எனக்குச்
சம்புவே கடவுள்எஞ் ஞான்றும்
அகமகிழ் அக்கம் ஆகுமாஞ் சிவனுக்
கதிகனுங் கடவுள்வே றில்லை
மகவென வுயிர்கள், அனைத்தையும் அவனே
வளர்த்தருள் பவனவ னருளே
புகலென எவர்க்கும் பவமகற் றிடுமெப்
போதுமீ துண்மையென் றனனல், (19)

---

## அத்தியாயம் 77.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### வியாசர் பூசித்தது—தொடர்ச்சி

### வியாசர் உணர்வுற்றது

இவ்வாறு கூறிய திருமால், அமரர், முனிவர் குழுவுடன் சிவபிரான் திரு முன் வீழ்த்திறைஞ்சி நின்று 'விச்சுவ நாயக! பராற்பர! நின்மல!

---

2278. அக்கம்—கண்.

சச்சிதானந்த! எவர்க்குந் தலைவ! மாதேவ! வேள்விநாயக! பல சமய கொன்றைச் சடையாய்! வணக்கம்! வணக்கம்!!' என்று போற்றினர்.

அந்நிலையில், வியாசருக்கு உணர்வு வந்தது; மயக்கம் நீங்கியது. "தோற்றமும் முடிவும் இல்லாத பரம்பொருளே விச்சுவாதிகர், பராற்பரர். அமலர், சோதி, மாதேவராகும் சச்சிதானந்தர், சுகபரதத்துவர், சுத்தர், சங்கற்ப மாத்திரத்திலே அண்டம் யாவையும் அடுகின்ற கடவுள், அவ ராணையின் வண்ணமே திருமால் படைத்தளித்தருள்வார். அவரருளாலே பிரமன் தன் பதவியைப் பெற்ருன்; திருமால் வைணவ பதம் பெற்ருர்; சிற்பர ராகிய அவர் மாயையைக் கடந்தவர், மாயேசன், மாசம்பு. நான் செய்யும் வந்தனை அவர் பொருட்டே" என்று கூறி இறைவனை மகிழ்வித்து வணக் கம் புரிந்தார். அப்பொழுது விசுவநாதர் பூதகணங்கள் சூழ எழுந்தருளினர். நந்திதேவர் வியாசரருகில் வந்து, "வாதராயண! நீக்கமற நிறைந்த பரப் பிரமமாய், நஞ்சணிந்த கண்டத்தவராய், சச்சிதானந்தராய், விசுவநாயகராய், நெற்றிக் கண்ணராய், அழிக்கும் மூர்த்தியாய், மாலும் அயனும் வணங்குந் தலைவ ராய், சங்கரராய் இருக்கும் மகேசரை மறந்து, மாயையால், இழிந்த புத்தி யுடன், ஒழுக்க மின்றி, 'நாராயணனே பரம்பொருள்' எனக் கருதி எடுத்த உன் கையை அறுத்திடல் வேண்டும். இப்பொழுது சிவபரம் பொருளை நோக்குக!' என்ருர். அம்மொழி கேட்ட வியாசர் விழித்து நோக்கினர். திருமால், அயன் ஆகியோரின் வெண்டலை மாலை மெய்ப் பணியாக அழகு செய்வதாய், எவராலும் ஆராய்ந் தறியப்படாததாய், சுத்தமான உளத்தவர் போற்றும் பரம்பொருளாய் உள்ள பெருமானைக் கண்டார்! 'விழிகள் பெற்ற தற்குப் பயனடைந்தோம்' என்று பரம்பொருளின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். கைகளைக் கூப்பி, 'மாதேவ! மாதேவ!! மாதேவ!!! வழிபடு வோர்க்கருளும் நிதியே! வள்ளலே! அடியேன் அடைக்கலம்! ஆதரித் தருள்க!' என்று துதித்தார். சிவபெருமான் விரைவில் மறைந்தருளினர்.

திருமால் வியாசரை நோக்கி, 'இனி இவ்வாறு என்னைப் பரம்பொரு ளென்று பகராதே. அருமறையனைத்தும் சிவமே பரம்பொருளென்று சொல்லும் இதனை அறி'என்று கூறி மறைந்தார். முனிவர்கள் தங்கள் ஆச்சிரமம் அடைந்தனர்.

வாதராயணன் உள்ளம் வருந்தி மாணவருடன் காஞ்சியை அடைந்து, இலிங்கம் அமைத்து, விதிப்படிப் பூசனைபுரிந்து, இறைவரருளால் அறியாமை விலகிச், சிவஞானம் அடைந்து, நிருமலானந்த வீட்டை நினைந்திருந்தார்.

———

# அத்தியாயம் 77.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வியாசர் கை தம்பித்த கதை—தொடர்ச்சி.

#### எழுசீர் விருத்தம்

2279, என்றுரைத் திருடி புங்கவர் குழுவோ
டிணையிலி மகிழவீழ்ந் திறைஞ்சி
நின்றுவிச் சுவநா யகபராற் பரமே
நின்மல சச்சிதா னந்த!
வென்றிகொள் எவர்க்கும் அதிப! மா தேவ!
வேள்விநா யக! பல சமயோய்!
கொன்றையஞ் சடில நமோ நமோ; என்றே
குல்லையம் படலையோன் துதித்தான். (1)

2280. சூரிமுகம் எறிசக் கரஞ்சிலை கதைவாள்
தொடுபடை யச்சுதக் கடவுள்
இருடியர் குழுவோ டிருமறைப் பொருள் தேர்ந்
தேத்திடும் ஏல்வையுள் நடுங்கி
பரிபவப் படுசத் தியவதி பயந்த
பண்ணவன் மோகம்நீங் குபுவுள்
தெரிதர இருக்கா தியமறைப் பொருள்கள்
தேர்ந்துளத் துன்னினன் மாதோ. (2)

2281. ஆதியீ றில்லா அண்ணலே விச்சு
வாதிகன் பராற்பரன் அமலன்
சோதிமா தேவ சச்சிதா னந்தன்
சுகபர தத்துவன் சுத்தன்
நீதியா-கியசங் கற்பமாத் திரத்தில்
நிகிலம் யாவையுமடு கடவுள்
பேதியா அவனு ணையினயன் நெடுமால்
பெட்பினிற் படைத்தளித் தருள்வார், (3)

2282 பின்னரும் முளரிப் பொகுட்டிறை பவளம்
பிணங்குசெஞ் சடிலநா யகன்தாள்
பன்னரு மலர்தூய் வழிபடும் பலத்தாற்
பண்ணவர் குழீஇத்துதித் திறைஞ்ச

2279. குல்லை - துளசி; படலை—மாலை; குல்லையம்படலையோன்—திருமால்.

உன்னரும் பிரமபதத்தை மேயினன்மால்
உயர்பர னருச்சனை பலத்தாற்
கின்னரர் புகழ வியாபக மான
கிளரவை ணவபத மடைந்தான். (4)

2283. சிற்பர னுகும் அப்பதி மாயா
தீதன்மா யேசன்மா சம்பு
பொற்பத சரோரு கத்துணை மலரின்
பொகுட்டெளி யேன்செய்வந் தனையென்(று)
அற்பக லவணோர் வாதரா யணன்தே
வேசனுஞ் சம்புவை மகிழ்வித்(து)
அற்புத வணக்கஞ் செயும்பகல் உமையோ
டண்ணல்பா ரிடந்தொழ அடைந்தான். (5)

2284. அந்தவே லையினிற் சங்கரற் குரிமை
ஆகிய நந்தியம் பகவான்
வந்துகட் டுரைப்பான் வாதரா யண! நீ
வரும்பரப் பிரமமாய் விடஞ்சேர்
கந்தர ராகிச் சச்சிதா னந்தக்
கண்ணுத லாகிவிச் சுவத்து
முந்தைநா யகராய்த் துடைத்திடு பரராய்
முராரிபூ அயன்பணி பவராய், (6)

2285. சங்கர ராகி யிருக்குமா கேசர்
தம்மைவிட் டுனதுமோ கத்தாற்
பங்கமா கியதுர்ப் புத்திமீ தூரப்
பரவினிர் விரதமாய்க் கொணர்ந்து
கங்குல்வண் ணனையே பரப்பிர மமெனக்
கருதினை யாகையால் எடுத்த
செங்கையீர்த் திடவேண் டும்வெளிப் பட்ட
சிவன்தனை நோக்குகென் றுரைத்தான். (7)

2286. அப்பகல் அனந்த முளரியங் கடவுள்
அச்சுதக் கடவுள்வெண் டலைகள்
மெய்ப்பணி யெனநின் றழகுசெய் தொளிரும்
மேனியை யுடையராய் அனந்த

ஒப்பில்மான் மியங்கட் கிடமதாய் எவரும்
ஓர்ந்தறி யப்படா தவராய்த்
துப்புர வுளத்தோர் உணர்பரம் பொருளைத்
துதித்தெதிர் வியாதனுக் கினனால். (8)

2287. விழிகள்பெற் றதற்குப் பலனடைந் தனமியாம்
மெய்ம்மையென் றடியில்வீழ்ந் திறைஞ்சிப்
பொழிமது மலர்க்கை கூப்பிமா தேவ!
பொருவில்மா தேவ! மா தேவ!
வழிபடு மவர்கட் கருள்தரு நிதியே!
வள்ளலே! அடியனேன் தனக்கிங்(கு)
ஒழிவில்மா கதிநீ பிழைபொறுத் தருளென்
றுபநிட தத்தினால் துதித்தான், (9)

2288. அங்கண்வெள் விடையோன் பாரிடக் குழுவோ
டைதென மறைந்தனன்; துளவத்
தொங்கல்வேய்ந் திடுதே விருடிபுங் கவர்கள்
சூழ்ந்திடும் வியாதமா னுக்கர்
எங்கணுங் குலவ வாதரா யணனை
இருவிழி கூர்த்திட நோக்கிச்
சங்கைகூர் வியாத! இப்படி யினிமேற்
சாற்றுதல் தவிர்தினா டொறுமே, (10)

2289. அருமறை யனைத்தும் சொலுமெனை அன்றி
அமலனா கியசிவன் தானே
பரமதத் துவமென் றுரைக்குமெஞ் ஞான்றும்
பண்பினால் வியாத! நீ அறிதி!
ஒருமையுற் றுளத்தில் என்றுசெஞ் சிறைய
உவணவான் பரியுகைத் திடுதே
விரைவினின் மறைந்தான் தத்தமாச் சிரமம்
மேவினர் இருடிபுங் கவரே. (11)

---

2288—2289. துளவத்...தே—துளவத்தேவு—திருமால். வாதராயணனை நோக்கி...தவிர்தி—அறிதி என்றுகூறி மறைந்தான்,

2290. வாதரா யணன்மா ணுக்கரோ டுள்ளம்
வருந்தியே காஞ்சிமா நகரின்
மீதுசென் றிலிங்க தாபனம் புரிந்து
விதிமுறை பூசைசெய் தந்தச்
சோதிபே ரருளால் மோகம்நீங் குபுமா
துரிதமும் ஓரீஇச்சிவ ஞானம்
மேதகு பலத்தால் நிருமலா னந்த
வீட்டினை உள்கியே இருந்தான். (12)

---

# அத்தியாயம் 78.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வசிட்டர் முதலியோர் பூசித்தது

### 1. வசிட்டர்

அறிவும், அருளும், பொறுமையும், உண்மையும், தவமும் உருவெடுத்து வந்தன போன்ற வசிட்டர் ஈசனை வழிபட்டு அருந்ததியையும், காமதேனுவையும், கலைஞானத்தையும் எழுமுனிவரில் தலைமையையும் பெற்றார்.

### 2. பராசரர்

வசிட்டரின் பேரரும், சத்திமுனிவரின் குமாரரும் ஆன பராசரர் அன்னையை நோக்கி, "என் தந்தை எங்கே?" என வினவினார். அன்னை மனம் வருந்தி, முகம் வாடி, "உன்தந்தை அரக்கரால் இறந்தார். நான் விதவையானேன். அரக்கருக் கேற்ற தண்டம் புரிதி" என்று கூறினாள். அம்மொழி கேட்ட பராசரர் மனம் வருந்திச் சிவபூசைபுரிந்து இழந்த தந்தையை ஈசன் அருளால் காணப்பெற்றார். பிறகு, பராசரர் இராக்கத யாகம் புரிந்தார். வேள்விக் குண்டத்தில் இராக்கதர் அளவின்றி வீழ்ந்து மடிந்தனர். அதைக் கண்ட பலமுனிவரும் வசிட்டருடன் சென்று முனிவரின் கோபத்தைத் தணிவித்தார்கள்.

### 3. கவுசிகர்

கவுசிக முனிவர் ஈசனைவழிபட்ட பலத்தினால் திரிசங்கு என்னும் அரசனுக்கு அபயம் தந்து, வானில் ஒருபதம் அவனுக்குத் தந்து, அவனை அங்கே நிறுத்தினார்; எழுமுனிவரிலும் ஒருவரானார்.

### 4 வியாக்கிரபாதர்

புலிக்கால் முனிவராம் இவர் இறைவனை வழிபட்டு உபமன்னியு எனும் புதல்வனைப் பெற்றார்; உமையம்மைக்கே யன்றித் திருமாலுக்குங் காணற்கரிய செம்பொன்மணி மன்றிற் சிவநடனந் தரிசித்து நித்தியத்துவம் பெற்றார்.

---

2290. துரிதம்—பாவம்.

## 5. உபமன்னியு

வியாக்கிரபாதர் பெற்ற உபமன்னியு முனிவர் சிறுகுழவியாக இருக்கும் போது பால் வேண்டி அழுதார். அவருடைய அன்னை மாவைக் கரைத்து ஊட்டினுள். பருகும்போது சுவை வேறுபட்டிருந்ததை குழந்தை உணர, அன்னை வருந்தி, "நம் ஆச்சிரமத்திற் பசும்பால் இல்லை. உன் மாமா வான வசிட்டர் ஈசனை வழிபட்டு காமதேனுவைப் பெற்ருர். அதன் பாலை நீ அங்கே பருகி மகிழ்ந்தாய். பசும்பால் வேண்டுமென்ருல் இறைவரை வேண்டிப் பெறுக! அவரை வழிபடின் உனக்கு வேண்டுவன எல்லாம் கிடைக் கும்" என்றனள்.

பாலகனும் உபமன்னியு வியப்படைந்து அப்படியே வழிபட நினைத்து, பூதியணிந்து, கண்டி புனைந்து, சம்புவின் மலரடியை யெண்ணி மலர்ப் பூசனை செய்தார். சிவபெருமான் இந்திரனைப் போல எழுந்தருள, "இந்திரனே! நீ ஏன் வந்தாய்? உன்னையும் பிரமனையும் நான் குறியேன்; உணர்ந்தார்க் குணர் வரியோனுன பரமனையே நாடித் தவம்புரிகின்றேன். நீ இங்கிருந்தால் உன்னைச் சபிப்பேன்" என்ருர். முனிக் குழவியின் தைரியத்தைக் கண்டு அண்ணல் மகிழ்ந்து உமையுடன் விடைமேல் எழுந்தருளினுர். உபமன்னியு இறைவனைக் கண்டு பணிந்தெழுந்து மகிழ்ந்து பத்தியுடன் போற்றினுர். மழலைமொழியால் வாழ்த்தக் கேட்ட மங்கைபங்கர் மகிழ்ந்து அப்பாலகற்குப் பாற்கடலையும், சகல வேதாந்தங்களையும், ஓதாதுணரும் அறிவையும், பிறவரங்களையும் நல்கி மறைந் தருளினுர். உபமன்னியு பசிதீரப் பாலருந்திப் பேருணர்வெய்தி மகிழ்ந்தார்.

## 6. கௌதமர்

கௌதமர் சிவபெருமானை அருச்சித்த நலத்தால் உயர்ந்த பரஞானம் பெற்றனர்.

## 7. சதானந்தர்

சதானந்தார் இறைவனைப் பூசித்த வரத்தால் உலகெங்கும் உலவி, யாவற்றையும் உணரும் அறிவுபெற்ருர். கயிலையிலே கண்ணுதல் திருமுன் வீழ்ந்து வணங்கிப் பரமானந்த வாரியிலே திளைத்தார்.

## 8. மிருகண்டு

மிருகண்டு முனிவர் விரிசடைப் பெருமானை வழிபட்டு மார்க்கண்டியை மகவாகப் பெற்ருர்; அயன் பதமும் பெற்ருர்.

## 9. மார்க்கண்டி

மார்க்கண்டியின் (மார்க்கண்டரின்) தந்தை தம் புதல்வருக்குப் பதினுறு வயதுதான் இறைவரிடம் வரமாகப் பெற்றிருந்தார். அவ்வயதில் இரண்டுநாள் தவிர மற்றையவை கழிந்தன. பெற்றேர் தம் மைந்தரின் வயதுக்குறையை

யெண்ணித் துன்புற்றனர். தம்பொருட்டுத் தாய்தந்தையர் வருந்துகின்றனர் என அறிந்த மார்க்கண்டர் இறைவனை ஒருப்படு மனத்துடன் பூசித்தனர். வயதுமுடிந்தது. மறலிவந்து மார்க்கண்டியை அணுகி அழைத்தான். அவன் அழைத்ததை யுணராது மார்க்கண்டர் பூசையே கருத்தாக இருந்தார். காலன் ஊதுகொம்பெடுத் தூதினன்; காது செவிடுபடும் அவ்வொலியைக் கேட்ட மறைச்சிறுவர் திகைத்துத் துன்பங்கொண்டு இலிங்கத்தைத் தழுவினர். காலன் கடுஞ்சினங்கொண்டு பாசத்தால் இலிங்கத்துடன் மார்க்கண்டரைப் பற்றி யிழுத்தான். அப்போது பெருமான் சினந்து தம் திருவடியாற் காலனை உதைத்தார். இரத்தம் கக்கியவாறு காலன் பாதலத்தில் விழுந்தான். மார்க்கண்டி துயில் நீத்தவர் போலத் தெளிந்து காலகாலரைப் போற்றினர். அந்தப் போற்றுதலுக்கு மகிழ்ந்த பெருமான் மார்க்கண்டருக்கு என்றும் பதினறு வயதுள்ள நித்தியனுயிருக்கும் வரத்தைத் தந்து மறைந்தருளினர்.

மார்க்கண்டி மகிழ்வுடன் மனைபுகுந்தார். மைந்தரைக் கண்ட பெற்றேர் கவலை நீங்கிக் கண்ணுதலைப் போற்றி மகிழ்ந்தனர். பின்னர், அமரர்கள் யாவரும் வேண்ட அண்ணலார் காலனை எழுப்பினர். காலனும் இறைவனை வந்தித்துத் தன்பதம் அடைந்தான்.

---

# அத்தியாயம் 78.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வசிட்டர் முதலியோர் பூசித்தது

### எண்சீர் விருத்தம்

### (1) வசிட்டர்

2291. அருளறிவு பொறைசரதந் தவந்தானம் உயிர்கட்
கன்பொழுக்கம் விழுப்பமழுக் காறின்மை
[பொறிகள்
மருவுருவங் கலனுடை தார்கொடுபுண் ணியபார்
வந்ததெனும் வசிட்டன்முனம் மதிள்மூன்றும்
[எரித்த
கருணையருட் கடல்வழிபட் டருந்ததியை வேட்டுக்
காமதே னுவுமரிய கலைஞான வுணர்வும்
இருடியரேழ் வரிற்றலைமை வரிசையும்பெற் றெம்மான்
இணையடிநீ ழற்கருதி யேத்தியிருந் தனனே. (1)

(2) பராசரர்.

2292. தொழுதகுமெய்த் தவம்புரியும் வசிட்டமுனி பேரன்
தொல்லையருட் சத்திமா முனி தனயன் மறைகள்
முழுதுமுணர் பராசரமா முனிவனொரு தலையாய்
முளைத்த பிறைக் கோடுகுஞ்ச முகையின்முறுக்
[குடைந்து
கொழுதியின வரியளிகள் முரலமணங் கமழுங்
கொன்றையந்தார்ச் செழும்பவளக் கோடீர
[இறைதாள்
பழுதகலும் நறுமலர்கொ டருச்சிப்பான் ஒருகாற்
பதிதணந்த அன்னைமுகம் பார்த்துளம் நொந்
[துரைப்பான்.

2293. அன்னாய்! சிற் றடியனையீன் றளித்தருளுந் தந்தை
அகன்றிருக்கும் இடஞ்சிறிதும் அளந்தறிகி
[லேன்யான்
என்னுமுன் அன்னையுளத் திடருழந்து மதலாய்!
எறும்கெழுமி ராக்கதரால் இறந்தனன், நின் தந்தை
பொன்னார்மங் கலநாண்பொற் றேடுகலன் அதனாற்
பொருக்கெனநீத் திடர்க்கடலுட் புகுந்துவைதவ்
[வியமாய்
இந்நாள்நொந் தனனிதற்கிங் கேற்ற தண்டம் உளத்தில்
ஈதெனக்கண் டவைவருந்தி இழைத்திடுக
[விரைந்தே. (3)

2294. என்றுளம்நொந் தன்னையெடுத் தியம்பியசொற் கேளா
இடருழந்தா குலித்தமனம் எய்தியிராக் கதரைக்
கொன்றிடுவல் எனக்கருதிச் சிவபூசை புரிந்தான்
கூற்றுதைத்த மலர்ப்பதத்தோன் குழைந்துமன
[மகிழ்ந்து
முன்றிகழ வெளிப்பட்டுப் பராசரன்வேண் டுவரம்
முற்றுமளித் துடன்மறைந்தான் முக்கணிறை
[யருளாற்
பொன்றினதந் தையைக்கண்டான் இராக்கவதை யாகம்
புரிந்தனனெங் கோன்மலர்த்தாள் போற்றுபரா
[சரனே. (4)

---

2292. பிறைக்கோடும்...கொன்றையந்தாரும் (உடைய)கோடீரம் (சடை).

2294. ஆகுலித்த—வருந்திய; இராக்க வதை—இராக்கத வதை.

2495. மழுவலனேந் தியகடவுள் திருவுளத்தால் இராக்கர்
வன்னிதிக மூண்டநடு வந்துவந்து வீழ்ந்தப்
பொழுதனலேழ் மணிநாவால் வளைந்துயிர்கள் பருகப்
பொள்ளெனவந் தசலவுடல் பொடியெழுமாய்ந்
[தனரால்
குழுவினிரை யாயரக்கர் மடிந்ததுகண் டுள்ளங்
குலைந்து நடு நடுங்கிவளர் குடிலசடை யறவோர்
முழுதுமுணர் வசிட்டமுநி யுடன்போகிச் சத்தி
முநிவனிருங் கோபமற வுளமகிழ்வித் தனரால். (5)

2296. சத்திமுநி புழுங்கியெழும் இருங்கோபம் அனைத்தும்
தணந்துமறை ஆகமங்கள் சகலபுரா ணங்கள்
பத்திமிக வுணர்ந்துதொகை வகைவிரியில் தெளிந்து
பதிபசுமொய் இருள்கருமம் பாவுமிரு மாயை
நித்தியமென் றெழுங்குறமுக் கட்குழகர் குறித்த
நின்மலசாத் திரங்கள்பல நிருமித்தே தண்டாச்
சித்திகொடு சிறிதுசுகந் துய்த்தமலன் அருளாற்
சீவன் முத்த னுகமெய்நித்தியனுக இருந்தான். (6)

## (3) கவுசிகர்

2297. முன்னரொரு காலரசாம் **கவுசிகமா முநிவன்**
முருகுகமழ் நறவிதழ்முக் கண்ணன்தாள் மலரில்
பன்னரிய நறுமலர்கொ டருச்சனைசெய் ததனுல்
பல்லுயிரும் படைத்தருஞ்சா பங்கொள் **திரி சங்கு**
என்னும்நிரு பனும்அபயம் என்றுரைத்து விழும்போ
தெதிர்நோக்கித் தவவலியால் இக்கணம்வான்
[நில்லென்(று)
உன்னுதனற் பதங்கொடுத்துக் கண்ணுதல்மெய்
[வரம்பெற்
றோங்குமெழு முநிவரரில் ஒருமைபெற
[இருந்தான். (7)

## (4) வியாக்கிர பாதர்

2298. அந்தணிர் ! வள் ளுகிருழுவைச் சரணமுநி புரமூன் (று)
அடுகடவுள் இணைமலர்த்தாள் அருச்சனைசெய்
[தமலன்
சிந்தைமகிழ்ந் தருள்பலத்தால் உபமனியு எனும்பேர்ச்
சிறுவனையும் பயந்துருகு செழும்பொன்மணி
[மன்றில்
சந்துகமழ் திதலைகனிந் தழகொழுகு பொம்மல்
தரளவடம் சுமந்தகொங்கைத் தையலுக்கே
[அல்லால்
பைந்துளவக் கடவுளும்நோக் கரியபெம்மான் நடனம்
பார்த்துடனித் தியத்துவமாய்ப் பரத்தொடிருந்
[தனனுல். (8)

## (5) உபமன்யு

2299. வரியுழுவை இணையடிமா முநியருளாற் பயந்த
மழலைமொழிக் கிண்கிணிக்கால் வளருபமன் னியு
[முன்
எரியகடு கதுவுபசி யெழஇடர்ப்பட் டனனெனுந்
தீன்றுள்தன் முகநோக்கி இதழ்துடிப்பப்
[பொருமிக்
கரியவிழி பிசைந்தழுது பால்வேண்ட வுடன்மாக்
கரைத்துநறும் பாலெனத்தாய் கருத்துதவ
[விரைந்தே
பரிவினெடு பருகியிர தங்குறையத் தேர்ந்து
பாலெனத்தண் ணீரெனத்தாய் பருவரலொ
டுரைப்பாள் ; (9)

2300. சுடர்விசிறு பழவயிர மணிகுயிற்று பசும்பொற்
சுட்டிநுதல் அசையவளர் துணைப்புயத்தில் தாக்கி
அடர்கனக மணிக்குழைக்குள் செவிபுரள அரையில்
அம்பொன்மணிக் கிண்கிணியோ டரைஞாணின்
[றெளிரத

தொடரரிச்சில் லரிச்சதங்கை சிலம்படியிற் புலம்பத்
தொண்டுமணிப் புலியுகிர்க்கீழ்த் தொங்கிவயி றெக்கி
இடரகலத் தளர்நடைகொ டெதிர்குலவும் மதலாய்!
இரதநறும் பால்சிறிதும் எமதுமனைக்
கிலையால். (10)

2301. உனதுகிளை ஞரிற்றலைமை மாதுலனும் வசிட்டன்
உபநிடத மறைமுழுதும் உணர்ந்தவன்புண்
[ணியஞ்செய்(து)
அனவரதம் அறுகிதழி வனைசடில இறைதாள்
அருச்சனைசெய் பவன்சிவனை ஆராதித் ததனால்
மனமகிழ மலையருவி யெனச்செருத்தஞ் சொரிந்து
வழங்கியருள் புரிகாம தேனுவைப் பெற் றனன்நீ
தினமமிழ்தம் உதவுசுவை யுறழ்சுரபி நறும்பால்
திகழுதரம் நிறையவுண்டு தேக்கினது நினைந்தே. ()

2302. எங்கள்தழை குழைத்த பன்னுச் சிரமமிசை வறிதே
இளமைமிகு பருவத்தால் என்கொல்விழை கின்றாய்
திங்கள்நறுங் கண்ணிமிலை செஞ்சடிலத் தண்ணல்
சிறிதும் வெளிப் பட்டருளாத் திக்கிலுண்டோ
[நறும்பால்
பொங்குணவ தன்றியும்நல் குரவுடைய நினக்கிப்
போதுநறும் பாலெங்கே பொருந்திவரு வதுசொல்
இங்கதனுற் புனிற்றிளஞ்சே தாவின்பால் வேண்டில்
ஈசன்மலர்த் தாள்வழிபட் டெய்துக பால்
[விரைந்தே. (12)

2303. சந்ததமி யோகிலிருந் தறவோர்கள் கருதுந்
தற்பரன்முத் தலைவேலோன் சகலவுல கேசன்
அந்தமிடை யாதியிலான் மலர்த்தாளர்ச் சனையால்
ஆடவர்வேண் டுவவெல்லாம் அங்கைநெல்லிக்
[கனிபோல்

---

2300. தொண்டு மணி—நவமணி ; தொண்டு—ஒன்பது.

2301. செருத்தம்—பால்மடி (செருத்தல்)

2302. பன்னுச்சிரமம்—பன்னம்—இலை.

வந்திடுவ துண்மையெனும் அன்னைமொழி கேளா
மழலைமொழி முனிக்குழவி மகிழ்ந்துவியப் பாகிச்
சிந்தையிலப் படியெனவே அவன்சிறிது தூரஞ்
சென்றுமிகு சோபனமாந் திசைவதிந்தங்
[கிழைப்பான். (13)

2304. வெண்ணிலவு குழைத்திழைத்த தெனப்பூதி தரித்து
மெய்யனைத்தும் அக்கமணி மிலைந்துசம்பு மலர்த்
[தாள்
உண்ணெகிழ மனமொழிமெய் ஒருமைபெற மலரால்
உவந்துவழி படத்தொல்லை ஓங்கொளியாம்
[எங்கோன்
கண்ணகன்ஞா லத்திலவன் தனக்கெதிரிந் திரன்போற்
கடிதுவெளிப் பட்டனன்ஆ கண்டலனைக் கண்டு
துண்ணெனவெங் கோபமனம் புழுங்கியெழுந் தென்முன்
தோற்றினதென் சதமகன்நீ தூரப்போ குதியே ; ()

2305. நின்னையொரு சதுமுகத்தெம் அண்ணலையான் குறியேன்
நீகடிதே குதியுணர்ந்தார்க் குணர்வரியோன் பூசை
தன்னையொருப் பட்டுநான் இழைத்தருளும் ஏல்வை
தவறிழைத்தா யாகிலுனைச் சபித்திடுவேன் என்று
முன்னைவிறற் கொடுசாபம் புரிந்திடக்கோ பிக்கும்
முனிக்குழவி தைரியத்தை முற்றுணர்ந்தா
[ருயிர்கட்(கு)
அன்னையுமத் தனுமாகும் அண்ணலுமை யுடனே
அடல்விடைதோன் றினன்முனிசேய் ஆதரத்தில்
உணர்ந்தே, (15)

2306. இருநிலத்தின் முடியிருகை யிருசெவிமோ வாய்தோள்
இணைபடஅட் டாங்கமுந்தண் டெனவீழ்ந்து
[பணிந்து
பொருவருசீர் வெள்ளிவெற்பிற் செழும்பவளப்
[பொருப்பும்
புரந்தரமா மணிப்பொருப்பும் போல்வரும்வெள்
[விடையில்

---

2304. சதமகன்—இந்திரன்.

2306. புரந்தர மாமணி—இந்திர நீலமணி; இந்த்ரநீலமணியின் நிறமுள்ள பார்வதி.

கருணையருட் கடலுமையோ டெதிர் வெளிப்பட்
[டருளக்
கண்டுமுநிக் குழவியுளங் கனிகூர்ந்தங் கெழுந்து
தெருளனந்த பத்தியொடா னந்தவருட் கடலுள்
திளைத்துரைக்கும் நறுங்கனியே! தேனே! தெள்
[ளமுதே! (16)

2307. அழகுசந்தத் தமுதொழுகி அருளருவி கொழுத்தீன் (று)
ஆருயிரெ லாம்புரக்கும் அன்னையுடன் விடைமேல்
பழவடிமை யாமெளியேன் முனம்வெளிப்பட் டனைநின்
பாததரி சனத்தான்முற் பந்தமொரீஇ
[யுளம்வேட்(டு)
எழவரும்போ கங்களெலாம் எளிதிலடைந் தனன்யான்
என்னமுநிக் குழவிமொழி யின்பமுடன் கேளா
மழவிடையங் கணன்துறவோர்க் கினியனமு தெனும்
[பால்
மாந்தவிழை மகக்கமுத வாரிதியை யளித்தான். ()

2308. புரிதிரைப்பைங் கடலுலகிற் சகலவே தாந்தம்
முழுதுமுணர் ஞானமும்பின் மூவாறு புராணத்(து)
அரியபொரு ளுஞ்சகல சாத்திரத்தில் உணர்வும்
அனவரதம் உனக்குவந்திங் கனைத்துமற வாதிங்(கு)
ஒருமைபெற வேண்டுமெனக் கொடுத்ததற்கன்
[னியமாய்
உற்றவரங் களும்நல்கி ஒல்லைமறைந் தனன்பின்
பிரிவறஎங் கோனருளும் வரமுபமன் னியுவும்
பெற்றுநறும் பாலருந்திப் பேறெவர்க்குங்
[கொடுத்தான் (18)

---

2307. மகக்கு—மகவுக்கு; அமுத வாரிதி—பாற்கடல்.

கலிநிலைத்துறை.

(6) கௌதமர்

2309. ஆற்ற ருந்தவக் கவுதம முநிமறை யவற்காய்
கூற்ற டும்பரன் பதமருச் சனைசெய்தெங் கோமான்
சாற்றி டும்பல விரதமாற் றியபலந் தன்னால்
ஏற்ற மேய்பர ஞானமுற் றமலனு யிருந்தான். (19)

(7) சதானந்தர்

2310. தேரிக லைச்சதா னந்தயோ கீந்திரன் சிவன்தாள்
வரிவி ழிக்கனி மொழியுமை யுடன்முனம் வழிபட்(டு)
அரிய சச்சிதா னந்தனை நினைத்துல கனைத்துந்
திரித லுற்றவண் உறுவர லாறெலாந் தெளிந்தே. (20)

2311. வெள்ளி மால்வரை அண்ணல்சன் னிதிமுனம் வீழ்ந்து
தெள்ளி யோதிவந் தித்தவன் தாளிணை சிந்தை
உள்ளி யேபர மானந்தம் எற்றுகல் லோலம்
துள்ளு வித்தகக் கமலமாந் தடமூழ்கித் துய்த்தான் (21)

(8) மிருகண்டு

2312. தேசி வர்மிரு கண்டுமா முநிவரன் சிவன்தாள்
பூசை செய்துபல் கலைகொள் மார்க்கண்டி யைப்பூத்(து)
ஆசை யெங்கணுஞ் சீர்த்திபெற் றயன்பதம் அடைந்து
வாச மாகியே அளப்பரு மகிழ்ச்சியாய் வதிந்தான். ()

(9) மார்க்கண்டி

2313. சாத மாமிரு கண்டருள் மார்க்கண்டி தனக்கு
மாத வத்தினால் எண்ணிரண் டிறையருள் வருடம்
பேதி யாதுநற் றந்தைபெற் றனனவை பிரித்திங்(கு)
ஓதின் முற்றுமே சென்றன தினமிரண் டொழிய. (23)

2314. என்று தம்மனை பரவசப் படும்பிதா இரங்கிக்
குன்ற மன்னவெம் பகட்டெருத் துலவுவெங் கூற்றன்
கன்று நெஞ்சினால் இருவிழி பொறியெழக் கஞற்றி
நின்று கொண்டிடு மோவுயி ரெனும்பல நினைக்கும். ()

---

2312. பூத்து—பெற்று.

2313. சாதம்—தோற்றம்.

2315. வீழும ரற்றுநெஞ் சழிவுறும் நிலந்துழாய் விம்மும்
எழுநெ டும்பெரு மூச்சுவிட் டுயிர்த்திடும் ஏங்கும்
அழும ணிச்சிவ னேகதி யென்னும்வீ ழமலற்
றெழுமு யிர்ப்படங் கில்லுடன் மிருகண்டு துடிக்கும். ()

2316. அன்ன போதுமார்க் கண்டனித் தந்தையும் அனையுந்
தன்னி மித்தமாய் நொந்தனர் என்றுளந் தளர்ந்து
பொன்னெ டுங்கிரி வில்லியை வீரனைப் பூசை
நன்ன யத்தினாற் செய்துமாற் றுதுமென நாடி, (26)

2317. இந்தி யஞ்செயித் தொருப்படு மனத்தினால் இறைத்தாள்
சிந்தை செய்தருச் சித்தனன் அப்பகல் தென்கோ
வந்து நின்றுமார்க் கண்டியை நயத்தினால் வருந்தி
இந்து சேகரன் ஈத்தநாள் அவதியீ தென்றான். (27)

2318. சற்றும் எண்ணலன் அவன்மொழி யுட்கொளான் தருமப்
பெற்றம் ஊர்திபொற் றாள்மலர் அருச்சனை பிரியா(து)
அற்ற போதறிந் திழைத்தனன் கூற்றனும் அதனாற்
கொற்ற வெங்கத வுருக்கொணர்ந் திரலைநேர் குறித்தான்.

2319. இருசெ விப்புறஞ் செவிடுபட் டிடத்துளை யிடத்துச்
செருகி யுட்செலும் ஒலியினால் மார்க்கண்டி திகைத்துப்
பருவ ரற்கொடு செங்கையால் இலிங்கத்தைப் பற்றி
ஒருமை பெற்றுறத் தழீஇயினன் அவனையே யொல்லை.

2320. பிறையெ யிற்றினை அதுக்கியே விழிபொறி பிலிற்ற
அறைகு ரற்பில வாயினிற் குமுறினின் றார்த்துக்
கறைதெ வுட்டுமை கயிலைமேய் கூற்றுவன் கடவ
இறையொ டச்சுற மருட்செய்பா சம்பிணித் திழுத்தான்.

2321. முருகி தழ்க்கமழ் இதழியந் தாழ்சடை முன்னோன்
கருகு மைக்கிரி கடுக்குமந் தகனையோர் காலால்
திருகு கட்சினம் புழுங்கமார் புதைத்தனன் சேணிற்
பெருமி ரத்தவெள் ளத்துடல் வீழ்ந்தது பிலத்தில் (31)

---

**2315.** வீழ் அமலன்—வீழ்— விரும்பும்; இல்—மனைவி.

**2317.** தென் கோ—யமன். ஈத்த நாள்—ஈந்தநாள். அவதி—முடிவு.

**2318.** இரலை—ஊதுகொம்பு.

**2320.** கறை தெவுட்டு மை—கருநிறம் மிக்க எருமை. மை—எருமை. "காரிருட் பிழம்பு மெழுகிய அக்கமும் ...உள...மா"—திருப்புகழ். கயில்—பிடர். மேய்—மேவும். தெவுளுதல்—கொள்ளுதல், நிறைதல்.

2322. அறந்த ழைத்திடும் அந்தணீர்! தென்றிசை அரசன்
இறந்தி டத்துயில் ஒருவல்போல் மார்க்கண்டி யிருகண்
திறந்து தற்புடை அஞ்சனக் கிரியெனச் சீவன்
துறந்த மெய்ச்சமன் நோக்கியீ சன்பதந் தொழுதான்.()

2323. கால காலனே போற்றி!நா யேற்கருள் கருணை
பால லோசன அண்ணலே போற்றி! உம் பருக்காய்
ஆல முண்டருள் நித்தனே போற்றி!சூ லாங்கம்
போல முக்குணம் ஆதிவைத் தருளுவோய் போற்றி! ()

2324. அண்டம் அன்னமாய்ச் சராசரம் மூறுகாய் ஆக
உண்ட வீரனே போற்றி!வீ மேசனு யுருத்துக்
கொண்டபேருரு வத்தனே போற்றி! சீர் குறித்துப்
புண்ட ரீகன்மால் வியப்புறு காரணு போற்றி! (34)

2325. அருந்த வத்தினுற் காளிமா நடஞ்செய்த ததனைத்
திருந்த நோக்குபு மகிழ்ந்தவா போற்றி! எண்
[டிசையோ(டு)
இருந்த விச்சுவம் ஆகிவிச் சுவாதிக்கன் என்னப்
பொருந்து தற்பரா போற்றி!செஞ் சடிலனே போற்றி!

**கலி விருத்தம்**

2326. என்றுமிரு கண்டுமகன் ஏத்துதுதி கேளா
மன்றல்முகை விண்டிதழ் மதுத்துளி பிலிற்றுங்
கொன்றைகமழ் செஞ்சடிலக் கோவிறை புனிற்றுக்
கன்றுதனை நோக்குதல் கடுப்பவுரை செய்வான்.

2327. விழைந்துசொல் மனஞ்செயல் விரும்பும்வழி பாட்டாற்
குழைந்தமிரு கண்டருள் குமார!உள் மகிழ்ந்தேன்
நுழைந்து மனம் வேண்டுவன நொய்தின்வரும் ஆண்டு
தழைந்துபதி னுறுனக்குச் சந்ததமும் உண்டாம். (37)

2328. நித்தியன் எனப்புவி நிரந்தரமும் வாழ்வை
சத்தியமி தென்றுவரந் தன்னையுடன் நல்கி
அத்திசை மறைந்தனன் அனைத்தையுமார்க் கண்டி
பத்தியொடு பெற்றுவிழை பைம்பொன்மனை உற்றுன்.()

2329. தனக்குவமை யற்றமுநி தந்தையனை யோடு
மனக்கவலை அற்றுளம் மகிழ்ந்தவண் வதிந்தே
கனற்கணுதல் தந்திர கலைப்பொருள் உணர்ந்து
பொனற்குவ டெனத்தரையிற் போதுமிருக் கின்றான். ()

**எழுசீர் விருத்தம்**

2330. சகலதே வர்களுந் தருமனுக் காகச்
சங்கரன் தாளிணை வழுத்த
இகலற எழுப்பி யின்றுதொட் டென்றும்
எமதடி யார்வழி போகத்
தகதென அமலன் தயவினுற் கூறத்
தற்பரன் தாளிணை பணிந்து
மகவப ராதம் பொறுத்தருள் என்று
மறலியுந் தென்திசை புகுந்தான். (40)

## அத்தியாயம் 79.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### வசிட்டர் முதலியோர் பூசித்தது—தொடர்ச்சி

### (10.) அகத்தியர்

சேய்ப்பதியை (வயலூரை) மகிழும் செவ்வேளின் திருவடியைத் துணை கொண்ட அகத்திய முநிவர் சிவபூஜையின் சிறப்பினால் விந்தமலையை அடக்கினர்; எழுகடலையும் அமுதென உண்டனர். வில்வலன், வாதாவியைத் தடிந்தனர். 'வடவேங்கடந் தென்குமரி' ஆயிடைத்' தமிழ் பரப்பினர். மன்றிலே புனிதரின் ஆடல் கண்டனர்; உமாமகேசுரரின் திருமணந் தெரிசித்தார்; தம் இச்சைப்படி உலகெங்கும் நடந்தார்; முருகப் பெருமானுற் சிவலோகம் அடைந்து, பின்னர்ச் சிவம் இவரே என்று உலகெலாம் போற்ற வீற்றிருந்தார்.

### (11.) ததீசி.

ததீசி முநிவரும் சுவன் என்னும் அரசனும் இளம்பருவம் முதலாக மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர் ஒருநாள், தீவினையின் பயனுகச் சுவன் ததீசியை நோக்கி உலகில் யார் வலிமை கொண்டவர்?' என வினவினன். ததீசி, 'அந்தணரே வலியர்' என்றார். சுவன், 'மன்னரே வலியர்' என்றான்.

---

2329. அனை—அன்னை.

2330. தகதென—தகாதென,

இதன் காரணமாக வாதம் முற்ற, ததீசி வெகுளி மேற்கொண்டு சுவனை அறைந்தார். சுவன் தன் கையிலிருந்த வச்சிரப் படையைத் ததீசிமேல் வீசினன். ததீசியின் உடல் இரு துண்டாயிற்று. உயிரும் போயிற்று. அருகிலிருந்தோர் 'ஆ, ஆ' என்று அரற்றினர். பிருகுவின் பாட்டனும் சுக்கிரன் உடனே வந்து துணிபட்ட உடலைச் சேர்த்து மந்திரத்தால் ததீசியை உயிர்ப்பித்தான். ததீசி தூங்கி யெழுந்தவர் போல எழுந்தார். சுக்கிரன் ததீசியை நோக்கி; "நீ சிவன் திருவடியை அருச்சிப்பாயாக. வாழ்நாளும் காரிய சித்தியும் கைகூடும். இறைவழிபாடே இம்மையில் நினைத்தவையைக் கூட்டுவிக்கும்; மறுமையில் வீடுபேறு நல்கும். சிவபூஜையால் திருமால், பிரமன், இந்திரன் முதலானோர் தங்கள் பதவிகளைப் பெற்றனர்; நோய், படை, கோள் வருத்தம் புரியா" என்று கூறிச் சிவமந்திரங்களும் கற்பித்துச் சென்றான்.

ததீசி முனிவர் சிவனை அருச்சித்து வச்சிரதேகம், இறவாவரம் முதலிய எண்ணிலா வரங்களைப் பெற்றார். பின்னர், சுவனது சபையை அடைந்து அவன் மார்பிலே உதைத்தார், சுவன் தன் வச்சிரப்படையை ஏவினன். அது அவர் மெய்யிலே பட்டுத் தூளாயிற்று. ததீசி, "அரசே! உனக்கும் உன் தலைவனுக்கும் அஞ்சேன்" எனக் கூறிச் சென்றார். சுவன் கலக்கமுற்றுத் திருமாலை நினைந்து கடுந்தவம் இயற்றினன். திருமால் தோன்ற அவரிடம் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறிச் சுவன் வருந்தினன். திருமால் சுவனுடன் ததீசியின் ஆச்சிரமத்தை அடைந்து ததீசியை நோக்கி, 'முனியே! எம் பொருட்டு நீ அரசர் வலியே பெரிதெனக் கூறுக; அதனால் வரும் பாவம் எமதே" என்றார். ததீசி அதற்கு இசையவில்லை. திருமால் வெகுண்டு சக்கரத்தை எறிந்தார். அது ததீசியுடலிற் பட்டுத் தூளாகியது. மாயோன் தம் மாய வெள்ளத்தை விடுத்தார். அது ததீசியின் மாயையாற் சுவறியது. மாயவன் பின்னும் மாயையை விடத் ததீசி தருப்பையை விட்டார். தருப்பை மாயவன் சேனையை வாரி விழுங்கியது.

## ததீசியிடம் திருமால் சாபம் பெற்றது.

அவ்வேளையிலே பிரமன் விரைந்து வந்து ததீசிக்கு இன்சொல் கூற, ததீசி முனிந்து, "நெடுமாலே! நீ வீரபத்திரன் படையால் இறப்பாய். உன் அடியார் மதிமயங்கியவராய்ச், சிவபெருமானைப் பழிப்பவராய்ப், பாஞ்சராத்திரிகளாய், மறை வழி நீங்கி நற்கதி யடையாமல் ஐம்பது கோடி நரகிலும் பதைக்கக் கடவர்" எனச் சபித்தார்.

பிரமன் திருமாலை நோக்கி, 'நீ வெற்றி பெறல் இயலாது, சிவனடியாரிடம் பூசல் புரியாதே, வருக' என அழைத்துக்கொண்டு போய்விட்டான். இதைக்கண்ட சுவன் ஆய்ந்த அறிவினனாய்த் ததீசியை வணங்கி, 'முனிவரே அடியேன் இளமைப்பருவமுதல் உன் தொழும்பன். இழைத்த பிழை பொறுத்தி' என ஏத்தினன். முனிவர் சினந் தணிந்தார். 'அரசனே! எங்கள்

சினத்தைத் தணிப்பதற்கு வழி எம்மைப் பணிவதுதான். பிராமணரே மிக வலியோர். எங்கள் குலத்துச் சிவபெருமானே மிக்க பிராமணர்; திருமால் அரசன், பிரமன் வைசியன், இம்மூவரையும் மூன்று குலத்தவரும் வழிபட வேண்டும். தமது குலத்தேவை விடுத்துத் தாழ்ந்த தெய்வத்தை வழிபடுவோர் பதிதர்; அதனால் பாதகம் வரும். அரசனே! நீ உலகைக் காத்து, அந்தணரை ஆதரித்துத் திருமாலை வழிபடுக! யாவராலும் பரவப்படுவோர் சிவபெருமான்; ஆதலால் அவரை வழிபடும் மறையோரே வலியர். மன்னரும் வணிகரும் வலியிலர். சிவனைப் போற்றும் மறையோர் போற்றுதற்கு உரியவர். இங்ஙனம் கூறித் ததீசி சிவனை வழிப்பட்டுக் காலங்கடந்த நித்தியராக இருந்தார்.

---

## அத்தியாயம் 79.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

### வசிட்டர் முதலியோர் பூசித்தது—தொடர்ச்சி

### எழுசீர் விருத்தம்

### (10) அகத்தியர்

2331. சூரிமு கக்குட வயிறு ளைத்தெழு
சூல்மு திர்ந்த வலம்புரி
அரிகு ரற்பகு வாய்தி றந்துள்
அரற்றி யீன்றவெண் ணித்திலம்
விரிக திர்த்திரள் உடுவெ னப்பொழில்
மேய **செய்ப்பதி மகிழ்சேவ்வேள்**
பரிபு ரச்சிறு மலர டித்துணை
பரவு **சற்குரு மு**னிவனே. (1)

2332. ஓங்கு கற்றைய ஒளியெ ழுந்துமெய்
உருவ ருக்கொ ளிலிங்கமேற்
பாங்கு றச்சிவ பூசை செய்த
பலத்தி னுற்கொள் பராரைமெய்
வீங்கு டற்கக னத்தெ ழுந்துயர்
விந்த மால்வரை மிடலகன்(று)
ஏங்கு ளத்தொடு பிலம டைந்திடர்
எய்த வைத்தன னன்றியும்; (2)

---

2332. உருவருக்கொள்—உருவும் அருவும் கொள்ளும்.

2333. **கொண்**ட லேழும் ஒருங்க டைந்திடி
குமிறி யார்த்துவெள் வாய்மடுத்(து)
உண்ட போதறி யாதெ ழுந்தகல்
லோல முத்த முருட்டியோங்(கு)
அண்ட மீதெறி சலதி யேழும்
அகங்கை யாலெடுத் தமுதெனக்
கண்ட வேலையுட் கொண்ட டக்கினன்
கருணை கூர்குறு முனிவனே. (3)

2334. **உ**ருகு வெங்கனல் அனைய வில்வல
னோட டைந்தவர் தம்பியைத்
திருகு வெஞ்சின மொடுத டிந்தயல்
வீசென்ற னன்குணக் கடல்குடக்
கருக றம்புரி குமரி வேங்கட
மாயிடைத் தமிழ் கூறியே
முருகன் விஞ்சைகொள் வழுதி தன்பதி
முற்று மேசெல வைத்தனன். (4)

2335. அருங்க லைப்பொருள் உண்மை ஞானம்
அடைந்த னன்மணி மன்றின்மேற்
கருங்க டுக்கிளர் கண்டன் ஆடலுங்
கண்ட னன்பினும் மினலுலாம்
மருங்குல் முக்கணி யண்ணல் மாமணம்
வந்து நோக்கினன் இச்சையால்
ஒருங்கு முற்சுர ருக்கு நாடரும்
உலக முற்று நடந்தனன். (5)

2336. **சனக** ராதிய ருக்கு மெய்ப்பொருள்
தந்து தக்கணம் நோக்குமாற்
சினக ராதி யிறைஞ்ச நல்லுப
தேசம் வைத்தருள் கந்தனுல்
அனக மாஞ்சிவ லோக முற்றபின்
அகில லோகம் அனைத்துமே
கனக வார்சடை யிறையெ னப்புவி
கருதி யேத்த இருந்தனன். (6)

---

2335. முக்கணி—பார்வதி.

### கலி நிலைத்துறை.

### * ததீசி-சுவராஜன் மாறுபட்டது.

2337. வேலை முனிந்து புலாதி யுடன்பொறி வென்றோர்கள்
தாளை வணங்கி ததீசியும் நின்று சயங்கூர்தன்
தோளை யெனுஞ்சுவ ராசனும் நண்பு தொடர்ந்தேசேர்
காளையர் தங்களில் வாழ்பரு வங்கள் கலந்தாரால். (7)

2338. ஓவரு பண்பிரு வோருயி ருஞ்சொலில் ஒன்றாக
மேவரும் என்றுல கோர்கள் மகிழ்ந்து வியந்தோதக்
காவல னுந்துற வோனும் இருந்தனர் கன்றாமுன்
தீவினை வந்தொரு காலர சன்வறி தின்கூறும். (8)

2339. புண்ணிய ஞான ததீசி யருந்தவ! புவிமீதில்
நண்ணிய பேர்தமி லார்வலி கொண்டவர் நவிலென்னு
எண்ணிய மாமுநி வன்சொலும் அந்தணர் என்றோதத்
திண்ணிய காவலன் மன்னவர் என்றுரை செய்தானால்.

2340. அங்கண் வெகுண்டு விரைந்தவர் தங்களின் அஞ்சாதே
பைங்கழை ஒன்றுடன் ஒன்றுள் இழைந்து
[படர்ந்தேறும்
பொங்கன லின்கதம் நின்றெழல் கண்டு புகைந்தாறு(து)
அங்கைகொ டந்தணன் மன்தலை முந்த அறைந்தானால்.

### அறுசீர் விருத்தம்.

2341. முரிதெண் டிரைப்பைங் கடலுடைப்பார்
முழுதும் பரித்து நறுந்தேன்மஞ்
சரிவண் டுமிழ்கான் கமழ்வாகைத்
தடந்தோட் சுவனும் பெயர்வேந்தன்
சொரியுங் கதிர்வச் சிரப்படைநேர்
தொட்டான் ததீசி யிருடியுடல்
பிரியும் படியோ ரிரண்டாகப்
பிளந்த துயிர்தீர்ந் திறந்ததுவே. (11)

---

* இச் சரித்திரம் முன்னர் ஒருவாறு கூறப்பட்டது. செய்யுள் 1889—1898. பார்க்க.

2340. மன்—சுவன்.

2341. மஞ்சரி—பூங்கொத்து.

2342. அங்கண் இருந்தோர் வெருவா வாய்
ஆஆ என்று பேரொலியாய்
எங்குஞ் செவிடு பட எழுந்த
தென்கோல் எனவவ் வேலைசெயத்
துங்க இருடி மூதாதை
சுசிசுக் கிரன்வங் துடன்பேரன்
அங்கம் இரண்டொன் ருக்கிவிஞ்சை
யதனுல் உயிரும் அளித்தனனே. (12)

2343. மஞ்சங் தனிற்கண் படைதணந்து
மலர விழித்தோன் என எழுந்து
நெஞ்சங் களித்த பேரன்முகம்
நெடிது நோக்கிப் புகலுமுதல்
வஞ்சங் கடிந்தா கமப்படிநீ
வானோர்க் கிரங்கி வாரியெழு
நஞ்சங் தனையுண் டிருண்ட கண்டன்
நளின மலர்த்தாள் அருச்சியென்ருன். (13)

2344. பின்னும் உரைப்பான் அருச்சனைமெய்ப்
பேற்றுல் உனக்கு வாணுளும்
உன்னும் மனத்தில் விழைந்தனவும்
ஒல்லை வருமா ராதனையே
மன்னும் உயிர்கட் கிம்மைதனில்
மனம்வேண் டியபல் பொருள்புரக்கும்
மின்னும் மறுமை தன்னிலுயிர்
மீளா முத்தி யளித்திடுமால் (14)

2345 பிறைவா ளெயிறங் தகற்கடிந்த
பெம்மான் மலர்த்தாள் அருச்சனையால்
மறையோன் பிரம பதமுமணி
வண்ணன் வயிண வத்துவமும்
குறையா தடைந்தார் பின்னுமனம்
குலிசப் படையோன் ஆதியரும்
முறையால் தத்தம் பதமடைந்தே
முக்கண் அமலற் போற்றினரால், (15)

2346. வருந்தா திருத்தி ததீசிமுநி
வரனே! அமரர்க் கிடரிழைக்கும்
பொருந்தார் தங்கள் புரமெரித்த
புனிதன் பூசா பலந்தன்னால்
இருந்தா துரத்த எழுவகைக்கும்
இடர்செய் நோயும் மருவலர்கைக்
கருந்தா திழைத்த வெம்படையுங்
கதித்த கோளும் வருத்தாவால். (16)

2347. என்று பகர்ந்தாற் றருந்த வங்கள்
இழைக்குந் ததீசி முநிவரற்கு
மன்றில் நடிக்கும் மலர்ச்சரண
வள்ளல் தனிமா மந்திரங்கள்
ஒன்று படவே உரைத்தருளி
ஒல்லை அவண்சுக் கிரன்தணந்தான்
வென்ற புலனந் தணிர்! உரைக்கேன்
மிக்க ததீசி வியன்செயலே. (17)

2348. அக்கா லையினில் ததீசிமுநி
அமலன் மலர்த்தாள் அருச்சனைசெய்(து)
எக்கா லமும்வச் சிரவடிவும்
இறவா வரமும் அபயமுஞ்சீர்
மிக்காம் அவுதா ரியகுணமும்
வேண்டும் அபரி மிதவரமுந்
தக்கோர் பரவங் கணனருளால்
தண்டா தடைந்து சமர்நினைந்தான். (18)

2349. பாந்தள் மணிச்சூட் டுலகனைத்தும்
பரிக்கும் தடந்தோட் சுவனெனும்பேர்
வேந்தன் இருக்கும் அவையடைந்து
விரைந்தே யிடத்தாள் எடுத்தரசன்
சாந்த மணிமார் பதிரவுதைத்
தனனவ் வேலை சுவவரசன்
காய்ந்து குலிசப் படைவிடுத்தான்
கடிது முநிமாய்ந் திடுகவென்றே. (19)

---

2346. இரும்—தாது—உரத்த—எழுவகை: இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல். கருந்தாது—இரும்பு.

2350. **பொ**ருக்கென் றெறிந்த பகற்குலிசம்
பொடியாய்ப் பரந்து போனதுகண்(டு)
இருக்கும் பரவும் இறைமலர்த்தாள்
ஏத்தும் ததீசி இருடிமனம்
செருக்குங் களிக்கும் மனைநோக்கிச்
சிறிது நகைக்கும் புரவல!நீ
முருக்குங் குலிசப் படைக்குமுன்றன்
முதல்வன் தனக்கும் அஞ்சிலனால். (20)

2351. **எ**ன்ற ததீசி முனிமொழிகேட்
டிகல்வெம் படைமன் இடருழந்து
கன்று குணிலாய்க் கனியுதிர்த்த
காயா வண்ணன் தன்மலர்த்தாள்
ஒன்று படவுள் ளத்திருத்தி
உலவை யிருநா சியுமடக்கி
நின்று கனலுள் எழுப்பியுடல்
நேர்நின் றரிய தவமிழைத்தான். (21)

2352. **அ**ந்த அமயம் உவணமுயர்த்
தாழிப் படையேந் தியகடவுள்
வந்து வெளிப்பட் டிட அரசன்
வணங்கித் தனது செயலனைத்தும்
நொந்து புகலப் பைந்துளவோன்
நோக்கி யவைகேட் டரசனுடன்
சிந்தை மகிழத் ததீசிபன்னச்
சிரமத் தடைந்தே முனிக்குரைப்பான், (22)

**ததீசியிடம் திருமால் தோல்வியுற்றது**

2353 **சா**ற்றற் கரிய தவமிழைக்குந்
ததீசி முனிபுங் கவ!எமக்காய்
ஆற்றற் குவவு மணித்திண்டோள்
அரச வலியே அதிகமென்றே
ஏற்றப் படநீ உரைத்தியிம்பர்
இதனால் வருபா வம்மெமக்கே
தேற்றப் படுமிவ் வுரையெனமால்
செப்பும் மொழிகேட் டிசைந்திலனால். (23)

2350. மனை—மன்னை—மன்னனை.

2354. **அ**ங்கண் திருகு சினம்புழுங்கி
அரக்கர் குலம்வே றறுத்து விறல்
எங்கும் பரப்புந் துழாய்மார்பன்
எறிசக் கரவெம் படையெடுத்துச்
சங்கை யறமா இருடியுடல்
தடிவான் ஓச்சத் ததீசிமுனி
அங்கந் தனிற்பட் டுடன்தூளாய்
அணுவுக் கணுவாய் அகன்றதுவே. (24)

2355. **மா**யோன் அனந்த மாயைவெள்ள
வாரி விடுப்ப அவைநோக்காத்
தூயோன் தனது மாயையினுற்
சுவற ஒழித்தான் தொடர்ந்துநெடுங்
காயோன் பினுமா யைகள் விடுப்பக்
கண்டு முனியோர் தருப்பைவிட
வேயோன் ஒருவன் ஒழியஅவன்
விறற்சே னையெலாம் விழுங்கியதே. (25)

**ததீசியிடம் திருமால் சாபம் பெற்றது**

2356. **கஞ்சப் போகுட்டோன்** அவ்வேலை
கடிதங் கடைந்து ததீசியைப்பார்த்(து)
இன்சொற் புகன்று முகமனுரைத்
திருடி யரசே! எனமுனிவன்
நெஞ்சத் தெழுவெங் கோபமுடன்
நெடியோற் பார்த்து நீகணத்தில்,
துஞ்சக் கடவை விறல்**வீரன்**
சுடர்வாட் படையால் என்றுபினும், (26)

2357. **ம**துசூ தனனே! உனதடியார்
மயங்கி மதியற் றுடகப்பொற்
பொதுவார் நடன இறையைநிந்தை
புகன்று பாஞ்ச ராத்திரராய்

---

**2355.** நெடுங் காயோன்-நெடுங் காயத்தவன்—திரிவிக்கிரமன். வேயோன்—புல்லாங்குழல் ஊதுந் திருமால்.

**2356.** வீரன்—வீரபத்திரன்.

முதுமா மறைசொல் வழிதணந்து
மூர்க்க ராகிக் கதியற ஐம்
பதுவார் கோடி நரகிலுயிர்
பதைக்கக் கடவர் எனச்சபித்தான். (27)

2358. மதுவின் டொழுகும் மலர்க்கடவுள்
மணிவண் ணனைநோக் குபுவுரைக்கும்
கதுமென் றபரா தம்புரிந்த
கண்ணு! விசயம் உனக்கிலையால்
பொதுவில் நடிக்கும் பரனடியார்
பூசல் விடுதி யென்றிறைஞ்சிப்
பதும மலர்ச்சே வடியில் வழி
பாடு புரிந்து வருகவென்றான். (28)

2359. குழைக்கும் படலை நறுந்துளபக்
கோமான் உளத்திற் குறித்தயல்நின்(று)
அழைக்கும் அயன்மென் மொழிக்கிசைந்தவ்
வன்ன வூர்தி யோடுமரீஇத்
தழைக்குந் தனது பதமடைந்தான்
ததீசி முநிபுங் கவன்செயல் கண்(டு)
இழைக்குங் கருமம் இனியெமக்கிங்
கேதென் றரசன் எண்ணினனால், (29)

2360. சுடர்மா மணிப்பொன் மகுடமுடிச்
சுவனும் பெயர்மன் நல்வினையின்
பிடர்மேற் பிடித்துத் தள்ளமணிப்
பீடத் திருக்குந் ததீசியைப்பார்த்(து)
இடரா ழியைத்தீர்த் தருள்புரிதி
எந்தாய்! இருடி புங்கவ! நின்
படராம் எளியேன் முன்னிளமைப்
பருவந் தொடுத்துன் தொடர்பன்றோ. (30)

2361. தந்தை யருநீ தாயருநீ
தமியேன் தனது துணைவருநீ
முந்தை யருநீ குரவருநீ
முநிவர் களுநீ இரவிமுதல்

---

2360. படர்—ஏவல் செய்வோன்.

ஐந்தை யருநீ யடிகளுக்கே
அடியேன் தொழும்பன் அடைக்கலம்நீ
நொந்தை யரும்பாற் றிழைத்த குற்றம்
நொய்திற் பொறுத்தி பொறுத்தியென்றான். (31)

2362. வாக்கும் மனமும் செயலுமொன்றாய்
வணங்கி மலர்தூய் வழிபட்டுத்
தேக்குங் கருணை வாரிதியே!
தேவே! ததீசி புங்கவனே!
காக்குங் கடவு ளே! எனப்பின்
கருணை கூர்ந்து முனிசொலுஞ்சீர்
ஆக்குஞ் சுவணும் முடியரசே!
அபரா தங்கள் பொறுத்தனமால். (32)

2363. செழிக்கும் பொறையெம் மனோர்க்குளத்தில்
திருகி யெழுவெஞ் சினம்பிறந்தால்
ஒழிக்கும் பெருஞ்சாந் தியதேதென்
றுரைக்கிற் புவிவீழ்ந் திறைஞ்சலெனும்
விழிக்குஞ் சுருதிப் பிராமணரே
மிக்க வலியோர் எங்குலத்தே
சுழிக்குந் தரங்கப் புனற்சடிலச்
சோதி மிக்க பிராமணனே; (33)

2364, அரசர் குலத்தேந் துந்துளப
அண்ணல், வணிகர் தங்குலத்தே
பிரமன், இவர்மூ வரையும்விப்
பிராதி யர்களா ராதித்துப்
பரவக் கடவர் தங்குலத்தே
பரிக்குந் தேவை யொழித்திழிந்த
சுரரை யருச்சிப் போர்பதிதர்
தொல்லை தொடர்பா தகராமால். (34)

2365, அரவ முடிச்சூட் டுலகுபுரந்
தந்த ளார்க் கருள்நிருப!
இரவு பகற்பைங் கடல்வண்ணன்
இருதா ளாரா தனைபுரிதி

---

2361. நொந்து அயரும் பாலதாக இழைத்த குற்றம்.

2363. எனும்—என்று கூறும் சுருதிகள்.

பரவு சகல தேவருக்கும்
பகவான் அதிகன் சிவனதனுல்
வரவு மறையோர் வலியதிகம்
மன்னர் வணிகர் வலியிலரால். (35)

2366. எழுத அரிய கேள்வியினர்
எல்லோர் தமக்கும் எப்பகலும்
தொழுது பரவப் படுங்கடவுள்
சோதி அரனே ஆகையினுல்
பழுதில் தினங்கள் தொறுமறையோர்
பரவி யேத்தப் படுவோரெப்
பொழுதும் அவர்செய் தவமுருவிப்
போற்றக் கடவர் பூவுலகோர். (36)

2367. சூரிசில்! அதிகன் ஆம்சிவனே
கோடாச் செங்கோல் நடாத்தியுல(கு)
ஒருமை யுடன்நீ பொதுவறக்காத்
துறைதி யெனமன் னனையிருத்திப்
பொருவில் சிவபூ சையைமீளப்
புரிந்து பரனை யுளத்திருத்திக்
கருதி யொழியா தொன்றுபட்டுக்
காலங் கடந்தே யிருந்தனனுல். (37)

---

## அத்தியாயம் 80.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### சுதரிசனன் பூசித்தது

முன்னொரு காலத்தில் ஏழைகளுக்குப் பசிதீர உணவளிக்கும் சுதரிசனன் என்பான் சிவபூஜையாற் கூற்றுவனை வென்று, எட்டுத் திக்கினும் உலவிக் கயிலையினும் சென்று வணங்கி நித்தியனுக இருந்தான்.

### பிருகுமுனிவர் முதலானோர் பூசித்தது

பிருகு, துருவாசர், கண்ணுவர், ஆபத்தம்பர், திரணபிந்து, அத்திரி, சௌபரி, சுக்கிரன், புலத்தியர், இடபயோகி, சைமினி, வாமதேவர் ஆதிய எண்ணிலா முனிவர்கள் சிவபெருமானைப் பூசித்து, மறலியை வென்று, நித்தியராக, விண்ணவர் பதம் முதலாக எங்கணும் அப் பதத்தினர் போற்றச் சென்று உலவி எல்லாப் போகமும் எய்தினர் ; இறுதியில் வீடும் உற்றனர்.

எறும்புமுதல் யானையீறாகவுள்ள எண்ணிலா வுயிர்களும் தாம் விழைந்த வற்றைச் சிவபூசையாற் பெற்றன. இத்தகைய சிவபூசை மான்மியத்தைக் கலி யுகத்தில் அந்தணர்க்கும் அரசர்க்கும் உரைத்தல் வேண்டும்,

இதுவரையிற் கூறப்பட்டவை சிவபூசையை விரும்பிச் செய்தோர் பெற்ற பேறாகும். இனி, மனம் ஒன்றால் தம்மை யறியாமலே சிவபூசை செய் வோர் பெற்ற பேற்றைக் கூறுகிறோம்.

## சுதராட்டன் கதை

மாகததேசநத்தில் ஒரு ஊரில், சுதராட்டன் என்னும் அந்தணன் கொடும் பாவச்செயல் புரிந்துவந்தான். அவன் மதுமயக்க முடையவனாக மது விற்கும் ஒருத்தியோடு கூடிக் களிப்பது வழக்கம். அவன் அவளுடன் அரசனுடைய மலர்வனத்தே நுழைந்து மலர்பல பறித்து அவளது கூந்தலிற்சூடித் திரி வான். ஒருநாள் காவலர்கண்டு கன்னத்தில் அறைந்து இவனை வெளியேற்றி னர். எனினும், அம்மலர் வனத்தில் அவளுடன் இரவிலே சென்று அவளுக் குப் பூப்பறித்துச்சூடி மகிழ்ந்து அங்கே தங்குவான். ஓரிரவில், மலர்களைக் திருக்கலாம்; சிவவழிபாட்டிற்கு நம் மலர்வனம் பயன்பட்டது புண்ணியம் அன்றோ'' என்றனர். அரசன் நன்றென மகிழ்ந்து, அதனைச் சோதியாமல் விட்டுச்சென்றான். காவலரும் 'தாய்வயிற்றில் இன்று பிறந்தோம்' என மகிழ்ந்தனர்.

தூர்த்தர்கள் இருவரும், மறுபடியும் அம்மலர் வனத்திற் சென்று மலர் கொய்தார்கள். காவலர் அவர்களைப் பிணித்து அரசன் முன் விட்டனர். அரசன் அந்தக் கள்வனது கைகால்களைக் குறைத்தும், அவளது மூக்கையும் முலையையும் கொய்வித்தும் வெருட்டினான். அவர்கள் இருவரும் மெய்துடித்து மனம் நொந்து சிலநாட்கள் திரிந்து இறந்தனர்.

## வாணாசுரன்

சுதராட்டனுடைய மதுக்குடம் சிவலிங்கமென நம்பும்படி யிருந்ததனாற் சிவலிங்கவழிபாட்டின் பயனை அவன்பெற்றுப் பாவம் நீங்கி மறுபிறப்பில், மறலி கொய்து மதுக்குடத்தின்மேல் இட்டு வைத்துவிட்டு, அவளுடன் கூடிக் குலவி அயர்ந்து தூங்கிக் கிடந்தனன். மறுநாட்காலை அரசன் மலர்வனங் காணப் புக்கனன். காவலர் அரசன் வருவதை அறிந்து மலர்வனத்தை முன்ன தாகச் சோதித்தபோது இந்தத் தூர்த்தர்களைக்கண்டு அவர்களது கைகால் களைப் பிணித்துச் சோலையின் புறத்தே எறிந்துவிட்டு, அரசனுடன் சோலை யைச் சுற்றிவரும்போது மலர் மூடிய மதுக்குடத்தை அரசன் கண்டு ''யார் இப் படி மலர்களைக் கொய்து எறிந்தவர்'' எனக் காவலர்களைக் கேட்டான்; காவலர் கள் 'யாரோ இரவில் லிங்கபூஜை செய்திருக்கின்றார்கள்' என்றார்கள். அரசன் கோபிக்க, அரசனுடன் வந்தவர்கள் ''யாராவது முநிவர் சிவபூசைசெய்

யும் அஞ்சும் வலிமைமிக்க ஆயிரங்கையையுடைய வாணாசுரன் ஆகப் பிறந்தான். அவனது காமக்கிழத்தி சுப்பிரதீகை எனப் பிறந்தாள். வாணாசுரன் முற்பிறப்பில் மதுக்குடத்தின்மேல் மலரிட்ட பழவினை வாசனையால் நருமதைக் கரையில் அமுதவெற்பில் திரண்டுருண்ட கற்களையெல்லாம் சிவனது அருவுருவத் தோற்றமாம் இலிங்கமெனப் பாவித்துப் பூசித்து நருமதை ஆற்றில் இட்டான். அவன் அன்புக்கு வசப்பட்டுச் சிவபிரான் வெளிப்பட்டு எல்லாச் செல்வங்களும் அசுரருக்குத் தலைமையும் ஆற்றலும் அளித்தார். அன்றுமுதல் வாணாசுரன் கயிலைக்குச் சென்று சிவபிரானை வழிபட்டு வந்தான். ஒருநாள் சமயம் அறியாமற் சென்றதனால், வாயில் காக்கும் பூதத்தலைவன் ஒருவன் வாணனைப் பிடித்துச் சக்கரவாள கிரிப்புறத் தெறிந்தான், அதனால் வாணாசுரன் மெய்யும் மனமும் நொந்து, ஒருவாறு தன் அரண்மனையடைந்து, ஆலமுண்ட அண்ணலைப் பூசித்தான். அவனுடைய பூசைக்கு மகிழ்ந்த பெருமான் வெளிப்பட்டு வேண்டுவது யாதென வினவினர்.

அசுரன் வணங்கி, 'எந்தையே! எளியேன் தங்களையும் உமையம்மையாரையும் முருகப் பெருமானையும் எப்போதுந் தரிசித்துக் கொண்டிருத்தல் வேண்டும். கயிலையில் திருவாயிலிற் காக்கும் பூதங்கள் என்னை அடித்து விரட்டி விட்டதனால், அங்கு வரமுடியாமல் வருந்துகிறேன். ஆகையால், நான் உவந்து போற்றத் தாங்கள் தேவியுடனும் மைந்தர்களுடனும் என் நகர வாயிலிலே திருக்கோயில் கொண்டருள வேண்டுகின்றேன்' என்று பணிந்தான். அரனார் புன்முறுவலுடன் இசைந்தார். வாணன் மகிழ்ந்து, தன் நகரவாயிலிலே சிறந்த திருக்கோயில் அவர்களுக்கு அமைத்து வழிபட்டு வந்தான். அவ்வாறு செய்த பூசையின் பலத்தினால் இந்திரன் திருமால் முதலான யாவரையும் வென்றி கொண்டு மகிழ்ந்து வாழ்ந்தான்.

ஒருநாள், வாணன் இறைவன் திருமுன் சென்று, "அண்ணலே! எளியேனுடன் அமர் செய்து திருமால் முதலானோர் தோற்றனர். இப்போது போர் செய்வோர் ஒருவரும் இல்லை. என் தோள்கள் தினவெடுக்கின்றன. முன்பு அருச்சுனனுடன் போர் செய்ததுபோல் என்னுடனும் தேவரீர் போர் செய்து என் தினவைத் தீர்த்தருள வேண்டும்" என வேண்டி வணங்கினான். இறைவன் புன்சிரிப்புடன், 'யாதவ மரபிலே திருமால் கண்ணனெனும் பெயருடன் பிறந்திருக்கின்றான். அவன் எம்மை நாளும் வழிபடும் பக்தன். அவன் உன் தோள்வலியைத் தொலைப்பான்' என்றார். வாணன், 'ஐயனே! அவன் என்னிடம் பதினெட்டுமுறை தோற்றுத் தோள்வலி அடங்கிக் கிடக்கின்றனன். வெண்ணெய்க் கள்வனான அவனோ எனக்கெதிர்?' என்று கூறினான். சிவபிரான், உபமன்னியு முநிவனிடம் கிருஷ்ணன் தீக்கை பெற்று இரவும் பகலும் திருநீறணிந்து நம்மை வழிபடுவதால் முன்போல் வலியில்லாதவன் அல்லன், அவன் உன் வலியையும் தினவையும் போக்குவான்' எனக் கூறியருளினார். வாணன் பலகாலம் வறிதே இருந்தான்.

## உஷா பரிணயம்

வாணனுக்கு உஷையென ஒரு மகளிருந்தாள். அவள் கிருஷ்ணன் பேரனான அநிருத்தனைக் கனவிற் கண்டு, அவனைத் தனது மனையிற் கொணர்ந்து கூடி யிருந்தாள். கண்ணன் இதையறிந்து வாணனுடன் போருக்குப் படையுடன் வந்தான்.

அப்போது நகரவாயிலிற் கோயில் கொண்டிருந்த விநாயக மூர்த்தி கண்ணன்மீது உருத்தெழுந்தார். மாயோன் அவருக்கும் பழம், பாகு, பொரி, மோதகம் முதலிய நிவேதிக்க அவர் அதை உண்டு களித்திருந்தார். பின்னர் முருகவேள் கண்ணனை எதிர்த்து வந்தார். கண்ணன் அவரைத் தனக்கு மருகன் என்னும் கேண்மையால் 'நீ குருபரன், சாமி, எனைக்காக்க' எனத்துதித்தான். அவர் போர் செய்யாது விலகினர். பின்பு, கவுரி எதிர்க்க வந்தாள். மாயோன், "தாயே! உன்னுடன் பொர எளியேன் வல்லனோ ?" எனப் பணிந்தார். தேவியும் போர் செயாது விலகினாள். பின்பு பெருமானே எதிர்த்து வந்தார். திருமால் அஞ்சி மனதாலே அவரை அருச்சித்தார். அப்போது பெருமான் என்னை நித்தம் பரவும் வாணாசுரனைக் காக்க இங்கு வாயிலில் அமர்ந்துள்ளேன்; நீ என்னுடன் போர்செய்க' என்றார். அப்போது திருமால் 'ஐயனே! நான் சகம், நீ சகபதி; நான் மாயை, நீ மாயைக்கு அதிபதி, உன்னுடன் நான் எங்ஙனம் போர் செய்வேன்' என்றார். இறைவன் 'அருச்சுனன் என்னுடன் பொரவில்லையா? அதுபோல நீயும் பொர வருக' என்றார். அண்ணலின் ஆணையை மீற அஞ்சி கிருஷ்ணன் அம்புகளைப் பெருமான் மீது ஏவினன். அவை பெருமான் திருவடியில் மலர்களாய் விழுந்தன. அப்போது வாணன் நேரே வந்து கிருஷ்ணனுடன் பொருதான்; போர் கோரமாய் நிகழ்ந்தது. சிவபிரான் வானில் எழுந்தருளி "கிருஷ்ணா! வாணன் என்னைப் பூசிப்பவன். ஆதலால் அவன் கைகளில் நான்கை மட்டும் (அறுக்காது) விடுக" என்றார். அவர் அங்ஙனமே செய்தார். இறைவன் வாணனை நோக்கி 'வாணனே! உன் தோளின் தினவு நீங்கி யிருக்கும். ஆயிரந் தோள்களில் நான்குமட்டும் நம்மை வழிபடுமாறு விடப்பட்டன. நீங்கள் இருவரும் இனி நட்பினராக வாழ்க. உன்மகளைக் கிருஷ்ணன் பேரனுக்குத் திருமணம் புரிவித்திடுக' என்று திருவாய் மலர்ந்தார். இருவரும் அவ்வாறே போரை நிறுத்திக் கேண்மை பூண்டனர். அநிருத்தனுக்கும் உஷைக்கும் திருமணம் நடந்தது. கண்ணன் மணமக்களுடன் துவரை சேர்ந்தான்.

## வாணன் பூசை

பிறகு வாணாசுரன் தான் அறியாமற்செய்த பிழைக்கு வருந்தித் திரும்பவும் நருமதை யாற்றங் கரையிற், சிவபூஜை செய்தான்: இறைவன் வெளிப்பட்டு வாணன் விரும்பிய வாறே அவன் சிவ கணங்களுள் ஒருவனாகவும், தமது திருக்கூத்தின்போது அக்கூத்தைத் தரிசித்துக் கூத்துக்கு ஒத்த குடமுழவு அவன் வாசிக்கவும், நருமதை யாற்றங்கரையில் அவன் வழிபட்டு விடுத்த

பெரிதும் சிறிதுமான இலிங்கமெல்லாம் வாண லிங்கம் எனப்புகழ் பெறவும், அந்த லிங்கத்தைப் பூசிப்போர் இம்மை மறுமைப் பயன்களை எளிதிற் பெற்றுத் தமது திருவடி நிழலைப் பெறுமாறும் வரங்கள் தந்தருளினர். வாணனும் அவ் வரங்களைப் பெற்று நீங்கா இன்பஞ் சிறந்தான்.

---

## அத்தியாயம் 80.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### அறுசீர் விருத்தம்

2368. **உ**லகினின்மும் மலஞானத் தொடுகிரியை
தனைமறைக்க ஓங்கி யாழ்ந்த
நிலையெவர்க்குங் கடப்பரிய பவச்சலதி
நடுவீழ்ந்து நீந்திப் பாரஞ்
செலவறியா வுயிர்க்கருளச் சிவன்மிழற்றும்
ஆகமங்கள் தெரிந்த சூதன்
அலகில் முநி வரர்க்கமலன் பூசையின்மான்
மியம்பின்னும் அறைய லுற்றான். (1)

### சுதரிசனன் பூசித்தது.

2369. **அ**ந்தணிர்காள்! முன்னொருகால் அருமறையோன்
**சுதரிசனன்** ஆது லர்க்குப்
புந்திமகிழ்ந் தறுசுவையன் னுதியனு
தினங்கொடுப்போன் புளகக் கொங்கைச்
செந்துவர்வாய் உமைகொழுநன் பூசையினாற்
கூற்றைவென்றெண் டிசையும் போகி
வந்தனைசெய் கயிலையினும் இச்சையிற்போய்
நித்தியனைய் வணங்கிச் செல்வான். (2)

### பிருகு முநிவர் முதலானோர் பூசித்தது.

2370. **பி**ருகுமுநி துருவாசன் கண்ணுவனு
பத்தம்பன் பெருங்கா னத்துச்
சருகுநுகர் திரணவிந்து அத்திரிசௌ
பரிசுக்ரன் தகுபு லத்யன்

---

2368. பாரம்—கரை.

2369. அன்னாதி—அன்னம் ஆதிய.

திருகுசினம் ஒருவிடப யோகிசை
மினிவாம தேவ ஞதி
உருகியபொன் உறழ்சடிலத் தாபதரெண்
ணிலர்சிவனை உளத்திற் கொண்டே. (3)

2371. அருளமலன் பரவிந்து பரநாதம்
அபரவிந்து அபர நாதம்
உருவருவங் கொணர்ந்தசிவ லிங்கத்தில்
அருச்சனைசெய் துடனீர்ப் பாரில்
வருமறலி தனைச்சபித்து நித்தியராய்
விழைந்தபடி மறையோர் விண்ணோர்
நிருதர்முத லியர்பதங்கள் அனைத்தினுஞ்சென்
றவரவர்கள் நெடிது போற்ற, (4)

2372. உள்ளமிசை அபரிமித வுவகைநகை
மீதூர உலவா அங்கம்
அள்ளலறப் படர்ந்தவண்மல் கியபோகம்
அனைத்துமளை இ யிமையா நாட்டம்
கொள்ளமரீ இ யினர்; மாந்தர் சிவபூசை
புரிந்துசெல்வங் கொணர்ந்து சித்தி
விள்ளருபோ கம்நுகர்ந்து மூவுலகும்
போகியந்தம் வீடும் உற்றூர். (5)

2373. பிறையெயிற்றுப் பஃறலைச்சூட் டுலகில்மெய்நா
மூக்கறிவாம் பிபீலி காதி
கறையடியந் தந்தொகுத்த வுயிர்களிலெண்
ணில விரும்பிக் கௌரி யோடு
நறைகமழ் செஞ் சடிலஅண்ணல் நளினமலர்த்
தாள்தொழுது நயந்து போற்றி
இறையருளால் அருச்சனைசெய் தருங்கதியை
அடைந்தனபே ரின்பம் உற்றே. (6)

---

2372. அள்ளல்—நெருக்கம்; அள்ளலற—தாராளமாக,

2373. பிபீலிகம்—எறும்பு ; கறையடி—யானை. எறும்பு பூசித்த தலம்—திரு எறும்பியூர் (திரிசிராப்பள்ளிக்கு அருகில் உள்ள ஸ்தலம்). யானை பூசித்த தலம்—திருவானைக்கா,

2374. **எ**ன்றுலகெங் கணுமளத்தற் கரியபெருஞ்
சீர்த்திதண்டா திருக்க மல்க
நின்றன ; அந் தணிர்!ஆகை யாலமலன்
மான்மியம்நீள் நிலத்தில் நீதி
வென்றகலி யுகத்திலரு மறையோர்க்கும்
இருங்கலைநூல் விரித்து ணர்ந்தே
மன்றல்மலர் வாகைபுனை நிருபருக்குஞ்
சொலவேண்டும் மகிழ்ந்து மாதோ. (7)

2375. **அ**ந்தணிர்காள்! இப்படிமுன் சிவபூசை
விதிப்படிதேர்ந் தறிந்தி ழைத்தே
புந்திமகிழ்ந் தரியசித்தி முத்தியடைந்
திடுகாதை புகன்றோம் இன்னும்
இந்துநற விதழிமிலைச் சியகடவுள்
அருச்சனையென் றெவள வேனும்
சிந்தைமிசை சிறிதறியா திழைத்தோர்கள்
பெற்றபலன் செப்பக் கேண்மின். (8)

**சுதராட்டன் கதை**

2376. இருதிருமூன் றினுமலர்ப்பைந் தழைகுழைக்கும்
இளமரக்கா இசைந்து வானிற்
பருதிவிழி நோக்கியிடை பிங்கலைசெல்
மருத்தடக்கிப் பன்னாட் சோதி
கருதியனி லஞ்சுழனை செலவரிய
தவஞ்செயுந்தக் கார்முன் எண்ணில்
சுருதிமிழற் றியகிள்ளை துதித்திடுமா
கததேயச் சூழலம்மா. (9)

2377. **செ**ழுங்கமல முறுக்கவிழும் பசுந்தேறற்
செந்துவர் வாய்த் திருவை அன்னார்
கொழுந்துவிடு நெடுமாடக் கோகனக
மாளிகையிற் குலவி யாடும்
தொழும்புடைய கணவர்தந்தோள் தொன்மைபெற
அணைகின்ற துய்ய மாதர்
எழுந்தமதி நுதல்மடவார் இணையிலர்விண்
ணாட்டவர்கள் இவரா ரென்பார். (10)

2378. அந்நகரில் மருவுசக்கி ராங்கனெனும்
அப்பெயரோன் அரிய தீயன்
கன்னல்மொழி முகிழ்முலைச்செங் கனிவாயார்க்
கோர்மைந்தன் கசட னான
பன்னு சுத ராட்டனென்போன் பைங்கொடியைப்
புணர்ந்துவெகு பதக னான
அன்னவன்தன் செய்வினைகள் அளவிலாக்
கொடும்பாவம் அனைய செய்வான். (11)

2379. எழுதரிய கேள்வியரு மறையோர்கள்
அனைவருமே யிகழ நிந்தை
முழுதுமொரு வடிவெடுத்தோன் தருமவழி
தணந்தறிவை மோகஞ் செய்தெப்
பொழுதும்வடி தேறல்கடைத் தெருவில்விற்குங்
கலகவிழிப் புளகக் கொங்கை
வழிமதுக்கள் பருகுவெள்வாய் மதுவிச்சி
யொடுநித்தம் மரீஇக் களிப்பான். (12)

2380. ஒருபகலில் உளக்களிப்பு மீதூர
அவளுடன்போய் ஒளிறும் வாட்கை
நிருபன்மலர்ச் சோலைக்கண் வதிந்துமுகை
முறுக்குடைந்து நெகிழ்ந்து தண்டா
முருகுகமழ் செண்பகமல் லிகைபிச்சி
யிருவாட்சி முல்லை கொய்து
செருகுகுழல் முடிநீவி யணிந்தனனிப்
படிபலகால் திரிந்தான் மாதோ. (13)

2381. கூரவினிலிப் படிதிரியுங் காலையிலோர்
நாட்சோலை காப்போர் கண்டு
வெருவ அவ ளொடுகொணர்ந்து கவுட்புறத்துப்
புடைத்தினிமேல் வியந்தா ராமம்
வருவிதம்நீ மறந்திடுதி யெனத்தெருட்டி
விட்டனரம் மறையோன் மீள
இரவுதொறும் அவளுடன்கா வடைந்துமலர்
கொய்துவனேந் திருந்தான் ஓர்நாள்; (14)

2382. கூடிமலர்ச்சோ லையிலாவி கமழ்நறுமென்
மலர்கள்கொய்து காதல் கூர
வடிமதுப்பெய் குழிசியிடை வைத்தவள்மா
மூலைச்சுவடு மருமம் பாயத்
துடியிடைமெய் துவளவிழி சுடர்மணிக்கொப்
பிடைபொரத்தார் சொருகு கூந்தல்
முடிசரிய அவளையங்கண் அணைந்தவச
மாய்த்துயின்று மூச்சு விட்டான்; (15)

2383. இருவருமன் மதகலையின் விதிமுயங்கிப்
பரவசமா யிளைத்துச் சோர்ந்தே
அருணனுத யமுமிரவி யுதயமுஞ்சார்
வறியாமல் ஆரா மத்திற்
கருவிழிகண் படைகொளும்வே ளையிலரசன்
மலர்ச்சோலை காண்பான் அங்கண்
மருவவரு முன்னரவன் பாலர்வனஞ்
சோதித்து வந்தார் மாதோ. (16)

2384. பெரியமதுக் குடத்தின்மலர் பெய்ததுவுங்
கலைசோர்ந்து பெருநாண் அற்றுக்
கரியவிழிப் பரத்தையொடு தூர்த்தனு
கியமறையோன் காவ கத்தே
திரிய அடைந் துறங்கினதுங் கண்டுவிரைந்
தவர்கரங்கால் செங்கை பற்றி
யிரியவயற் புறத்தெறிந்து மன்னனரு
கடைந்திறைஞ்சி யேத்தி னூரால். (17)

2385. கூனைகழற்கால் நிருபன்முகில் கண்படுக்கும்
மலர்ச்சோலை கமழ்பூங் கொத்துச்
சினைபொதுளுந் தழைகுழைக்குஞ் சிங்கார
வனம்நோக்கிச் செல்லும் ஏல்வை
நனைபிலிற்றும் நறுமலரால் மறைகடமி
லிங்கமென நாடி நோக்கிப்
புனைமலர்கொய் தெறிந்தவரார் பொழில்வறிதா
யினவென்கொல் புகல்திர் என்றான். (18)

2382. ஆவி—வாவி. விழி...கொப்பிடை(காதொடு)பொர.
2383. பாலர்—பாலகர்—காவலாளர்.
2384. இரிய—திரும்பவும், மறுமுறையும்.
2385, மறை கடம்—(நறுமலரால்) மறைந்துள்ள (கள்)குடம்,

2386. செய்யவன பாலர்மலர்ச் செங்கைகூப்
புபுநின்று, செயிர்த்துக் கூறும்
வெய்யகுரி சிலைநோக்கிக் கட்டுரைப்பார்
எமையன்றி வேந்தே யார்க்கும்
ஐயமற இம்மலர்ச்சோ லையினுட்பண்
புக அரிதிங் கல்லிற் காலம்
மையலுள மானவரோ வானவரோ
கொய்திலிங்கம் வழிபட் டாரால், (19)

2387. என்றுபுகன் றிறைஞ்சும்வன பாலகரை
இறைநோக்கி இயம்பும் இப்போ(து)
ஒன்றுபட மலரனைத்துங் கொய்தனரோ
இப்படியே உவந்து பல்கால்
மன்றல்மலர் கொய்தனரோ வுண்மைபெற வுரைத்திர்
இன்றேல் மறித்து வாளாற்
கன்றுசிரத் தொடுகரங்கால் கடிந்தெறிகு
வோமெனவே கழறி னுல். (20)

2388. அன்னபகல் வனபாலர் யாங்களொருக்
காலுங்கண் டறிகி லோமால்
என்னகலி காலவிதி வசமோ இப்
போதுகண்டோம் எங்கோ வே!நின்
பொன்னடிகள் ஆணைதப்பா தென்றுரைக்கப்
புகழ்வேந்தன் புடையிற் சேர்ந்த
முன்னவர்சொல் வாரெந்த முநிவரோ
சிவபூசை முடித்துச் சென்றுர். (21)

2389. கருவிமுகி லுறழ்தடக்கை நிருபரே
றே! எவரென் காதல் கூரப்
பொருவில்சிவ லிங்கம்நறு மலர்தூவி
வழிபாடு புரிதல் நாம்செய்
தருமமன்றே என, அரசன் அனுமதித்தப்
புறம்படர்ந்தான் தாய்வ யிற்றில்
இருமைபெற இன்றுபிறந் தனமென்று
வனபாலர் எண்ணிச் சென்றுர். (22)

---

2386. அல்லிற் காலம்—இரவு.

2390. அக்காலை மதுநுகரும் பரத்தையுந்தூர்த்
தனும்வெருவி அவசந் தீர்ந்து
திக்காரும் இல்லையென்றே நொந்தொருவர்க்
கொருவர்கட்டுச் சேர நீத்தே
எக்காலும் இருந்தமனை யடைந்துபின்னும்
மதுநிறைய எடுத்துண் டாற்றல்
மிக்கார்மொய் மலர்வனத்தில் மீளவுஞ்சென்
றணிமலர்கள் விரும்பிக் கொய்தார். (23)

2391. பரிமளமென் மலர்கொய்யுங் கரவடரைக்
கண்டுவன பாலர் சீறித்
திருகுசினத் தோடுவரிக் கயிற்றினாற்
பின்கட்டாய்ச் சேர்த்துக் கொண்டே
குரிசில்முனம் விடுப்ப, இறை கோபித்தே
யவன்கரங்கால் குறைத்துத் தேறல்
பருகுமவள் முகிழ்மூக்கும் பயோதரமுங்
கொய்துடலம் பதைக்க விட்டான். (24)

2392. மதுநுகரும் பரத்தையுந்தூர்த் தனும்பாவக்
கயவர்வடி வங்கு றைந்த
விதுவெனவுள் ளங்கரைந்து நொந்துசில
நாட்கழித்த வேலை அன்னோர்
கதுமெனவுள் ளாவிதணந் திறந்தனர்கள்
அவர்கள்மதுக் கடத்தில் முன்னாட்
புதுமலர்கொய் தறியாமற் போட்டதுவும்
பின்னர்சிவ பூசை யாமால். (25)

வாணசுரன் தோற்றம்.

2393. மறையவரிற் கரவடனா கிய சுதராட்
டன்முன்மனம் வாக்குக் காயம்
முறைமுறைவிட் டிழைத்தபெரும் புறச்சலதி
நிகர்பாவம் முற்றுந் தீர்ந்து
குறைவரவா யிரங்கைவலி பெற்றுவா
ணசுரனாய்க் கூற்றும் உட்க
இறையருளால் உதித்தனன்பின் மனைவியுஞ்சுப்
பிரதீகை யெனவு தித்தாள். (26)

2394. இகழும்துக் குடத்தின்முனம் மலர்போட்ட
வாதனையால் இயந்து வைக்க
அகழுமுரி திரைதரளங் கொழிக்குநரு
மதைக்கரைகூ ரமுத வெற்பிற்
புகழுமலக் கடவுள்திரு வுளத்துருகித்
திரண்டுருண்டு புடைத்த தெல்லாந்
திகழுமரு வுருவிலிங்கம் என அருச்சித்
துடனதியிற் சேர்த்தி னுைல். (27)

2395. திங்கள்நதி யிதழிவனை செஞ்சடையோன்
வெளிப்பட்டுச் செல்வம் யாவும்
பொங்கசுரற் குரியமலர் தலையுலகு
மதுகையுமே பொருக்கென் றீந்தான்
அங்கணவை யசுரனடைந் தன்றுமுதற்
கயிலாய அசலம் போகிச்
சங்கரன்தாள் நித்தம் வழிபாடுசெய்து
தன்மனையிற் சார்ந்தோர் நாளில், (28)

2396. பொருவருமெய் வரம்பெறுவா ணசுரன்சீர்
கயிலாயப் பொருப்பி லீசன்
திருவுளம்வாய்ந் தருளுமவ சரமேதென்
றெண்ணுமற் செல்லும் ஏல்வை
குருமணிகள் பலகுயிற்று டகவாசற்
பெரும்பூதக் குரிசில் ஒல்லை
வருமவனை விளையாட்டாற் சக்கரவா
ளக்கிரியின் மருங்கெ றிருந்தான். (29)

2397. மிடல்கெழுதிண் புயவாண சுரனேமி
வரைப்புறத்து வீழ்ந்து மேரு
உடல்தகர்ந்து வெருவியென்பு குளுகுளுத்துப்
பெருமூச்சும் ஓரீஇத் தெளிந்துள்
அடல்கெழுதோள் வலிகொடெழுந் தைதெனத்தன்
மனைமேவி அறிவு கூர்ந்து
கடல்கெழுநஞ் சுண்டகறைக் கண்டன்மலர்ப்
பதம்பூசை கடிதி ழைத்தான். (30)

---

2394. வாதனை—வாசனை.

2395. மதுகை—வலிமை.

2398. கூழிபெருசெல் வமுமிடலுங் கணிப்பில்புக
ழுந்திருவுங் கருணை கூரும்
விழியிலருள் பெருகுபர ஞானமுமிச்
சையில்வெறுப்பும் விரைஇய மல்கி
ஒழிவறமே வியகுணங்கள் ஓராறும்
உளபகவான் உவந்தி லிங்க
வழிவிரைவில் வெளிப்பட்டு வாணகு
ரன்கணெதிர் வந்து ரைப்பான். (31)

2399. பொறிபுலன்வென் றெமைவிதியிற் பூசைசெய்வா
ணசுர!இப் போது னக்கே(து)
அறிவில்விரும் பியவரமே தென அசுரன்
உரைக்கும் எந்தாய்! அடிய னேற்குப்
பிறிதுவரம் என்கொலுமை முருகனுடன்
நின்சேவை பிரியா தென்றும்
அறிவினிழைத் திடவேண்டும் அதுவேவேண்
டும்வரமென் றடியில் வீழ்ந்தான். (32)

2400. கூதுமெனவே யெழுந்துபின்னுங் கட்டுரைப்பான்
எங்கோவே! கயிலை வெற்பிற்
மதுமலர்த்தார் கமழுமணி மகரதோ
ரணவாயில் வரும்போ தங்கண்
பதுமன் எறி திகிரியா தியர்பொன்முடி
நேர்புடைக்கும் பாரி டங்கள்
விதுமுடுகும் அரவெனவே வேத்திரத்தால்
எனையோட்டி விட்டார் மாதோ. (33)

2401. அன்றுமுதல் அடியேனுக் குளம்பதைத்து
நடுக்கமுற்ற தாகை யால்நீ
என்றுமகிழ்ந் துலகனைத்தும் ஈன்றருள்மைந்
தர்களுடனே யெளியேன் வாயில்
ஒன்றுபட மகிழ்ச்சியுடன் உறைந்திடிலெப்
போதும்நான் உவந்து போற்றி
நின்றுவழி படுகுவனீ தடியேற்கு
வேண்டுவரம் நிகழ்த்தி லென்றான். (34)

2402. அடியர்கருத் தறிந்துள்ளம் அனைத்துமருள்
கருணைவள்ளல் அதற்கி சைந்து
கொடியசெயல் எனச்சிறிதும் எண்ணுமற்
புன்மூரல் கொண்டே நாமப்
படியிருக்கின் றேமென்று வரங்கொடுக்க
அசுரன்முனம் பணிந்தெ ழுந்து
கடிநகர்வா யிற்புறத்துக் கவுரிக்குங்
குமரற்குங் கண்ணு தற்கும், (35)

2403. விரிசுடர்விட் டிமைக்குமணிப் பழவயிரக்
கால்நிறுத்தி வீதி தோறும்
பிரிவின்முத்துப் போதிகையும் மரகதவுத்
திரமுநெடும் பிரவா ளஞ்சேர்
வரிநெடுங்காற் கொடுங்கையுமிந் திரநீலப்
பீடிகையும் மாணிக் கம்பூண்
தெரியலுமாங் கொடிமாட மண்டபந்திப்
பியமாகச் சிறக்கச் செய்தான். (36)

2404, சுடர்விசிறு புருடரா கக்குறடும்
பலசமைத்துத் தொல்லு லோகத்(து)
இடரகல வருள்பரவத் திண்மைபெறும்
அரியணையிற் சிறந்த தாக
விடமதனை யருந்துகண்டர் விரைமலர்த்தாள்
தொழுதிறைஞ்ச விண்ணோர் யாரும்
படரெனவுள் ளொடுங்கவழி பட்டுவலம்
வந்திறைஞ்சிப் பரவி னுல். (37)

2405. எறுழ்கெழுபுத் தேளிர்குலம் வதைத்திடுமோங்
கற்சிறகர் ஈர்த்தைந் தாரு
குறுகுமர சையும்பூமிக் கொழுநனையுஞ்
சயித்தடங்காக் கொற்ற மேற்கொண்(டு)
உறுபுவியந் தரந்துறக்கந் தனது வச
மெனக்கருதி யொன்ன லாரைக்
கறுவியட லிற்சயித்துள் உறையுள்வதிந்
தனன்பின்னோர் காலந் தன்னில், (38)

2403. ப்ரவாளம்—பவளம்.

2405. பூமிக் கொழுநன்—திருமால்.

2406. **வ**டவரைவெள் கிடப்பணைத்துப் புடைத்திறுகித்
திரண்டெழுந்து வளர்ந்து பூரித்(து)
அடல்கருது விறற்புயங்கள் அளப்பருங்கண்
டடுத்தேயுள் அகந்தை யாகிப்
படவரவம் அரைக்கசைத்த பண்ணவன்முன்
சென்றுமலர்ப் பதங்கள் போற்றி
விடநுகரங் கணனுடனென் னுடன்சமர்செய்
வோரிலைசூழ் விரிநீர்ப் பாரில்; (39)

2407. **ப**ருதியயு தங்குழுமிப் படர்ந்தனைய
எறிதிகிரிப் படையோன் போரிற்
குருதிபுய வரையருவி கொழித்திடமுப்
பகலதுபகற் குலைந்து போனான்
கருதியுறுத் தறைகூறிக் கதுமெனவச்
சிரப்படைசெங் கரந்தொட் டென்னை
வருதிசமர்க் கென்னுமக வானுமறப்
பகலதுபகல் மறைந்து தோற்றான். (40)

2408. **ம**ருத்துமுடன் எழுமன்னும் புறங்கொடுப்பச்
சென்றிடுமும் மதிலும் மாய
உருத்துநகைத் தெரித்தருள்பெம் மான்சிறியேன்
புயங்கள்தின வொழியா துற்றுச்
செருத்தலைவெய் யனவிப்போ தாகையினால்
இனியென்னைச் சிறிய னென்றே
கருத்தினிலுட் கொளாதமர்செய் அருச்சுனனே
டிகலிழைத்தல் கடுப்ப முன்போல். (41)

2409. **க**தித்தெழுமென் மணிப்புயத்துக் கண்டூயம்
போரதனாற் கடித டங்கும்
விதத்தடுமன் னியமிதனால் மீள்வதில்லை
அரியயற்கு மேலாந் தேவே!
மதித்தெனுடன் அடல்புரிய வல்லவரு
குதியென்ன வள்ளல் கேளாத்
துதித்திவைசொற் றிடும் அசுரற் பார்த்தெழும் புன்
முரலொடு சொல்ல லுற்றான். (42)

2406. கண்டு—கண்டூயம்—தினவு.

2408. மருத்து...மன்—அட்டதிக்குப்பாலகர். செருத்தலை—போரில்; வெய்யன—விருப்பம் உள்ளன.

2410. இசைபெருகும் வரிசையா தவர்குலத்தில்
அரிபிறந்தங் கிருக்கின் றானெண்
திசையுமதி சயிக்கவெமைத் தினமும்விதிப்
படிபூசை செய்யும் பத்தன்
தசையுமிட லுந்தினமுந் தணவாமல்
அலைத்தெழுநின் தடந்தோள் நோக்கி
யசைவில்விறல் கெடத்தொலைப்பன் அசுரரே
றே! யுண்மை ஐயம் இன்றால். (43)

2411. என்றுமழ விடைக்கடவுள் இசைத்தசொற்கே
ளாஅசுரன இயம்பு வான்பின்
மன்றுள்நடித் தருள்பெம்மான் யாதவர்தங்
குலத்துதித்த மாயோன் தானும்
வென்றிடுமென் புயஅடலால் மிடலுடைந்து
மூவாறு விசைதோற் றெய்த்தான்
துன்றுபெரு வலிகொள்சண்ட வாயுவுமென்
தனக்குடைந்து தொலைவான் போரில். (44)

2412. அங்கண! என் னுரைகேட்டி சிற்றில்விடங்
கத்தினசைந் தாடு சிக்கம்
பொங்குவெண்ணெய் திருடியுண்ட கள்வனோ
எனக்கெதிர்நீ பொருஞ்செய் கென்னத்
திங்கள்மிலைச் சியகடவுள் செப்புமுப
மன்னியுவின் தீக்கை பெற்றுக்
கங்குல்பகற் பொடியணியுங் கண்ணன்முன்போ
லலமதுகை கதித்த போது, (45)

2413. செருவில்வெலற் கரியபெருந் திறல்படைத்தங்
கிருக்கின்றான் சென்று நீநின்
பொருவருதிண் புயவலியுங் கண்டுமடங்
குதற்கிப்போ போது போர்செய்(து)
அருவரைநேர் புயத்தினவும் ஆற்றலுமே
அடக்குவன்ஈ தைய மின்றால்
நிருதரர சே! அவனே குறியெனவா
ளாஅசுரன் நெடிதி ருந்தான். (46)

---

2412. விடங்கம்—உத்தரக்கட்டை; சிக்கம்—உறி.
2413. கண்டு—தினவு. இப்போ—இப்போது.

**உஷா பரிணயம்.**

2414. அன்னபகல் மிடல்கெழுவா ணசூரன்
தனயையுழை யவாமீ தூரப்
பொன்னவிருந் திதலைவிரி பொம்மல்முலைத்
திருமார்பன் புதல்வன் ஆன
அன்னமுயர்த் தோன்மதலை **அனிருத்தன்**
தனைக்கனவில் அறிந்து மோகித்(து)
இன்னலுழந் தவாவிலவன் தனைக்கொணர்ந்து
தன்னுறையுள் இருந்தாள் மாதோ. (47)

2415. குன்றுகுணி லாகவிளங் கனியுதிர்த்த
மாயனது கண்ணு ரூப்பின்
சென்றுதழற் பிழம்புவிசும் பணவியவா
ணபுரியிற் சீற்ற மோடு
துன்றுகடற் படையுடன்போய்த் தொடர்ந்து செருச்
செயுமேல்வை துரந்து செம்பொற்
குன்றுநிகர் வடிவவொரு கொம்பனுருத்
துடனெதிர்த்துக் கோபித் தானல். (48)

2416. பருமணித்தெங் கின்பழமும் நறுங்கதலிக்
கனியுமெள்ளும் பாகு சேர்த்த
பொரியுமிகு மோதகமும் பொரிமாவும்
அவற்குவையும் புல்ல கண்டத்
தருவமுது பலகுவித்துப் போற்றிசெய
ஒருகொம்பன் தண்டாச் சீற்றம்
ஒருவி யைந்து கரத்தாலும் உண்டுமலை
யகடுநிறைத் துளம கிழ்ந்தான். (49)

2417. முருகுநற வுமிழ்கடப்பங் தொடைவடிவேல்
வலனேந்தும் முருக வேள்வெஞ்
செருவில்மயில் எதிர்கடவிச் செம்புலத்தில்
எதிர்க்கவெறி திகிரி மாயோன்

---

2414. தனயை—மகள். அன்னம் உயர்த்தோன்—பிரமன். அனிருத்தன் தந்தை—பிரத்யும்நன்; பிரமனை அநிருத்தன் தந்தையாகக் கூறினது உபசாரம்.

2415. ஒரு கொம்பன்—விநாயகர்.

2416. புல்லகண்டம்—கரும்பு.

மருகனெனும் கேண்மையினல் மலர்முகநோக்
குபுகடவுள் வருத்தந் தீர்க்கும்
குருபரனு கியசாமி நீயன்றோ
காத்தி! யெனக் குமரன் மீண்டான். (50)

2418. கருதரிய பரனிடங்கொள் கவுரியெதிர்த்
திடமாயோன் கழறும் அன்னய்!
மருமலர்ச்சிற் றடியின்முனம் மறைவிதியின்
வழிபட்டு வரமேற் கொண்டிங்(கு)
இருநிலங்கள் புரக்கின்ற எளியேன்தன்
னெடுமலைதல் என்கொல் நாயேன்
செருவிலடல் புரியவும்வல் லவனேஎன்
றடிபணிந்தான் தேவி மீண்டாள். (51)

2419. பிறையெயிற்றந் தகன்மருமம் பிளந்திடக்காய்ந்
துருத் துகைக்கும் பெம்மான் சீறி
அறைகழற்கால் எறிதிகிரிப் படையோனை
எதிர்க்கவிறல் அரிகண் டேங்கி
மறைபரவும் மனத்தினுக்கும் எட்டாத
வள்ளல்மரு மலர்த்தாள் மீதில்
நறைகமழ்பன் மலர்தூவி யருச்சனைசெய்
தனன்; அவனை நம்பன் நோக்கி, (52)

2420. கருங்கடல்வண் ணு! நித்தம் பரவியவா
ணுசுரனைக் காப்பான் செம்பொன்
நெருங்குநவ மணிகுயிற்றும் மகரதோ
ரணவாயில் நீங்கா தென்றும்
அரங்கெனவே யிருக்கின்றேம் அடற்படைவா
ராதுதொலைத் தருள வேண்டும்
பொருங்கதமுண் டேலெம்மோ டடல்புரிதி
யெனநெடுமால் போற்றிச் சொல்வான், (53)

2421. நிகரில்கரு ணைக்கடலாம் ஆதியந்தம்
அற்றிருக்கும் நிமல! கேட்டி
சகலவிச்சு வாதிகன்நீ விச்சுவன் நான்,
சகபதிநீ சகம்நான், போற்றும்

மகபதிநீ மகவுரு நான் மாமாயைக்
கதிபதிநீ மாயை நான், போர்
மிகுவில்எடுப் போன்நீயவ் விற்கணைநான்,
உயிர்தொலைக்கும் வேந்து நீயே. (54)

2422. கண்ணுதலப் படியிருக்கும் பரஞ்சோதி
நின்னுடன் நான் கருதிப் பூசல்
பண்ணுதலெப் படிமுன்னுட் பஞ்சசரந்
தொட்டிலக்குப் பார்த்து நின்னை
எண்ணுதலில் லாதுமதன் எய்துபொடி
ஆயினன்மற் றெளியேன் பூசல்
நண்ணுதலுன் னுடனெங்கே கருணைசிறி
தெளியேற்கு நல்கு வாயே. (55)

2423. என்றுமுரு கவிழ்க்குநற விதழிபிலிற்
றுந்துளவோன் இயம்பல் கேளா
மன்றுகுனித் தருள்குழகன் மாயோனைப்
பார்த்தொருசொல் வழங்கும் முன்னுள்
குன்று நிகர் புயவிசயன் கூறுமெம
தனுக்கையினுற் கொடும்போர் செய்தே
அன்றெமதிச் சையிற்பாசு பதம்பெற்றான்
அவன்போல்நீ அடல்செய் கென்றே, (56)

2424. வரையகட்டுப் பொறிவிழிப்பேழ் வாய்பூதப்
படைக்கடவுள் மணிப்பி னாகந்
தரைவெடிக்கத் திசைசெவிடு படச்சிறுநாண்
ஒலிகொண்டு சரங்கள் பூட்டி
விரைவுறவோர் சிறிதுகோ விந்தன்மேல்
விநோதமுடன் விட்டான் மாலும்
உரையுணர்வுக் கெட்டாத பெம்மான்தன்
ஆணைமறு துடற்ற நேர்ந்தான். (57)

2425. அத்தனெனைத் தன்னுடன்போர் செய்கவென்றால்
ஏதுசெய்கேன் அந்தோ! அந்தோ!
மத்தனெனப் பெ... ருவதுவே கருமமெனக்
கொடுஞ்சார்ங்கம் வாங்கிக் கோட்டிக்

கைத்தலத்தில் நாணேற்றிக் கண்ணுதல்பொற்
றுள்நினைந்தோர் கால்மு டக்கி
ஒத்தசிறு நாணொலிதா னுங்கொண்டு
சரமாரி யுகுத்துப் பெய்தான். (58)

2426. செங்குமுத வாய்க்கருங்கட் சிற்றிடைத்தே
வகிதனயன் சிலீமு கங்கள்
அங்கணன்பொற் றுளிணையில் அனைத்துமல
ராய்வீழ்க அதிச யித்தே
எங்குமடல் விச்சுவற்கும் விச்சுவே
சற்குமிகுத் திருக்கும் ஏல்வை
பொங்குகடற் புடவியண்டம் பொன்னுலகம்
நடுக்குற்றுப் புலம்பும் வேலை, (59)

2427. சிகரவட மேருவெனத் திரண்டுபுயம்
பூரித்த தீர னோடே
நிகரில்மிடல் செறிவாணு சுரனனந்த
சேனையுடன் நேர டைந்து
மகரசல தியைநிகர்க்கும் மணிவண்ணன்
சேனையெலாம் மலைந்து மாய்த்தான்
தகரமலர்ச் செருகுகுழற் கோவியர்தங்
கோமுனும்வெஞ் சமரி ழைத்தான். (60)

2428. அந்தவம யத்தின்மது கைடவரைச்
செயித்த [கண்ணன்] அண்ணல் தாளில்
வந்தனைசெய் திகல்வாணு சுரன்மேல்வெஞ்
சரஞ்சொரிந்து மலைத்த போது.........
சிந்துவுஞ்சிந் துவுமென்றின்...றிருவாசை...
வினைவிட்டு வாவிச் செல்லும். (61)

2429. அன்னபகல் அனைத்துயிரும் அதிசயப்பட்
டிரங்கவெளி அந்த ரத்திற்
பொன்னவிர்பைங் கடுக்கைசெரு கியகுடிலச்
சடிலஇறை பொம்மல் மேரு

---

2426. சிலீமுகம்—அம்பு.

2428. இந்தச் செய்யுளிற் சிலபாகங்கள் விடுபட்டிருக்கின்றன.

2429 நீக்கி—தவிர்த்து (ஏனையவற்றைத் தடிதி).

மின்னவிருந் திதலைமுலை விமலையுடன்
வெள்விடையில் விரைந்து தோன்றித்
தன்னிகர்மா லே!உனைப்போல் எமையருச்சித்
தோனாலு தடக்கை நீக்கி, (62)

2430. முல்லைநறுங் குழல்பவள வாயிதழில்
அணைத்திசைபன் முறையெ ழுப்பாண்
எல்லையில்கா னம்பழுக்க இசைத்துநிரை
குவிக்கும் அண்ணல்! இவன்தன் னேடே
தொல்லைமர பெனவுனக்குத் தோழமையுண்
டாகுகென்று சொல்லிப் போர்க்கு
வல்லசெருக் களத்திலென வாணனைநோக்
குபுமூரல் வழங்கிச் சொன்னன். (63)

2431. கூற்றமிகு கனைகழற்காற் குரிசில்வா
ணசுரன்தன் குவவுத் திண்டோள்
உற்றதின வனைத்துமின்றி யொருங்குபுய
ஆயிரமும் ஓரீஇய தேநாம்
சொற்றபகல் எமக்காகத் துளவுகமழ்
மால்நான்கு தோள்விட் டான்நீ
சுற்றமென மாயவன்பே ரற்குனது
தனயைமணஞ் சூட்டு வித்தே; (64)

2432. இருவருங்கேண் மையில்வாழ்திர் என்றமலன்
வடிவுகரந் திருந்த பின்னர்
கருணைகளித் தழுதொழுகுங் கண்ணுதலின்
மொழிப்படியே கதுமெ னத்தன்
பருவரல்விட் டுடைதிரைப்பார் பரவவா
ணசுரன்மெய்ப் பாசத் தோர்சூழ்ந்(து)
இருமைபெற வருதனயை கலியாணம்
நீருதகம் ஈந்தான் மாதோ. (65)

---

2432. உடை திரைப் பார்—உடையாகக் கடலைக்கொண்ட பூமி. நீருதகம் ஈந்தான்—தாரை வார்த்தான்,

2433. கஞ்சனுயிர் பருகுவிறற் கண்ணனும்வா
ணாசுரன்மங் கலமா யீன்ற
வஞ்சியினைக் கலியாணம் மகிழ்பேரன்
அனிருத்த மணவா ளற்கு
விஞ்சுபுகழ் பெறப்புரிந்து வானவரப்
படையுடனே வியந்தெல் லோர்க்குந்
தஞ்சமென மரீஇயபவுத் திரனோடு
துவரைநகர் சார்ந்தி ருந்தான். (66)

**வாணன் பூசித்தது**

2434. பின்னர்முதுக் குறைவுகெழு மியவாணா
சுரனல்வினைப் பெற்றி கூரத்
தன்னிதயம் பரிபவப்பட் டெங்கோமாற்
கடராதந் தகாது செய்தோம்
என்னதவத் தாலொருவும் என்றுவெள்கி
விழிதிகைக்க ஏங்கிப் பாரிற்
சென்னிதழீஇக் கடிவணங்கித் திரும்பவும்நன்
மதைக்கரையிற் சென்று தேர்ந்தே, (67)

2435. முத்தலைவேற் கடவுள்பத முண்டகங்கள்
விதிப்படியே முருக விழ்க்கும்
கொத்தலர்தூய் வழிபட்டுக் குறையிரந்து
போற்றிசெயக் கோடீ ரத்திற்
புத்தமுதங் கொழித்திடுகூன் முக்ப்பிறைவேய்ந்
தருளண்ணல் போந்து மீள
வித்தகவா ணாசுர! நீ வேண்டுவரம்
என்கொல்உண்மை விளம்பு கென்ன, (68)

2436. அஞ்சலெனப் பாதகனும் அடியேன்முன்
வெளிப்பட்ட அண்ண லே! நின்
தஞ்சமென மருவுகா ணாதிபர்க்கெல்
லாமொருவன் ஆய தக்கில்
எஞ்சலிலா ஒருகணமாய் இருந்துகுட
முழவெடுத்துன் இலயம் பார்த்துக்
குஞ்சிதத்தா ளுக்கொக்கக் கொட்டிநடங்
கண்டெனுளங் குளிர வேண்டும். (69)

---

2434. நன்மதை—நருமதை.

2437. **உ**த்தமமாம் இந்தவரம் உவந்தளித்தி
நன்மதையாம் உந்தி மீதென்
கைத்தலத்தில் வழிபாடு புரிந்துசிறி
தும்பெரிதுங் காதல் கூர
வைத்திடுகல் லிலிங்கமெலாம் வாண லிங்கம்
என்றென்பேர் வழங்க வேண்டும்
இத்தகைய வாணலிங்கம் அருச்சிப்போர்
வேண்டுவன எய்திப் பின்னும், (70)

2438. **க**றங்கெனவே சுழன்றிடுமேழ் வகைப்பிறவி
ஓரீ இயிருக்குங் காலை நின்னால்
பிறங்குசெல்வம் வேண்டுசித்தி பெற்றுமலர்ப்
பதமடையும் பேறும் வேண்டும்
அறங்கெழும நல்குதியென் றக்கணமே
குடமுழவம் ஆடற் கொக்கத்
திறங்கொடுசே வித்துடன்கா ணுபதம்பெற்
றொருவிலின்பஞ் சிறக்கின் றானல். (71)

---

## அத்தியாயம் 81.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### மன்மதன் பூசித்தது

பப்பரதேயத்திற், பகவதிபுரத்தில், மறையவர் மரபில், சுபனன் மகன் அசித்தன் என்பவன் மிகவும் காமமுடையவன். அவன் எந்த ஜாதிப் பெண்களையும் பொருள் கொடுத்தும், தீயவழியிற் பொருள்பறித்து நல்கியும் அணைவான். அவன் ஒருநாள் தார்க்கிக புரத்திற் சங்கருடணன் என்னும் வேதியன் இல்லத்தில் நுழைந்து திருடும்பொழுது, சங்கருடணன் அவனைக் கையும் களவுமாகப்பிடித்து உன் வரலாற்றைக் கூறுக என வினவினன். அசித்தன் தன்வரலாற்றைக் கூறிக் காமவெறி காரணமாகவே வழிபறித்தல், திருடுதல் முதலிய செய்கின்றேன் என்றான். இதைக்கேட்ட சங்கருடணன் மனம்

---

2437. உந்தி—ஆறு.

2438. கறங்கெனவே பிறவி—"கறங்குஞ் சகடமும்போற் சென்மித்துழல" கந்தர் கலிவெண்பா. ஓருவுதல்—நீங்குதல்.

சொர்ந்து "ஐயோ! உயர்குலத்திற் பிறந்தாய்! திருட்டுத் தொழிலை மேற்கொண்டாய்! காமவெறியுடன் திரிகின்றாய்! நீ ஐம்பதுகோடி நரகினும் இடர்ப்படுவாயே! இனியேனும் நீ சிவபூஜை செய்வாயாக; அதனால், காமம், வெகுளி, மயக்கம்—மூன்றும் அறும்!' என்றார். அசித்தன் 'ஐயா! சிவபூஜைக்கும் எனக்கும் வெகுதூரம்; அரிவையர் இதழ் அருந்துதலே எனக்குச் சிவபூஜை. அந்தப் பேற்றையே பிறவிகள்தோறும் பெறவிரும்புகின்றேன். அதற்கு உரிய உபதேசத்தை உதவுக' என்றான். சங்கருடணர் "தீயவனே! இன்று முதல் நீ அணைந்து மகிழும் அரிவையரின் கொங்கைகளைச் சிவலிங்க மாகப் பாவித்துத் திரிகரண சுத்தியுடன் மலரிட்டு வழிபடுவாயாக!' என்று கூறி அவனை விடுவித்தார். 'அப்படியே செய்கிறேன்' எனக்கூறி அசித்தன் சென்றான்.

அவனுக்கு அப்போது காமவல்லியாக இருந்தவள் ஒரு மறையவர் குல மங்கை; அவள் மிக்க அழகு வாய்ந்தவள்; தன்கணவனை விட்டுக் கள்ளக் கலவியிற் களிப்பவள். அசித்தன் அன்றிரவிலே அவள் கொங்கைகளை இலிங்க மாகப் பாவித்துச், சந்தனம் முதலிய கலவைகளை அப்பி, மல்லிகை முதலிய நறுமலர் மாலைகளை அணிவித்து, கனி முதலியவற்றை நிவேதித்து, "தனேச!" என்று போற்றிப் புணர்ந்து, "இவ்வாறே என்றும் களிக்கும் வரத்தைத் தந்தருள்" எனவேண்டிப் புகழ்ந்தான். இச்செயலைக் கண்ட காமவல்லி நகைத்து, 'என்ன செய்கையிது? என் கொங்கைகளை இலிங்கமாக வழிபடுகின்றாயே!' என்றாள். அசித்தன் 'அழகியே! உன் கொங்கைகளைப்போலவே அழகிய கொங்கைகளை எப்போதும் அணையவிரும்பி அரனைப் பூசிக்கிறேன். அவர் இருமையும் உதவுவார்' என்றான்.

பின்பு ஒருநாள் அவன் தான்முன் கொள்ளையடித்திருந்த காட்டுவழியே செல்லும்போது காடு தீப்பற்றிக் கொள்ள அந்தத் தீயில் அகப்பட்டு அவன் இறந்தான்.

## அசித்தன் மன்மதனாகப் பிறந்தது

இறந்த அசித்தன் மறுபிறப்பில் சிவபூஜையின் பயனால் திருமால் சித்தத்திலே 'சித்தசன்' என்னும் பெயருடன் பிறந்தான். சித்தசன் காசியில் இலிங்கம் தாபித்துப் பூசித்துச் சிவபிரான் அருளால் மதனராஜன் என்னும் பெயர்பெற்றான். அவனுக்குக் கங்குல் களிறு, தென்றல் தேர், கிளி குதிரை, மீன் கொடி, திங்கள் குடை, கரும்பு வில், மலர் அம்பு, இரதி தேவி, மகிழ்ப்பூ மாலை, கடல் முரசு, பெண்கள் படைஞர், குயில் சின்னம், அன்றில் எக்காளம், பாதிரிப்பூ நாதசுரம், தாழை உடைவாள், கமுகம்பாளைகள் கவரி, மலர்மல்லிகை கலணை, வசந்தன் தோழன், வண்டு தேர்ப்பாகன், பொதியமலை படைவீடு—எனக் கிடைத்தன. அவன் தனது மலர்வாளியால் திருமால் முதலிய தேவர்களுக்கும் மற்று எல்லா உயிர்களுக்கும் காமத்தை விளைவிப்பான்,

ஒருமுறை அமரர் ஏவ, அறிவுஇழந்து, அரனார்மீது அலர் வாளியை ஏவி, அவரது நுதற்கண் தீயால் எரிபட்டு இறந்தான். அவன் தேவி இரதி அழுது இறைவனைப் பூசித்து அவர் திருவருளால் அவனை மீண்டும்பெற்று இன்ப முற்றாள். சிவபூஜையின் பேறு இது. சிவனை எதிர்ப்போர் மதனனைப் போலக் கெடுவர் என்பதையும் இவ்வரலாறு அறிவிக்கின்றது.

---

## அத்தியாயம் 81.

## சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

### மன்மதன் பூசித்தது.

### அசித்தன் கதை.

### அறுசீர் விருத்தம்.

2439. நெடுங்கட் குறுங்காற் சிறுவியர்தோள்
நிகர்க்குங் கழைவிண் டுகுத்தமுத்துங்
கொடுங்கட் கரிமா மருப்பின்முத்துங்
கோடு புளினத் துயிர்த்தமுத்துங்
கடுங்கற் கொழித்து முச்சிகொடங்
காடிக் கிடவம் முத்துவிலை
படுங்கட் டளையெக் காலமுமேம்
படுசீர் திகழ்ப் பரதேயம். (1)

2440. கழைவிற் குனித்த மதன்படைமுன்
கயற்கட் டுவர்வாய்ப் பொம்மல்முலை
இழையிற் சிறிய நுண்ணிடையர்
எதிர்பூட் டியதேர் படர்அரசந்

---

2439. கோடு—சங்கு; புளினம்—மணற் குன்று. முச்சி—சிறுசுளகு (முறம்). அங்காடி—கடை.

2440. தேர், அரசஇலை, மான்குளம்பு, ஆலவட்டம்—பகத்துக்கு(அல்குலுக்கு) உவமை ''ஆலவட்டம் தேரரவு தூயஅல்குல்'' —ரத்தினச்சுருக்கம். ''ஆலவட்டம் படரும் அரசினிலை—சொல்லத் தகும் மான்குளம் பென்றே—, 'உசித சூடாமணி நிகண்டு.'

தழைசிற் றடிமான் குளம்புவெயர்
தவிர்க்கும் ஆல வட்டமென
விழைபொற் பகஞ்சேர் பரத்தையர்சூழ்
வியப்பாம் **பகவ தீபுரமே.** (2)

2441. **ந**ஞ்சு பிலிற்றுந் துளையெயிற்று
நறுமா மணிச்சூட் டரவுலகில்
அஞ்சு பெரும்பூ தவ்வுருவாம்
அனந்த வுயிர்கள் பிறப்பிறப்பு
விஞ்ச வரல்போக் குடனுணர்த்தும்
வித்தை அவித்தை இருமூன்றும்
எஞ்சல் அறவே அறிதல்பகம்
என்னும் **பகவ தீபுரமே.** (3)

2442. **அ**ந்த நகர்வே தியன்**சுபனன்**
அளித்த **அசித்தா**ம் பெயர்த்தனயன்
நிந்தை வழிசேர் பவன்குரிசில்
நெருங்கு மிருட்பைங் கூந்தல்மின்னார்
தந்தங் கலவி இரவுபகல்
தழீஇமெய் முயங்கு பவன்தரளம்
உந்து திரைப்பார் அனைத்தினுஞ்சென்
றெல்லை அலம்வந் துளம்நினைந்தே. (4)

2443. **எ**ங்கெங் கொருநால் வருணர்மகிழ்ந்
திருக்கும் இடத்தும் அனுலோமர்
தங்கும் இடத்தும் புன்தொழிலே
தண்டாப் பிரதி லோமர் குழீஇப்
பொங்கும் இடத்தும் எவரெவர்பொற்
பொருப்பு நிகர்மா முலைசுமந்தார்
அங்கங் கிருந்தார் அவரவரை
அரும்பொற் குவையீந் தணைந்தனனால். (5)

---

2441. அரவின் மணிச்சூட்டில் (உள்ள)உலகு. பகம்—ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்று அறுகுணங்கள். பிறப்பு—இறப்பு, வரல்—போக்கு, வித்தை—அவித்தை—இவையறிதல் பகம் என்கிறார்.

2442. அலம் வந்து—சுற்றிவந்து.

2444. குரும்பைக் குலத்தில் இறுகியடிக்
கொண்டு கனத்துப் புடைபரந்து
பொரும்பொற் கிரியைப் பழித்திணைகொள்
பூரித் தெழுந்த குவிமுலையார்
கரும்பிற் பழுத்த கனிமொழியார்
கலவிக் கொக்க வருந்தனங்கள்
விரும்பிக் களவிற் பறித்துநல்கி
விழைந்தங் கணைந்தான் ஓர்பகலில், (6)

2445. பழிக்கும் உலகா யதனிரண்டாம்
பௌத்தன் நான்கா ருதனிரண்டாம்
ஒழிக்கும் மீமாங் கிசனொருநான்
குரைதேர் பாட்டன் ஈரிரண்டு
செழிக்கும் பாஞ்ச ராத்திரியாம்
சிலுகு மதமெட் டறுநான்கும்
அழிக்கும் அதன்பின் சைவாதி
அறுநான் கெனுந்தார்க் கிகபுரமே. (7)

2446. தண்டா வளங்கூர் நன்னகர்முத்
தழல்வே தியன்சங் கருடணனில்
கண்டா தரவின் நள்ளிருள்வாய்க்
களவிற் படர்ந்தெப் பொருளையுங்கைக்
கொண்டான் அவைசங் கருடணன்பின்
குறித்து நோக்கி அசித்தனுளம்
திண்டா டிடக்கை பிணித்தேதுன்
செயலுண் மையதாய்ச் செப்புகென்றான். (8)

2447. மறையோன் மகிழ்சங் கருடணன்சொல்
மறுது கேளா அசித்த னெடுத்(து)
அறைவான் தினமுங் களவின்வழி
அடித்துப் பறித்த தனமனைத்தும்

---

2445. ஆருதன்—ஆருகதன். பாட்டன்—குமாரில பட்டராற் பிரசாரஞ் செய்யப்பட்ட மதத்தைச் சார்ந்தவன்,

குறையா தெடுத்தே எங்கெங்கும்
கொவ்வைக் கனிவாய்ப் பரத்தையர்க்கு
மறையா தளித்துப் பஞ்சணையில்
மருவிக் களித்து முயங்கிடுவேன். (9)

2448. என்று மொழிந்த அசித்தனுரை
இயல்பி னுற்சங் கருடணன் கேட்(டு)
ஒன்று படவே உரைப்பனங்தோ
உயர்ந்த குலத்திற் பிறந்து முனம்
கன்று சினத்தால் தனிவழிபோய்க்
களவிற் பறித்த பொருள்மேருக்
குன்று நிகர்கொங் கையர்க்களித்துக்
கொவ்வை இதழ்துய்த் தடாதுசெய்தாய். (10)

2449. நரக மொடுதண் டெடுத்திருக்காங்
கலையா தியவோ தாதுமின்னுர்
விரக வலையில் துயருழந்தாய்
விண்ணில் இடிவீழ்ந் திடப்புற்றில்
உரகம் முறிந்து பருவரலுய்த்
துணங்கல் எனஜம் பதுகோடி
நரகம் அனைத்தும் படிந்தொழியா
நடலை உறுவை நாடொறுமே. (11)

2450. சுருதி அனைத்தும் உணர்ந்து பரஞ்
சுடர்நோக் குபுமுத் தழல்வேட்கும்
மிருதி வழிகள் தணந்தந்தோ
வியனு டையா வகைகெட்டாய்
பருதி அனந்த கோடிவெளிப்
பட்ட தனைய சிவபூசை
கருதி அருச்சித் திடுதிகொடுங்
காமம் வெகுளி மயக்கமறும். (12)

2451. கருத்தின் மிசையிப் படிதினம் நீ
கலவி முயங்கி ஒழியாமல்
வருத்துந் துயரம் அனைத்து மொல்லை
மாயும் எனப்பின் சொலுந்தக்கோய்!

திருத்து சிவபூசைகளெங்கே
தீயோன் எங்கே அரிவையர்வாய்
அருத்தும் அமுதம் சிவபூசை
அதுவே சனனந் தொறும்வேண்டும். (13)

2452. ஆதி வருணம் தனைவளர்க்கும்
அந்தணாள ! அடியேன் நீ
ஓதி யதுகேட் டுணர்கவென்றால்
உண்மை பெறஎப் போதும்இழைப்
பாதி மருங்குல் அரிவையர்தம்
பவள இதழா ரமுதருநல்
நீதி பெறநல் லுபதேசம்
நிகழ்த்தி எனவே தியனுரைக்கும். (14)

**கொங்கையை லிங்கமாகப் பாவித்து அசித்தன் பூசித்தல்**

2453. அந்த மொழிகேட் டருமறைநூல்
அங்க மிகுசை வாகமங் கை
வந்த முநிசங் கருடணன்பின்
மறுகும் அசித்தன் முகநோக்கிச்
சிந்தை மகிழ வுரைக்கின்றான்
தீயோய்! கேட்டி இன்றுமுதல்
கந்த மலர்ப்பைங் குழலார்பொற்
கலச முலைகள் இலிங்கமென்றே. (15)

2454. ஐயந் திரிவு விகற்பமற
அகத்திற் சிவமாய்ப் பாவித்துக்
கொய்யுந் தளிரால் அருச்சியென்று
கூறிப் பிணித்த கரந்தணந்தான்
நையுந் துயரம் நீத்தப்படி
நான்செய் குவனென் றவனிணங்கி
வையந் துயர்மீக் கொளப்பட்டான்
மருங்கு வதிந்தவ் விரவிலம்மா. (16)

---

2452. இழை—பாதி...நூலிற் பாதி.

2454. நீத்து அப்படி.

2455. **எ**ழுத அரிய ஓவியமா
தென்னக் காம வல்லியென
முழுதும் அழகு கனிந்தொழுகும்
முகிழ்மென் முலையாங் கன்னிபுவி
தொழுநல் குலத்தாள் கணவனொரீஇச்
சோர வழியில் திரிபவள்பால்
பழுதில் கதியீ தென்றவள்செம்
பவள இதழ்துய்த் தணைகின்றான். (17)

2456. **மு**யங்கு பகற்பொற் றொடிமார்பில்
முளைத்துப் பணைத்துப் பூரித்துத்
தயங்கு வடவெற் பனையகொங்கை
தனைநோக் குபுசங் கருடணன்சொல்
நயங்கொள் உளத்தில் நினைந்திரண்டு
நகிலங் களுமுன் செயும்பலத்தால்
இயங்கு கருணை பொழிந்தருளும்
இலிங்க வடிவாம் எனநினைந்தே, (18)

2457. **பெ**ருகு விருப்பால் இதயமிசைப்
பெம்மான் இலிங்க வுருவாக
முருகு கமழ்சந் தகில்வாம
முறையில் அணிந்து வகைவகையாய்ச்
செருகு தொடைமல் லிகைமுல்லை
சிறுசெண் பகம்வேர் கொழுந்துமரு
உருகு பசும்பொன் னரிமாலை
உடன்வேய்ந் தினிய கனிகளுமே, (19)

2458. **பி**றையும் அறுகும் செருகுசடைப்
பெம்மான் இலிங்க உருவாக
உறையுங் களபக் கொங்கையிணைக்
குவந்து பலவும் நிவேதனஞ் செய்(து)
அறையுந் துதிகள் புகன்றெளியேற்
கருளும் பரமா! முலையீச!
பறையும் வனச மலர்மாதைப்
பழித்துப் பரம பொருளெனவே, (20)

2459. இடங்கொண் டெழுந்து பணைத்திறுகி
இறுமாந் திளகிப் புளகித்து
வடங்கொண் டிருந்த முலையீசா!
வனச மலர்மா தினைப்பழித்துப்
படங்கொண் டகன்ற நிதம்ப மின்னார்
பைம்பொன் திதலைக் குவிமுலையில்
திடங்கொண் டொழுகிப் பலமடைக்காய்
தினமும் மகிழ்ந்து நிவேதித்தே, (21)

2460. மதன கலையின் விதிப்படியே
மனத்துக் கேறத் தழீஇ முயங்கி
இதணன் குறுமேல் வயிற்பலன்கள்
எளியேன் அருந்தி அடைக்காய்பல்
விதமைந் துறுவா சங்கமழ
மென்று மகிழ வேண்டிடுமற்
புதமேல் வரங்கள் இப்படியெப்
போதும் அளித்தி யெனப்புகழ்ந்தான். (22)

2461. அந்த அமயந் தன்னில்நகைத்
தணங்கு நிகர்க்கும் விபசாரி
தொந்த வினையில் தழீஇயபர
துணைவன் முகநோக் குபுபுகல்வாள்
பந்த மிகழப் படிற்றொழுக்கம்
பண்ணுந் தீயோய்! நின்செயல்கள்
இந்த வகையே தென்முலையே
இலிங்கம் எனவே வழிபட்டாய்; (23)

2462. எக்கா லமுமோ அன்றியுமே
இற்றைப் பகலோ அருச்சித்துத்
தக்கா ரெனமெய் வரங்கேட்டாய்
சாற்று கென்ன உடன்புகலும்
பொக்கா கரமாம் இவட்பார்த்துப்
பொன்னந் துணராஞ் சுந்தரியே!
மிக்கா டகவெற் பெனப்பணைத்து
வீங்கித் திரண்டுன் முலைபோன்றே, (24)

---

2462. பொக்காகரம்—பொக்கம்—பொய்; ஆகரம்—இடம்.

2463. பூரித் திறுகி வட்டமிட்டுப்
புடைத்துக் கனத்து வளர்ந்தெழுந்து
பாரித் திருக்குங் குவிமுலையைப்
பகலும் அணைவ தெப்படியென்(று)
ஓரித் திடஞ்சேர் உமையீசன்
உதவும் இருமை யென்ன அலங்
காரித் தருச்சித் தனன்மகிழ்ந்த
கங்குல் இருவர் கலந்தனரால். (25)

2464. விலங்கி னெடுங்கண் முழைகுமுற
மிளிரு மடங்க லேறனையான்
அலங்கு கலன்கள் துயர்வருமார்
பகலம் பொருத பணைமுலைகள்
நலங்க இருவர் தாங்களுமெய்
நழுவா திறுகக் குறித்தமரர்
குலங்கள் மகிழ முயங்கினர்கங்
குற்போ தகன்ற தக்கணமே. (26)

2465. கனங்கொள் கொடுமா ஒதுங்கநறுங்
கமல முகைவிண் டிடக்களிவண்
டினங்கள் சுழன்று பயிரவிபண்
இசைக்க மறையோர் நதிமூழ்கி
மனங்கள் மகிழ அருக்கியங்கள்
வழங்க இளைஞர் துயில்நீங்க
அனங்க சரங்க ளொடுவெற்பில்
அருக்கன் உதயம் செய்ததனால். (27)

2466. விடிந்த பொழுது துயிலெழுந்து
வீற்று வீற்றாய்ப் படர்ந்துணர்முன்
தடிந்த அதர்நோக் குபுவிபினம்
சார்ந்தான் உயிர்நீத் திடுகாலம்

---

2463. ஓர்—ஓர்வாயாக; அறிவாயாக.

2464. நெடுங்கண் முழை—அகன்ற இடமுள்ள குகை.

2465. அனங்க சரம்—காமன் அம்பு.

முடிந்த தருங்கான் முழங்கியங்கி
மூண்டு மூண்டெண் டிசைவளர்ந்து
பொடிந்த மயிர்மெய் படர்ந்து[பற்றிப்]
புலிங்கம் விசிறி அருந்தியதால். (28)

**சித்தசன் (மன்மதன்) பிறப்பு.**

2467. **கொ**ங்கை யிலிங்கந் தழீஇயிருகண்
குளிர வழிபட் டதனுல்சேர்
மங்கை யர்களாற் கணிப்பறமுன்
வருபா வங்கள் அனைத்தும் ஓரீஇக்
கங்கை மிலைச்சி கருணையினுற்
கண்ணன் மகிழ்சித் தத்தழகே
சங்கை யறநல் வடிவொரு **சித்**
**த**சனென் றொருபேர் தரித்துதித்தான், (29)

2468. **ப**ரிந்து முனஞ்செய் வாதனையாற்
பஞ்சா யுதன்றன் அனுக்கைபெற்றுப்
பிரிந்து மதனன் காசியிற்போய்ப்
பெரிதாம் இலிங்கந் தாபித்துத்
தெரிந்து மலர்தூய் முத்தலைவேல்
தேவை மகிழ்ந்தா ராதனைகள்
புரிந்து புகழ்ந்தான் பகவானப்
போது வெளிப்பட் டருள்சுரந்தே, (30)

2469. **அ**ங்கண் **ம**தன **ரா**சனென
அவனுக் கபிடே கம்புரிந்து
கங்குல் க்யந்,தேர் தென்றல், கிளி
கலின மா,மீன் கொடி,கவிகை

---

2469. கலினமா—குதிரை. மகிழ்—மகிழம்பூ; இலஞ்சி. கலினம்—கடிவாளம்.

2469—70. " தொடையிலஞ்சி மஞ்சலிளஞ் சோலைபடை வீடு
படை மங்யைர், கமுகம் பாளை—யிடு கவரி,
காளாஞ்சி மல்லிகையாம், காரிகையீர் மாரனுக்கு
வாளாம் ஓ லைப்பூவு மால்."

திங்கள், கழைவில், மலர்வாளி,
தேவி யிரதி. மகிழ்மாலை,
பொங்கு சலதி முரசு,படை
பூவையர்கள், சின் னங்குயிலே, (31)

2470. அன்றில் விருதெக் காளமடல்
அவிழ்பா திரிப்பூ நாகசுரம்
மன்றல் கமழ்வெண் தாழையுடை
வாள், பூ கப்பா ளைகள்கவரி,
துன்று மலர்மல் லிகைகலனை,
தோழன் வசந்தன் தேர்ப்பாகன்,
நன்று மதுகன் படைவீடெந்
நாளும் பொதிய மாமலையே. (32)

2471. விரும்பிப் படைகள் இவைகள்நல்கி
விமலன் மறைந்தான் உரோமங்கள்
அரும்பித் தவங்கூர் அந்தணிர்காள்!
அமலன் செயுமற் புதங்காண்மின்
கரும்பிற் சிறந்த சிலைகோட்டுங்
காம ராசன் இவைபெற்றுக்
குரும்பைத் தனமெல் லியலிரதி
கூடப் புவிவான் துறக்கமுற்றான். (33)

2472. வண்டு செறியும் மலர்வாளி
வாங்கிக் கழைவிற் குனித்தயன்மால்
அண்டர் முதலோர் செந்திருமா
தரம்பை யர்களா தியர்மோகங்

---

"ஆலைக் கரும்புசிலை, ஐங்கணைபூ, நாண் சுரும்பு
மாலைக் கிளி புரவி மாருதந்தேர்—வேலை
கடிமுரசம், கங்குல் களிறு, குயில் காளம்,
கொடிமகரம், திங்கள் குடை."

— ரத்தினச் சுருக்கம்.

2470. மதுகம்—வண்டு.

கொண்டு மயங்கி முயங்கியின்பங்
குறிக்க வுலகெங் கணுந்திரிந்து
கண்ட வுயிர்யா வையுஞ்சயித்தான்
காண்மின் பூசா பலமுனிவீர்! (34)

2473. திடங்கொள் உளத்தில் விருப்பமொரு
சிறிது மில்லா தருச்சித்துத்
தடங்கொள் காம ராசமதன்
சார்ந்தான் அவன்மீ ளவும்விருப்பந்
தொடங்கு விதியால் அருச்சித்துத்
துகள்தீர் வரங்கள் பலபடைத்தான்
அடங்கு பொறியற் றழல்மதவேள்
அமரர் ஏவ அறிவழிந்தே, (35)

2474. மற்ற இமையோ ருடன்முக்கண்
மரீஇய சூல பாணிதனை
உற்ற சமனு குவனெனப்பார்த்
தொல்லை மலர்வா ளிகள்பூட்டிக்
கொற்ற முற ஈ சன்தனையே
குறித்தெய் தனனக் கணம்அரன்தீ
உற்ற நுதற்கண் விழிக்கவில்வேள்
உருவெந் துடல்நீ றுயினதே. (36)

2475. காந்தன் வீயக் கண்டிரங்கிக்
கலங்கித் தனைத்தேற் றுபுகலுழ்ந்து
கூந்தல் தாழ நிலங்கள்துழாய்க்
கோவே கோவே யென்றரற்றிச்
சாந்த மாய்ப்பின் சங்கரன்பொன்
தாளி லருச்சித் தவனைமுன்போல்
தோய்ந்த பதியாம் எனஅடைந்து
சுகிக்கின் றுள்,அந்தணிர்கேண்மின். (37)

2476. தரங்க மணியெற் றுபுகொழிக்குஞ்
சலதி யுடைப்பார் மிசையெவரெண்
வரங்கள் கொடுக்கும் முக்கண்இறை
வள்ளல் எனுந்தே வேசனையம்

பரங்கள் உலவு சூருடனுப்
பாக மனத்தாற் சிறிதேனும்
உரங்கள் காண்போர் அப்போதே
ஒல்லை கெடுவர் மதனெனவே. (38)

---

## அத்தியாயம் 82.

## சரியையாதி மான்மியம்

**சூதமுனிவர் கூறுகின்றார் :**

முனிவர்களே ! சரியை முதலியவற்றால் செயப்படும் சிவ வழிபாட்டினை விளக்குவேன்.

சரியையாவது காலையிற் சம்புவை நினைத்து எழுந்து, காலைக் கடன்களை முடித்து, நீராடி, திருநீறு, உருத்திராக்கம் தரித்துத், திருக்கோயிலுக்குப் புகைக்குக் குங்கிலியம், முதலியவும், தீபத்துக்குத் திரி, நெய், முதலியவும், மாலைக்கு நறுமலர்களையும் உதவிச் சிவனைத் தினந்தோறும் முறைப்படி பணிந்து போற்றிச் சிவனடியவரைப் பரவுதலாம்.

கிரியை யாவது அதிகாலையில் நந்தவனத்தில் வண்டுகள் பருகாத மலர்களைப் பறித்து உதவியும், பதினறு உபசாரங்களுக்கு வேண்டியவைகளைத் தந்து உதவியும், சிவ பூஜைசெய்து நித்திய அக்கினி காரியங்களை முடித்து இறைவனைச் சாமீபமுத்தி விரும்பிப் பூசித்துப் பணிவதாம்.

யோக மாவது மனத்தை ஒருவழி நிறுத்தலாம். யோதசாதனை யானது "இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி" என எட்டுவகையது. இயமம்—சத்தியம் முதலிய பத்து இலக்கணங்களைக் கொண்டது. நியமம்—தவம் முதலிய பத்து இலக்கணங்களைக் கொண்டது ; ஆசனம்—பத்திராசனம் முதலிய ஒன்பது வகையது ; பிராணுயாமம்—பூரகம், கும்பம், இரேசகம் என்று மூவகையிற் சுவாசத்தை அடக்கி ஆளுவது ; பிரத்தியாகாரம்—ஐம்புலன்களை அடக்குவது ; தாரணை—சிவன் திருவடியை மனத்தினில் இருத்தல் ; தியானம்—சிவஞானத்துடன்

---

2476. அம்பரம்—விண். சூர்—தெய்வம்.
"மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி தேவரென்றே இறுமாந்தென்ன பாவந் திரிதவரே"—திருவாசகம்.

புணர்ந்து நிற்றல்; சமாதி—சிவத்யான ஆனந்த நிலையிற் சிவனே தானாய், தானே சிவனாய்ப் பிரிவின்றி ஒன்றுபட்டு நிற்பது.

இந்த அட்டயோகங்களைப் புரிவோர் அட்ட சித்திகளையும் பெற்று இன்பம் உறுவார். அவர் 25 சிவமூர்த்தங்களையும் கண்டு களிப்பார். எந்த வேலையில் ஈடுபட்டிருப்பினும் இறைவனைத் தியானிப்பவர்களைத் தீமைகள் அணுகா; அவர்கள் சிவனுருவம் பெறுவர்.

இங்ஙனம் யோக நிலையைக் கேட்ட முனிவர்கள் ஞானநிலையை யருளுக எனச் சூதமுனிவர் கூறுகின்றார்.

---

# அத்தியாயம் 82

## சரியையாதி மான்மியம்

### எழுசீர் விருத்தம்

2477. பிறையறு கிதழிப் பகீரதி மிலைந்த
பிஞ்ஞகன் மலர்ப்பதங் கருதி
முறைமுறை பரவுஞ் சூதமா முனிவன்
மொழிகுவன் முனிவரை நோக்கி
மறைமுடி வுணர்ந்த துறவிர்காள்! சரியை
வளங்கெழு கிரியைநோற் றோர்க்குக்
கறைமிடற் றமலன் மகிழ்சிவ போகங்
கட்டுரைக் கேனது கேண்மின், (1)

### சரியை.

2478. சரியையா வதுவை கறைதுயில் நீத்துச்
சம்புவை உள்நினைந் தெழுந்து
விரிநிலம் படர்ந்து சவுசமா சமனம்
விதிமுறை புரிந்துமா நதியிற்
பரிவுடன் படிந்து தவளநீ றணிந்து
பராபரன் அக்கமா லிகையும்
பிரிவற மிலைந்து சூரிரு டிகள்நேர்
பெற்றிக்குத் தருப்பணங் கொடுத்தே, (2)

2479. மறிகொடு வரிய வுழுவையே போர்த்த
வள்ளல்தாழ் சடையர்தங் கோயில்
வெறிகமழ் தருமம் மல்குகுற் குலுநெய்
வீசுபூம் புகைநிறைத் தொளிர்நூல்
செறிதிரி கொழுந்து விட்டெழ நறுநெய்
தீபமேற் றுபுமருமாலை
நொறிலற மருங்கு தூங்கிட நாற்றி
நூல்வழி புறத்தொழில் புரிந்தே, (3)

2480. பொருவரு சிவபத் தர்கள்மொழிப் படியே
புனிற்றிளம் பிறைசடை முடியிற்
செருகிய கடவுள் அனுதினம் மகிழச்
சேவையா தரவுடன் நிகழ்த்திக்
கருணையங் குரவர் அடியரைப் பரவிக்
கணிப்பில்பா வங்கள்தீர்த் தருளும்
பெருமைசேர் சரியை புரிகமற் றீது
பிஞ்ஞகன் சரியையென் றோதும், (4)

**கிரியை**

2481. தண்டலை குழைக்கும் பொங்கரா ராமங்
தனிலும்நாண் முகைமுறுக் கவிழ்தேன்
வண்டினம் பருகா மருமலர் கொணர்ந்து
வந்துமா நதியினிற் புனிதம்
கொண்டிடும் உதகம் மஞ்சனக் குடத்திற்
குறைவறக் கமழ்திர வியங்கள்
உண்டெனப் பெய்தீ ரெட்டுப சாரம்
உதவவேண் டோதனம் அமைத்தே, (5)

2482. புத்திரன் உளமீ தந்தரி யாகம்
போற்றியே பஞ்சசுத் திகளும்
பத்தியிற் புரிந்து சகளநிட் களமாம்
பரன்சிவ பூசையும் இழைத்து

---

2479. குற் குலு—குங்கிலியம்.

2482. அந் தரியாகம்— மானச பூஜை.

நித்தியாக் கினிகா ரியமுடித் திறைஞ்சி
நின்மலன் மேவுசா மீப
முத்தியை விரும்பிக் கிரியையிப் படியே
முடித்திடல் கிரியையென் றோதும். (6)

### யோகம்.

2483. அனந்தமாய்த் தொடர்பா தகந்தொலைத் தருளும்
அருஞ்சிவ யோகசா தனைமன்
மனஞ்செலா திருத்தல் அஃதுமோ ரெட்டு
வகையிய மத்தொடு நியமம்
இனந்தகு விதியா சனம்படர் பிராணு
யாமம்நேர் பிரத்தியா காரம்
பினும்பகர் சித்த தாரணை தியானம்
பேசருஞ் சமாதியென் றுரைப்பர். (7)

### [இயமம்]

2484. சத்தியம் பிரம சரிய நூற் சேவை
சவுசமா ருயிர்வதை யாமை
நித்திய தயைசிற் றுணவுநா ணுன்மா
நின்றஅன் னியமல வென்றே
பத்திசெய் திருத்தல் நல்வரம் பீடை
படுத்தவும் பொறுத்திடும் பெருமை
மெத்திய களவெண் ணுமையீ ரைந்தும்
விளம்புவர் இயமமென் றறிந்தோர் (8)

### [நியமம்—ஆசனம்.]

2485. அருந்தவம் மகிழ்ச்சி யுண்டெனல் தானம்
அருச்சனை அதிசெபம் மானம்
பொருந்துசித் தாந்தங் கேட்டிடல் விரதம்
புகலுமீ ரைந்துமே நியமம்;
திருந்துபத் திரங்கோ முகஞ்சுக மயூரஞ்
சிங்கமுத் தஞ்சுவ கதிமேய்
வருந்திடா வீரம் பதுமவிவ் வொன்பான்
வகையும் ஆசனமென வழங்கும், (9)

2486. **க**ருங்கலை யதள்நீள் வரியுடற் பெருவேங்
கைப்புலி யதளதை விரித்துப்
பரங்கரு தொன்பான் பத்திர மாதி
பதுமமீ ருனஆ சனத்திற்
சிரங்கள மாமெய் செவ்வைநேர் நிறுத்தித்
திசைகிழக் காகுதல் அலதுத்
தரங்கெழு திசையா குதல்முக மாகிச்
சாதனை யோகமுற் றிருப்பான். (10)

[பிராணாயாமம்.]

2487. **அ**ருந்தவ முனிவிர்! முன்னுத ரஞ்சேர்
அசுகியாம் வாயுவ துதரத்
திருந்துபூ ரகமும் பகவிரே சகத்தால்
தீரவிட் டுடற்பு றஞ் சுசியாய்
இருந்திடும் அநிலம் இடையக ராக்கீ
ரெட்டுமாத் திரைகள்பூ ரித்து
வருந்திடா துதரத் துகரமீ ரெட்டு
மாத்திரை அளவுகும் பிப்பான். (11)

2488 **பி**ங்கலை யதனுற் பயப்பய மகாரம்
பேணிநா லெட்டுமாத் திரையில்
இங்கற அநில முற்றுமே விடுதல்
இரேசகம் ஆகுமிப் படியே
பொங்கிய அநிலந் தனைவலம் இடமாய்ப்
பூரக கும்பக இரேச
கங்களிற் பிராணா யாமமே யிழைத்தற்
கருகின்மற் றதுவிரண் டாமால். (12)

2489. **ம**ன்னிய பிராணா யாமமோ ரிரண்டு
வகையெவை யெனிலவை புகல்வாம்
பன்னருஞ் சகற்பங் கற்பமென் றறைவர்
பகர்ந்திடிற் சகற்பம்நற் செபமோ(டு)
உன்னருந் தியான முடன்புரி குவதாம்
ஓரிரு வகையும்நீத் தியற்றல்
நன்னய கற்பம் இன்னமும் பிராணா
யாமத்தின் நலம்புக லுவமால், (13)

2490. இலகிய மூன்று வருணரும் பிராணு
யாமத்தை யியற்றிடும் போழ்தின்
நலமிகு மேலாம் பிரணவத் துடனே
நவிலுமைந் தெழுத்தையுச் சரிப்பார்
உலகினில் நாலாம் வருணர்தா ரகத்தை
ஒழித்திறந் திடுவரோ தரிய
பலமருள் பிராணு யாமமே புரிவோர்
பரிவுறு உணவறை குதுமால்; (14)

[பிரத்தியாகாரம்.]

2491. இனியதித் திப்புக் கசப்புடன் புளிப்போ
டெழிற்சுரைக் காயவை யகற்றி
நனியுண வருந்தா தொருசிறி தருந்தி
நாடொறும் இப்படிப் புரிதல்
புனிதமாம் **பிராணு யாம**மென் றிசைப்பர்;
புலன்களோ ரைந்தையுஞ் செறுதல்
தனைநிகர் மேலாம் பிரத்**தியா காரம்**;
தாரணை தனைப்பக ருவமால், (15)

[தாரணை—த்யானம்.]

2492. புனிற்றிளம் பிறைச்செஞ் சடிலமெய்க் கடவுள்
பொற்புறும் பூங்கம லத்தாள்
தனைத்தினம் மனத்தில் இருத்தல் **தாரணையாம்**;
தன்னித யத்தினின் மலர்மேல்
உனிச்சிவ ஞானம் உறப்புணர்ந் தொன்றாய்
உறுதல்நற் றியானமென் றுரைப்பார்
கனைக்கருங் கடலா டைப்புவி யிடத்திற்
கலந்துறும் புலன்வழிப் பகர்மால், (16)

---

2490, இறந்திடுவர்—கடப்பர்,

[சமாதி.]

2493. இதழ்முறுக் குடைந்தே நறவுகொப் பளிக்கும்
இதழியந் தார்சடைக் கடவுள்
பதமனத் துறவா னந்தவா ரிதியாம்
பரனியான் என்றுபா வித்தற்
புதமுற ஒன்ருய் இருந்திடல் **சமாதி**;
புகலிரு நான்கெனும் யோகம்
மதியினிற் புரிவோர் அட்டசித் திகளும்
மருவியே இன்பமுற் றிடுவார். (17)

2494. ஏருறும் அருவி யாயொரு கோடி
இனன்கதிர் எனவொளி மருவிப்
பார்தனிற் சகல சிறப்புடன் விளங்கும்
பராபரன் தனையுமங் கவன்றன்
சீருறும் இருபா னஞ்சுவிக் கிரகச்
சிறப்பையுங் கண்டுளங் களிப்பார்
ஆரவர் பெருமை புகன்றிட வல்லார்
அவனியில் அரிதரி தாமால். (18)

2495. காமர்பூ மிசையே சரிக்கினும் அங்ஙன்
கண்படை கொள்ளுமப் பொழுதும்
ஏமுறு பலகா ரியம்புரி பொழுதும்
இணையடி நினைந்துணர்ந் துருகி
மாமறை புகலும் யோகமெட் டினையும்
வரமுறப் புரிபவர் சகல
தீமையும் நீங்கிச் சரீர அங் தத்திற்
சிவனுருப் பெற்றின்பந் திளைப்பார். (19)

2496. என்றுநற் சூத முனிவரன் புகல
இருடியர் அதிசயம் உற்றே
நின்றவன் கமல பதத்துணை வழுத்தி
நிகரிலா அரியயோ கத்தை
இன்றெமக் கருளிச் செய்தனை கைம்மா
றென்னெனத் தொழுதனர் பின்னும்
ஒன்றிய உளத்தால் ஞானநன் னிலைநீ
ஒதெனச் சூதன்ஓ தினனால் (20)

---

2494. இனன்—சூரியன். 25 திருவுருவம்—அத்தியாயம் 85 பார்க்க.

# அத்தியாயம் 83.

## வேதாந்த ஞான மான்மியம்

முனிவர்கள் "எந்தாய்! மெய்ஞ்ஞானம் எது ? சிவஞானத்தால் அறியப் படும் அன்பு எது? அன்பால் வரும் பயன் என்ன?" என வினவச், சூதமுனிவர் கூறுகின்றார். ஞானம், பசு ஞானம், பாச ஞானம், பதிஞானம் என மூவகைத்து. அஞ்ஞானத்தால் வரும் துக்கமெல்லாம் ஞானத்தால் ஒழியும். ஞானம் அன்பை அளிக்கும். சடம், அசடம், நியந்தா—என மூன்று: இவை தமைப் பெரியோர் பாசம், பசு, பதி என்பர். பாசமானது சடம்—அழிவது; பசு சடம்—அழியாதது. இவை இரண்டுக்கும் மேலாய் நீங்காதிருப்பது சம்பு (பதி). இம்மூன்றையும் அநாதி என்பர். பசுவைப் புருடன் என்பர். அழியும் பாசம் பிரகிருதி எனப்படும். பசுவையும் பாசத்தையும் நடத்துபவன்பதி. அந்தப் பசுவை மறைப்பது மலம். ஆன்மா மலத்தினால் மறைக்கப்பட்டு, தான் முன் செய்த கன்மபலம் முழுமையும் அருந்தும்,

கருமம் புண்ணிய கருமம், பாவகருமம் என இருவகைத்து. புண்ணிய கருமம் சுகத்தையுடையது. பாவகருமம் துன்பத்தை உடையது. இவையிரண்டையும் அனுபவிப்பதுதான் போகம்; போகத்துக்கு இடம் சரீரம். போகத்தை நுகர்வதற்கு புறக்கரணம் அந்தக்கரணம் வழியாகும். ஆன்மாவுக்கு உறவுயாரும் இல்லை; மனைவி, மைந்தர், சுற்றத்தார் இம்மூவரும் உறவினர்போல் இருந்து பிரிவர்.

மேகத்தில் மறைந்து வெளிப்படும் மதிபோல ஆன்மாவுக்கு அனந்த உருவம் வரும், போகும் பழந்துணியை விடுத்துப் புதுத்துணி அணிவது போல ஆன்மா இன்ப முத்தியை யடையும் வரையில் ஒரு உடல் விட்டு வெவ்வேறு உடலை அடையும்; கன்ம பாசங்களால் பிணிபட்டு சுகதுக்கங்களை என்றும் அருந்திச் சுழலும். பிரமன் முதல் எறும்பீறாக உயிர்கள் எல்லாம் பசுக்கள்.

இன்ப துன்பங்களால் மூன்று குணங்கள் மருவுகின்றன. அவை சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன; இம்மூன்றுடன் மாத்திரை 5, பூதம் 5, இந்தியம் 10, அந்தக்கரணம் 4. இவை அவ்வியத்தம் எனப்படும். சரீரங்களுக்கு ஆதாரம் மாயை. மாயையில் கட்டுண்டதால் பிரமனாதியோர் பசுக்களாவார். சுத்தான்மாவாய் இவ்வுடல் யானல்ல என்றுணர்ந்து இலகுவது பரமான்மா. புண்ணிய பாவங்களைத் துறந்து, தெளிந்து, பரத்துடன் ஒன்றாகி இன்பநிலை கொண்டு அமலமாய் அருளால் விளங்கும் ஆன்மா.

இங்ஙனம் கூறக்கேட்ட முனிவர்கள் சித்தாந்த ஞானத்தை அருளுக எனச் சூதமுனிவரை வேண்டினர்.

## அத்தியாயம் 83

# வேதாந்த ஞான மான்மியம்

2497. பழவினை தொடர்ச்சி மிடலற எறிந்து
பற்றறு சூதமா முனிவன்
நிழலெனத் தணவா தறிகுறி யுளத்து
நிமலனை யிருத்துமா முனிவர்
கழகமுன் தெளிய அவர்முகம் நோக்கிக்
கட்டுரைத் தருளும்அந் தணிர்காள்!
மழகதிர்க் கடவுள் மல்கிருள் சீத்தல்
மானுமெய்ஞ் ஞானமே கழறில். (1)

2498. உடைதிரைப் புவியில் நால்வகைப் பிறப்பில்
ஓவறச் சுழல்கையால் உதித்தே
அடையுமா பாவம் ஈதுகேட் டதனல்
அகன்றிடும் அப்படித் தருமம்
இடையறு தென்றும் உத்தமம் ஆகி
ஈறிலாப் பரம்பொருள் இதழித்
தொடைகமழ் சடில இறைசிவ ஞானம்
துகளற விதந்துகூ றுதுமால். (2)

2499. என்றருள் கருணைச் சூதமா முனிவன்
இசைத்தருள் மொழிமுனி வரர்கேட்(டு)
ஒன்றிடும் உளத்தால் மொழிகுவர் எந்தாய்!
உரைத்தமெய்ஞ் ஞானமே துரைத்தி
அன்றியுஞ் சிவஞா னத்திலுள் ளத்தில்
அறிந்திடும் நேயமே தந்தப்
பொன்றலில் நேயம் அறிந்ததாற் பயனென்
புகலென முனிவர்பாற் புகல்வான். (3)

2500. பகுத்திடு ஞான மோபசு ஞானம்
பாசஞா னம்பதி ஞானம்
தொகுத்திடும் அஞ்ஞா னத்தினல் மரீஇய
துக்கமத் தனையும்ஞா னத்தாற்

---

2500. நியந்தா—கட்டளை யிடுவோன்—கடவுள்.

செகுத்திட அகலும் ஞானமே நேயம்
தெரியவே அருளுமங் நேயம்
வகுத்திடும் சடம சடமிவை ஏவி
வருநியங் தாவென மூன்றும். (4)

2501. ஓங்கொளி யாகி நிறைபரப் பிரமம்
உணர்முநி வோரதை உரைப்பார்
பாங்குறு பசுபா சம்பதி யனைத்தும்
பசு அச டங்,கெடா தென்றும்,
தாங்கிய பாசஞ் சடம்அழி வாகும்,
தகுமிரண் டினுக்குமே லாகி
நீங்கிடா திருக்கும் சம்பு இம் மூன்றும்
நிகழ்த்திடில் அநாதியென் றுரைக்கும். (5)

பதி

2502. புனிதமாய் ஞானம் உஞற்றிடும் பசுவைப்
புருடனென் றுரைக்கும், நாசமதாம்
இனியதோர் பாசந் தனைப்பிர கிருதி
யென்றிடும், நாசமா னதற்கும்
துனிகொள்நா சமிலா ததற்குமே லாகிச்
சோதியாய் அவையிரண் டினையும்
நனிமிக ஏவி நடத்துவோன் ஆகும்
நாதனு கியபதி யம்மா. (6)

2503. என்றருள் சூத மாமுநி மொழிகேட்
டிருடியர் மொழிகுவர் எந்தாய்!
மன்றினில் நடிக்கும் வள்ளல்பொற் பாதம்
மனத்திடை யிருத்தியெஞ் ஞான்றும்
பொன்றலில் அருள்கூர் சூதமா முநிவ!
புத்திமிக் கோய்!அடி யோங்கள்
உன்றனல் லருளால் இவையெலாம் உளத்தில்
உண்மைய தாயறி குதுமால். (7)

2504. அறிவினைத் தணந்த அறிவினால் அறியும்
அறிவறி யாவடி யோங்கள்
குறியுற இவைகள் உருவமுங் கிரியை
குணங்களுந் தனித்தனி யாகப்
பிறிவுறத் தெளிய அருளெனக் கேளாப்
பின்னுமச் சூதமா முனிவன்
வெறிகமழ் சடில முனிவரை நோக்கி
வியந்துளம் மகிழ்ந்துநேர் புகல்வான். (8)

### எண்சீர் விருத்தம்

2505. சத்தியென்றும் பிரகிருதி தானென்றும் மாயேச்
சரியென்றும் மாயையென்றுஞ் சடமென்றியா
[தொன்றுள்
எத்திசையும் பரவுசத்தி யுண்டனந்த சத்தி
இலகியசத் திற்சிவனை யென்றுமது சார்ந்து
நித்தியமாம் பரமாகா சத்தில்விளங் கிடும்பின்
நீடுசட அரூபியாய் நிற்குமா யையினால்
மெத்தியமெய் சூழப்பட் டிருக்கிறசீ வனையே
மிகுபுருடன் என்றுமறை விளம்பிடுமா கமமே. (9)

2506. மற்றுமந்தப் புருடவுரு வந்தனையா தொன்று
மறைக்கின்ற ததுபுலவர் மலமென்பர் ஆன்மா
முற்றுமந்த மலத்தினால் தான்மறைக்கப் பட்டு
முன்செயுந்தன் கன்மபலம் முழுதினையும் அருந்தும்
பற்றறுமக் கன்மம்வினை வதற்குக்கா ரணமாய்ப்
பகர்போகத் தைப்பலமாய் உடைத்தாயும் என்றும்
உற்றதுவா தனையாதொன் றுண்டதுவு மலம்போய்
ஒருவ அகன் றிடுங்கன்மம் உபாயமும்பன்
[முறையே. (10)

2507. ஓங்குமந்தக் கருமந்தான் ஆகுவதே தென்றால்
உய்த்தருள் புண் ணியவுருவும் பாவவுரு வமுமாம்
பாங்கிலந்தப் புண்ணியமோ ஆனந்த சுகத்தைப்
பலமாக வுடைத்தாமப் பாவமுமோ தீராத்

தீங்குதரு துன்பத்தை யுடைத்தாமிவ் விரண்டும்
தீரவனு பவிப்பதுவே போகமப்போ கத்துக்
கீங்கிடமாஞ் சரீரமந்தப் போகமெலாம் நுகர்தற்
கெய்துபுறக் கரணமந்தக் கரணம்வழி யாமால்(11)

2508. அந்தஆன் மாத்தனக்கு வேண்டினபேர் ஒருத்த
ராகிலுமில் லைத்தானும் அன்னியரா னவர்கட்(கு)
எந்தவகை யினும்வேண் டான் மனைவிமைந்தர் கேளிர்
எல்லாரும் தூரவழி யெவ்விடத்தும் படர்ந்து
வந்துமரு வினர்போலப் பிரிவரவ ரெமையால்
மறைத்திடவும் நீங்கிடவும் வருந்தியிடும் ஆன்மா
அந்தரத்திற் செலுமேகந் தன்னின்மதி யம்போல்
ஆன்மாவுக் கனந்தவுரு அடைவதும்போ
[வதுமே. (12)

2509. உலகர்பழந் துகில்தணந்து புதுத்துகிலை வாங்கி
உடுத்திடல்போல் ஆன்மாவும் முற்றுமுடல்
[தணந்தே
இலகுடலம் வேறுகொணர்ந் தின்பமுத்தி அளவும்
இருக்குமடு வுறுமச்சம் இருகரையும் நாடி
அலகில்பகல் அலம்வரல்போல் வியனுலகம் அன்ன
அவனிகளில் தன்கரும வசபாசங் களினல்
விலகலறப் பிணிபட்டுப் பாசியெனும் பெயராய்
விழைசுகதுக் கங்களென்றும் விரைந்தருந்திச்
[சுழல்வன். (13)

2510. எண்ணரிய சீவனையிப் படிபுரிதல் ஈசன்
இல்லையென்று சாத்திரங்கள் எல்லாஞ்சொற்
[றிடுமால்
தண்ணறுமென் மலர்க்கடவுள் முதலெறும்பி யீருய்ச்
சாற்றுயிரெல் லாம்பசுக்கள் சகலபசுக் களுக்கும்

2510. எறும்பி—எறும்பு.

கண்ணுறுதிட் டாந்தமிது வெனுஞ்சூதர்க் கறவோர்
கட்டுரைப்பார் பிரகிருதி மாயையொன்ருய் [அதன்பால்
நண்ணுதலுங் காரியமும் உரைத்தியெனப் பரமா
னந்தவெள்ளத் துறுசூதன் நவில்வனதைத் [தெளிந்தே. (14)

2511. றுறவிர்யா தொன்றிந்தப் பிரகிருதி யென்று
சொல்லப்பட் டதுமீளச் சோதியம லற்சேர்ந்(து)
உறுமாதி பசுக்களுக்கெல் லாமாயா சத்தத்
துற்றிருக்கும் அதுவேயவ் வியத்தமென்று [பின்னும்
பிறதான மென்றுமிகு மாயையென்றும் நீங்காப்
பிரகிருதி யென்றும்பல் பெயர்பெற்ருன் மாக்கள்
தொறுமாகந் தழுவுமுபா தானகா ரணமாய்த்
தோன்றியுந்தோன் ருமலுமாய்க் காலத்தா [விருக்கும். (15)

2512. மாயையிலே யின்பதுன்பத் தால்மூன்று குணமாய்
மரீஇயசாத் துவிகமிரா சதந்தா மதமென்(று)
ஆயகுணந் தோற்றுமத னேடுமாத் திரையோர்
ஐந்துபூ தங்களைந்தும் இந்தியமீ ரைந்தும்
ஏயுமந்தக் கரணமொரு நான்குமுடன் கூடி
யெதிர்காண வருமாயை விகாரமுடன் கூடித்
தோயுமவை கூடாமல் வறிதேகா ரணமாய்த்
தோற்றுபக லவ்வியத்தம் என்றுசொலப் [படுமால். (16)

2513. தோற்றுவதா மதுகாரி யத்துடனே கூடித்
தோன்றுசரீ ராதிகளுங் கடாதிகளு மாக
வீற்றுவீற் ருய்வருத லாமுருவா திகளோ
மேவிவரு மாயைவடி வாம்பேத மல்ல

---

2511. உபாதான காரணம்—முதற்காரணம்.

2512. அவ்வியத்தம்—விளங்கக் காணப் படாதது. மூலப் பிரகிருதி.

ஆற்றல்செயும் மாயையொன்றுங் காரணகா ரியமாம்
அவ்வுருவும் அதனுடைய அவதாரம் ஆகும்
ஏற்றஅத னுலுண்டாம் பொருள்களேயே யருந்தும்
இதுவேமொன் றல்மாயை யென்பரறி
ஞோரே. (17)

2514. சோற்றிடுமப் பிரகிருதி காரியத்தால் வியத்தந்
தோற்றியிடு சரீரங்கள் கடபடங்கள் போல
மற்றதுவச் சரீரங்கட் கபின்னமாய் வயங்கி
மன்னுமத னுல்மாயை முக்கியகா ரணமாம்
இற்றிடுமச் சரீரங்கள் போக்கியங்கட் கெல்லாம்
இம்மாயை யாதார மாய்வயங்கும் இந்தக்
கொற்றமுறு மாயையிற்கட் டுண்டதனுல் உரவோன்
கூறுவனுன் முகனுதி பசுக்களென்று குறித்தே, ()

2515. மன்னுமயன் யானென்னும் விப்பிரன்யா னென்றும்
வசிப்பனவன் வன்மைபெறு கருப்பனியா
[னென்றும்
பன்னுசரீ ரமுமிவ்வு மிழைத்தவன்யா னென்றும்
பகருமையா னென்றும்பு கல்வரற வோர்கள்
சொன்ன இந்த இலக்கணங்கட் கன்னியமா யான்மா
சுத்தனுய் விளங்கவுந்தன் விளேயாட்டி னுலே
யின்னலுறுஞ் சரீரமென திவ்வுடல்யா னல்ல
என்றுணர்ந்தே யிலகுவது பரமான்மா
[வாகும். (19)

2516. பேசுமிந்த வுடலறியா தான்மாவை யான்மாப்
பேணியமெய் யையுமுயிரை யும்மறிவான்
[பெம்மான்
நாசமிலா துறுஞ்சீவன் சரீராதி களேயும்
நலமறிமெய்ப் பூரணமாய்ப் பொன்மயமா யெல்லாந்
தேசுபெற இயக்குமர னேயுமறிந்தே தான்முன்
செய்திடுபுண் ணியபாவங் களேத்துரந்து தெளிந்தே
யாசகல பரத்துடனென் றுயின்பந் தனேயேய்
அமலமாய் விளங்கிடுவ னுன்மாவென் றருளால். ()

**எழுசீர் விருத்தம்**

2517. சூதமா முனிவன் எழில்கொள்வே தாந்தத்
தொல்லுரை யிசைத்திடக் கேட்டே
மாதவர் மிகவும் மகிழ்ச்சியுற் றிறைஞ்சி
மன்னிய தவர்க்கெலாம் ஆசை
ஆதர வுடனே யாவர்கேட் டிடினும்
அலகில்மா பவமெனும் மாறாத்
தீதினை யகற்றும் இனியசித் தாந்தத்
திறமெமக் கருளெனப் புகன்றார். (21)

---

## அத்தியாயம் 84

# சித்தாந்த ஞான மான்மியம்

**பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பதியின் இலக்கணத்தைச் சூத முனிவர் கூறுகின்றார்:**

### பதி இலக்கணம்

உயிர்கள் ஞானக் கண்ணைப் பெற்று ஆனந்தம் உற, அண்ணல் ஐந் தொழிலை நடத்துகின்றார். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்யோ சாதம் என்னும் பிரமமந்திரம் ஐந்தும், இதயம், சிரசு, சிகை, கவசம், நேத் திரம், அத்திரம் என்னும் அங்கமந்திரம் ஆறும் ஆகப் பதினொரு மந்திரங் களுமே தமது திருமேனியாகச் சதாசிவ மூர்த்தி உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றார். அவர் கங்கை தங்கு சடாபாரமும், திருமுகங்கள் ஐந்தும், திருத் தோள்கள் பத்தும், நூபுரமும், ஒளிமிக்க மேனியும், பேரின்பத்தைத் தரும் இருபதமும் உடையவர். தம்மிடத்தே மகேசுர மூர்த்தியையும், மகேசுர ரிடத்தில் உருத்திர மூர்த்தியையும், உருத்திரரிடத்தில் முகுந்தரையும், முகுந்தரது உந்திக் கமலத்தில் அயனையும் உதிக்கச் செய்து, அயன் படைக்க வும், மால் புரக்கவும், உருத்திரன் அழிக்கவும், மகேசுரர் மறைக்கவும், சதா சிவராம் தாம் அருள்புரிந்து தொழில்களை நடத்துவார்.

உயிர்கள் வினைக்கேற்ற வடிவங்கொண்டு, பற்பல யோனிகளில் உருவம் தாங்கி, இருவினைகளைப் புரிந்தும், அனுபவித்தும், பிறந்தும், இறந்தும், மூவுலகங்களிலும் காற்றாடி போலச் சுழலும். சுவர்க்க நரகங்களில் இன்ப துன்பங்களை அடைந்து அடைந்து திரிதரும். இங்ஙனம் உயிர்களை ஆட்டு

வித்துத் திருவிளையாடல் புரிவார் இறைவர். மால், அயன் முதலான கடவுள ரெல்லாம் அவரது ஆட்சிக்கு உட்பட்டவர்கள். சுதந்திர சக்தி உடையவர் பதியே. அவரே முதல்வர். சதாசிவத்தில் தோன்றிய மகேசுரர் உருவத் திரு மேனி கொண்டு உமாமகேசுரராய்த் தம்மை அடைந்தோர்க்கு அருள்புரிவர்.

இங்ஙனம் இறைவர் ஐந்தொழிலை நடத்தும்போது சிற்சில உயிர்கள் மலபரிபாகம்பெற்று, இருவினையொப்பு அடைந்து, அருட்சத்தி தோய்ந்து, மலம் நீங்கி விளங்கும். அத்தகைய உயிர்களை இறைவர் தாமே ஆமாறு அருள் புரிவார். தம்மை அவர்க்கு அளிப்பார். அவரைத் தாம் கொள்வார்.

## பசு, பாச, இலக்கணம்

பசுக்கள் எல்லாம் பரனைப்போல நித்தியமானவை; மலத்தால் (ஆணவ மலத்தால்) தம்மையும் அறியாது அரனையும் அறியாது திகைக்கும்; ஆணவ மலத்துடனே மாயை, கன்மம் என்னும் இரண்டும் உள. இவை மூன்றும் அனாதியாகும். இந்த மும்மலங்களாற் கட்டுண்டு உயிர்கள் போகங்களை அனு பவித்து வினைக்கு ஏற்ற உரு எடுக்கும். ஒருமலந்தவர் (ஆணவமலத்தவர்) விஞ்ஞானகலர். ஆணவம் கன்மம் இரண்டும் கூடினவர் பிரளயாகலர். மும்மலங் களும் கொண்டவர் சகலர். சகலநிலையோர்—சாக்கிரம், சொப்பனம் சுழுத்தி, துரியம், துரியாதீதம்—இவைகளுள் மேல் கீழாகப் பத்து அவத்தை களையும் தினமும் எய்தி, மனம் வாக்கு உருவம் (காயம்) மூன்றாலும் வினை களை அருந்துவர். உயிர்களுக்குச் சத்திநிபாதம் வரும்போது அரன் குருவாய் வடிவங் கொண்டு மலங்கள் நீங்கும்படி ஞானதீக்ஷை செய்வர். அப்போது உயிர் பேரறிவைச் சார்ந்து, ஈசனது பொன்னடியைச் சேர்ந்து, அவனோடு ஒன்றிப் பேரின்பம் அடையும். இதுவே சுத்தசிட்டை. இந்நிலை கிட்டா தவர் சரியை நிலையில் நின்று, திருநீறும், கண்டிகையும் புனைந்து, அரனிடத்தே அன்பாய், ஐந்தெழுத்தை ஓதி, நாள்தோறும் திருக்கோயிலில் வழிபாடுசெய்து, சிவனடியவர்களைப் பணிந்து மகிழ்தல் வேண்டும்; திருப்பணிகள் செய்ய வேண்டும். சிவலிங்க அருச்சனை செய்து மகிழ வேண்டும்; அதனால், சிவ யோகம், சிவஞானம் கிட்டும்; பிறப்பு அறும்; வீடு கூடும். இதுவே பசு பாச வகை—சித்தாந்த—மெய்ஞ்ஞானம் என்றார் சூதமுனிவர்.

இதை உணர்ந்த முனிவர்கள் 'இறைவன் இருபத்தைந்து திருவுருவங் கொண்டு தம்மை அடைந்தார்க்கு அருள்வார் என்று கூறினீர்களே அவைகளை விரித்தருள வேண்டும்' எனக் கேட்கச் சூதமுனிவர் கூறுகின்றார்.

---

# அத்தியாயம் 84.

## சித்தாந்த ஞான மான்மியம்.

2518. இலகுமா தவர்கள் கூறும் இனியசொல் வினவி யிந்த
உலகனிற் காம மாதி ஒழிந்துயர் சூதன் சொல்வான்
அலகில்மெய்த் தவர்கள் முன்னே யவரறி யாதாய்
[மிக்காய்
நலமரு ளுதவச் சொல்கேன் நயந்துநீர் கேண்மின் என்று.

2519. நிகரிலா ஞான பாத நிலைமையித் தன்மைத் தென்றே
பகரினெப் பொருளு மேலாம் பதிபசு பாச மென்றே
தகவுறும் அருள்நூல் கூறுஞ் சாற்றுமுப் பொருள்கட்
[குள்ளும்
இகலிலாப் பதியின் சீர்கள் யாவையும் இசைப்பாம்
[கேண்மின். (2)

### பதியிலக்கணம்

2520. அருவுரு அன்றி யெங்கும் அகண்டபூ ரணமாய் மிக்காய்
ஒருகுறி குணங்கள் மூன்றும் நின்மலன் மாயை
[ஒன்றுய்ப்
பொருவில்நித் தியமாய் இன்பப் புணரியாய் உயிர்கட்
[கெல்லாம்
மருவுரு வாகும் மாயை மற்றதன் செயல் சொல்
[லிற்பாம். (3)

2521. எண்ணிலா வுயிர்க ளெல்லாம் இருள்மலம் நீங்கி ஞானக்
கண்ணினைப் பெற்று னந்தக் கடல்படிந் திடுவான்
[முன்னி
அண்ணல்பே ரருளி னலே ஐந்தொழில் நடாத்தத்
[தன்பால்
நண்ணிய சத்தி தன்னை நாடினன் முன்னும் அம்மா. (4)

2522. உன்னிய பொழுதின் ஓரைந் துருக்களாய் முகிழ்த்துச் [சத்தி
பன்னருஞ் சுத்த மாயை பாற்படார்ந் துற்ற போதில்
தன்னிக ரிலவைந் தொன்றே சாற்றுசா தாக்கி யங்கள்
முன்னுமச் சத்தி ஐந்தாய் முளைத்த தெம் பரன்மெய் [யாயே. (5)

2523. முன்னிய சிவமே மூர்த்தி மூர்த்தியு முடனே மெய்நூல்
பன்னுகத் திருமிக் கோர்கள் பகர்சனம் என்றும் போமே
தன்னிக ரைந்தே தென்ற சாதாக்கிய வடிவ மாக
என்னையா ளுடையா னுக்காய்ச் சத்திகள் ஈன்ற தன்றே.

2524. ஏருறு நாதம் விந்தோ டிலகுசா தாக்கி யங்கள்
சீருறு மீசு ரம்பின் சிறந்திடுஞ் சுத்த வித்தை
ஆருயிர் உய்ய இந்த ஐந்துதத் துவங்கள் தம்மைப்
பேருறு சுத்த மாயை பெற்றதச் சத்தி தன்னல். (7)

2525. சொற்றிடும் விந்து சத்தி சூக்குமை முதனுல் வர்க்குக்
கற்றவர் பரவும் வேதா கமமனு பேத வர்க்கம்
விற்றருந் தருமந் தத்தம் விஞ்ஞான கலைகட் கெல்லாம்
நற்றனு முதன்மற் றெல்லாம் நல்கிய தருளால் [அன்றே, (8)

2526. இப்பமாங் கரணம் மாயை இயைந்திடுங் கரணங் கட்குள்
ஒப்பில் சாதாக்கி யத்தின் உற்றைந்து தொழில்ந [டாத்தும்
தப்பில்பே ரருள்மீக் கூரும் **சதாசிவ மூர்த்தி** யென்பர்
அப்பரன் செய்கை யாவும் அறைகுவன் முனிவீர் [கேண்மின். (9)

### எண்சீர் விருத்தம்

2527. இலகுசதா சிவமூர்த்தி உருவமியா தென்னில்
ஈசானந் தற்புருடம் அகோரமுடன் வாமம்
நிலவுசத்தி யோசாதம் எனும்பிரமம் ஐந்தும்
நீடுமித யஞ்சிரசு சிகைகவசம் இன்பம்

---

2522. சாதாக்கியங்கள்—சத்தியுடன் சேர்ந்த பரசிவம்—''நிட்கள மதனிற் சகல நிறைந்திடு மப்பெயர் சதாக்கிய மெனலாகும் (சதாசிவ—5.)
2524. ஈசுரம்—ஈச்சுரம்—சுத்த தத்துவங்களுள் ஒன்று,

நலமருளும் நேத்திரமத் திரமங்க மாறும்
நவிற்றுபதி னொருமனுவும் திருமேனி யாகக்
குலவியசா தாக்கியத்தெக் காலமும்வீற் றிருப்பர்
கூறுமுயிர் கட்கெல்லாம் அனுக்கிரகம் புரிந்தே. ()

2528. மருவுயிர்க்கும் இதழிமலர்ப் பொன்கொழித்தே ஒருபால்
மதுகரங்கள் எனும்நீல மணிவாரி இறைக்கும்
பொருவில்திரை உவட்டெடுத்தே புரளகங்கை கிடக்கும்
புட்பவனச் சடைக்காடும் ஓரைந்து முகமும்
ஒருபஃது தோளுமெழில் நூபுரமும் படிக
ஒளிதெவிட்டும் மேனியும்பே ரின்பவெள்ளத் [தழுத்தும்
இருபதமும் உடையசதா சிவமூர்த்தி யென்னும்
ஈசனைந்து தொழில்நடத்த எண்ணியிவை புரியும்.

2529. தனதிடத்தில் மகேசுரமூர்த் தியைத்தோற்று வித்தச்
சங்கரன்றன் இடத்திலுருத் திரமூர்த்தி வரவே
புனிதனிழைத் தவனிடத்தில் முகுந்தனுதித் திடவே
புரிந்தந்த முகுந்தனுந்திப் பூங்கமலத் தவிசின்
இனியஅயன் உதித்திடச்செய் தவன்சிருட்டி புரிய
இயற்றிடுநற் றிதிமால்சங் காரம் உருத் திரன்தான்
முனமிழைக்கத் திரோபவமீ சுரன்புரியப் புரிந்தே
மோகமுறும் உயிர்க்கருளைப் புரிவனந்த முதல்வன்.

வேறு

2530. அந்தமகே சுரனுலும் உருத்திரனு
லுங்கொடிய அசுத்த மாயை
தந்திடுந்தத் துவங்கள் முப்பான் ஒன்றேயத்
தத்துவங்கள் தம்மை முன்னாள்

---

2527. பதினொரு மனு I (பஞ்சப்) பிரம மந்திரம் 5: (1) ஈசான மூர்த்தாய நம: (2) தத்புருஷ வக்த்ராய நம: (3) அகோர ஹிருதாய நம: (4) வாமதேவ குஹ்யாய நம: (5) ஸத்யோஜாத மூர்த்தயே நம: II அங்கமந்திரம் 6: (1) ஹ்ருதயாய நம: (2) சிரஸே நம: (3) சிகாயை நம: (4) கவசாய நம: (5) நேத்ரேப்யோ நம: (6) அஸ்த்ராய நம: இவை ஸம்ஹிதா மந்திரம் எனப்படும்.

2530. தத்துவங்கள் 31:— சிவதத்துவம் 5 நீங்கலாகத் தத்துவங்கள் 31.

வந்தமலே கோடியண்ட பாதாள
பிலங்களெலாம் வரமுன் ஆற்றி
எந்தையைந்து தொழிலுமுயிர் கட்குமல
பாசம்வர இயற்றும் அன்றே. (13)

2531. மருவுயிர்கள் பிரிந்தவுரு வினையறிந்தவ்
வினைக்கேற்ற வடிவம் யாவும்
ஒருவனினி தருள்புரியப் பற்பலயோ
னிகடோறும் உருவந் தாங்கி
இருவினைகள் புரிந்தருந்தி உதித்திறந்து
பின்னுமுதித் திறந்தெந் நாளும்
திரிதருமூ வுலகெங்குங் கறங்கெனவவ்
வுயிர்களிடர் செப்பற் பாற்றோ. (14)

2532. பரமசிவன் மாலயன்முன் ஆருயிர்க்கு
மாக்களெலாம் பாசத் தாற்பூண்(டு)
இருவினைகள் புரிந்திரிய சுவர்க்கநர
கங்கள்தமில் இன்ப துன்பம்
மருவியருந் திப்புவியில் வந்துதித்துப்
பின்னரும்போய் மாந்தி மாந்தித்
திரிதரத்தன் விளையாட்டால் இழைத்திழைத்து
விகாரமின்றித் திகழ்வன் அம்மா. (15)

2533. அந்தவிசு வத்துக்கு முகமாய் அ
காரமாய் அனைத்தும் ஆகிச்
சந்ததமும் விளையாடல் புரிந்துறுவன்
அவன்தகைமை சாற்றற் பாற்றோ
கந்தமல ரோன்மால்முற் கடவுளரங்
கவன்சேயா கங்கள் ஆவர்
முந்துசுதந் தரசத்தி யுடையவனற்
பதியவனே முதல்வன் அம்மா. (16)

2534. மேலாய சதாசிவத்திற் றேற்றியமா
யேசுரனும் விமலன் எங்கோன்
ஆலாலம் உண்டபிரான் இருபானே
ரைந்துருவம் அருளாற் கொண்டே

---

2534. இருபத்தைந்து திருவுருவம்—அத்தியாயம் 85 பார்க்க.

நாலாய மறைபரவத் தனையடைந்தோர்க்
கருள்புரிந்தெந் நாளும் வைகும்
பாலாய சொல்லியொரு பங்கிலுற
அவன்புகழார் பகரற் பாலார்? (17)

2535. இன்னணமைந் தொழிலருளால் இறைவனடத்
திடும்பொழுதில் எண்ணி லாத
மன்னுயிர்க்கு மக்கட்குட் சிறுசிலர்கள்
மலபாகம் வந்தே முன்னுள்
துன்னுமிரு வினையொப்புப் பிறந்தடைய
அருட்சத்தி தோயச் செய்தே
தன்னருளால் உருக்கொண்டு போதித்து
மலநீக்கித் தானுய்ச் செய்தே, (18)

2536. தன்னையவர்க் களித்தவரைத் தான்கொண்டு
பேரின்பச் சலதி தோய்ந்தே
அன்னவரொன் றாகியுற அருள்புரிவன்
எந்நாளும் அந்தத் தேவே
பன்னுபதி யானமல முத்தனு
னந்தனருட் பரனென் றாய்ந்தே
நன்னயமார் சூதன்மொழிந் திடக்கேட்டு
முநிவரரும் நன்றி வாய்ந்தே. (19)

2537. வார்ந்தொளிருஞ் சடைநதியும் திருநுதலிற்
புண்டரமாய் வயங்கு நீறுங்
கூர்ந்தஅருள் விழுமக்க மாலிகைசேர்
திருமார்பும் கோலத் தாளும்
தேர்ந்தஅறி வுடைத்தாய பரமசிவன்
இவனெனவே திகழ்சூ தன்தாள்
சேர்ந்தமுநிக் குழாம்பரவிப் பசுபாச
வகைநீதி தெரித்தி யென்றார். (20)

---

2536. "தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை", 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட"—திருவாசகம். "தானவனாகிய தன்மை பெற்று" பண்டார மும்மணி; "நீயான ஞானவிநோதம்—கந்தரலங்.

### பசு பாச இலக்கணம்

2538. மேயபசு பாசவகை விரித்திசைத்தி
எனமுனிவர் வினவச் சூதன்
தூயமுனி வரர்!கேண்மின்! எனப்புகல்வான்
ஆதிபசுத் தொகுதி யெல்லாம்
நேயமுறு பரனைப்போல் நித்தியமாய்
வியாபகமாய் நிகழா நிற்பர்
தீயமலத் தால்மறப்புண் டரனையுந்தம்
மையுமுளத்தில் தெருளார் அம்மா. (21)

2539. மன்னிய ஆன் மாக்களுக்குப் பசுவெனும்பேர்
அம்மலத்தான் வந்த தென்பர்
அன்னமலம் உளபொழுதே மாயைகன்மம்
உள.அவையும் அனாதி ஆகும்
பன்னருமும் மலத்தாற்கட் டுண்டுயிர்கள்
பரனுணர்த்தப் பரபோ கங்கள்
முன்னமுணர்ந் தருந்தியவர் வினைக்கேற்ற
உருவெடுத்தே முடிவர் அம்மா. (22)

2540. இந்தஆன் மாக்கள்மலம் ஒன்றுறுவிஞ்
**ஞானகலர்** என்றுஞ் சொற்ற
அந்தமலங் கன்மமுள **பிரளயா**
**கலரென்று** மறையின் மூன்று
முந்தவே உள**சகலர்** என்றுமூ
வகையாக மொழியா நிற்பர்
சந்ததங்கே வலசகல பிரமாண்ட
மடைந்துறுவர் சாற்று நூல்கள். (23)

2541. சொற்றிடுசாக் கிரமுடன்சொற் பனஞ்சுழுத்தி
மாதுரியந் துரியா தீதம்
இற்றெனவே மேல்கீழென் றிசைந்திடும்பத்
தவத்தைதினம் எய்தி எய்தி
உற்றமனம் வாக்குருவம் எனுமூன்றால்
உழந்துவினை உணர்ந்தே யீசன்
சற்றுமக லாதருத்த அருந்தியிரு
மைத்துநிற்குஞ் சகலத் தம்மா. (24)

2538—39. "பதியினைப்போற் பசு பாசம் அனாதி"—திருமந்திரம்,

2542. மலமொன்றும் அல்லாமற் குணங்குறிகள்
வடிவுசெயல் மாயை கன்மம்
பிலமன்றி யுறுவதுகே **வலமாகும்**
வினைக்கீடாய்ப் பெம்மான் கூட்டும்
நலமிலுடல் எடுத்தெடுத்தே அளவில்பல
போகங்கள் நண்ணி மாந்தி
உலகமொரு மூன்றினுஞ்சென் றுழல்வதுவே
**சகல**மென உரைக்கும் நூல்கள். (25)

2543. இப்படிக்கே வலசகலத் துறுவதுவே
**பேத்தம்**என இசைப்பர் மேலோர்
ஒப்பருசுத் தத்தைமொழிந் திடக்கேண்மின்
இருவினைகள் ஒப்பு வந்தே
செப்பருமா மலபரிபா கம்வருமுன்
குரோதத்தைத் திரோதம் நீங்கில்
தப்பில்பெருங் கருணைசெயச் சத்திநிபா
தம்முயிர்கள் சார்வர் அம்மா. (26)

2544. மன்னியசத் தினிபாதம் உயிர்க்குறும்போ
தரன்குருவாய் வடிவங் கொண்டே
பன்னவரு மலங்களெலாம் மெய்ஞ்ஞான
தீக்கையினைப் பண்ணி நீக்கித்
தன்னுடைய சிற்றறிவு போயினிய
பேரறிவு சார்ந்தே யீசன்
பொன்னடிசேர்ந் தவனொடொன்றி உற்றேபே
ரின்பநலம் புசிப்ப ரம்மா. (27)

2545. சொற்றவிது வேசுத்த மேலான
நிட்டையது தோயா தோர்கள்
பற்றியுயர் சரியைதனைக் கண்டியுநீ
றும்மணிந்தே பரன்கண் அன்பாய்
நற்றவமுற் றஞ்செழுத்தின் உண்மையுணர்ந்
துச்சரிப்பர் நாள்கள் தோறும்
உற்றரன்கோ யிற்பணிவார் அவனடியார்
பதம்பணிந்தே உவப்பார்! அம்மா. (28)

2546. பரமசிவன் கருணைசெயத் திருப்பணிகள்
புரிந்திடுவர் பரன்பா லன்பர்
உருகியுள்ளஞ் சிவலிங்கத் தருச்சனைசெய்
தானந்தம் உறுவர் நாளும்
அரியசிவ யோகவகை புரிந்தின்பக்
கடல்படிவர் வரங்கள் ஞானம்
மருவுவர்பின் ஞானமுற்றோர் அவர்சீவன்
முத்தரென மறைகள் கூறும். (29)

2547. அவரையருச் சிப்பதுவே சிவனையருச்
சிப்பதா அருணு வுற்றே
நவநவமாய் வருபோகம் எலாம்பரமன்
அருத்திடுவர் நாள்கள் தோறும்
புவனிதனில் அவர்க்கரிய தொன்றில்லை
விரதத்தவர் முத்தி மான்கள்
சிவயோகர் அவர்க்கிணையாய் ஒருவரையிப்
புவனத்திற் செப்பற் பாற்றோ. (30)

2548. இலகுமறை ஆகமங்கள் சகலபுரா
ணங்கலைகள் எவையும் ஓர்ந்தே
நலமருள்மெய்ஞ் ஞானமடைந் துயர்நாதா
வாயுறுவன் ஞானத் தோர்கள்
பலமடைய அவன்பதம்பூ சிப்பரவன்
அருள்விழியாற் பார்க்கப் பெற்றோர்
அலகில்பவம் நீங்கியருள் வீடடைவர்
சத்தியமீ தையம் இன்றால். (31)

2549. பதுபசு பாசவகை சித்தாந்த
மெய்ஞ்ஞானம் இதுவாம் என்றே
சூதன்மொழிந் திடக்கேட்டு முனிவரெலாம்
அவன்கமலத் துணைத்தாள் போற்றி
நாதனிரு பாணைந்து வடிவுகொண்டே
அடைந்தோரை நல்கி னுனென்(று)
ஓதினையவ் வகைவிரித்தே சொற்றியென
முனிவனவர்க் கோது கின்றான். (32)

# அத்தியாயம் 85.

# மூர்த்தி மான்மியம்

## இருபத்தைந்து மூர்த்திகள்.

மகேசுர மூர்த்தி உயிர்களுக்கு இரங்கி இருபத்தைந்து வடிவு கொண்டுள்ளார். அவைதாம் :—

(1) வரோதய மூர்த்தி : தம்மைப் பணிபவர்க்குச் சாரூபத்தை அருள்வார்.
(2) சுகாசன மூர்த்தி : உள்ளத்து விகாரத்தை நீக்குவர்.
(3) கலியாண சுந்தரர் : மங்கலம் நிறைந்த மடந்தையை அருள்வர்.
(4) உமா மகேசுரர் : திருமணம் முதலிய நல்ல இச்சைகளை அளிப்பார்.
(5) கிரீசர் : மனையாளுடன் விருப்புற்று வாழ வரமளிப்பர்.
(6) சோமாஸ்கந்தர் : நன் மக்களை ஈந்தருள்வார்.
(7) சக்ரதான மூர்த்தி : சகல போகங்களையும் தருவார்.
(8) திரிமூர்த்தி : சாரூபம் அருள்வார்.
(9) அரிகர மூர்த்தி : இருவினை யொப்பு, சத்திநிபாதம் கூடிட அருள்வார்.
(10) தக்ஷிண மூர்த்தி : சூரியமண்டலத்திற் சேரச்செய்து பேரின்பம் ஊட்டுவர்.
(11) பிக்ஷாடன மூர்த்தி : பற்றுகளை ஒழிப்பர்.
(12) கங்காள மூர்த்தி : ஆசைகளை விலக்குவர்.
(13) காம சங்காரர் : காம பீடையைத் தொலைப்பார்.
(14) கால சங்காரர் : யம பயத்தை நீக்குவர்.
(15) சலந்தரா சுரசங்காரர் : குரோதத்தை நீக்கி யோகநிலையை அருள்வார்.
(16) முப்புராரி : முக்குணங்களையும் வெல்லும் ஆற்றலை அளிப்பர்.
(17) சரப மூர்த்தி : மாயா கன்மத்தைப் போக்குவர்.
(18) நீலகண்ட மூர்த்தி : பிரபஞ்ச வாழ்க்கைத் துன்பத்தை நீக்கி இன்பம் [தருவர்.
(19) திரிபாத மூர்த்தி : இவர் மூன்றுபாதம், இரண்டு சிரம், ஏழுகரம், நான்கு மருப்பு கொண்டவர். சரியை, கிரியை, யோகம் மூன்று [நிலைகளையும் அடைய அருளுவார்.
(20) ஏகபாதர்—ஞானநிலையைக் கூட்டுவிப்பார்.
(21) வயிரவ மூர்த்தி: தேகப் பற்று, பிரபஞ்சப் பற்று ஆதிய எல்லாப் பற்றுக் [களை நீக்கி இன்புறுத்துவர்.
(22) இடபாரூடர் : திருவருள் பாலித்து இன்பூட்டுவர்.
(23) சந்திரசேகரர் : பிறப்பு இறப்பு இலாவகைச் செய்வர்.
(24) நடன மூர்த்தி : ஆனந்த நிலையைப் பாலிப்பர்.
(25) கங்காதரர் : விரும்பிய எல்லாம் பெற அருளுவார்.

சூதமுனிவர் முனிவர்களை நோக்கி "முனிவர்களே! உபதேச காண்டத்தைக் கேட்கும் பேறு பெற்றீர்கள்; உங்களைப் போலப் பேறு பெற்றவர் யாரே உளர்" என, முனிவர்கள் "அண்ணலே! நீரே எங்களுக்குக் குருவும் பிதாவும்; ஞானம் நல்கிய பிதா நீரே! உடல், பொருள், ஆவி மூன்றையும் உமக்கு அளித்தோம்" எனக்கூறிப் பணிந்தனர். சூதமுனிவர் நீங்கள் எல்லீரும் சிவபிரானைத் துதிசெய்யுங்கள் என்ன, முனிவர்கள் உடனே "சங்கரா! தேவதேவ! அரனே! பரனே!" என நிரம்பத் துதித்தனர்.

## முனிவர்களுக்கு இறைவன் காட்சி அளித்தல்

துதிமொழிகளைக் கேட்ட இறைவன், வாத்தியங்கள் முழங்கப், பூமாரி பெய்ய, பூதகணங்களும் சகல தேவர்களும் புடைசூழ, உமையுடன் முனிவர்களுக்கு காட்சி அளித்தார். இறைவரைக் கண்ட முனிவர்கள் கைகளும் தலைமீதேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம் பெருக ஆடினர், பாடினர், புரண்டனர், கொக்கரித்தனர், துதித்தனர், தண்டு, குண்டிகைகளை எறிந்தெறிந்து பிடித்துத் திரிந்தனர். அங்கு விசும்பிலிருந்து வந்த சிங்காதனத்தில் இறைவர் தேவியுடனும் குமரர்களுடனும் வீற்றிருந்தார். தேவர்கள் இறைவரைப் பூசித்தனர். வசிட்டராதி எண்ணிலாத முனிவர்களும் அப்போது அங்கு வந்து கூடி அளவளாவி மகிழ்ந்து யாவரும் இறைவருக்குச் சோடசோபசாரத்துடன் அருச்சனை புரிந்து "ஈச! சர்வக்ஞ! சிற்பரானந்த! சங்கரா! பராபரா! மலைமகள் நாயக! விடையூர்தி! அடியார்க் கெளியாய்! போற்றி, போற்றி" என வாயாரத் துதித்தனர். இறைவர் 'மாதவர்களே! நீங்கள் உபதேச காண்டத்தைக் கேட்ட பயனாக யாம் வெளிப்பட்டோம். உங்களுக்கு வேண்டுவது யாது?' என்றார். முனிவர்கள் 'நாதனே! உன் தாளிணையில் அன்பு நாடோறும் வளர வேண்டும். இவ்வுபதேச காண்டத்தைக் கேட்பவர்க்கு மக்கள், தனம், வெற்றி, வித்தை, எண்ணிய எண்ணியபடியே கைகூடுதல், பூமியில் நல்வாழ்க்கை ஆகிய நன்மைகள் பெருகி உன் திருவடிப்பேறுங் கூடுதல் வேண்டும்' என வேண்டினர். இறைவர் அப்படியே வரம் தந்து மறைந்தார். முனிவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டனர்.

சூதர், "அன்பர்களே! இந்த மான்மியத்தைச் சொல்லும் இடத்தில் இறைவர் தேவியுடன் வந்திருந்து மகிழ்வார். இப்புராணத்தைக் கேட்க விரும்பினோர் மண்டபத்தை அலங்கரித்து, பீடம்அமைத்து, திருமுறையை வைத்து, நறுமலரால் அருச்சித்துத் தூபதீபங்காட்டி, நிவேதனம் வைத்து, வீழ்ந்து பணிந்து, நீறு கண்டிகை அணிந்து, இந்திரியங்களை அடக்கி, நல்ல முகூர்த்தத்தில் வடமொழியிலேனும் தமிழ்மொழியிலேனும் பெரியோர் கூறக்கேட்க வேண்டும்; புராணம் சொல்பவர்க்கு ஆடை, பொன், ஆபரணம், மனை முதலிய உதவவேண்டும். அரசராயினோர் கேட்டால் கரி, பரி, கிராமம், பசு, குண்டலம், கடகம்முதலிய சிறப்புக்களைச் செய்யவேண்டும்; ஒவ்வொரு காண்ட முடிவிலும்; தேவசேனை, வள்ளியம்மை திருமண முடிவிலும், கந்தர் பட்டாபிடேகத்தின்

போதும், 1008, 108, கணக்குள்ள அந்தணர்களுக்கு அன்னமிடல் வேண்டும். உபதேசகாண்ட முடிவில் சிவனடியார்களுக்கு அன்னம் அளித்து மகிழ்தல் வேண்டும். இந்நூலைப் படிப்போர், கேட்போர், மனை மக்கள் நீண்ட ஆயுள் ஆதிய சிறப்பெலாம் உற்றுக் குகனது பாதமலர் கூடுவர்''—எனக் கூறினர். முனிவர்கள் அவரை வணங்கி விடைபெற்றுத் தத்தம் பன்னசாலைக்கு, இறைவனைத் தியானித்த மனத்துடன் சென்று, தவநிலையில் இருந்து, நற்கதி கூடினர்.

வேற்குமரன் மலர்த்தாள் வாழ்க!
வையகம் வாழ்க! மறையோர் வாழ்க!
மன்னவன் செங்கோல் வாழ்க! மெய்த் தொண்டர்கள் வாழ்க!
வெண்ணீறும் ஐந்தெழுத்தும் என்றும் வாழ்க!
கண்டிகை மாலை வாழ்க! இவ் வுபதேச காண்டம் வாழ்க!

---

## அத்தியாயம் 85.

# மூர்த்தி மான்மியம்

### இருபத்தைந்து மூர்த்திகள்.

எழுசீர் விருத்தம்.

[வரோதய மூர்த்தி.]

2550. அரியமா தவர்காள்! மகேச்சுர மூர்த்தி
அனுதியை அடைந்தவர்க் கருள்வான்
இருபதோ டைந்து வடிவுகொண் டிடுஞ்சீர்
இசைப்பன்யான் கேண்மினிப் புவியில்
மருவிலங் கொப்ப வரோதய மூர்த்தி
மன்னுமப் பரனடி பணிந்தோர்
திருவுறு மவர்சா ரூபமே அடைந்து
செப்பரும் பேரின்பந் திளைத்தார். (1)

[2. சுகாசனமூர்த்தி. 3. கலியாணசுந்தரர். 4. உமாமகேசுரர்.]

2551. உயர்மறை பரவும் சுகாசன மூர்த்தி
ஒருவரப் பரனடி பணிந்தோர்
அயர்வுறும் உளத்தில் விகாரநீங் கிடுவர்
அருட்கலி யாணசுந் தரரென்(று)

---

2550. இருபத்தைந்து திருவுருவம்—திருப்பெருந்துறைப் புராணம்—மகேச்சுர மூர்த்த முரைத்த படலம் பார்க்க. ''உருஎண்ணரிதா யிடினுமவற்றினிதாய் மேலாய்க் கொண்டுவிளையாடுமொரு குறியிருபத்தைந்தாம்.''

இயல்புறும் மூர்த்தி ஒருவரப் பரன்தாள்
ஏத்திஞேர் மங்கல மடந்தை
நயமுடன் வாழ்வர் அருளுமை யுடனே
நண்ணிய மூர்த்தியங் கொருவர். (2)

[5. கிரீசர். 6. சோமாஸ்கந்தர்.]

2552. சொற்றவப் பரன்தாள் பணிந்தவர் விவாகந்
தோற்றிநல் இச்சையே அடைவர்
எற்றரு மணமெய் தத்தகக் கிரீசர்
எனுமொரு மூர்த்தியங் கவர்தாள்
பற்றுடன் பணிந்தோர் தங்குல மனையாள்
பால்விருப் புற்றுவாழ்ந் திடுவார்
வெற்றிசேர் சோமாஸ் கந்தரென் றுயர்ந்தோர்
விளங்குமோர் மூர்த்தியங் கவர்தாள். (3)

[7. சக்கரதானமூர்த்தி. 8. திரிமூர்த்தி.]

2553. ஆதர வுடனே பணிந்தவர் புவியில்
அறையுநற் சேயையே பெறுவார்
மாதவன் தனக்கோர் ஆழியன் றீந்த
வரதனேர் மூர்த்தியன் புடனந்
நாதனைப் பணிந்தோர் சகலபோ கமும்பின்
நண்ணிவாழ்ந் திடுவர்மா தவர்கள்
ஏதமில் எழில்மும் மூர்த்திகள் வடிவாய்
இலங்குமோர் மூர்த்தியங் கவர்தாள் (4)

[9. ஹரிஹரமூர்த்தி. 10. தக்ஷிணமூர்த்தி.]

2554. அன்புடன் பணிந்தோர் அவருருப் பெறுவார்
அரியர மூர்த்தியங் கொருவர்
இன்பவாரிதியப் பரன்கழல் பணிந்தோர்
இருவினை யொப்புறுத் திலகில்
துன்னுசத் தினிபா பாதமே அடைவர்
துறவரெக் காலமும் பணியும்
நன்பர குருவாந் தேக்கண மூர்த்தி
நவிற்றுறு மூர்த்திதாள் பணிவோர், (5)

### 11. பிக்ஷாடனன் மூர்த்தி. 12. கங்காள மூர்த்தி.

2555. பருதியை அடைந்தே பேரின்பந் திளைப்பார்
பாரெலாம் பரவியே உய்ய
வருமரு ளெழிற்பிட் சாடன மூர்த்தி
மற்றவர் இருசரண் பணிவோர்
விரதிய ராய்ப்பற் றறுத்துளந் திகழ்வார்
விண்ணவர் பண்ணார்சூழ்ந் திறைஞ்சும்
அரியகங் காள மூர்த்தியென் றொருவர்
அவர்பதம் அன்புடன் பணிவோர். (6)

### [13. காமசங்காரர். 14. கால சங்காரர்.]

2556. காசினி யிடத்தில் இச்சைநீங் கிடுவர்
காமசங் காரரென் றொருவர்
பேசரு மூர்த்தி பணிபவர் காமப்
பீடையெந் நாளும் நீங் கிடுவர்
ஏசில்மாக் கருணைக் காலசங் காரர்
என்றொரு மூர்த்தியங் கவர்தாள்
ஆசறப் பணிவோர் எமன்பயம் நீங்கி
அடைவர்பே ரின்பம்மா முனிகாள்! (7)

### [15. சலந்தராசுர சங்காரர் 16. முப்புராரி.]

2557 சலந்தரா சுரசங் காரரென் றொருவர்
தாவிலா மூர்த்தியப் பரன்தாள்
நலந்தரப் பணிவோர் குரோதநீத் தெவர்க்கும்
நாடரும் யோகமுற் றிடுவார்
நிலந்தனில் உயர்முப் புராரியென் றொருவர்
நேயமாம் மூர்த்தியப் பரன்தாள்
பலன்பெறப் பணிவோர் முக்குணங் களையும்
பாற்றிடும் ஆற்றல்மே வுவரால். (8)

### [17. சரப மூர்த்தி 18. நீலகண்ட மூர்த்தி]

2558. உலகினிற் சரப மூர்த்தியென் றொருவர்
ஓதுமப் பரனடி பணிவோர்
நிலவிய மாயா கன்மநீங் கிடுவர்
நீடிய வுலகெலாம் அடைவே

---

2555. பண்ணார்—பண்ணவர்.

உலவுமா விடங்கொள் **மூர்த்தி**யென் ஞெருவர்
உரைத்தவப் பரன்பதம் பணிவோர்
நலமிலாப் பிரபஞ் சத்தைநீத் தெவர்க்கும்
நவிலரும் இன்பமே திளைப்பார். (9)

[19. **திரிபாத மூர்த்தி** 20. **ஏகபாத மூர்த்தி**]

2559. **ஏருறும் மூன்று பாத**நான் மருப்போ
டிருசிரம் எழுகர முடனே
சீருற விளங்கும் மூர்த்தியென் ஞெருவர்
திகழ்வரம் மூர்த்தியைப் பணிவோர்
பேருறு சரியை யாதிமூன் றினையும்
பெற்றுளங் களிப்பர்மா தவர்கள்
நேருறு **ஏக பாத**ரென் ஞெருவர்
நிகழ்வரம் மூர்த்தியைப் பணிவோர். (10)

[21. **வயிரவ மூர்த்தி** 22. **இடபாரூட மூர்த்தி**]

2560. **நி**கரிலா ஞான பாதமே அடைவர்
நேடிமுன் அயன்சிரம் அரிந்த
தகவுறும் அந்த **வயிரவ மூர்த்தி**
சாற்றுமம் மூர்த்தியைப் பணிவோர்
இகலுறுந் தேக முதற்பிர பஞ்சம்
யாவையும் நீங்கியின் புறுவார்
பகரரும் **இடபா ரூட**ரென் ஞெருவர்
பராபரர் அவர்கழல் பணிவோர், (11)

[23, **சந்திரசேகரர்** 24. **நடனமூர்த்தி**]

2561. **செ**ப்பரும் இனிய அனுக்கிர கத்தைச்
சேர்ந்தின்ப வாரிதி அடைவார்
தப்பில்**சந் திரசே** கரரென ஒருவர்
தற்பரர் அவரடி பணிவோர்
இப்புவி யிடத்தில் உதித்திறப் பதுநீத்
தின்பமே அடைவர்விண் ஞேர்கள்
முப்புவ னமுஞ்சென் றிறைஞ்சிடும் **நடன**
**மூர்த்தி**யென் ஞெருவரங் கவர்தாள் (12)

[25. கங்கா தர மூர்த்தி]

2562. **ப**ரவிடு மவரா னந்தவெள் ளத்திற்
படிவரிவ் வுலகெலாம் ஏத்தும்
திரமுறு **கங்கா தர**ரென ஒருவர்
செப்புமம் மூர்த்தியைத் தொழுவோர்
வரமுடன் மனத்தில் விரும்பிய தெல்லாம்
மருவுவர் இங்ஙனம் புகலும்
இருபதோ டைந்து வடிவமான் மாக்கட்
கிரங்கியே எடுத்தனர் மகேசர். (13)

2563. **சொ**ற்றவவ் வடிவம் யாவையும் தன்பாற்
சுதந்தர சத்தியால் எடுத்தே
அற்றவக் கருணை புரிந்தடைந் தவரை
அளிக்குமம் மகேசுர வடிவை
நற்றவம் இயற்றுச் சஞ்சல வுளத்தால்
நாடியே தெருள்கலர் இந்த
எற்றரு வடிவம் யாவுநித் தியமாம்
இவைகளெம் இறையிடத் திலவே. (14)

2564. **இ**லங்கிடு வேத வாதமியா காதி
எழிற்கரு மங்களும் இன்றும்
நலங்கொளிவ் வுருவ மலர்வடி வநேகம்
நம்பன்முன் கொண்டருள் புரிந்தான்
பொலன்கொள்மே னியனை ஐயமாய் நினைத்தோர்
பொள்ளென நாசமுற் றிடுவார்
கலங்குதல் இன்றிப் பணிபவர் இன்பக்
கடல்படிந் தென்றும்வாழ்ந் திடுவார். (15)

2565. **அ**ருந்தவக் குழுக்காள்! **சிவரக சியகாண்
டத்துப தேசகாண்** டத்தைத்
திருந்தவே கேட்க நீவிர்பெற் றிடுஞ்சீர்
செகத்திலார் பெற்றவர் என்றே
இருந்தநற் சூதன் மொழிந்திடக் கேட்டே

---

**2563.** அற்றவக் கருணை—அல்—தவ—அஞ்ஞான இருள்கெட; எல்—ஒளி.

இருடிகள் இறைஞ்சியெங் கட்கு
மருந்துறழ் குருவும் பிதாவும்நீ யென்று
வணங்கியே பின்னரும் இசைப்பார். (16)

2566. உலகினிற் சரீரம் அனைபிதா ஆனோர்
உதவியே அளிப்பரெஞ் ஞான்றும்
இலகிய ஞானம் ஞேயம்நீர் அளிக்க
யாமெலாம் பரகதி அடைந்தேம்
நலமுறு மாறு விதம்பிதா என்பர்
ஞானநல் கியபிதா அதிகன்
புலருவிஞ் ஞானக் குருபர நிருப!
புவியில்நேர் இன்றுமக் கின்றே. (17)

2567. சூதமா முனிவன்! சீர்த்திகள் எல்லாஞ்
சொற்றுடல் பொருளுயிர் மூன்றும்
ஏதமில் குருவுக் களிப்பர்மா ணாக்கர்
என்றுவே தாதிகள் புகலும்
ஆதலால் மூன்றும் உமக்களித் தனமென்
றவனடிக் கமலங்கள் பணிந்தே
தீதகல் முனிவர் குழாமெலாம் அவன்தோத்
திரம்பல புகன்றனர் அம்மா! (18)

2568. அப்படித் துதிக்கும் முனிவரை நோக்கி
அகமகிழ்ந் தருளினற் சூதன்
ஒப்பரு முனிகாள்! எவர்களும் இன்பம்
உதவியாட் கொளும்பரன் எங்கோன்
செப்பரும் உமையோர் பாகனைத் துதிமின்!
சீர்த்திகள் எடுத்தெனப் புகலத்
தப்பில்மா தவர்கள் யாவருந் துதிகள்
சாற்றிடத் தொடங்கல்மே யினரால். (19)

2569. மெய்யெலாம் புளகம் போர்த்திடக் கமல
விழிகளா னந்தநீர் சொரியச்
செய்யவாய் குழறிச் சங்கரா! பரனே!
தேவர்கள் தேவனே! அரனே!

---

2566. "பெற்றெடுத்தவன் முதற் பிதா—சாந்த சற்குரு ஒரு பிதா—அவமறுத் தாள்கின்ற அவர் ஒரு பிதா"—குமரேச சதகம். 'ஞான நல்கிய பிதா அதிகன்' — "ஈன்றவர் தொல்கதி யளிப்பரோநற்சான்றெனப் படுஞானமுற்றளித்தனை"—கோனேரி. உபதேச—சிவகாட்சி—3.

2568. எவர்களும்—நீங்கள் எல்லீரும்.

மையுலாம் மிடற்றாய் ! எமக்கருள் என்றே
மாதவர் துதிகள்சொற் றுருக
ஐயனம் பிகை,ஐங் கரன்குக னுடனே
அவர்கள்முன் உற்றது புகல்வாம் (20)

**இறைவர் முனிவர்களுக்குக்காட்சி தருதல்**

2570. சுரர்கள்பூ மாரி பொழிந்திட ஐந்தென்
துந்துமி எங்கணும் முழங்கப்
பொருவிலா நீல விலங்கல்போல் உருவும்
பொறிகள்கான் றிடுசுழல் விழியும்
ஒருவரும் நிகரொவ் வாக்கரு மகடும்
ஒளிர்குறுந் தாள்களும் உடைய
வெருவகல் பூத வெள்ளங்கள் திரண்டே
மேதினி செவிடுற ஆர்ப்ப, (21)

2571. மன்னிய வசுக்கள் சாமரை இரட்ட
வானவர் கணிகையர் ஆடப்
பன்னுகின் னரர்கிம் புருடர்கந் திருவர்
பகருநா ரதரிசை பாடத்
தன்னிகர் முகுந்தன் கரஞ்சிரங் கொண்டே
தனதுமூர்த் திகளுடன் இறைஞ்சி
அன்னனல் வேதத் துடனின்று துதிக்க
அன்பர்கள் குழாம்பணிந் துருக, (22)

2572. இலகுபா ரதியிந் திரைசசி இரதி
இமையவர் மாதர் சூழ்ந் திசைக்க
அலகில்மத் தளம்பே ரிகைசங்கு முருடோ
டணிகொள்தா ளங்குழல் மொந்தை
நலமுறு கோடு குடமுழா ஆதி
நவிலரும் இயங்கள்பா ரிடங்கள்
நிலமிசை ஆட லுடனின்று முழக்க
நிகரிலா நந்திமுன் போத, (23)

---

2570. ஐந்தென் துந்துபி—"ஐந்து துந்துபியு மாசி லருமறை ஒலியும்" பஞ்ச துந்துமிகள்—தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக் கருவி, கண்டக் கருவி—(கோயிற்புராணம்—நடராச—8—உரை)

2571. அன்னன்—பிரமன் (அன்னவாகனன்).

2573. நன்னிகர் வெள்ளி விலங்கல்மேற் செம்பொற்
சயிலமொன் றுற்றது கடுப்பப்
பன்னரும் வெள்ளை இடபமூர்ந் திடத்திற்
பச்சைமின் உற்றுளங் களிக்க
முன்னவ னும்ஐங் கரன்அருட் குமரன்
மூடிகம் மயில்மிசை இலங்க
என்னையா ளுடையான் நைமிசா ரணிய
இருடிகள் முன்னர்வந் துற்றான். (24)

2574. கண்டனர் முனிவர் எவருமே உள்ளம்
களித்தனர் கைகள்சென் னியின்மேற்
கொண்டனர் குப்புற் றுடினர் சிலர்முன்
கொக்கரித் தோடினர் சிலர்கள்
மண்டல மாழ்ந்து புரண்டனர் சிலர்வாய்
வந்தன வந்தன துதித்தே
தெண்டுகுண் டிகைகள் எறிந்தெறிந் தேற்றுத்
திரிந்தனர் சிலரவண் அம்மா! (25)

2575. இப்படி முனிவர் ஒன்றையும் உணரா
தின்பவெள் ளத்தினில் அமிழ்ந்த
ஒப்பிலா முதல்வன் அவர்களுக் கருள
ஓய்யெனத் தனதுளத் துன்ன
எப்புவ னமுந்தன் ஒளியினால் விளங்கும்
எழில்மணி மடங்கலா சனமுன்
தப்பில வனத்தின் நாப்பணுற் றதுஎண்
தவிரினர் கதிர்விரித் துறல்போல். (26)

2576. சொற்றவவ் வரியா சனத்தின்மேல் எங்கோன்
துங்கவெள் விடையினின் றிழிந்தே
கற்றையங் கூந்தல் மலைமக ளிடத்திற்
களித்துற முன்னிரு பாலும்
எற்றரும் புதல்வர் மேவவீற் றிருந்தான்
இருடிகள் கணமெலாங் குழுமி
மற்றவச் செயல்கண் டானந்தம் உற்றெம்
வரதனைப் பூசிக்கல் உற்றார். (27)

2574. தெண்டு—தண்டு.

2575. எண்தவிர் இனர்—கணக்கற்ற சூரியர்கள்.

2577. இயம்புமப் பொழுதில் வசிட்டன்முன் பிரம
இருடியர் நாரதர் முன்னுய்ப்
பயன்பெறு தேவ இருடிக ளுடனே
பண்புறு காசிபர் இன்ப
நயங்கொள்கண் ணுவர்கௌ சிகர்பரா சரர்சீர்
நன்றுமா ரீச்சரத் திரிமா
வயம்பெறு பிருகு நல்லறம் என்றும்
வளர்குச்சர் திரச்சுவ ருடனே. (28)

2578. மன்னிய பவுரு குற்சர்மெய் ஞானம்
வளம்புரி சிட்டமா தவரோர்
பின்னகுட் டவர்நித் தியபரா னந்தர்
[பேசு]சீ ரெய்திய வரக்கர்
நன்னய நாகர் முற்கலர் வரிச்சிரவர்
நல்லிவ னீசர்யோ கியர்கள்
பன்னரு மாசி நாதர்சீ கேதர்
பகரகட் சிவரன வுசர்முன். (29)

2579. நலகவ ருடனே நாடருஞ் சீராய்
நன்குறு முனிவரர் குழுக்கள்
புலமுறு மங்கி ராசசங் காலி
பொற்புறு கிருதுநற் றக்கர்
இலகிமெய்த் தேவ லாசுகர் கண்டர்
எழிலுறு மரீசிரோ மசரு
மலகலு முயர்தாற் பியரிவா மனனு
மாதவர் குழுக்களெண் ணிலர்கள் ; (30)

2580. ஆதர வுடனே நைமிசா ரணியத்
தனைவரும் உற்றனர் அப்போ(து)
ஏதமில் சனலோ கத்தில்வீற் றிருக்கும்
இருடிகள் சிலரவண் உற்றார்
மேதகு சவுன காதியர் முனிகள்
மேவிய செயல்கண்டு வியந்தே
ஓதினர் இன்சொல் உருவமும் உளமும்
ஒன்றுறத் தழீஇயினர் அம்மா. (31)

2577. குச்சர்—குச்சகர்

2577—79. ஓலையில் உள்ளவாறே அச்சிடப்பட்டுள்ளது.

2581. மற்றஅந் தணர்கள் நைமிசா ரணிய
மாதவர் குழுக்களை நோக்கிச்
சொற்றிடும் வானப் பிரத்தராய் மலரோன்
சொற்படி யிவ்வனத் துற்றே
நற்றவம் மகங்கள் இழைத்துயர் சூத
நன்முனி வரனருள் புரிய
வெற்றிவேற் குமரன் மான்மிய அமுதம்
விரும்பியே செவிகளாற் பருகி. (32)

2582. எழிலுப தேச காண்ட மான் மியமாம்
இன்பசா கரத்திடைத் துளைந்தீர்.
மொழியிலுங் களுக்கு நிகர்புகன் றிடிலிம்
மூவுல கத்தினில் உண்டோ
வழுவறு முனிவீர்! இந்தநன் மையினுல்
வந்தனன் புராரியிவ் வனத்தில்
தொழுதுயர்ந் துய்ந்தீர் யாங்களும் பணிந்தே
துயர்க்கடல் கடந்தனம் என்றூர். (33)

2583. என்றள வளவி யாவருங் குழுமி
எம்பிரான் திருமுன்வந் துற்றே
நின்றலர் மழைகள் பொழிந்துளம் உருகி
நித்தனுக் கருச்சனை யருநூல்
அன்றியம் பியபோற் சோடச உபசா
ரத்துடன் ஆற்றியே களித்து
வன்றிறல் முனிவர் யாவரும் அனந்த
வந்தனை யுடன்துதி புகல்வார். (34)

2584. தேவர்கள் தேவ! அருட்பரா னந்த!
செகவுயிர் கட்கெலாங் குருவே!
யாவரும் பரவும் சம்புவே! அருள்கூர்
அத்தநா ரீச!கல் யாண!
தாவில்பே ரழக! ஈச!சர் வக்ஞ!
சத்திஞ ரனல்வடி தவமே!
மேவரு மவற்கு மனுதித! போற்றி
வித்தியா ரூபனே! போற்றி (35)

2585. சொல்லரும் வித்தை எலாந்தரும் அமலா!
துயர்ப்பிர பஞ்சநீக் கிறைவ!
வெல்லரும் பிலஞ்சேர் கருத்துமே லான
வியனறி வுடையநற் பரம!
வல்லமங் கலையாந் தேவிநா யக!இவ்
வையக முழுவதும் பரிக்குஞ்
செல்வ நின் சரணம் போற்றி!நல் லருள்கூர்
சிற்பரா னந்தனே போற்றி!. (36)

2586. சங்கரா போற்றி! பராபரா போற்றி!
சயிலமின் பாகனே போற்றி!
எங்கணு யகனே போற்றி!மாக் கருணை
யிறைவனே அமலனே போற்றி!
துங்கவெள் விடையூர் திகம்பரா போற்றி!
தொண்டர்கட் கெளியனே போற்றி!
பங்கயன் முராரிக் கரியனே போற்றி!
பகீரதி சடிலனே போற்றி! (37)

2587. என்றுமுன் துதித்தே பின்னரும் வணங்கும்
இருடிகள் கணங்களை நோக்கி
மன்றலங் குழலாள் பங்கனுள் மகிழ்ந்தே
மன்னுமா தவர்களே! நீங்கள்
இன்றெமைத் துதித்த துதியினுல் இங்ஙன்
இருந்துப தேசகாண் டத்தை
நன்றுறக் கேட்ட படியினுல் வெளியாய்
நாமிவண் உற்றுளம் மகிழ்ந்தேம், (38)

2588. ஆதலால் முனிகாள்! உம் விருப் பிசைமின்
அருளுவம் எனப்பரன் மொழியக்
காதலோ டிறைஞ்சி யிருடிகள் எல்லாங்
களித்துளங் கருணைவா ரிதியே!
நாதனே! நின்தாட் கன்பெம துளத்தில்
நாடொறும் வளர்ந்துற வேண்டும்
தீதகற் றிடுமிவ் வுபதேச காண்டச்
சிறப்பினைக் கேட்டபேர்க் கெல்லாம், (39)

2589. மன்னுநற் புதல்வர் தனம்வெற்றி வித்தை
மனத்திலெண் ணியவெலாம் அடைந்தே
அன்னவர் புவிமேல் வாழ்ந்தின்பம் அருந்தி
அமல!நின் தாள்பெற வேண்டும்

இன்னவை யெங்கட் கருளென அளித்தே
எந்தைஅங் ஙனங்கரந் தேகித்
தன்னிகர் இல்லா வெள்ளியங் கிரியிற்
சார்ந்துவீற் றிருந்தனன் அம்மா. (40)

2590. எம்பிரான் கரந்த பின்னர்மா தவர்கள்
இரசதக் கிரியினை நோக்கிச்
செம்பொருள் உணர்ந்த சூதரோ டிறைஞ்சித்
திகழின்ப வாரிதி துளைந்தே
அம்புயன் மொழியால் இவ்வனத் துற்றே
அறம்பல புரிந்தவப் பயனுல்
இம்பர்நீ ருதவும் மொழியினுல் உய்ந்தோம்
எனுமுநி வரர்களைச் சூதன், (41)

2591. பேரருள் நோக்கால் நோக்கிமா தவர்காள்!
பெரியர்நீர் உமையடைந் தின்பச்
சீருற நாமும் உய்ந்தனம் என்று
செப்பியே உளமகிழ்ந் தருளால்
கூருறு வேற்கைக் குமரன்மான் மியத்தைக்
கூறரும் அன்புடன் கேட்டீர்
பாரிலுங் கட்கு பதேசகாண் டமும்பின்
பகர்ந்தனம் முழுதுமென் றிசைத்தே, (42)

2592. பின்னுமொன் றுரைப்பான் மாதவ முநிகாள்!
பேசரும் இந்தமான் மியத்தைப்
பன்னுமவ் விடத்தில் அரன்சுதர் இமையப்
பாவையோ டுற்றுளம் மகிழ்வன்
என்னிலிப் புராணம் முழுவதுங் கேட்க
இச்சையுற் றவர்களன் புடனே
தன்னிக ரிலாமண் டபமலங் கரித்துத்
தாவிலம் மண்டப நாப்பண், (43)

2593. ஏருறு பீடம் ஒன்றமைத் ததன்மேல்
எழில்திரு முறையினை இருத்திச்
சீருறும் மருவேர் கொழுந்தல ராலத்
திருமுறை தனையருச் சித்தே
வாரமாய்த் தூப தீபமுங் கொடுத்து
மாநிவே தனங்களும் நல்கிப்
பாரின்மேல் வீழ்ந்து பலமுறை பணிந்து
பரிவுடன் நன்முகூர்த் தத்தில், (44)

2594. இலகிய நீறு கண்டிகை தரித்தே
ஈசனே பரமெனத் தேர்ந்த
நலமுறுங் குடும்பி யாயுறும் வேத
நாயக னுனவிப் பிரனேம்
புலன்களை வென்று படித்திட அவன்தாள்
போற்றியிந் தியங்களும் அடக்கிச்
சலமுதற் குணங்கள் ஆறுநீத் திருந்தா
தரவுடன் கேட்டுளம் மகிழ்வார். (45)

2595. இப்படி வடநூல் மான்மியங் கேட்டே
இயல்புறு சைவநா யகர்பால்
தப்பறத் தமிழ்நூல் மான்மியம் முழுதும்
தவறறக் கேட்டுளம் மகிழ்ந்து
செப்பிய போர்க்குத் தனங்கள்பட் டாடை
செம்பொனா பரணங்கள் இலங்கள்
எப்பொருள் களுமீந் திறைஞ்சுவோர் புவியில்
எண்வகைச் செல்வமும் அடைந்தே, (46)

2596. இரதிநேர் மின்னார் இனியபுத் திரர்கள்
எண்ணிலாச் சுற்றமோ டிருந்தே
திரமுற நெடுநாள் இன்பமே அருந்தித்
தேசவே வந்தருள் அமலன்
பொருவில்தாள் நீழல் அடைந்துபே ரின்பம்
புசித்தென்றுந் திகழ்வர்மா தவர்காள்!
அரசர்கள் கேட்கிற் படித்தவர் கமல
அடிகளன் புடன்பணிந் தெழுந்தே, (47)

2597. வேண்டிய கனந்தேர் மதகரி பரிகள்
மிக்கநற் கிராமங்கள் பசுக்கள்
மாண்டகு கிரகங் குண் டலங் கடகம்
மன்னுதோள் வளைமுதற் பணிகள்
நீண்டபட் டுடைபொன் னுடைகள் அளித்தே
நேயமாய் அவருடன் வாழ்வார்
காண்டஅந் தத்திற் சிவநேசர் உள்ளம்
களித்தருந் திடஅன்னம் அளிப்பார். (48)

2598. மேதகு குமரன் மான்மியம் உடனே
விளங்குப தேசகாண் டத்தை
ஆதர வுடனே நிரந்தரங் கேட்போர்
அன்றியோர் பானுதி யாகம்
ஓதுமோர் சுலோகம் ஆயினுங் கேட்போர்
உரைப்பவர் பரிமகம் அநேகம்
வேதமா றங்கத் துடன்மொழி பலத்தில்
மிகு கோடி பலமடைந் திடுவார். (49)

---

2596. தேசவே—தேசுடனே—ஒளியுடன்.

2599. எந்தைவேற் குமரன் மான்மியங் கேட்போர்
இசைந்திடுங் காண்டங்கள் முடிவில்
இந்திரன் தனையை குறவர்தம் மடமான்
இருங்கலி யாணங்கள் முடிவில்
அந்தநற் கந்தர் பட்டாபி டேகத்
தாயிரத்தெட்டுநூற் றெட்டு
நந்தலி லன்பா னிருபனுல் என்றே
நவிலுமந் தணர்க்கனம் அளிப்பார். (50)

2600. செப்புமப் படியே உபதேச காண்டச்
சிறப்பினைக் கேட்டிடும் முடிவில்
அப்படி மறையோர் அரனடி யார்கட்
கனமளித் துளமகிழ்ந் திடுவார்
இப்படிப் படிப்போர் கேட்பவர் எல்லாம்
எழிற்குகன் பதம்பெறு வார்கள்
ஒப்பரு முநிகாள்! என்றருள் சூதன்
உரைத்திடக் கேட்டுளங் களித்தே, (51)

2601. இன்பமுற் றேரைம் புலன்களை வென்ற
இணையிலாச் சூதமா முநியை
அன்புடன் வணங்கி அனுமதி பெற்றே
அவன்தனை விடைகொண்டு சென்றே
பொன்புரை சடில மாதவ ரெல்லாம்
புகுந்துதம் பன்னசா லைகளில்
நன்பரன் பொற்றாள் உளத்தில்வைத் திருந்தெந்
நாளும்வாழ்ந் துயர்கதி அடைந்தார். (52)

வாழ்த்து.

2602. வாழ்கவேற் குமரன் நளினமென் மலர்த்தாள்!
வையகம் முழுவதும் வாழ்க!
வாழ்கமா மறையோர் மன்னவன் செங்கோல்!
வாழ்கமெய்த் தொண்டர்கள் எல்லாம்!
வாழ்கவெண் ணீறைந் தெழுத்தும்எஞ் ஞான்றும்!
வாழ்க நற் கண்டிகைமாலை!
வாழ்க இந் நனஞ்சொல் லுபதேச காண்ட
மான்மியம் புவிவலம் வந்தே! (53)

**உபதேச காண்டம் முற்றும்.**

திருச்சிற்றம்பலம்.

# அநுபந்தம்
## உபதேச காண்ட சிற்றாராய்ச்சி

[எண்கள்—பாடலின் எண்களைக் குறிக்கின்றன]

### 1. நூலிற் சொல்லப் பட்ட கதைகள் ; பிற வரலாறுகள்.

(அத்தியாயம் 3—8)

I. சூரன் வரலாறு, சிங்கமுகன் வரலாறு, தாரகன் வரலாறு 65—130
அஜமுகி வரலாறு 131—191
மாயை வரலாறு 192—199

**II. விபூதிமான்மியக் கதைகள்**

(அத்தியாயம் 9—12)

1 அரக்கன் வீடுபெற்றது 231
2 அந்தணன் வீடுபெற்றது 232
3 புயவலன் கதை 234—331
4 வருணன் அரக்கனானது 284—330
5 சுதன்மன், விசுத்தன் கதை 288—318

**III உருத்திராக்க மான்மியக் கதைகள்**

(அத்தியாயம் 13—19)

1 குரங்கு, கோழி—வீடு பெற்றது 346
2 சவுமியன் (அரசன்) கண்டி பூண்டது 353
3 சகலகலை அறிந்தாள் கதை (கணவன் மனைவியாய், மனைவி கணவனானதும், சித்திரச் சுவரில் இருந்த பெருமாள் எழுந்து பேசியதும்) 364
4 சுப்பிரதீபர் கதை:—(பூனைக்குட்டி கற்பக விருஷம் கொண்டு வந்தது) 396—475
5 சாமித்திரன் கதை:—(பிணத்தின்மேற் கண்டி பட்டதாற் பேறு) 428
6 சாந்திகன் கதை:—(கண்டியைக்கண்டு காளி அருளியது) 452
7 சிந்துசேனன் கதை:—(விபூதி, கண்டி இரண்டும் அவசியமே) 483—523

**IV சிவநாம (பஞ்சாச்சர) மான்மியக் கதைகள்**

(அத்தியாயம் 20—26)

1 கலாவதி கதை (கணவனை பஞ்சாக்ஷரம் ஜெபிக்கச் செய்தது) 538—560
2 தருமன் கதை:—(பஞ்சாக்ஷத்தால் துறவியினும் மேம்பட்டது) 561—585
3 சூரியசன்மா கதை:-(கல் இடபம் புல் உண்டது) 586—623
4 வீரியவான் கதை:-(சிவம் என்றதால் பேறு) 627-653 671
5 வேடன் கதை (ஹரசங்கர என்றதால் பேறு) 638—646
6 கவுசிகன் கதை:-(திரியம்பக நாமத்தாற் பேறு) 655
7 காமதை, துர்ப்புத்தி கதை:—(சங்கர நாமத்தாற் பேறு) 676—698
8 சாந்தீபனி முநிவரின் மகன் கதை:—(முதலை உண்ட பாலனை உயிர்ப்பித்தது) 706—710
9 புட்கரன் கதை:-(அரி நாமம் விட்டுச் சிவநாமம் ஜெபித்தது) 711—714
10 வியாக்கிர பாதன் கதை;-(அடியார் நாமத்தாற் பேறு) 719
11 சதாநந்தர் கதை:-(அரகர நாம ஒலியால் நரகம் காலியானது) 730

**V சிவவிரதங்கள்**

(அத்தியாயம் 27—38)

i **சிவவிரதம்** (8) 742
1 சோமவாரவிரதம் 745
2 திருவாதிரைவிரதம் 754
3 உமாமகேசுரவிரதம் 766
4 சிவராத்திரி விரதம் 790
,, நான்குவகை 791
5 கேதாரவிரதம் 815
6 கலியாணவிரதம் 822
7 சூலவிரதம் 836
8 இடபவிரதம் 843
ii **பார்வதி விரதம்** (3) 742
1. (கௌரி) வெள்ளி விரதம்: 859
2. கௌரி விரதம் 873

3. நவமி விரதம் 876
iii **விநாயக விரதம்** (3) 743
1, சித்திரை வெள்ளி: 880
2. விநாயக சதுர்த்தி 885
திருமால் (பார்வதி யிட்ட சாபம் தீர்ந்தது) 886
சந்திரன் (சாபம் உற்றது) 887
கிருஷ்ணபிரான் (பழிதீர்ந்தது) 888
3. (மார்கழி) சஷ்டி விரதம் 890
iv. **சுப்பிரமணிய விரதம்** (3) 743
1. சுக்கிரவார விரதம்,
2. கார்த்திகை விரதம் } 893–94
3. சஷ்டி விரதம்
v. **வயிரவர் விரதம்** (3) 744
1. தை ஆதிவாரவிரதம்
2, சித்திரை குருவார விரதம் } 744
3. சித்திரை பரணிவிரதம்
vi. **வீரபத்திரர் விரதம்** (1) 744
செவ்வாய்க்கிழமை 899

VI **சிவதரும மான்மியக் கதைகள்.**
(அத்தியாயம் 39—47)

1 நான்கு அரச குமாரர்களின் கதை:—(கோயிலிற் தொண்டிஞற்பேறு) 934. 999
2 சாதாரணன் கதை:-(கோயிலிற் புல் செடி நீக்கப் பேறு) 961
3 முற்கலன் கதை:—(கோயிற் சுவர்ப் புல்லை உண்ண எருமை உருவம் நீங்கியது) 980—985
4 சற்புத்தி மன்னன் மகள் கதை:—(சற்புத்தி மகளுக்கு எழு முனிவர் உரைத்த கதைகள்:—
i சுந்தரிகதை:—கொலைக்கல் கோயிலுக்கு ஆனதாற் பேறு ,018
ii கோரன் கதை:-கொலைத் தடி கோயிலுக்கு ஆனதாற் பேறு 1041
iii விடுதன்கதை:-கோயிலுக் குச் செங்கல் எடுத்ததாற் பேறு 1052
(யானை அவனை வணங்கியது)
iv போகாங்கன் கதை:—மணலால் லிங்கம் அமைத்ததாற் பேறு 1058
v துராசாரன், துர்க்குணன் கதை:—கோயிலுக்குச் சுண்ணும்பு கிடைத்ததாற் பேறு 1064
vi சதாவிந்தன் கதை:-மாடு கோயிலுக்குக் கல்கொணர்ந்ததாற் பேறு 1073
vii சீதரன் கதை:—சிறுபருவத்தில் (லிங்கம் அமைத்துப் பூசித்ததாற் பேறு) 1083
5 சோமதன் கதை:—(வாழைக்குலை கோயிலுக்கு உதவியதாற் பேறு) 1095
6 கார்க்கவன், வயிணவன் கதை :—(நெய்விளக்கு ஏற்றிய பேறு) 1113
7 கண்டகன் கதை:—குளத்திற் சேறு எடுத்த பேறு 1130
8 சோபனன் கதை :—(பூஜைக்கு மலர் அளித்த பேறு 1146
9 நூற்றுவர் கதி பெற்ற கதை: — (தலங்களில் இறந்ததாற் பேறு) 1162
10 சித்திரபானு கதை :—(பசு உதவின பேறு) முதலை வணங்கினது 1171
11 கபிலன் கதை :—பூஜைக்குப் பால் அளித்த பேறு 1190
12 விகர்த்தனன்—பார்த்திபன் கதை :—ஓலை சிவ புராணம் எழுத உதவின பேறு 1213
13 அதிகண்டன் கதை:—ருத்ராக்ஷம் அளித்ததாற் பேறு 1232

VII **சிவபுராண மான்மியக் கதை**
(அத்தியாயம் 48.)
எண்மர் புராணங் கேட்டுப் பேறு பெற்றது 1250

VIII **சிவத்துரோகநரகவேதனை கதை**
(அத்தியாயம் 49—60.)
1 சூரசித்து, வீரசித்து, கோரசித்து கதை;—(சிவன் பொருளை அபகரித்த துரோகம்) 1329
2 விதாதா, அசிதன் கதை:-(வாழைக்குலை அந்தணர் உணவுக்காக கவர்ந்த துரோகம்) 1374

3 சவிதா கதை ;—(சிவ நிலம் கவர்ந்த துரோகம்) 1416
4 விப்ரமணி கதை :—(கோயிற் பசுவைக் கவர்ந்த துரோகம்) 1462
5 சுத்தன் கதை:-(கோயிற் பணிப் பெண்ணைக் கவர்ந்த துரோகம்) 1486
6 விச்சுவ சேனன்—தக்கன் கதை :— (எண்ணெய் எலுமிச்சம்பழம் கவர்ந்த துரோகம்) 1526
7 கிராதன் கதை:—(பொற் பூணூல் கவர்ந்த துரோகம்) 1541
8 வசு கதை :—(காசு கவர்ந்த துரோகம்) 1549
9 வச்சிரபாலன் கதை :—(செங்கல் அபகரித்த துரோகம்) 1561
10 விசயன் கதை :—(சிவனடியார் ஆடை கவர்ந்த துரோகம்) 1589
11 பாசுபத பாரதியார் கதை:—(சிவ குரவரைப் பழித்த துரோகம்) 1613
12 விராகன் — சுதந்திரன்— சுனந்தன் — சுகுந்தன் கதை :—(கோயில் முதலிய இடங்களில் அசுத்தம் செய்த துரோகம்) 1643
13 சோமசன்மா, சிவசன்மா கதை :—(விளக்கவிந்த துரோகம்) 1663
14 புண்ணிய சன்மா கதை:-(நகத்தில் நெய் ஒட்டிய துரோகம்) 1665
15 சுமதி கதை :—(இளநீர் வழுக்கை தின்ற துரோகம்) 1667
16 செட்டி கதை:-(கோயிற் கீரை தின்ற துரோகம) 1669
17 வச்சிர தந்தன் கதை :—(கோயில் நிந்தை பேசினவரின் அருகிருந்த துரோகம்) 1670
18 பாரதன் கதை:—(கோயிலில் தூங்கினவனைப் பார்த்த துரோகம்) 1671

## IX. சிவபூஜை மான்மியக் கதைகள்

(அத்தியாயம் 61—81.)

1 அரி, அயன் அகந்தை தீர்ந்தது 1736
2 திருமால் சிவனடி தேடியது 1742
3 திருமால் பிருகு முனிவரிடம் சாபம் பெற்றது 1745

**தசாவதாரம்**

4 மச்சாவதாரம்—சாத்தனார் அடக்கியது 1759
5 கூர்மாவதாரம் — விநாயகர் அடக்கியது 1770
6 வராகாவதாரம் —முருகர் அடக்கியது 1776
7 நரசிம்மாவதாரம் — வீரபத்திரர் அடக்கியது 1798
8 வாமனாவதாரம் — வயிரவர் அடக்கியது 1844
9 பரசுராமர் வரலாறு 1849
10 ராமாயணக் கதை 1858
11 பலராமர் வரலாறு 1866
12 கிருஷ்ணபிரான் வரலாறு 1867
13 ஹயக்ரிவர் வரலாறு 1869
14 திருமால்— உபேந்திரன்— இலக்குமி கண்ணுவரது சாபம் பெற்றது 1873
15 வள்ளியம்மை அவதாரம், திருமணம் 1883—1887
16 **திருமால் :—**
சுவனுடன் மாறுபட்டது 1889, 2337
அம்பும்-விடையுமானது 1901
நரகாசுரனை வதைத்தது 1903
மோகினியாய்ச் சாத்தனாரை யீன்றது 1912
பிரமனை ஈன்றது 1917
துருவாசரது சாபத்தைப் பெற்றது 1918
சக்கரம் பெற்றது 1925
மகப்பேறு அடைந்தது 1932
மாயவனானது 1936
மத்தள மாயன் ஆனது 1945
ததீசி முனிவரிடம் சாபம் பெற்றது 2356
17 **பிரமன் :—**
படைப்புச் சத்தி பெற்றது 1953
திலோத்தமையைக் காமுற்றது 1957

அசுரர்களைப் பெற்றது 1970
முருகவேளிடம் குட்டுப் பட்டது 1973
தாளம் பெற்றது (பிரம தாளம்) 1982
சாரதியானது 1987
சத்தி பெற்றது 1990
அன்னவாகனம், தாமரை பீடம் பெற்றது 1995
18 திரிபுரம் எரித்த வரலாறு 2027
19 அந்தகாசுரன் கதை 2168
20 பண்டாசுரன் கதை 2179
21 ரத்தாகரன், ரத்த பீசாக்கன், பஞ்சராவணர் கதை 2240
22 வியாசர் கை தம்பித்த கதை 2262
23 வசிட்டர் — காமதேனு, அருந்ததி பெற்றது 2291
24 பராசரர்—ராக்ஷத யாகம் செய்தது 2292
25 கவுசிகர் — திரிசங்குக்கு உதவியது 2297
26 உபமன்யு—பாற்கடல் பெற்றது 2299
27 மார்க்கண்டர்—(சிவபிரான் காலனை உதைத்தது) 2313
28 ததீசி—சுவனுடன் மாறுபட்டுத் திருமாலுடன் பொருதது 1889, 2337
29 வாணாசுரன் (சுதராட்டன்) கதை 2376
30 மன்மதன் (அசித்தன் கதை) 2439

**2. முக்கியமான விஷயங்கள்**

அட்ட ஐசுவரியம் 208, 847
அட்ட மங்கலம் 1138—40
அட்டாங்க யோகம் 2483
அட்டாங்க வணக்கம் 2306
அடியார் அகலக்ஷணம் 3, புறலக்ஷணம் 10 919, 921
அரசமரத்தின் விசேடம் 1183
அல்குலுக்கு உவமைப் பொருள்கள் 2440
ஆடகப்பூமி 46
ஆமை அகடு மதியின் நிறம் 1098, 1770
ஆறு குணங்கள் 2441
இசை வகை (5040) 895, 927, 1974
இந்திரசபை—சுதன்மை 1379
இந்திரன் மலைச்சிறகுகளை அரிந்தது 325
இயமனது நகரம்—சங்கிய மணி 1380, 1506; 1710
இராக்கத வதை யாகம் 2243, 2246, 2249, 2294
இலிங்க லக்ஷணம் 1686
இறந்த வீரர்கள் சூரியன் வாயிலாக வீரசுவர்க்கம் அடைதல் 230
உபசாரங்கள் 16 1083, 2223
உருத்திர பேதம் (18) 993
உருத்திரர் பதினொருவர்பெயர் 2022
உருத்திராக்ஷ வரலாறு 524
ஊர்த்துவ தாண்டவம் 2254
ஐந்து தருக்கள் 2186
கமுகம்பாளை—சாமரைக்கு உவமம் 1018
கயிலைச் சிகரங்கள் 19—45
கயிலைச்சிங்கார வர்ணனை 2185—98
கயிலைவரைக்கீழ் ஆடகப்பூமி 46
கல்வியிலார் முகம் சுடுகாடு 288
கலைமகள்—பூரவாகனம்; 7
கவி கமகன் வாக்கி வாதி 1616, 2126
கன்னிப்பேறு (முதலிற் கிடைத்த பொருள்) 1551
காந்தள்பூ கரத்துக்கு உவமை 184
,, நெருப்பு நிறம் 184
காமதேனு 2291
காமனது பரிவாரங்கள் 2469, 2470
காளியுடன் நடனம் 2254
கிரியை விவரம் 2481
கிருகர மருத்து (தசவாயுக்களுள் ஒன்று) 1889
கிளி வர்ணனை. பெயர்கள் 1176-79
குணங்கள் ஆறு 2441
குரங்கும் திங்களும் 1052
கேதாரத்தில் ஒரு பாதர்கள் 41
கொடை—முகிலோட்டிய தடக்கை 405, 449
கௌட நெறி 1562
கௌதம பசு நியாயம் 1651
சங்கியமணி 1380, 1506, 1710
சங்கீத வகை (5040); 895, 927, 1974
சரியையாதி விவரம் 2478
சாத்தனார் அவதாரம் 1912
சிங்காரவன வர்ணனை 2185—98
சிவபேதம் (10) 993
சிவமறையோர்—புட்பகிரிக் குலம் 976

சிவன் பெருமை: 2276, 2281
சிவாகமம் 993
சுக்கிரன்—வடுகரால் விழுங் கப்பட்டது 2174
சுதன்மை—இந்திரன் சபை 1379
சுவத்தி வாசகர் 2124
சூரபத்மா ஓங்கார (மயில்) வாகன வடிவு எடுத்தது 86
சௌரார்ச்சனை (சூரிய பூஜை) 1563
தலங்களும் தலவிசேடங் களும் 1166
திமிங்கில கிலம் 2193
திரிபுரத்தலைவர் மூவரின் பெருமை 2089
திரிபுரத்தை எரித்த வேகம் கண்ணுடியில் உழுந்துரு ளும் நேரம் 524, 2150
தீக்ஷை ஏழுவகை 1868
நண்டின்கால் குறட்டுக்கு உவமை 1021
நவநாத சித்தர் 1730
நீர்வாழும் ஜீவராசிகளின் பெயர் 2193, 94
பஞ்ச சத்தி 3
பஞ்ச சுத்தி 2044
பஞ்ச தருக்கள் 2186
பறவை வகைகள் 2190, 91
பன்றியின் பலபெயர் 1782—1794
பார்வதி புரந்தரமாமணிநிறம் 2306
பிரமதாளம் 1982
புட்பகிரிக்குல சிவமறையோர் 976
புராணங்கள் 18—விவரம் 14
புலமையாளர் நால்வகை, கவி, கமகன், வாக்கி, வாதி 1616, 2126
மகளிரால் மலரும் மரங்கள் 2188
மத்தள மாயோன் 1945
மரங்கள்:—மகளிரால் மலர்வன 2188, 89
மரவகைகள் 2185—89 2197—98
மருந்து நால்வகை 2021
மலர்வகைகள் 2189, 2192
மலைச்சிறகு அறுபட்டது 325
மன்மதன்—'காமன்' பார்க்க
மிருத்தியுஞ்சய மந்திரம் 1751, 2173
யானை—பிடிக்குப் பலாப்பழம் ஊட்டுதல் 323
யோகம்—விவரம் 2483
வடதாரு (கயிலையில்) 2203
வடுகர் சுக்கிரனை விழுங்கியது 2174
வர்ணனை; மயிலாட, வண்டு பாட, குரங்கு முழவு வாசிக்க, மந்தி காண 1042
வள்ளைக்கவி 1562
வாகனங்கள் (அவ்வத் தேவர்களது) 73—2143
வீரபத்திரர் அசுரரால் இறந்த தேவர்களை எழுப்பினது 229
வீரர்கள் இறந்து சூரியன் வாயிலாகச் சுவர்க்கம் 230
வேங்கை—கனகம் வழங்குவது 198
"மதியகட்டை உரிஞ்சுவது 198
வைதர்ப்ப நெறி 1562
ஸ்ரீசயிலம்—தூரத்தே பார்த் தாலே முத்தி 1166
"மலையில் நின்று விழுந்தோர் எண்ணிய எண்ணம் கை கூடுதல்* 193—194


### 3. அரும்பதங்களுட் சில


அந்தரி யாகம்—மானசபூஜை 2482
அந்திரன்—சிவன் 717
அந்தில்—அசைச்சொல் 965
அபூபம்—அப்பம் 768
அமை—அமாவாசை 792
ஆச்சியம்—நெய் 1387
ஆமில்சாகம்—புளிப்புக்கீரை 1669
இரலை—அசுவினி 2024
இரலை—ஊதுகொம்பு 2318
இருளி—பன்றி 1789
இறும்பு—மலை 195
இறை—விடை 2069
உடுஉறைகள்—உடுப்பனவும் உறையுளும் 1407
உபாயனம்—காணிக்கை 1490
எறும்பி—எறும்பு 2510
எறுழி—பன்றி 1788
ஓங்காரம்—மயில் 86
கண்டு—(கண்டூயம்) தினவு 2406, 2413
கணம்—தண்டுலபிச்சை 1083
கயில்—பிடர் 2320
கலிங்கம்—வானம்பாடி 2191
கலுழ்ச்சி—மகிழ்ச்சி 109
களிறு—பன்றி 1790
கறையடி—யானை 2273
கன்று—கைவளை 953
கிடி—பன்றி 1791


[*உம்பர் ஏறி வீழ்ந்தோர் முன்னம் எண் ணிய தெண்ணியாங்கே, மாறிய பிறப் பினல்கு மலையது காண்மின்" திருவிளை. அருச்சனை.

கிரி—புன்றி 1783
கிரீசன்—சிவன் 2153
குக்கில்—செம்போத்து 2191
குருகு—வளையல் 67
கோசஇல்—பொக்கிஷசாலை 1349
கோடரம்—சோலை 1344
கோரம்—விரைவு 1070
சக்கரம்—கடல் 1111
சரணுயுதம்—கோழி 2191
சரமம்—முடிவு 2001
சரிதை—வழி 1069
சிக்கம்—உறி 2412
சுங்கவன்—சுக்கிரன் 743
சூர்—தெய்வம் 1476
சைவன்—சிவன் 1582
சோகம்—தொடை 658
தண்டை—வால் 1174
தொண்டு மணி—நவமணி 2300
தொறில்—விரைவு 1050
நவிரி—ஊதுகொம்பு 2141
நொறில்—விரைவு 1498
பகம்—அல்குல், குணம் 2441
பங்கு—முடம் 1029
பப்பு—ஒப்பு 2166
பம்—நக்ஷத்திரம் 1721
பரிதானம்—லஞ்சம் 1383
பறளை—தட்டு 1902
பாட்டன்—பாட்டமதத்தவன் 2445
பாரம்—கரை 2368
பிபீலிகம்—எறும்பு 2373
பிருகு—சுக்கிரன் 2173
புத்தளி—தருப்பையாற் செய்த உரு 2217
புரந்தர மாமணி—இந்திர நீலமணி 2306
புல்—புலி 990
புல்லகண்டம்—கரும்பு 1977
புலை—பொய் 1894
பூரப்பரி பாமடந்தை—கலைமகள் 7
பொற்றை—மலை 685
போதா—பெருநாரை 2191
மருத்துவான்—இந்திரன் 2013
முற்றை—முன்பு 25
மை—எருமை 2320
மொய்—பகை 809
வரத்து—வரவு 288, 1335
வாதனை—வாசனை 2394
விடங்கம்—விட்டின் முகடு 597
விடங்கம்—உத்தரக் கட்டை 2412
விடபன்—விடை 31
விம்பம்—கொவ்வை 347, 389

**4. திருக்கோயிலும் இறைவனும்**

**இறைவர்**

அமலேசர் 1184
அமுதேசர் 975
ஆட்கேசர் 1106
கவுடேசர் 1566
கேதார நாதர் 309, 604
சவுரேசர் 1492
சோமேசர் 1546, 1550
பின்னிரக்கம் செயும் அண்ணல்-திருஆனைக்கா (இறைவர்) 1713
மச்சேச்சுரர் 1134
மாகாளேசர் (உச்சயினி) 475
முகுந்தேசர் 1149
முலையீசர் (தனேசுரர்) 2458
ராஜகிரீசர் 1335
வசந்தேசர் 1465
விச்சுவேச்சுரன்-விசுவநாதர் 1070, 2269

**திருக்கோயில்**

அரியீச்சுரம் 1418
சத்தீச்சுரம் 982
சவுரேச்சுரம் 1490
சித்தீ(தே)ச்சுரம் 1530, 1715
பிரமேச்சுரம் 968
வீமேச்சுரம் 1402

**5. தேசங்கள், நாடுகள்**

அங்கதேசம் 1374
ஆடவதேயம் 516
கச்சமாநாடு 1478
கந்துகத் தேயம் 676
கரணகுஞ்சரம் 1213
கலிங்கதேயம் 433, 1643
கவுடம் 1562
காச்சுமீர தேசம் 288, 351
காம்பீலி 1146
காம்புதேசம் 941
காம்போசம் 941
குஞ்சரம் 1462
குடகுதேயம் 1234
குண்டல தேசம் 1131
கேரளதேயம் 365, 455, 721
கொங்கண தேசம் 945
கோசலநாடு 934
கோமேதம் (தீவு) 131
கௌசிக தேயம் 586
கௌதம தேயம் 627
சம்பு தேசம் 1010
சவிரு தேயம் 483
சாகம் (தீவு) 93
சாலுவ தேசம் 1250

சிந்து தேயம் 396, 1589
சோதிடத் தேயம் 1163
சோனகம் 1613
சௌராட்டிய தேயம் 655, 1478
சௌராட்டிரம் 1171
திருமுனைப்பாடி நாடு 10
நிடத தேசம் 939
பப்பர தேயம் 2439
பாஞ்சால தேசம் 1018
பாண்டிய தேயம் 539
புட்கர தேயம் 353
மகத தேயம் 719
மகர தேயம் 452
மாகத தேசம் 1330, 2376
மாளவ தேசம் 1114
யவன தேசம் 1000
வங்க தேசம் 234, 1042, 1329
விதர்ப்ப தேசம் 1526
விந்திய தேயம் 484
வீரட்டம் 1095
வைதர்ப்ப தேசம் 236

6. **ஊர்கள், தலங்கள், இடங்கள்**

அசுவப் பிறங்கல் 1961
ஆதித்ய நகரம் 1001
இராமேசுரம் 1691
இராஜகிரிப்புரம் 1330
இருடிமாபுரம் 1275
உச்சயினி 475
ஏமகூடம் 1999
ஏமகூடாசலம் 1073
கடகநகர் 1644
கதலீபுரநகர் 677
கந்துக நகரம் 628
கபித்தநகர் 1132
கரவீரட்டம் 1214
கரிநகரம் 1021
கலிங்க நகரம் 1540
கலியாண நகரம் 1115
கவுடிப் புரம் 1562
கனக நகரம் 1172
காகள நகர் 484
காசி 535, 1166, 1691, 1696, 1724, 2269,
காஞ்சி 1166, 1691, 1702, 1720, 1752, 1767, 1928, 1980 2008, 2010
காமகண்டம் 1251
காம நகரம் 1218
காம புரம் 1549
காளத்தி 1166, 1691, 1714, 1921, 1972, 2006
கிசமாநகரம் 961
குசபுரம் 1180
குஞ்சரபுரம் 1052
குடந்தை 1167
குண்டின நகர் 252
குந்தாபுரம் 1147
கும்பகோணம் 1691, 1721, 1725
கூடல் (மதுரை பார்க்க) 559
கேதாரம் 309, 1166, 1691, 1708, 2009
கேதார வெற்பு 1918
கோகர்ணம் 1333, 1711
கோளபுட்பம் 1149
சக்ரபுரம் 1416
சந்திர நகரம் 1064
சலனதந்தபுரம் 1590
சாமந்த நகர் 1076
சாருவரி 1194
சிதம்பரம் 1197, 1691, 1723
"புண்டரீகபுரம் 2012
"பொன்னம்பலம் 11
சீகாழி 9, 1953
சீபருப்பதம் 88
சீமந்தநகர் 1096
சுவரம் 1646
சூரியபுரம் 483
செய்ப்பதி—வயலூர் பார்க்க,
சேது 1691, 1722
சேய்நலூர் 12
சோபன நகரம் 1019
சோலைமலை 616
சோனகம் 1614
சௌபாக்யம் 1235
சௌராட்டிர நகர் 1486
தார்க்கிகபுரம் 2445
திருக்காளத்தி—காளத்தி பார்க்க
திருச்சோற்றுத்துறை 1651
திருத்தணி 1887
திருநாவலூர் 10
திருப்பெருந்துறை 11
திருவண்ணுமலை 1166, 1691, 1707, 1744, 1993, 2013
திருவாஞ்சியம் 1932
திருவாமூர் 8
திருவாரூர் 1691, 1716, 2011 (பிறந்தால் முத்தி)
திருவாலங்காடு 1691, 1702, 1722, 1912
திருவானைக்கா 1712
திருவிடை மருதூர் 1167, 1691, 1722, 1741

திருவெண்காடு 1946
தில்லை—சிதம்பரம் பார்க்க
துவரைப்பட்டினம் 1907, 1911
நந்திநகர் 346
நாவலூர் 10
நீலவெற்பு 1972
பகவதீபுரம் 2140, 2441
பாடலி புத்திரம் 8
புகலூர் 8
புட்கர நகர் 1098
புட்பகிரி 976
புண்டரீகபுரம்—சிதம்பரம் பார்க்க
புத்தூர் 10
புயங்கபுரம் 1183
பூச்சக்கர நகர் 133, 396
மகர நகர் 452
மதுரை (கூடல்பார்க்க) 1691, 1722
மாயா நகரம் 1011
மாயாபுரி 1936
மாலிய நகர் 561
ராமேசுரம் 1691
ராஜகிரிப்புரம் 1330
வசுதை 1463
வயலூர் 6, 2331
வாணுபுரி 2415
வாதவூர் 11
விக்ரம நகர் 586
வியாக்கிரபுரம் 433
விருத்தாசலம் 1167, 1691, 2007
வெதிரிகாச்சிரமம் 1418
வேதநகர் 1998
வேதாரணியம் 1059, 1722
ஸ்ரீசயிலம் 1166, 1691, 1704, 1995


பெயர்கள்

7. கடவுளர், தேவர்கள், கணங்கள் முதலோர்


அசுவினி தேவர்கள் 1579
ஆதிசேடன் 1725
உபேந்திரன் 1844, 1873
காமன் 2467, 2469
சங்குகன்னர் (சிவகணத்தலைவர்) 1818
சயந்தன் 1208
சாத்தனர் 55, 100, 1761, 1916
சித்திரகுத்தன் 432, 1032, 1038, 1457, 1710
திரிசங்கு 2297
துருவன் 1724, 2024
தேவசித்தன் 419
நந்திகேசர் 440
நரசிம்ம மூர்த்தி 1789
பானுகம்பன் 842
பிரமன்—தலையற்றது 227
மன்மதன்—காமன் பார்க்க
மாகாளர் 54
வடுகர் 227, 2174 (சுக்கிரனை விழுங்கியது)
வயிரவர் 1844
வருணன் 505
வீரபத்திரர் 229, 1815, 1826
ஹயக்ரீவர் 1869


8. அரக்கர்—அசுரர்—அசுரர் குரு முதலானோர்.


அசுரேந்திரன்-மாயையின்தந்தை 89
அந்தகாசுரன் 2168
அனலாசுரன் 229
இந்திரன் (அசுரன்) 1592
இரணியன் (சூரன்மகன்) 89
இரணியன் (அசுரன்) 1801
இரணியாக்ஷன் 1776
இரத்தாசுரன் 2246
இரத்த பீஜாக்கன் 2246
இராவணன் 1860
கமலாக்கன் 2027, 2044
காலநேமி 840
சர்ப்பாசுரன் 229
சலந்தராசுரன் 1499, 1552, 1925
சுக்கிரன் (அசுரகுரு) 866. 2173
சோமகன் 1759
தாரகன் 2027, 2037
தாரகாக்கன் 2027, 2044
திரிபுராதிகள் 2027, 2088—89, 2156
நரகாசுரன் 1903
பஞ்சமேட்டிரன் 229
பஞ்சராவணர் 2247
பண்டாசுரன் 2218
மயன் (அசுர தச்சன்) 2036
மாவலி 1844
வலாசுரன் 2006
வாணசுரன் 2393
வித்தியுன்மாலி 2027, 2044


9. தேவதைகள், அரசகுமாரிகள், இருடிபத்தினியர், அரக்கியர் பிறமடந்தையர்.


அதிதி 196, 1844
அமுதவல்லி 832
அயிராணி 832
அருந்ததி 2291
அஜமுகி 87
இசைஞானியார் 10
இந்திராணி 2026

இரதி 2469
இரேணுகை 1849
இலக்குமி 1922, 1923
உசை 832, 875
ஊர்வசி 775
கமலாக்கி 388
கலாவதி 538
கலைமகள் 7
காமதை 678
சகலகலையறிந்தாள் 364
சத்தியவதி 1249, 2264, 2280
சர்வாங்கசுந்தரி 437
சற்புத்தி யரசன் மகள் 1012
சாம்பவதி 338
சானகி 833
சித்திரரேகை (அஜமுகி) 132
சித்திராங்கனை 364, 393
சீதை 774, 833, 1860
சுகுமாரி 93
சுகேசை 832
சுந்தரவல்லி 832
சுந்தரி 1020
சுபோதை 131
திரிபுரசுந்தரி 2230
திலகவதியார் 8
திலோத்தமை 891, 1968
தேவகி 1867
தேவசேனை 832
நந்தை 346
பத்திரகாளி 455, 1497
பாக்கியவதி 820
புண்ணியவதி 810
புற்கலிகை 833
பூரணை 833
மயிடாரி 100
மாயை 87
ரத்னவல்லி 1352
ரோகிணி 1866
லோபாமுத்திரை 832
வசுமதி 354
வள்ளியம்மை 832, 1883

10. முனிவர்கள்

அகத்தியர் 96, 286, 782, 955, 2331, 2336
அங்கிரா 1041
அத்திரி 883, 1162, 2370
ஆபத்தம்பர் 2370
இடபயோகி 97, 1204, 2370
உபமன்னியு 762, 1868, 2298-99, 2412
கண்ணுவர் 1112, 1874, 2370
கவுசிகர் 950, 1073, 2297
கவுதமர் 773, 1017, 1647 (கௌதம பசு நியாயம்), 1651, 2008, 2307
கற்கர் 557, 1048
காசிபர் 196, 980, 1058, 1844, 1857, 1874, 1923
சத்தி முனிவர் 790, 2292
சத்திய பூரண முனி 833
சதானந்தர் 730, 773, 1145, 1505, 1657, 2310,
சவுனகாதி முனிவர் 2240
சனகர் 2336
சாந்தீபனி முனிவர் 706
சுகர் 790, 2267
சௌபரி 833, 2370
ததீசி 311, 1890, 1927, 2337
திரணவிந்து 97, 770, 967, 2370
துருவாசர் 144. 998, 1918, 2007, 2370
நாரதர் 287, 896, 1038, 1376, 2025, 2064 (ஸ்படிக நிறம்) 2076
பதஞ்சலி 761
பரத்துவாசர் 1082
பராசரர் 790, 1249, 2292
பிருகு 569, 1740, 1867, 2370
புலத்தியர் 2370
மார்க்கண்டர் 2313
மிருகண்டு 2312
முஞ்சிகேசர் 760
வசிட்டர் 487, 790, 850, 962, 1051, 1859, 1863, 2025, 2291
வாமதேவர் 231, 1130, 2370
வியாக்ர பாதர் 762, 2298
வியாசர் 790, 842, 1249, 2262 (கை தம்பித்தது)
ஜமதக்கினி 1063
ஜைமினி 2370
எழுமுனிவர் 819, 1723, 2023 2241
பலமுனிவர்கள் 2370, 2577–79

11. நாயன்மார், பிறபெரியார்

அப்பூதி யடிகள் 8
எச்ச தத்தன் 12
கச்சியப்பர் 13
கண்ணப்பர் 1972
சடங்கவியார் 10
சடையனார் 10
சண்டேசுரர் 12
சிவபாத இதயர் 9
சுந்தரமூர்த்தி 10

திருஞான சம்பந்தர் 9
திருநாவுக்கரசர் 8
நரசிங்கமுனையர் 10
பிரகலாதன் 2025
புகழனார் 8
மாணிக்கவாசகர் 11

### 12. அரசர்கள்

அதிரதன் 364
அந்தகன் 678
அருச்சுனன் 2408
அரேசன் 935
அனகன் 364
இலக்குவன் 1863
கமலாக்கன் 365
கரன் 1591
கலாதரன் 1615
கார்த்தவீரியார்ச்சுனன் 840, 1853
கிராதன் 1541
கீலகன் 1331
கோரசித்து 1331
சக்ரவாகு 437
சகலகலாவல்லவன் 388
சத்துருக்கனன் 1863
சந்திராங்கன் 1541
சந்துட்டன் 854
சருவசித்து 1164
சற்புத்தி 1012
சனகன் 1860
சாதாரணன் 962
சாமந்த அரசன் 1427, 1553
சானந்தன் 942
சிங்காதிபன் 485
சித்திரசேனன் 1476
சிந்துசேனன் 484, 782
சின்மாங்கன் 775
சுமாலி 944
சுமித்திரன் 1439
சுவன் 1889, 2337
சூரசித்து 1331
சௌமியன் 354
தசரதர் 1859
தருமன் 1164
தருமபுத்திரர் 1454
தாசரதன் 539
துரியோதனாதியர் 1455
பரதன் 1863
பாண்டுமன்னர் 1454
பாவசித்து 1331
பிரபாகரன் 93
பிரமநாதன் 365
புயவலன் 234
மதிவிசாலன் 1471
மது 1592
மயேந்திரன் 940
மாசுத்தன் 1043
முசுகுந்தன் 896
மேகாங்கன் 841
வசு 1550
வஜ்ரதேகி 288
வஜ்ரவாகு 538
விகர்த்தன் 1209, 1215
விச்சுவசேனன் 850, 1527
விசாலாக்கன் 946
விசித்ர ரதன் 273
விசுத்தன் 1065
விதாதா 1375
விபுதன் 393
விராகன் 1645
வீமன் 1012
வீரசித்து 1331
ஜனகன் 774, 1860

### 13. அந்தணர் முதலானோர்

அகாரணன் 1258
அசித்தன் 2448
அசிதன் 1381
அதிகண்டன் 1236
அரிசேனன் 134
அனிருத்தன் 2414
அனுசாந்தன் 1258
உத்தானபாதன் 2024
எச்சேச்சுரன் 1542
ஏகாங்கன் 398
கண்டகன் 1133
கபில(ர்)ன் 1195, 1730
கலிசித்தன் 1276
கவுசிகன் 656
கனகன் 1062
கார்க்கவன் 1116
கார்க்கோடகன் 761
காரணன் 1281
காலனைக்கொன்றான் 725
கோரன் 1046
சக்கரன் 1365
சக்கிராங்கன் 2378
சங்கருடணன் 2446
சத்யமிருதுவு 562
சதாவிந்தன் 1074, 1077
சந்திரசேனன் 562
சந்திராதித்தன் 1053
சர்மன் 1258
சவிதா 1417
சாந்தன் 1258, 1417, 1441

சாந்தி(கன்) 452
சாமித்திரன் 434
சித்தன் 1258
சித்திரபானு 1181
சிதேந்திரியர் 1254
சிவசன்மன் 1663
சீதரன் 1087
சீமுகன் 1257
சுகுத்தன் 452
சுகுந்தன் 1645
சுசீலன் 236
சுத்தன் 1487
சுதந்திரன் 1645
சுதராட்டன் 2378
சுதரிசனன் 2369
சுதன்மன் 288, 351, 777, 840
சுதீர்த்தன் 1402
சுப்பிரதீபன் 397
சுபனன் 2442
சுபுத்தன் 562
சுமதி 1667
சுவீரன் 1471
சுனந்தன் 1645
சூரன் (படைத்தலைவன்மகன்) 1595
சூரியசன்மா 587
செட்டி ஒருவன் 1669
சோபனன் 1148
சோமசன்மன் 1663
சோமதன் 1097
சௌபரி 1567
தக்கன் 1531, 1579
தத்புருடர் 1564
தருமன் 562, 1595, 1598
தன்மகுத்தன் 149
தாரகன் 351, 1343
தீக்கணன் 1367
திவிதன் 656
துர்க்குணன் 1065
துர்ப்புத்தி 694
துராசாரன் 1065
நந்தகோபன் 1087
நிருத்தன் 1405
பத்திரன் 1635
பரசுராமர் 840, 1849
பரமசாந்தன் 1632
பரவாசுதேவபாரதி 1619
பலதேவன் 707
பாசுபதபாரதி 1617
பார்த்திபன் 1209, 1215
பாரதன் 1671
பாரவி 719
பாரி 1363
பிரசித்தன் 1258
பிரமகேசரி 1625
புட்கரன் 711, 1022
புண்டரீகன் 134
புண்ணிய சன்மன் 1665
போகாங்கன் 1060
மாதவன் 1020
மார்த்தாண்டன் 1345
மானதன் 587
முற்கலன் 980
வச்சிரதந்தன் 1670
வச்சிரபாலன் 1563
வசிட்டன் 131
வசியகர்ணன் 1547
வசு 1478, 1637
வசுதேவன் 707, 1866
வசுவேதி 679
வயிணவன் 1116
விக்ரமன் 1346
விசயன் (படைத்தலைவன்) 1593
விசர்மன் 1258
விசாந்தன் 1432
விசுத்தன் 820
விட்கம்பன் 1181
வித்தியானந்தன் 563
வித்யுன்மாலி 890
விதுரன் 855
விப்ரமணி 1464
விபுதன் 1053
விபுலன் 562, 763
வியாக்ரபாதன் 722
வியாழன் 628
வீரப்ரதாபன் 1345
வீரியவான் 628
ஜமதக்கினி 1849

வேலு மயிலுந் துணை.

# பொருளடக்கம்.

அ.எ. அத்தியாயம் எண்; செ.எ. செய்யுள் எண்; செ.தொ. செய்யுள் தொகை



| அ. எ. | பொருள் | செ. எ. | செ.தொ. |
|---|---|---|---|
| | கடவுள்வாழ்த்து | .... 1—14 | ... 14 |
| 1 | மா கயிலாயம் | ... 15—45 | ... 31 |
| 2 | அண்ணல் மான்மியம் | ... 46—64 | ... 19 |
| 3— 5 | சூரபதுமாதியரின் வரலாறு | ... 65— 130 | ... 66 |
| 6— 7 | அஜமுகியின் வரலாறு | ... 131— 191 | ... 61 |
| 8 | மாயையின் வரலாறு | ... 192— 199 | ... 8 |
| 9—12 | விபூதி மான்மியம் | ... 200— 336 | ... 137 |
| 13—19 | உருத்திராக்க மான்மியம் | ... 337— 527 | ... 191 |
| 20—26 | சிவநாம (பஞ்சாக்கர) மான்மியம் | ... 528— 740 | ... 213 |
| 27—38 | சிவ விரத மான்மியம் | ... 741— 905 | ... 165 |
| 39—47 | சிவ தரும மான்மியம் | ... 906—1241 | ... 336 |
| 48 | சிவ புராண மான்மியம் | ...1242—1319 | ... 78 |
| 49—60 | சிவத்துரோக நரகவேதனை | ...1320—1675 | ... 356 |
| 61—81 | சிவபூஜை மான்மியம் | ...1676—2476 | ... 801 |
| 82 | சரியையாதி மான்மியம் | ...2477—2496 | ... 20 |
| 83 | வேதாந்த ஞானம் | ...2497—2517 | ... 21 |
| 84 | சித்தாந்த ஞானம் | ...2518—2549 | ... 32 |
| 85 | மூர்த்தி மான்மியம் | ...2550—2602 | ... 53 |
| | அநுபந்தம்—ஆராய்ச்சி | பகுதி III பக்கம் 277—287 | |

ஆக அத்தியாயம் 85-க்குச் செய்யுள் ...2602



## பிழை திருத்தம்.

| பகுதி | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| I. | 79 | கீழ்க்குறிப்பில் வரி 6-7: இக்குறிப்பைப் பக்கம் 80-ல் செ. 323க்குக் கீழ்க்குறிப்பாக மாற்றுக. | | |
| | 80 | 1 | 11 | 12 |
| | 88 | 1 | 11 | 14 |
| | 187 | கீழ்க்குறிப்பு. வரி 1 | பிரிவற் | பிரிவற |
| | 198 | முதற்கீழ்க் குறிப்பைக் கோட்டின் மேலே நூலகத்தே சேர்க்கவும். | | |
| | 199 | 1 | சிவநாம பஞ்சாக்கர | சிவவிரத |
| | 200 | 1 | ,, | ,, |
| | 238 | கீழ்க்குறிப்பு வரி 7 | உரையுள் | உறையுள் |
| II. | 19 | 12 | இவ் வரி சிறிய எழுத்தில் இருக்க வேண்டும் | |
| | 24 | 12 | ம்யேந்திரனை | மயேந்திரனை |
| | 54 | 12 | அப்ப | அப்பா |
| | 175 | 29 | தன்டிக்க | தண்டிக்க |
| III. | 10 | கீழ்க்குறிப்பு | தணடம் | தண்டம் |
| | 102 | 10 | 2403 | 2043 |